உ

கணபதி துணை.

பத்துப்பாட்டுமூலமும்

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்.

இவை

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பரிசோதித்து

சிவகங்கை ஸப்டிவிஷன்

சிறுவயல் ஜமீந்தாரவர்களாகிய ம-ா-ா-ஸ்ரீ

முத்துராமலிங்கத்தேவரவர்களுடைய பேருதவியால்

சென்னை

த. கோவிந்த ஆசாரியாரது

திராவிடரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டு நிறைவேறின.

1889.

இப்புத்தகத்திலடங்கியவை.

உ

கணபதிதுணை.

முகவுரை.

அண்டர்க ளுறுகண் விண்டிட முந்நீர்
அலைகடல் குடித்தும் மலைநில மழுத்தியுந்
தென்றிசை யுயர்ந்த நொய்ம்மை போக
அப்பணி சடையாற் கொப்பவீற் றிருந்தும்
பன்னு வலர்புகழ் தென்னு டாண்ட
இராவணன் றனையவ னிராவணம் போக்கியும்
இலங்குறு பொதியில் விலங்கல்வாழ் பெருந்தவத்
தகத்தியன் புரந்தருண் மகத்துவ மிகுத்த
அமிழ்தினிற் சிறந்த தமிழெனு மடந்தை
கந்தரத் தணிமணிக் கலனா சென்ன
உத்தமர் புகழுமிப் *பத்துப் பாட்டும்

பாண்டிவளநாட்டில் மதுரைப்பதியில் அங்கயற்கண்ணம்மையோடு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக்கடவுளருளிய சங்கப்பலகையில் அக்கடவுளோடு ஒப்பவீற்றிருந்து தமிழாராய்ந்த மகிமைபொருந்திய நக்கீரனார்முதலிய நல்லிசைப்புலவர்களால் அருளிச்செய்யப்பட்டு அச்சான்றோராலேயே தொகுக்கப்பட்டவை

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்னுஞ்செய்யுளாற் பத்துப்பாட்டுக்கள் இவையென்பதும், அவ்வப்பாட்டுக்களுடைய உரையினீற்றில் எழுதப்பட்டுள்ள தொடர்களால் இவற்றை அருளிச்செய்தோர் நக்கீரனார்முதலியோரென்பதும், பத்தாவது மலைபடுகடாத்தில் "தீயி னன்ன வொண்செங் காந்தள்" என்பதற்கு நச்சினார்க்கினியரெழுதிய விசேடவுரையால் இவற்றைத்தொகுத்தோர் சங்கப்புலவர்களே யென்பதும் நன்குவிளங்குகின்றன. இவை பழைய இலக்கிய வுரைகளிலும் இலக்கணவுரைகளிலும் உரையாசிரியர்களால் உதாரணமாக

* பத்துப்பாட்டின் இலக்கணமுதலியவற்றை வருஞ்சூத்திரங்களாலுணர்க:— ௧. "நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே, யேறிய வடியி னீரைம் பாட்டுத், தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. ௨. அதுவே, அகவலின் வருமென வறைகுநர் புலவர். ௩. புரவலன் பரிசு கொண்டு மீண்ட, விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை, வறுமை யுடன்வருஉம் புலவர் பாணர், பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப், புரவல னூர்பெயர்கொடை பராஅய், யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை. ௪. ஓங்கிய வதுதா னகவலின் வருமே." இவை பன்னிருபாட்டியல்.

எடுத்துக்காட்டப்படும் பிரமாணநூல்கள். தமிழுக்கேயுரிய ஒழுக்கமுதலியவற்றை இனிது புலப்படுத்துவதோடு மலை கடல் நாடு நகர் சிறுபொழுது பெரும்பொழுது முதலியவற்றை உள்ளவண்ணமேகூறி இன்பம்பயக்கும் நன்னெறியுடையவை. இக்காலத்து வேறொருவாற்றானும் விளங்காதனவாகிய அக்காலத்திருந்த தமிழ்நாட்டரசர்களிற் சிலருடையசரித்திரங்களும் அக்காலத்துமாந்தருடைய நடைமுதலியனவும் பிறவும் இவற்றால் நன்குவிளங்கும். பிற்காலத்து அரியபெரிய நூல்களியற்றிய ஆன்றோர்பலரும் "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்பதற்கிணங்க, இவற்றின் பொருளேயன்றிச் சொற்றொடர்களையும் தத்தம் நூல்களுள்ளே ஆங்காங்கு இன்சுவைபெருக இயைத்துக்கூறினர். உரைச்சிறப்புப்பாயிரத்துள், "ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து, சான்றோருரைத்த தண்டமிழ்த்தெரிய, லொருபது பாட்டும்" என்று சிறப்பித்துப் பாராட்டிக் கூறிய ஆன்றோர்திருவாக்கே இவற்றின் அருமைபெருமைகளை நன்குபுலப்படுத்தும். இவற்றுள்,—

௧ - வது. திருமுருகாற்றுப்படை:— இது ௩௧௭ - அடிகளையுடையது; [illegible] ஆதற்குச்சமைந்த் ஓர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகக்கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அம்முருகக்கடவுளை மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது. இப்பாட்டு முருகக்கடவுளுடைய திருப்பதிகளுட்சிறந்த திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்சோலையென்னும் ஆறுபடைவீட்டிலும் அவர் எழுந்தருளியிருத்தலைப் பாராட்டிக்கூறும். ஒருமலைக்குகையில் முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மரோடு சேர்த்துண்ணக்கருதித் தம்மையும் அக்குகையில் அடைத்துவிட்டு உண்ணுதற்கு நீராடப்போன ஒரு கொடியபூதத்தை வெல்லக்கருதி நக்கீரனார் முருகக்கடவுளைக்குறித்து இத்திருமுருகாற்றுப்படையைப்பாடி அப்பூதத்தினின்றும் விடுதல்பெற்றனரென்பர். இவ்வரலாற்றின்விரிவு, சீகாளத்திபுராணத்துள்ள நக்கீரச்சருக்கத்தால் விளங்கும். முருகக்கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய இந்தலீலை, ஒவ்வொருவருடத்தும் திருப்பரங்குன்றத்திற் பங்குனிமீ நடக்கும் உற்சவகாலத்து நான்காந்திருநாளில் நடைபெற்றுவருகின்றது. முருகக்கடவுளுடைய திருவருளைப்பெற விரும்புவோர் இந்தத்திருமுருகாற்றுப்படையை நியமமாக அன்புடன் பாராயணம்பண்ணுதல் நலமென்று பெரியோர்கூறுவர்.

௨ - வது. பொருநராற்றுப்படை:— இது ௨௪௮ - அடிகளையுடையது; பரிசில்பெறக்கருதிய ஓர்பொருநனைப் பரிசில்பெற்றானொருவன் இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய சோழன்கரிகாற்பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அக்கரிகாற்பெருவளவனை முடத்தாமக்கண்ணியார் பாடியது. [பொருநர் - ஏர்க்களம்பாடுவோர், போர்க்களம்பாடுவோர், பரணிபாடுவோரெனப் பலர்; அவருள் இப்பொருநன் போர்க்களம்பாடுவோன்:] இது கரிகாற்பெருவளவன் கொடையையும், அவன் வீரத்தையும், அவனுண்ட சோழநாட்டின்வளத்தையும், காவிரிநதி பயன்படுதலையும் நன்றாகக்கூறும்.

௩ - வது. சிறுபாணாற்றுப்படை:— இது ௨௬௯ - அடிகளையுடையது; பரிசில்பெறக்கருதிய பாணனொருவனைப் பரிசில்பெற்றானொருவன் ஏறுமாநாட்டு நல்லியக்கோடனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அந்நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர்நத்தத்தனார் பாடியது. [பாணர் - பாடுவோர்; இவர் இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப்பாணருமெனப் பலர்.] இது நல்லியக்கோடனது வள்ளன்மை

மையும், அவனுடைய நகரங்களாகிய [illegible] திருப்பரங்குன்றம் முதலியவற்றி னியல்பையும், அவற்றிலுள்ளாருடைய [illegible] செயல்களையும், அவனது அர [illegible] [illegible] சிறப்பு [illegible] [illegible] அவன் [illegible] [illegible] [illegible] ரா [illegible] [illegible] மாகிய மதுரை [illegible] [illegible] [illegible] களின் [illegible] பேகன் பாரி காரி ஆய் அதிகன் நள்ளி ஓரி என்னும் வள்ளல்களெழுவருள் ஒன்னா [illegible] இன்னவென்பதையுங் கூறும்.

௪ - வது. பெரும்பாணாற்றுப்படை:—இது ௫௱ - அடிகளையுடையது. பரிசில் பெறுதற்கெண்ணிய பாணனொருவனை அங்ஙனம் பெற்றுவந்த பாணனொருவன் தொண்டைமான் இளந் திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அவ்விளந்திரையனைக் கடியலூர் உருத் திரங்கண்ணனார் பாடியது. [இளந்திரையனென்பான் காஞ்சீநகரத்திலிருந்த ஓரரசன்: [illegible] சோழன் [illegible] [illegible] நாகநாட்டிற்சென்று நாக கன்னிகையைப்புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்றபுதல்வனை என்செய்வேனென்று வினாவ, தொண்டையை (தொண்டைக்கொடி) அடையாளமாகக்கட்டிக் கட லில்விட அவன்வந்து கரையேறின் அவனுக்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சிகொடுப்பேனென்று அவன் கூற அவளும் அங்ஙனமே விடத் திரைதருதலின் திரையனென்பது இவனுக்குப்பெயராயிற்று; இவனை [illegible] காஞ்சி] இப் பாட்டு அவனதுநாட்டிலுள்ள குறிஞ்சிமுதலிய ஐந்திணைப்பகுதிகளினியல்பையும், அவற்றில்வாழ்வாருடைய தொழில் உணவு முதலியவற்றையும், அவன் நகரத்து மிக்கசிறப்போடு வீற்றிருத்தலையும், அவன் [illegible] கூறும். இதிற் காஞ்சிநகரத்துள்ள திருவெஃகாவென்னும் [illegible] கூறப்பட்டுள்ளது. இப் பாட்டும் இதுவும் பாணாற்றுப்படையாயிருப்பினும் [illegible] சிறுபாணாற்றுப்படையெனவும் இது பெரும்பா ணாற்றுப்படையெனவும் பெயர்பெற்றன.

௫ - வது. முல்லைப்பாட்டு:—இது ௱௩ - அடிகளையுடையது; பகைமேற்சென்ற தலைவன் வருமளவும் தலைவி ஆற்றியிருந்தமையைக் [illegible] [illegible] [illegible] காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வா ணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. இது தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலை வியின் இல்லையும், கார்காலத்தின் தன்மையையும், பாசறையிற் [illegible] தலைவனது செலவினையும் விளங்கக்கூறும்.

௬ - வது. மதுரைக்காஞ்சி:—இது ௭௱௮௰௨ - அடிகளையுடையது; தலையாலங்கானத் தச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு [illegible] நிலையாமை யைச் செவியறிவுறுத்தி மாங்குடிமருதனார் பாடியது. இது அப்பாண்டியனுடைய முன்னோர்களின்பெருமையையும், [illegible] [illegible], [illegible] [illegible] யையும், அப்பாண்டியனது வீரச்செயல்களையும் கூறும். இதிற் சே ரனது [illegible] காலத்துச்சிறப்பும் [illegible] [illegible] பெருமைகளும் கூறப்பட் டுள்ளன.

௭ - வது. நெடுநல்வாடை:—இது ௱௮௰௮ - அடிகளையுடையது; பகைமேற்செ ன்ற [illegible] [illegible] [illegible] [illegible] அவன் பகையை வென்று [illegible] [illegible] [illegible] கூறியதாக [illegible] நக்கீரனார் பாடியது. இதில் [illegible] [illegible]

[illegible]
ட்டில் [illegible]

[illegible] —இது [illegible] ஆரியவாசகனை [illegible] பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர்பாடியது. [illegible] நமுறைநிமையார், தலைவனுந்தலைவியும் [illegible] அன்புடைமையை [illegible]

ட – வது. பட்டினப்பாலை:—இது உ[illegible] - அடிகளையுடையது; வேற்றுநாட்டிற் [illegible] மிகுத்துப் [illegible] வாராயோ [illegible] என்னுங் கருத்து [illegible]

கம – வது. மலைபடுகடாம்:—இது ருஅ[illegible] - அடிகளையுடையது; இதற்குக் கூத் [illegible] இகனை [illegible] கருக-ம் பக்கத்திற்காண்க.

[illegible]

* [illegible]

† [illegible] ஒ[illegible] உ௨.

ன்றுகிடைத்தது. அதைவைத்துப் [illegible] பலதினங்களாராய்ந்து [illegible], [illegible] ம-ள-ள-ஸ்ரீ, [illegible] ஐயர் [illegible] அவ்விரண்டில் ஒன்றுக்கொன்று மிகவேறு பாடிருத்தலையால், [illegible] இத்தகைய [illegible] ஆங்காங் குள்ள [illegible] தமிழ்வித்து [illegible] பலருக்கும் [illegible] [illegible] [illegible] கிடைக்கும் [illegible] களுக்குப் போய் [illegible] அன்ப ர்களை ஆங்காங்கு அனுப்பியும் மிக்க முயற்சிசெய்துவந்தேன்.

அப்பொழுது [illegible] ஆலயை [illegible] தேசிகரவர்கள், [illegible] பிரதியை [illegible] தேடித் [illegible] தொகுத்தவருமாகிய [illegible] [illegible] அப்பால், திருநெல்வேலி ம-ள-ள-ஸ்ரீ [illegible] நெல்லையப்பகவிராயரவர்களும், * கவிராஜ ஈசுவரமூர்த்திப்பிள்ளையவர்களும், தங்கள் வீட்டி [illegible] உதய [illegible] பேட்டையில் முன்னிருந்த [illegible] [illegible] யையும், [illegible] பேரராகிய ம-ள-ள-ஸ்ரீ [illegible] அவர்களிடத்திரு ந்து வாங்கித்தந்தார்கள். பின்பு [illegible] ([illegible] இன்ஸ்பெக்டர்) ம-ள-ள-ஸ்ரீ [illegible] ராமையரவர்கள், ஆழ்வார் [illegible] [illegible]) ம-ள-ள-ஸ்ரீ [illegible] அவர்கள் [illegible] சுப்பராயமுதலியாரவர்கள் முதலியோருடைய [illegible] [illegible] பொழுது [illegible] திருமேனி [illegible] வர்கள் பரம்பரையோராகிய தேசிகர் [illegible] [illegible] இந்தப்பிரதியைப் பெறுவதற்குத் திருநெல்வேலி [illegible] [illegible] யெழுதுபொழுது [illegible] சார்ந்த மேலை [illegible] ம-ள-ள-ஸ்ரீ [illegible] [illegible] அவர்கள் [illegible] இருந்து எனக்குச் செய்த [illegible] அதன்பின், [illegible] சென்று தமது அரும்பொருளைச் [illegible] [illegible] புத்தகங்களைத் தேடித் தொகுத்தவரும் அவற்றைப் [illegible] பெரும்பயனும் எண்ணியவருமாகிய [illegible] ம-ள-ள-ஸ்ரீ [illegible] [illegible] என்முயற்சிக்கிரங்கித் தமதுபிரதியை அ[illegible].

அப்பால், தருமபுரஆதீன மடத்துப் புத்தகசாலையிலிருந்து மிகப்பழமையான பிரதியொன்று கிடைத்தது. [illegible] மேல், [illegible] ரு0-வருஷங்களுக்கு முன்பு சென்னை [illegible] திருமயிலையிலிருக்க [illegible] வித்துவச்சிரோ மணியாகிய † திருமலை [illegible] பிள்ளையவர்களுடைய [illegible] புத்தகங்களாயுள்ள திருமயிலை [illegible] வீட்டில் [illegible] [illegible] முறை திருவல்லிக்கேணியில் [illegible] ம-ள-ள-ஸ்ரீ [illegible] சாஸ்திரிகளுடைய சகாயத்தாற் சென்று [illegible] அதன்பின், பழைய தமிழ் நூலா[illegible] [illegible] [illegible] நின்றவரா[illegible]

---

* இவர் [illegible], திருவம்பலத்[illegible] முதலியவர்களுக்கும் [illegible] ற்கட்டுதகவிராயரவர்களுக்கும் ஆசிரியர் [illegible] வர்களிடம்.

† இவர் [illegible] [illegible] பிள்ளையவர்[illegible]

சா

முகவுரை.

ஸூபரின்டெண்டென்ட் ம-ா-ா-ஸ்ரீ வி. கனகசபைபிள்ளையவர்கள் தமது பிரதியை அன்போடு உதவினார்கள்.

இப்பிரதிகளுள் பூர்த்தியாக இலாதன சில.

ஒருமுகமங்கலைத்துப் பிரதியில்மட்டும் திருமுருகாற்றுப்படைமூலமும் பொருநராற்றுப்படைமூலமும் இருக்கின்றன; மற்றைச் சிறுபாணாற்றுப்படைமுதலிய எட்டிற்கும் மேற்கூறியபிரதிகளில் ஒன்றிலேனும் மூலம் தனித்துக்கிடையாமையின், உரையிலுள்ள சிறிது சிறிது ஒருமொழியுந்தொடர்மொழியுமாக எழுதப்பட்டுள்ள மூலப்பதங்களைப் பொருத்தி இணைத்து எழுதி நிற்கின்ற எட்டியமட்டும் அடிவரையறைசெய்து சிறுபாணாற்றுப்படைமுதலிய பாட்டுக்களெட்டையும் தனித்தனியே எழுதிக்கொண்டேன். உரையாசிரியர்களால் இவற்றிலிருந்து பழைய இலக்கிய இலக்கணவுரைகளில் உதாரணமாக எழுதப்பட்டவற்றுள் கிடைத்தன சில, இவற்றின் மூலங்களை இணைக்குங்காலத்து எனக்குப் பேருதவியாகவிருந்தன.

பின்பு சென்னைச் சருவகலாசாலையைச் சார்ந்த கையெழுத்துப் புத்தகசாலையில் இத்தொகைப்பாட்டுப்பிரதி யிருப்பதுதெரிந்து அதனோடு எனதுபிரதியை ஒத்திட்டு வைத்த புத்தகத்திற் பெரும்பாணாற்றுப்படைமூலமும் முல்லைப்பாட்டு மூலமுமிருப்பது கண்டு அவற்றோடு நான் எழுதிவைத்துக்கொண்டிருந்த அப்பாட்டுக்களின்மூலங்களை ஒப்புநோக்கிக்கொண்டேன். அந்தப்பிரதியில்

"முருகாற்று பொருநாறு சிறுபாணாறு முல்லைபெரும் பாணாறு மதுரைக் காஞ்சி மருவினிய பொருடருமோ நெடுநல் வாடை பட்டினப்பாலைகுறிஞ்சி மலைகடாமு மருவாரும் பொழில்புடைசூழ் களந்தை மூதூர் வருசிவப்ப பூபனருள் வேலபூபன் உவகையொடு மெழுதினனா தலினா லன்னோனிற் கும்பெருஞ் செல்வமிசை யுற்று வாழி"

என்னும் பாடலொன்று எழுதப்பட்டிருந்தது.

மேற்கூறிய பிரதிகளெல்லாவொன்றும் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாயிருந்தாலும் ஸ்ரீ ஜட்ஜ் சுந்தரம்பிள்ளையவர்கள் பிரதியும், வண்ணார்பேட்டைப்பிரதியும், ஆழ்வார் திருநகரிப்பிரதியும், தருமபுரவாதீனத்துப்பிரதியும் மிகப்பயன்பட்டன. இப்பிரதிகளாலேயே நூல்களுள் சிறியதொடர்கள்சிலவற்றிற்கு ஒன்றிலேனும் உரைகிடைக்கவில்லை.

*"புகழ்தரு மறைக்கு மேலோன் புடாரிக்கன புரத்தின் மேன்மை
நிகழ்தர நிகழ்த்த வல்லை நீகொலென் றெனது நெஞ்சே
யிகழ்தர வெழுந்த நாணு மிச்சையுந் தினம்போ ராடி
யகழ்தர நாணந் தோற்ற தாசையே வென்ற தம்மா."

என ஆன்றோர் கூறியவாறே, வித்துவச்சிரோமணிகள் பரிசோதித்தற்குரிய இப்பாட்டுக்களையும் இவ்வுரையையும் பரிசோதித்துப் பதிப்பித்தலில் தக்கநாணமுடையனாயினும் இவை யாவருக்கும் எளிதிற் பயன்படும்படி செய்யவேண்டுமென்று வரம்புகடந்தெழுந்த ஆசைமேலீட்டால் அந்நாணத்தையொழிந்து அச்சிற்பதிப்பிக்கத் துணிந்தேன்.

இப்பத்துப்பாட்டுரையைப் பரிசோதிக்கத் தொடங்கிய நான்முதல் எனக்கு மனத்தளர்ச்சியுண்டாகாதபடி அடிக்கடி ஊக்கமளித்து வந்த திருப்பாதிரிப்புலியூர் ம-ா-ா-ஸ்ரீ ஸாது-சேஷையரவர்கள் இவற்றின் அருமைபெருமைகளைப் பல

* திருக்குற்றாலப்புராணம்; அவையடக்கம்.

ருமறியும்படி செய்ததன்றித் தாம் முந்திக் கையொப்பமிட்டுப் பொருளுதவியுஞ்செய் தார்கள்.

அதன்பின்பு, செந்தமிழ்ப் பாதுகாவலர்களாகிய திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்களும், மதுரை (ஐகோர்ட்டு வக்கீல்) ம-அ-அ-ஸ்ரீ ம. தில்லைநாயகம்பிள்ளையவர்களும், தஞ்சாவூர் (ஜில்லாக்கோர்ட் வக்கீல்) ம-அ-அ-ஸ்ரீ கி. ஸ்ரீநிவாசபிள்ளையவர்களும், சிவகங்கை (சப்டிவிஷன் சிறுவயல் ஜமீந்தாரவர்களாகிய) ம-அ-அ-ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவரவர்களும், சோழன்மாளிகை (மிராசு) ம-அ-அ-ஸ்ரீ இரத்தினம்பிள்ளையவர்களும் அன்புடன் கையொப்பமிட்டு மிக்கபொருளுதவிசெய் தார்கள். இவர்களுள் ம-அ-அ-ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவரவர்கள் என்னை முன்னம் அறியாதவர்களாயிருந்தும் இவற்றைநன்கு மதித்து நல்லசமயத்துச்செய்த பேருதவி யாலேயே இவை விரைவில் அச்சிடப்பட்டு வெளியேறின. மேற்கூறிய வள்ளன்மை யாளர்களுடைய பெருந்தகைமையையும், இப்பதிப்பின் பொருட்டுத் தத்தமக்கியன்ற அளவு கையொப்பஞ்செய்து முற்பணமுதவியவர்களாகிய கும்பகோணம் சென்னை மதுரை இராமநாதபுரம் திருவனந்தபுரம் முதலிய இடங்களிலுள்ள கனவான்களுடைய பெருந்தகைமையையும் நான்மிகப்பாராட்டுகின்றேன்.

இவ்வுரையைப் பதிப்பிக்குங்காலத்து இடம் விளங்காமையால் மேற்கோள்களுள் இடம் விளங்கியவை:—

பக்கம்.	வரி.		நூல்.
௪௨	௩	"மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்"	நற்றிணை, ௩௨.
௨௭௧	௩	"சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி"	குறுந்தொகை, ௧௫௰.

நச்சினார்க்கினியர் இப்பத்துப்பாட்டுரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டிய நூல்களுள் விளங்கிய நூல்களின் பெயரகராதி:—

௧. அகநானூறு.
௨. ஆசாரக்கோவை.
௩. கலித்தொகை.
௪. குறுந்தொகை.
௫. சிலப்பதிகாரம்.
*௬. சிறுபாணாற்றுப்படை.
௭. சீவகசிந்தாமணி.
௮. திருக்குறள்.
௯. திருச்சிற்றம்பலக்கோவையார்
௰. திருவாசகம்.
௧௧. நற்றிணை.
௧௨. நாலடியார்.
*௧௩. நெடுநல்வாடை.
௧௪. பதிற்றுப்பத்து.
௧௫. பரிபாடல்.
௧௬. பழமொழி.
௧௭. புறநானூறு.
*௧௮. பெரும்பாணாற்றுப்படை.
*௧௯. மதுரைக்காஞ்சி.

அடியிற்குறித்தசொற்கள் தத்தம் பேரியுள்ள வடிவங்களாகப் பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்தன. இன்னும் இவ்வாறிருந்த சொற்கள் பல.

௧. அடம்பு—அடும்பு.
௨. அணிமை—அணுமை.
௩. கண்டசருக்கரை—கண்டுசருக்கரை.
௪. கவுழ்தல்—கவிழ்தல்.
௫. குரிசில்—குருசில்.
௬. குறிஞ்சி—குறுஞ்சி.
௭. கொடிஞ்சி—கொடுஞ்சி.
௮. சந்தி—சந்து.
௯. ஞெமிர்ந்து—ஞெமர்ந்து.
௰. தொடங்கல்—துடங்கல்.
௧௧. பரிதி—பருதி.
௧௨. முகூர்த்தம்—முழுத்தம்.

* இவ்வடையாளமுள்ளவை இப்பத்துப்பாட்டுள் அடங்கியவையே.

முகவுரை.

இப்பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரையை எனது சிற்றறிவிற்கெட்டியவரையிற் பரிசோதித்துப் பதிப்பித்தேனாதலின், இப்பதிப்பில் ஆங்காங்குக் காணப்படும் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் தயைசெய்து விவேகிகள் தெரிவிப்பின் அவ்வுதவியை நான் ஒருபொழுதும் மறவேன்.

இவ்வுரையைப் பரிசோதித்தகாலத்தும் அச்சிட்டகாலத்தும் [illegible] உதவிபுரிந்துவந்த திருமானார் ம-௱-௱-ஸ்ரீ [illegible] யருடைய நன்றி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

[illegible] மிக அருமையான [illegible] பழையநூல்கள் ஒவ்வொன்றையும் [illegible] இப்பதிப்பில் [illegible] உடையனேனும், சீவகசிந்தாமணி அச்சிடப்பட்டு [illegible] கொழும்புநகரத்து பிரபுசிகாமணியும் செந்தமிழ்ப்பா [illegible] ம-௱-௱-ஸ்ரீ. பொ - குமாரசாமி முதலியாரவர்கள், [illegible] தொல்காப்பியத்தை அச்சிடக் [illegible] ருரையுடன் பதிப்பித்து [illegible] வேண்டுமெனும் அந்தச் செலவைத் தாம் கொடுப்பதாகவும் [illegible] எழுதிய [illegible] தலால், முதலில் அந்நூலை அவ்வுரையுடன் பதிப்பிக்க நிச்சயித்திருக்கிறேன்.

இப்பத்துப்பாட்டைப் போலவே [illegible] பதிப்பிக்கக் கருதிய நூல்களை ஒவ்வொன்றையும் [illegible] நிறைவேற்றுதற்பொருட்டும், இம்முயற்சிக்குப் பொருட் [illegible] மனம் வாக்குக் காயங்களின் முயற்சிகளினாலும் [illegible] செய்துவருவோர் [illegible] பொருட்டும் திருவருள் [illegible] சங்கப்புலவர்களின் [illegible] ஸ்ரீ மீனாட்சிசுந்தரரேசுரருடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

[தமிழ்த்தெய்வம்.]

* "மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
[illegible] தமிழ்த்தெய் வத்தை [illegible] செய்வாம்."

[சங்கப்புலவர்.]

"[illegible] முனிவ [illegible]
[illegible] சங்கப் புலவை [illegible]
நடைவரவ் வளர்த்து ஞால நனந்தலை மறுகிவிட்ட
[illegible] மைபோல [illegible] மன்றே."

[நச்சினார்க்கினியர்.]

[illegible] தமிழ் [illegible] வியப்பப் பெற [illegible]
[illegible] பனுவல்பல [illegible] நிலைவுரை யெழுதி [illegible]
[illegible] நச்சினார்க்கினிய னெனும்பேராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

கும்பகோணம்
விரோதி௵
[illegible]

இங்ஙனம்,
உத்தமதானபுரம்
வே. சாமிநாதையர்.

---

* சீகாளத்திபுராணம், பாயிரம்.

உ

கணபதிதுணை.

பத்துப்பாட்டு

நச்சினார்க்கினியருரை.

முதலாவது

திருமுருகாற்றுப்படை

[க.—திருப்பரங்குன்றம்.]

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பி
னாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு

பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய *வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
யொண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
*வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
விருபே ருருவி னொருபே ரியாக்கை

---

* வென்றடு விறலென்னும் பாடம்.

யறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
யவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் * புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் † தின்னசை வாய்ப்ப
வின்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று

[உ.—திருச்சீரலைவாய்.]

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்

* புலம்புரிந் துறையுமென்றும் பாடம்.
† இன்னிசை யென்றும் பாடம்.

பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே யாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபினையர்க் கேந்திய தொருகை
யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி
யந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
வுரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
மலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று

[௩.—திருவாவினன்குடி.]

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்

மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த நகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி

நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்

[ச.—திருவேரகம்.]

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று

[ரு.—குன்றுதோறாடல்.]

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேல
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி

யிணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
றகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத் தந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

[சூ.—பழமுதிர்சோலை.]

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதி யொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி *முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்

* முகமலர்ந் தேத்தி யென்றும் பாடம்.

மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தியா னாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
வினியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
*தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
விரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத்தத் துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை

* ஒருநீ யாகவென்றும் பாடம்.

யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

இதன்பொருள்.

க.—திருப்பரங்குன்றம்.

உலகம் உவப்ப என்பது முதற் கணவன் (௬) * என்னுந்துணையும் ஒருதொடர்.

உலகம் உவப்ப—சீவான்மாக்கள் உவப்ப,

உலகமென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும், உயிர்களையும், ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்குமேனும் ஈண்டு உவப்பவென்றதனான், மண்ணிடத்து வாழுஞ் சீவான்மாக்களை யுணர்த்திற்று.

[வலனேர்பு திரிதரு] ஏர்பு வலன் திரிதரு—எழுந்து மகாமேருவை வலமாகத் திரிதலைச்செய்யும்,

பலர் புகழ் ஞாயிறு—எல்லாச்சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை,

கடற் கண்டாங்கு—கடலிடத்தே கண்டாற்போல,

இது வினையெச்சவுவமம்; † "விரவியும் வருஉ மரபின வென்ப" என்பதனால், தொழிலுவமமும் வண்ணவுவமமும் பற்றிவந்தது; என்னை? ஞாயிறு இருளைக்கெடுக்குமாறுபோலச் சுவாமியை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலிற் றொழிலுவமமும், அவனைக் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலிற்பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற்பசுமையும் திருமேனிச்செம்மையுந் தோன்றலின் வண்ணவுவமமுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

[ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி:]

ஓ அற இமைக்கும் அவிர் ஒளி—இருவகை யிந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்களின்மேற் சென்றுதங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும் விளங்குகின்ற ஒளி,

ஓ என்பது ஓரெழுத்தொருமொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டனையும் குவித்தல்: அது ‡ "நுதல திமையா நாட்டம்" என்பதனா னுணர்க.

---

* இந்த இடைப்பிறைக்குறிக் குட்பட்ட எண்ணும், இப்படியே பின்னர் ஆங்காங்குப் பதிப்பிக்கப்படும் எண்களும் தத்தம் முன்புள்ள மொழிகளையேனும், அம்மொழிகளைப்பொருளாகப்பெற்ற மொழிகளையேனு முடைய (மூலத்தின்) வரியைப் புலப்படுத்தும்.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், உ.

‡ அகநானூறு, "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த், தாரன் மா

சேண் விளங்கு ஒளி—கட்புலனால்நோக்குவார் கண்ணிடங்களெல்லாவற்றினும் சென்றுவிளங்குகின்ற ஒளியினையும்,

உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற ஒளியெனத் தொழிலுவமங் கொள்ளுங்கால் வினைமுடிக்க. இனி உவப்ப எழுந்து திரியுஞாயிற்றைக் கடற்கண்டாங்குச் சேண்விளங்கொளியென்ன வண்ணவுவமங் கொள்ளுங்கால் வினைமுடிக்க.

உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்—தன்னைச்சேர்ந்தவர்கள் தீவினையைப்போக்கி அவரைத்தாங்கிய, அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய தாளினையும்,

செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக் கை—அழித்தற்குரியாரை அழித்த இடியைமாறுபட்ட பெருமையினையுடைய கையினையும்,

மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன்—மறக்கற்பில்லாத * அறக்கற்பினையும் ஒளிபொருந்திய நுதலினையுமுடைய இந்திரன்மகள் தெய்வயானையார் கணவன்,

இப்பெயரை முற்கூறினார், படைத்தற்குங் காத்தற்கும் உரிமைதோன்ற.

ஒளியினையும் (௩), தாளினையும் (௪), கையினையும் (௫) உடைய கணவனென முடிக்க.

கணவனென்பது ஈண்டு முருகனென்னுந் துணையாய் நின்றது.

கார்கோள் என்பதுமுதல் மார்பினன் (௧௧) என்னுந்துணையும் ஒருதொடர்.

கார்கோள் முகந்த கமம் சூல் மா மழை—கடலிலே முகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத்தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை,

கார் முகக்கப்படுதலிற் கடல் கார்கோளென்றுபெயர்பெற்றது; ஆகுபெயர்.

வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி—திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச்சிதறி,

வாள் - ஆகுபெயர்.

தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து—கார்காலத்து முதற்பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து,

இருள் படப் பொதுளிய பராரை மரா அத்து—இருட்சியுண்டாகத் தழைத்த பரிய அடியினையுடைய †செங்கடம்பினது,

பராரை - பண்புத்தொகைச் சந்திமுடிபு வேற்றுமையென்றுணர்க.

உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன்—‡தேருருளைபோலும் பூவாற்செய்யப் பட்ட குளிர்ந்த மாலையசையு மார்பினையுடையவன்;

லையன் மலைந்த கண்ணியன், மார்பி னஃதே மைபி னுண்ஞாண், நுதலது இமையா நாட்டம், இகலட்டுக், கையது கணிச்சியொடு மழுவே மூவாய் வேலு முண்டத் தோலா தோற்கே, யூர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே, செவ்வா னன்ன மேனி யவ்வான், விலங்குபிறை யன்ன விளங்குவால் வையெயிற், றெரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை, முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி, மூவா வமரரு முனிவரும் பிறரு, மியாவரு மறியாத் தொன்முறை மரபின், வரிகிளர் வயமா னுரிவை தைஇய, யாழ்கெழு மணிமிடற் றந்தணன் றாவி றாணிழற் றவிர்ந்தன் றுலகே" கடவுள் வாழ்த்து; பாரதம் பாடிய பெருந் தேவனார்.

* அருட்கற்பென்றும் பிரதிவேறுபாடுண்டு.

† வெண்கடம்பென்றும் பிரதிவேறுபாடுண்டு.

‡ "உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே" என்றார் பரிபாடலிலும்.

உருள்பூ உவமத்தொகையாகலின், உருள்பூ உருட்பூவென உறழ்ச்சிமுடிபெய்தும். இனி உருளும்பூ உருண்டபூவென வினைத்தொகையுமாம்

மழை சிதறித் தலைஇய கானத்து மராஅத்துத் தார் புரளும் மார்பினனென முடிக்க.

இது போகத்திற்குரிய தார்; இதனை முற்கூறினார், வாணுதல்கணவனென்றதனை நோக்கி.

மால்வரை என்பதுமுதற் செவ்வியன் (சச) என்னுந்துணையும் ஒருதொடர்.

மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்—பெருமையையுடைய மூங்கிலவளர்ந்த தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில்,

வரைகளையுடைமையின், வரையாயிற்று; இஃது ஆகுபெயர்; * "பெரிய வரை வயிரங் கொண்டு" என்றார் பிறரும். இனித் திருமால்போலும் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம்; "மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" என்றார்பிறரும்.

கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி—சிறுசதங்கைசூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும்,

கணைக் கால்—திரண்ட காலினையும்,

வாங்கிய நுசுப்பின்—வளைந்துநுடங்கிய இடையினையும்,

பணைத் தோள்—பெருமையையுடைய தோளினையும்,

மூங்கில்போலுந் தோளென்றுமாம்.

கோபத்து அன்ன தோயாப் பூந் துகில்—இந்திரகோபத்தையொத்த நிறம்பிடியாத இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலினையுடைய துகிலினையும்,

தெய்வத்தின் ஆணையாற் றானே சிவந்திருத்தலிற் றோயாத்துகிலென்றார்.

பல்காசு நிரைத்த சில் காழ் அல்குல்—பலமணிகளைக்கோத்த எழுவடமாகிய மேகலையையணிந்த அல்குலினையும்,

அஃது, † "எண்கோவை காஞ்சி யெழுகோவை மேகலை - பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள் - பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு - விரிசிகை யென் றுணரற் பாற்று." என்பதனானுணர்க.

கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின்—ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப்பெறுகின்ற அழகினையும்,

என்றது: மானிடமகளிர்க்குத் தாயர்பலரும் கைசெய்து பிறப்பிக்கும் அழகன்றி இவர் தெய்வத்தன்மையான் இயல்பாகப்பெற்ற அழகினையுடையரென்றவாறு.

நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை—சாம்பூநதமென்று நாவலோடடுத்துப் பெயர்பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூணினையும்,

பொலம் - ‡ "பொன்னென் கிளவி" என்பதனான்முடிக்க.

சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி—சேய்நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடைய சூரரமகளிர் (சுக) என்க.

---

* வெண்பா. "அரிய வரைகீண்டு காட்டுவார் யாரோ - பெரிய வரைவயிரங் கொண்டு - தெரியிற் - கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார் - பெரிய வரைவயிரங் கொண்டு."

† "எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை - பண்கொள் கலாபமிருபத் தொன்று - கண்கொள் - பருமம் பதினன்கு முப்பத் திரண்டு - விரிசிகை யென்றுணரற் பாற்று" எனவும் பாடம்.

‡ தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், கூக

துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதி—ஆயத்தார் நன்றென்றாராய்ந்த கடையொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே,

[செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு, பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளி:] செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைப் பைந்தாட் குவளைத் தூ இதழ் கிள்ளி இடுபு—சிவந்தகாலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை விடுபூவாகத்தூவி அதற்குநடுவே பசுத்த தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளியிட்டு,

தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து—சீதேவியென்னுந் தலைக்கோலத் துடனே வலம்புரிவடிவாகச்செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து,

திலகம் தைஇய தேங் கமழ் திரு நுதல் மகரப் பகு வாய் தாழ மண்ணுறுத்து—திலகமிட்ட மணநாறுகின்ற அழகினையுடைய நெற்றியின்கண்ணே சுறவினது அங்காந்த வாயாகப்பண்ணின தலைக்கோலந் தங்கப்பண்ணி,

மகரப்பகுவாய் - ஆகுபெயர். மண்ணுறுத்தலை, *"ஆவுதி மண்ணி" என்றாற் போலக்கொள்க. இனி மண்ணுறுத்துத் துவரமுடித்தவென மேலேகூட்டிக் கழுவி முடித்தவென்றுமாம்.

துவர முடித்த துகள் அறும் முச்சிப் பெருந் தண் சண்பகம் செரீஇ—வேண்டுவனகூட்டி முற்றமுடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகி,

கருந் தகட்டு உளைப் பூ மருதின் ஒள் இணர் அட்டி—கரிய புறவிதழினையும் மேலிற் றுய்யினையுமுடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்களை அதன் மேலேயிட்டு,

இது முதலாகிய பொருட்கேற்ற அடையடுத்துநின்றது.

கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு இணைப்புறு பிணையல் வளைஇ—பச்சென்ற அரும்புகளினின்றும் மேலேபோந்து அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுதலுறுகின்ற மாலையை வளையவைத்து,

கவினென்னும் பண்படியாகக் கவின்றென்னுந் தொழில் பிறந்தது. கீழ்நீர்-நீர்க்கீழென்னும் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ. அது மிகச்சிவத்தலின், ஒப்பனைக்குக் கொள்வர்.

[துணைத்தக, வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர், நுண்பூணாகந் திளைப்ப:] வண் காது துணைத் தக நிறைந்த பிண்டி ஒண் தளிர் நுண் பூண் ஆகம் திளைப்ப—வளவிய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையாநிற்க,

திண் காழ் நறுங் குறடு உரிஞ்சிய பூங் கேழ்த் தேய்வை தேங்கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின் குவி முகிழ் இளமுலைக் கொட்டி—திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தையுரைத்த பொலிவினையுடைய நிறத்தையுடைத்தாகிய குழம்பை மணநாறுகின்ற மருதம்பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பை யொத்த இளமுலையிலே யப்பி,

மருதிணர் - நிறத்திற்குவமம்.

விரி மலர் வேங்கை நுண் தாது அப்பி—அவ்வீரம்புலர்வதற்கு முன்னே விரிந்த மலரையுடைய வேங்கைப்பூவினது நுண்ணிய தாதையும் அதன்மேலே யப்பி.

---

* மதுரைக்காஞ்சி: "ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து - மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல"

[காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா:] வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு காண்வரத் தெறியா—விளவினது சிறிய தளிரைக்கிள்ளி அழகுவர ஒருவர்மேல்ஒருவர் தெறித்துத் தப்பாமற் பட்டபொழுது,

[கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி, வாழிய பெரிதென் றேத்தி:] ஏன்று அடு விறல் கோழி ஓங்கிய கொடி பெரிது வாழிய என்று ஏத்தி—வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வெற்றியையுடைய கோழி மேலாய்நின்ற கொடி நெடுங்காலம் வாழ்வதாக வென்று வாழ்த்தி,

[பலருடன், சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச், சூரர மகளி ராடுஞ் சோலை:] சூர் அரமகளிர் பலருடன் சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி ஆடும் சோலை—கொடுமையையுடைய தெய்வமகளிர் பலருங் கூடிச் சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி ஆடுஞ் சோலையினையுடைய,

மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து—மரமேறுதற்றொழிலிற் சிறப்புடைய மந்திகளும் மரங்களினீட்டத்தால் ஏறியறியாத மரநெருங்கின பக்கமலையிடத்து நின்ற,

உம்மை - சிறப்பும்மை.

சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங் காந்தட் பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன் — தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத நெருப்புப்போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திருமுடியையுடையவன்;

அடியினையும் (கங) காலினையும் நுசுப்பினையும் தோளினையும் (கச) துகிலினையும் (கரு) அல்குலினையும் (கசு) வனப்பினையும் (கஎ) இழையினையும் (கஅ) மேனியினையும் (ககூ) உடைய சூரரமகளிர் (சக) பலருங்கூடி (ஙகூ) இடையிட்டு (உக) வைத்துத் (உரு) தாழப்பண்ணிச் (உசு) செரீஇ (உஎ) இணரட்டி (உஅ) வளைஇத் (ஙo) திளையாநிற்கக் (ஙஉ) கொட்டி (ஙரு) அப்பித் (ஙசு) தெறித்து (ஙஎ) ஏத்திப் (ஙகூ) பாடி (சo) ஆடுஞ்சோலையையுடைய (சக) வெற்பில் (கஉ) அடுக்கத்துக் (சஉ) காந்தட் கண்ணிமிலைந்த சென்னியனென முடிக்க.

இதனான் அடையாளப்பூக் கூறினார். இது *"வெறியாட் டயர்ந்த காந்தளும்" என்பதனானுணர்க.

† "அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்னும் மாட்டிலக்கணத்தான், இப்பாட்டுக்கள்பத்துஞ் செய்தாராதலின், இவ்வாறே மாட்டிமுடித்தல் யாண்டும் வருமென்றுணர்க.

பார் என்பது முதற் சேய் (சுக) என்னுந்துணையுமொருதொடர்.

‡ பார் முதிர் பனிக் கடல் கலங்க உள் புக்கு—பாராகிய நிலம் முற்றும் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் தன் நிலைகுலையும்படி உள்ளேசென்று,

பார் - பாறை. மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.

சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்—சூரபன்மாவாகிய தலைவனைக்கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே,

உலறிய கதுப்பின்—காய்ந்த மயிரினையும்,

பிறழ்பல்—நிரை யொவ்வாத பல்லினையும்,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ரு.

† ” ” செய்யுளியல், உகக.

‡ "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு" என்றார் பரிபாடலிலும்.

பேழ் வாய்—பெருமையையுடைய வாயினையும்,

சுழல் விழிப் பசுங் கண்—கோபத்தாற் சுழலும் விழியையுடைய பசிய கண்ணினையும்,

சூர்த்த நோக்கின்—கொடுமைசெய்த பார்வையினையும்,

கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப் பெரு முலை அலைக்கும் காதின்—பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குகையினாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும்,

பிணர் மோட்டு—சருச்சரையையுடைய பெரிய உடலினையும்,

மோடு - வயிறுமாம்.

உரு கெழு செலவின்—கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையுமுடைய,

அஞ்சு வரு பேய் மகள்—கண்டார்க்கு அச்சந்தோன்றுகின்ற பேயாகியமகள்,

குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந் தலை—உதிரத்தையளைந்த கூரிய உகிரினையுடைய கொடியவிரலாலே கண்களைத் தோண்டி யுண்ணப்பட்ட மிக்க முடைநாற்றத்தையுடைய கரிய தலையை,

இனித் தொட்டென்பதனை வினையெச்சமாக்காது தொழிற்பெயராக்கிக் கண் தோண்டுதலுண்டவென்று கூறுதலுமாம்.

ஒண் தொடித் தடக் கையின் ஏந்தி—ஒள்ளிய தொடியினையுடைய பெருமையையுடைய கையிலே எடுத்து,

வெருவர என்று அடு விறற் களம் பாடி—அவுணர்க்கு அச்சந்தோன்ற வென்று பின்வாங்காது எதிர்நின்று கொல்கின்ற வெற்றிக்களத்தைப் பாடி,

தோள் பெயரா—தோளையசைத்து,

நிணம் தின் வாயள்—நிணத்தைத் தின்கின்ற வாயினையுடையளாய்,

வாயள் - வினையெச்சமுற்று.

துணங்கை தூங்க—துணங்கைக்கூத்தாட,

* "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்."

கதுப்பு (சஎ) முதலியவற்றையுடைய பேய்மகள் (சஅ) தலையை (ருக) ஏந்தி (ருச) வாயளாய்ப் (ருங) பாடித் (ருரு) தூங்க வென முடிக்க.

இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை—மக்கள்வடிவும் விலங்கின்வடிவுமாகிய † இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்,

அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி—ஆறுவகைப்பட்ட வேறுபட்ட கூற்றாலே அச்சந்தோன்ற மிக்குச்சென்று,

என்றதனான், இறைவன் உமையை வதுவைசெய்துகொண்டநாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சிதவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்குடம்பட்டு அது தப்பாகுகிப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற் கொடுப்ப

---

* "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றத் - துடக்கிய நடையது துணங்கை யாகும்" எனவும் பாடம்.

† இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய வுடலென்றது, முகம் குதிரைமுகமும், உடல் மக்களுடலுமாகிய சூரபன்மாவினது உடலத்தை. இதனைக் கலித்தொகையில், "வண்டுறை சாந்தம்" என்னும் மருதக்கலியில் "சாரணிச் கேற்றவொடியாப் படிவத்துச், சூர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானுணர்க.

அதன் இருடிகளுணர்ந்து அவன்பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல் அரிதாகை யாலே இறைவன் கூறிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம்மனைவியர்கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூறாகி வளர்கின்றகாலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்தநிலையை மறந்து ஆண்டுவந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறுவடிவுமொன்றாய் அவனுடனே பொருது அவனைக்கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச்சென்றதென்று புராணங்கூறிற்று இதனைப் *“பாயிரும் பனிக்கடல்” என்னும் பரிபாடற்பாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறு வேறு புராணங் கூறுவாருமுளர்.

இனி அவனுடல் அற்று வேற வேறும் வகையாலென்றுமாம்.

அவுணர் நல்வலம் அடங்க—அவனையொழிந்த அவுணருடைய நல்லவெற்றி இல்லையாம்படி,

அடங்க என்றது “களமடங்க” என்றாற்போலக் கொள்க.

கவிழ் இணர் மா முதல் தடிந்த—கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய †மாமரத்தை வெட்டின,

என்றது - அவுணரெல்லாருந் தம்முடனே எதிர்ந்தார்வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவைவெட்டின வென்றவாறு.

மறு இல் கொற்றத்து—குற்றமில்லாத வெற்றியினையும்,

எய்யா நல்லிசை—ஒருவராலும் அளந்தறியவொண்ணாத நல்ல புகழினையுமுடைய,

செவ்வேற் சேஎய்—செய்ய வேலையுடைய சேய்,

எக்காலமும் போர்செய்தலிற் செவ்வேலென்றார். செய்யவனென்பது சேயென விகாரத்தால் நீண்டதென்றுமாம்.

கடல்கலங்க உள்புக்குச் (சாரு) சூர்முதலுடைய ஒருபெரியாக்கை (ருசா) அஞ்சுவரு வகையின் அஞ்சுவர மண்டிச்சென்று (ருஅ) பேய்மகள் (ருசு) துணங்கைதூங்கும் படியாக (ருகூ) அச்சூர்முதறடிந்த வேலானே (சாகூ) பின்னும் அவுணர்நல்வலமடங்க (ருகூ) மாமுதறடிந்த கொற்றத்தினையும் (சா0) நல்லிசையினையுமுடைய சேயென முடிக்க.

கணவன் (கூ) மார்பினன் (கக) சென்னியனாகிய (சஉ) சேயென ஒருபொருள் குறித்த வேறுபெயராய் நின்றன.

[சேவடி படரும் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்:]

புலம் பிரிந்து உறையும் அடி—மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் திருவடி;

---

* பரிபாடல், ரு.

† “உயிர்புகுஞ் சட்டக முழிதொறு முழிதொறும், பழவினை பகுத்த பாடகம் போல, முதிர்புயல் குளிறு மெழுமலை புக்க, கட்டுடைச் சூருடல் காமங் கொண்டு, பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு, மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேற், சேவலங் கொடியோன்” என்றார் கல்லாடத்திலும்.

திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது *"தென்னன் பெருந்துறையான் - காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி" என்பதனானும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானு முணர்க.

சேவடி படரும் நலம் புரி கொள்கைச் செம்மல் உள்ளமொடு—அத்திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பலபிறப்புக்களிலும் விரும்பிச்செய்த கோட்பாட்டாலே தலைமையினையுடைத்தாகிய உள்ளத்தோடே,

செலவு நீ நயந்தனையாயின்—செல்லுஞ்செலவை நீ விரும்பியேவிட்டாயாயின்,

[பலவுடன், நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, இன்னே பெறுதிநீ முன்னிய வினையே:] நீ முன்னிய வினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதி—நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக்கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை;

செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி—போரைவென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடியகொடிக்கருகே,

வரிப் புனை பந்தொடு பாவை தூங்க—நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையிற் றூங்கியேவிடும்படி,

என்றது: பகைவரை மகளிராக்கி அவர் கொண்டுவிளையாடுதற்குத் தூக்கினவென்றவாறு.

பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்—பொருவாரை இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த்தொழிலரிதாகிய வாயிலினையும்,

திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து—திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந்தீர்ந்த அங்காடித்தெருவினையும்,

மாடம் மலி மறுகிற் கூடற் குடவயின்—மாடங்கள்மிக்க வீதித்தெருக்களையுமுடைய மதுரையின் மேற்றிசையிடத்து,

அம் சிறை வண்டின் அரிக் கணம் (எசு)—அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள்,

இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த—கரிய சேற்றினையுடைய அகன்றவயலிலே முறுக்குநெகிழ்ந்து பின்பு தாதும் அல்லியுந் தோன்றமலர்ந்த,

முள் தாள் தாமரைத் துஞ்சி—முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது துயில்கொண்டு,

வைகறைக் கள் கமழ் நெய்தல் ஊதி—விடியற்காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற்பூவை யூதி,

எற் பட—ஞாயிறு தோன்றின காலத்தே,

[கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர், அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங், குன்றமர்ந் துறைதலு முரியன்:]

அஞ்சிறைவண்டி னரிக்கணமென்பது முன்னே கூட்டிற்று.

---

* திருவாசகம், திருவம்மானை, க: "கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன் - தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான் - காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி - நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த - வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்"

ரு

கண் போல் மலர்ந்த காமர் சுனை மலர் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைதலும் உரியன்—கண்ணையொக்க விரிந்த விருப்பமருவின சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்குந் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன்;

உம்மை; எதிரதுதழீஇய எச்சவும்மை. கூடற்குடவயிற் குன்று: வண்டினரிக் கணம் துஞ்சி ஊதி ஒலிக்குங் குன்று.

அதாஅன்று—அதுவன்றி,

அதாஅன்றென அகரமிட்டெடுத்துக. இதனை *“அன்றுவரு காலை” என்பதனானும், †“இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி” என்பதனான் “தோன்றியன் மருங்கின்” என்பதனானு முடிக்க.

௨.—திருச்சீரலைவாய்.

வைந்நுதி யென்பது முதல் அலைவாய்ச்சேறல் (௧௨௫) என்னுந்துணையுமொரு தொடர்.

வைந் நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்—கூர்மையையுடைத்தாகிய தோட்டிவெட்டின வடுவழுந்தின புகரையுடைய மத்தகத்திலே,

வைந்நுதி - ஆகுபெயர்.

வாடா மாலை ஓடையொடு துயல்வர—பொன்னரிமாலை பட்டத்தோடேகிடந் தசைய,

படும் மணி இரட்டும் மருங்கின்—தாழ்கின்ற மணி மாறியொலிக்கின்ற பக்கத்தினையும்,

கடு நடை—கடிய நடையினையும்,

கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்—கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையுமுடைய,

கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு—கடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை யேறி,

மருங்கு முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலை பட்டத்தோடே யசைய ஏறியெனமுடிக்க.

ஐ வேறு உருவின் செய் வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி—ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச்)செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடிவிளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி,

ஐவேறுருவு: “தாம முகுடம் பதுமங் கிம்புரி, கோடக மிவைமுடிக் கைவே றுருவே”

மின் உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப—மின்னோடே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற,

நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங் குழை—ஒளி தங்கியசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை,

சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ அகலா மீனின் அவிர்வன இமைப்ப—சேய்நிலத்தேசென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைச் சூழ்ந்து நீங்காத மீன்கள்போல விளங்குவனவாய் ஒளியைக்கால,

மீன் - உரோகிணிமுதலியன; வியாழமும் வெள்ளியுமாம்.

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், ௩௪.

† ” ” ” ௩௫.

தா இல் கொள்கைத் தந் தொழில் முடிமார்—வருத்தமில்லாத விரதங்களையுடைய தவத்தொழிலை முடிப்பாருடைய,

மனன் நேர்பு எழுதரு வாள் நிற முகன்—மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,

பொற்ப (அ௫) இமைப்ப (அஅ) எழுதருமுகனென்க.

முகனென்றது ஆறற்கும் பொது.

[மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொருமுகம்:] ஒருமுகம் மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று—ஒருமுகம் பெருமையையுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய் விளங்கும்படி பலகிரணங்களையும் தோற்றுவித்தது;

ஒருமுகமென்று முன்னே கூட்டிப் பொருள் கொள்க.

ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுத்தன்று—ஒருமுகம் தன்மேல் அன்புசெய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கினிதாகநடந்து அவர்மேற்சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது;

ஒருமுகம் மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி ஓர்க்கும்—ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினையாநிற்கும்;

அந்தத்தை அணவுவார் அந்தணர். என்றது-வேதாந்தத்தையே நோக்குவாரென்றவாறு.

[ஒருமுக, மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித், திங்கள் போலத் திசைவிளக்கும்மே:] ஒருமுகம் எஞ்சிய பொருள்களை நாடி ஏம் உறத் திங்கள் போலத் திசை விளக்கும்—ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களினும் நூல்களினுமுள்ள பொருள்களையாராய்ந்து இருடிகளேமுறும்படி உணர்த்தித் திங்கள்போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

ஏமம் - இரட்சை. கலைநிறைதலிற் றிங்கள் உவமையாயிற்று.

[ஒருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒருமுகம் செல் சமம் முருக்கிக் கறுவு கொள் நெஞ்சமொடு செறுநர்த் தேய்த்துக் களம் வேட்டன்று—ஒருமுகம் திருவுள்ளத்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டுமென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர் முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம் - நடுவுநிலைமை. அதனைக் கெடுத்தலாவது - தேவரையும் அசுரரையும் ஒப்பக்கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

[ஒருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே:]

ஒருமுகம் குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின் வள்ளியொடு நகை அமர்ந்தன்று—ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடைய மகளாகிய வல்லிபோலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமைதோன்றுந் தன்மையுடைத்தாகிய நகையென்று கூறுக.

அவளொடு *நகையமர்தலின் அரியாமை கூறினார். காமநுகர்ச்சி யில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க. அது † "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்பானுட் "பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர் - விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்பதனா னுணர்க.

விரிந்தன்று (கூஉ), கொடுத்தன்று (கூச), வேட்டன்று (கoo), நகையமர்ந்தன்று (கoஉ), ஓர்க்கும் (கூசு), விளக்கும் (கூஅ) என்பன முற்றுச்சொல்.

[ஆங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்:]

அம் மூவிரு முகனும் — அவ்வாறுமுகமும்,

ஆங்கு முறை நவின்று ஒழுகலின் — அத்தொழில்களிடத்துச் செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே அம்முகங்கட்குப் பொருந்த,

[ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற், செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர் விடு, வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்:]

ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பிற் செம்பொறி வாங்கிய தோள் — பொன்னாற் செய்த ஆரந்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையை யுடைய மார்பிற்கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியினையும் தன்னிடத்தே வந்து விழும்படி வாங்கிக்கொண்ட தோள்,

வாங்கிய வென்றார், அவ்வரி தோளளவும் வந்துகிடந்தமை தோன்ற; ‡ "வரைய கன் மார்பிடை வரையு மூன்றுள" என்றார் பிறரும்.

மொய்ம்பின் வண் புகழ் நிறைந்து — தம்முடைய வலியினாலே பெரிய புகழ் நிறையப்பட்டு,

சுடர் விடுபு வசிந்து வாங்கு தோள் — சுடரையுடைய படைக்கலங்களை யெறிந்து பகைவர்மார்பைப் பிளந்து அவற்றை வாங்குதோள்,

சுடரையுடைய படைக்கலங்களைச் சுடரென்றார்; அஃது ஆகுபெயர்.

நிமிர் தோள் — பெருகு தோள்,

நிறைந்து நிமிருந் தோளென்க.

வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாதலிற், செய்வதன் றொழிற்கும் செயப்படுதற் றொழிற்கும் பொது. அசுரர் முதலியோரை அழிக்குங் காலத்துப் பன்னிருகையினும் படைக்கலமேந்துவ னென்றுணர்க; அஃது அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி (ருஅ) என்றதனானுணர்க.

இனி மொய்ம்பினையுடைத்தாய் ஒளிவிட்டு நிறைந்து வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிருந் தோளென்று முரைப்பர். இதற்கு வசிந்தென் பதனைத் தொடிமிசை யிட்ட (ககச) மணியிரட்டவென (ககரு) மேலே கூட்டுக. வசிந்து பகைவர்மார்பைப் பிளந்தென்க. வசிந்தென்பதற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனாதலிற் பொருந்தாது.

---

* நகையமர்தல் இன்றியமையாமையெனவும் பிரதிவேறுபாடுண்டு.

† திருவாசகம், திருச்சாழல், கூ: "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன் - பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ - பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர் - விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ."

‡ சீவகசிந்தாமணி, கேமசரியாரிலம்பகம், ருக: "வரையகன் மார்பிடை வரையு மூன்றுள - புரைதபு பொன்புனை நாவ முள்ளுடைத் - திரைவளைத் தோள்களு மமரர் கோன்களிற் - றுரவுகொ டடக்கையின் வடிவு கொண்டவே".

இனி அவை போர்செய்யாக்காலத்து இங்ஙனமிருக்குமென்று அவற்றினியல்பு கூறுகின்றார்.

அத்தோள்களில் ஒருகை யென்க.

[விண்செலன் மரபினையர்க் கேந்திய தொருகை:] ஒருகை விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது—ஒருகை எக்காலமும் ஆகாயத்தே இயங்குதன் முறைமையினையுடைய தெய்வவிருடிகளுக்குப் பாதுகாவலாக வெடுத்தது;

[உக்கஞ் சேர்த்திய தொருகை:] ஒருகை உக்கம் சேர்த்தியது—ஏந்தியகைக்கு இணைந்தகை மருங்கிலேவைத்தது;

என்றது - ஞாயிற்றின்வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தலாற்றாவென்று கருதித் தமதருளினாற் சுடரொடுதிரிந்து அவ்வெம்மையைப்பொறுக்கின்ற முனிவரைப் பாதுகாக்கவே உலகத்தைத் தாங்கிக் காத்ததாயிற்று. இதனானே இக்கை மாயிருஞாலமறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத்திற்கேற்ற தொழில் செய்ததாயிற்று. இது *"நிலமிசை வாழ்நரலமரறீரத், தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக், காலுண வாகச் சுடரொடு கொட்கு, மவிர்சடை முனிவரு மருள" என்ற புறப்பாட்டானுணர்க. மனமும் முகமும் கையும் ஒருதொழிலைச் செய்தலின், ஏனைக்கை தொழிலின்றி மருங்கிலே கிடந்தது.

[நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை, யங்குசங் கடாவ வொருகை:] ஒருகை அங்குசம் கடாவ ஒருகை நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை அசைஇயது—ஒருகை தோட்டியைச் செலுத்தாநிற்க மற்றைக்கை செம்மை நிறம்பெற்ற ஆடையையுடைத்தாகிய துடையின்மேலே கிடந்தது;

இஃது யானையேறுவார்க்கு இயல்பென்று கூறினார். தன்னை வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்பாகலின், இக்கைகள் காதலினுவந்து வரங்கொடுத்த முகத்திற்கு ஏற்றவாறுணர்க.

இருகை ஐ இரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப—இரண்டு கைகள் வியப்பையும் கருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற,

---

* புறநானூறு, சங:— "நிலமிசை வாழ்நரலமரறீரத், தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக், காலுண வாகச் சுடரொடு கொட்கு, மவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக், கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத், தன்னகம் புக்க குறுநடைப் புறவின், றபுதி யஞ்சிச் சீரை புக்க, வரையா வீகை யுரவோன் மருக, நேரார்க் கடந்த முரண்மிகு திருவிற், றேர்வண் கிள்ளி தம்பி வார்கோற், கொடுமர மறவர் பெரும கடுமான், கைவண் டோன்றற லைய முடையேன், ஆர்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம், பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது, நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி, நின்யான் பிழைத்தது நோவா யென்னினும், நீபிழைத் தாய்போ னனிநா ணினையே, தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல், இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக், காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின், யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுண், மிக்குவரு மின்னீர்க் காவிரி, யெக்க ரிட்ட மணலினும் பலவே."

திணை - வாகை. துறை - அரசவாகை. சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தானும், தாமப்பல்கண்ணனும் வட்டுப்பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந்தானைச் சோழன்மகனல்லையென நாணியிருந்தானைத் தாமப்பல் கண்ணனான்.

இருடிகளை, அசுரர்வந்து வேள்வியைக் கெடாமல் அவரையோட்டுதற்கு இவற்றைச் சுழற்றுதலில் வேள்வியோர்க்கு முகத்திற்கு இக்கைகள் ஏற்றவாறுணர்க.

ஒருகை மார்பொடு விளங்க ஒருகை தாரொடு பொலிய—முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்தபொருளை யுணர்த்துங் காலத்து ஒருகை மார்போடே விளங்காநிற்க, ஒருகை மார்பின்மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற,

இறைவன் மோனமுத்திரையைத் தானேயிருந்து காட்ட ஊமைத்தசும்புள் நீர்நிறைந்தாற்போல ஆனந்தமயமானவொளி மாணாக்கர்க்கு நிறைதலின், அதற்குரிய மோனமுத்திரைகூறிற்று. "தன்னை யுன்னியென்னை யாக்கிய போழ்தே யானவ னாயினேன்" என்பதனானுணர்க.

இக்கைகள் எஞ்சியபொருள்களை விளக்குமுகத்திற்கு ஏற்றவாறுணர்க.

[ஒருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட] ஒருகை தொடியொடு மீமிசைக் கொட்பக் கீழ் வீழ் ஒருகை பாடு இன் படு மணி இரட்ட—ஒருகை தொடியொடு மேலேசுழன்று களவேள்விக்கு முத்திரைகொடுப்பக் கீழேவீழ்ந்த மற்றைக்கை ஓசையினிதாகிய ஒலிக்கின்றமணியை மாறியொலிக்கப்பண்ண,

இக்கைகள்வேள்வி வேட்கின்ற முகத்திற்கு ஏற்றவாறுணர்க.

ஒருகை நீல்நிற விசும்பின் மலி துளி பொழிய ஒருகை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட—ஒருகை நீலநிறத்தையுடைய மேகத்தாலே மிக்கமழையைப் பெய்வியாநிற்க, ஒருகை தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்ட,

என்றது: வள்ளியொடு நகையமர்ந்தமுகம் உலகிற்கு இல்வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின், அவ்வில்வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை; ஒருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற் பொருட்டு மணமாலையைச் சூட்டிற்றென்றவாறு.

ஆங்கு அப் பன்னிருகையும் பாற்பட இயற்றி—அப்படியே அந்தப்பன்னிரண்டுகையும் முகத்தின் பகுதியிலேபடும்படி தொழில்செய்து,

முகங்களில் ஒருமுகம் ஓர்க்கும் (கூசு) ஒருமுகம் விளக்கும் (கூஅ) ஒருமுகம் வேட்டன்று (க00) ஒருமுகம் அமர்ந்தன்று (க0உ) ஒருமுகம் விரிந்தன்று (கூஉ) ஒருமுகம் கொடுத்தன்று (கூச) அம்மூவிருமுகனும் அத்தொழில்களிடத்துச்செய்யும் முறைமைகளைப் பயின்றுநடத்துகையினாலே (க0ரு) அம்முகங்களுக்குப்பொருந்தத் தோள்களில் (க0சு) இருகை (கக0) திரிப்ப (ககக) ஒருகை விளங்க (ககஉ) ஒருகை பொலிய (ககங) ஒருகை கொட்ப (ககச) ஒருகை யிரட்ட (ககரு) ஒருகை பொழிய (ககசு) ஒருகை சூட்ட (ககஎ) ஒருகை ஐயர்க்கேந்தியது (க0எ) ஒருகை உக்கஞ் சேர்த்தியது (க0அ) ஒருகை கடாவ (கக0) ஒருகை அசைந்தது (க0கூ) அப்படியே பன்னிருகையும் முகத்தின்பகுதியிலே படும்படி தொழில்செய்தென இச்சொன்முடிபுக்கேற்ப ஏனைக்கைகளையும் முகங்களையும் மாட்டாகமுடிக்க. திரிப்பவென்பதுமுதலிய நிகழ்காலச் செயவெனெச்சங்கள் ஏந்தியது சேர்த்தியதென முற்றுவினைகொண்டு முடிந்தன.

அந்தரப் பல்லியம் கறங்க—ஆகாயத்தினது துந்துமி யொலிப்ப,

திண் காழ் வயிர் எழுந்து இசைப்ப—திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப,

வால் வளை ஞரல—வெள்ளிய சங்கு முழங்க,

உரம் தலைக் கொண்ட உரும் இடி முரசமொடு—வலியைத் தன்னிடத்தேகொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே,

பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ—பலபீலியையுடைய மயில் அவுணரை யினுலே வென்றெடுத்த கொடியிலேயிருந்து ஒலியாநிற்க,

பொறி - ஆகுபெயர்.

விசும்பு ஆறாக—ஆகாயமே வழியாக,

விரை செலல் முன்னி—விரைந்த செலவினை மேற்கொண்டு,

[உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்:] ஓங்கு உலகம் புகழ்ந்த உயர் விழுச் சீர்—நன்மையோங்கும் நன்மக்கள்புகழ்ந்த உயருஞ்சீரினையுடைய சிறப்பினையுடைய,

அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு—நாமனூரலைவாயென்னும் திருப்பதியேற எழுந்தருளுதலும் அவற்கு நிலைபெற்றகுணம்;

குன்றமர்ந்துறைதலுமுரியன்; அதுவன்றி (எ) வேழமேல்கொண்டு (அ௨) இயற்றிக் (கக௮) கறங்க (கக௯) இசைப்ப நரல (க௨0) அகவ (க௨௨) முன்னி(க௨௩) அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பெனமுடிக்க.

அதாஅன்று— அதுவன்றி,

௩.—திருவாவினன்குடி.

சீரை தைஇய வென்பதுமுதல் முனிவர்முற்புக (க௩எ) வென்றதுந்துணையுமொருதொடர்.

சீரை தைஇய உடுக்கையர்—மரவுரியை உடையாகச்செய்த உடையினையுடையர்,

இதற்குக் கற்றோய்த்தன்முதலியன செய்த உடுக்கையென்பாருமுளர்.

சீரொடு வலம்புரி புரையும் வால் நரை முடியினர்—அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங்கினையொக்கும் வெள்ளிய நரைமுடியினையுடையர்,

மாசு அற இமைக்கும் உருவினர்—எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற்று விளங்கும் வடிவினையுடையர்,

மானின் உரிவை தைஇய ஊன் கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்—கிருட்டிணாஜினம் போர்த்த விரதங்களால்விட்ட பட்டினியால் தசைகெட்டு நின்ற மார்பினெலும்புகள் கோவைதோன்றி உலவும் உடம்பினையுடையர்,

தைஇய மார்பென்க.

நன் பகற் பல உடன் கழிந்த உண்டியர்—எப்பொழுதும் நுகர்தற்கு நன்றாகிய பகற்பொழுதுகள் பலவும் சேரக்கழிந்த உணவினையுடையர்,

இது மாதோபவாசங் கூறிற்று.

இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்—மாறுபாட்டோடே நெடுங்கால நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தினையுடையர்,

பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம்.

[யாவதுங், கற்றோ ரறியா வறிவினர்:] கற்றோர் யாவதும் அறியா அறிவினர்—பலவற்றையும கற்றோர் சிறிதுமறியப்படாத இயல்பான அறிவினையுடையர்,

கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்—பலவற்றையுங் கற்றோர்க்குத்தாம் எல்லையாகிய தலைமையையுடையர்,

என்றது - கல்வியைக் கரைகண்டாரென்றவாறு

காமமொடு கடுஞ் சினம் கடிந்த காட்சியர்—ஆசையோடே கடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையர்,

கோபத்தின்பின்னுஞ் சிறிதுபொழுதுநிற்பது சினம்.

இடும்பை யாவதும் அறியா இயல்பினர்—தவத்தான் மெய்வருத்தம் உளவேனு மனத்தான் வருத்தஞ் சிறிதுமறியப்படாத இயல்பினையுடையர்,

மேவர—திருவுள்ளம் பொருந்துதல் வர,

துனி இல் காட்சி முனிவர் முற்புக—ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்லஅறிவினையுடைய முனிவர் முன்னே செல்ல,

உடுக்கையர் முடியினர் உருவினர் யாக்கையர் உண்டியர் மனத்தினர் அறிவினர் தலைமையர் காட்சியர் இயல்பினராகிய முனிவர் மேவர முற்புகவெனமுடிக்க.

புகைமுகந்தன்ன என்பதுமுதல் மேவலர் (கசஉ) என்னுந்துணையும் பாடுவாரைக் கூறிற்று.

புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை—புகையை முகந்தாலொத்த நொய்யத் தன்மையால் அழுக்கேறாத தூய உடையினையும்,

முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து—முகைவாய்நெகிழ்ந்த மாலைசூழ்ந்த மார்பினையும்,

கட்டுதலிற் றகையென்றார், மாலையை; ஆகுபெயர்.

செவி நேர்பு வைத்த செய்வு உறு திவவின் நல் யாழ் நவின்ற—எல்லாருஞ்செவியாலே நுகர்தலையமைத்து நரம்பைக்கட்டின சுற்றுதலுறும் வார்க்கட்டினையுடைய நன்றாகிய யாழினிசையிலே பயின்ற,

நயன் உடை நெஞ்சின் மென்மொழி மேவலர் இன் நரம்பு உளர—ஈரமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லிய வார்த்தைசொல்லுதலைப் பொருந்திய கந்தருவர் இனியநரம்பை வாசிக்க,

நவின்ற நயனென்க.

நோயின்றென்பது முதல் மகளிர் (கசஎ) என்னுந்துணையும் பாடுமகளிரைக் கூறிற்று.

நோய் இன்று இயன்ற யாக்கையர்—மக்களுக்குரிய நோய் இல்லையாக நிருமித்த உடம்பினையுடையராய்,

மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர்—மாவினது விளங்குகின்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையராய்,

அவிர்தொறும் பொன் உரை கடுக்கும் திதலையர்—விளங்குந்தோறும் பொன்னுரை விளங்கினாற்போலுந் தித்தியினையுடையராய்,

இன் நகைப் பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல் மாசு இல் மகளிரொடு—கட்கினிய ஒளியினையுடைய பதினெண்கோவையாகிய மேகலையணிந்த தாழ்ந்தவேண்டியவிடம் தாழ்ந்து உயரவேண்டியவிடம் உயர்ந்த அல்குலையுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே,

மறு இன்றி விளங்க—குற்றமின்றாய் விளங்காநிற்க,

உடையினையும் (கஙஅ) ஆகத்தினையுமுடைய (கஙகூ) மென்மொழிமேவலர் (கசஉ) யாக்கை (கசங) முதலியவற்றையுடையராய், மாசில்லாத மகளிரோடே மறுவின்றிவிளங்க (கசஎ) இன்னரம்புளர (கசஉ) வெனமுடிக்க.

கடுவொடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிற்று—நஞ்சுடனே உறைதற்கேற்ற ஏகிடத் துளையினையுடைய வெள்ளிய எயிற்றினையும்,

பற்றினஞ்சு கண்ணிடத்தே தோன்றுதலின், நஞ்சுசோடென்றார். எயிறு: காளி, காளாத்திரி, யமன், யமதூதியென நான்காம்.

அழலென உயிர்க்கும் அஞ்சு வரு கடுந் திறல்—நெருப்பென்னும்படி நெட்டுயிர்ப்புக்கொள்ளும் கண்டார்க்கு அச்சந்தோன்றும் கடிய வலியினையுமுடைய,

பாம்பு படப் புடைக்கும்—பாம்பு படும்படி அடிக்கும்

பல் வரிக் கொடுஞ் சிறைப் புள் அணி நீள் கொடிச் செல்வனும்—பல வரியினையுடைத்தாகிய வளைந்த சிறகினையுடைய கருடனையணிந்த நீண்ட கொடியினையுடைய திருமாலும்,

[வெள்ளேறு, வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ, ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண், மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்:]

வலவயின் வெள்ளேறு உயரிய செல்வன்—வெற்றிக்களத்தே வெள்ளிய ஏற்றினை வெற்றிக்கொடியாக வெடுத்த உருத்திரன்;

உமை அமர்ந்து விளங்கும் செல்வன்—இறைவி ஒருபாகத்தே பொருந்தி விளங்குஞ் செல்வன்,

பலர் புகழ் திணி தோள்—பலரும் புகழ்கின்ற சிக்கென்ற தோளினையும்,

இமையா முக்கண் செல்வன்—இதழ் குவியாத மூன்றுகண்ணினையுடைய செல்வன்,

மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும்—முப்புரத்தையெரித்த மாறுபாடு மிக்க செல்வனும்,

நாற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து—நூற்றைப்பத்தாகவடுக்கிய கண்ணினையும்,

என்றது ஆயிரங்கண்ணென்றவாறு.

நூறு பல் வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து — நூறென்னு மெண்ணுகிய பலவேள்விகளை வேட்டுமுடித்ததனாற்பெற்ற பகைவரை வென்றுகொல்கின்ற வெற்றியினையும்,

[ஈரிரண் டேந்திய மருப்பின்:] ஏந்திய ஈரிரண்டு மருப்பின்—தலைகள் ஏந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும்,

எழில் நடை—அழகினையுடைய நடையினையும்,

தாழ் பெருந் *தடக் கை—நிலத்தே கிடக்கின்ற பெரிய வளைவினையுடைய கையினையுமுடைய,

உயர்த்த யானை எருத்தம் ஏறிய திருக் கிளர் செல்வனும்—எல்லாரும் உயர்த்துச் சொல்லப் படுகின்ற யானையின் கழுத்திலே ஏறிய திருமகள் விளங்கும் இந்திரனும்,

உயர்ந்த உயர்த்தவென விகாரமுமாம்.

நாட்டத்தினையும் (கருரு), கொற்றத்தினையுமுடைய (கருசு) செல்வனென்க.

மருப்பு (கருஎ) முதலியவற்றையுடைய யானையென்க.

நாற் பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கை—நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்றாகிய ஊர்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒருதொழிலையே விரும்பிய கோட்பாட்டையுடைய செல்வன் (கருக) என முன்னேகூட்டித் திருமாலுக்கடையாக்குக.

---

* "தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்." என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், உரு - வது சூத்திரம்.

நாற்பெருந்தெய்வமாவன: இந்திரன், யமன், வருணன், சோமனென்னுந் தெய்வங்கள்.

பலர் புகழ் மூவரும் தலைவராக—பலரும் புகழ்கின்ற அயன் அரி அரனென்னு மூவருந் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோலே நிகழ்த்தித் தலைவராகவேண்டி,

என்றது - பிள்ளையார் அயனைச்சபித்தலின், அயன் படைத்தற்றொழிலைத் தவிரவே ஏனையிருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிலும் இன்றாமாகலின், மூவருந் தத்தமக்குரிய தொழில்களைப்பெற்றுத் தலைவராகவென்றார்.

[ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றித், தாமரை பயந்த தாவி லூழி, நான்முக வொருவற் சுட்டி:]

ஞாலந்தன்னில் தோன்றி ஏமுறு நான்முக ஒருவற் சுட்டி—பிள்ளையார் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி மயக்கமுறுகின்ற நான்முகத்தையுடைய அயனைப் பழையநிலையிலே நிறுத்தக் கருதி,

தாமரை பயந்த ஊழி தா இல் ஒருவன்—திருமாலுடைய திருவுந்தித்தாமரை பெற்ற ஊழிகடோறும் தன்படைத்தற்றொழிலில் வருத்தமில்லாத ஒருவன் (௧௬௫)

இனித் தாமரையென்னும் எண்ணைத்தந்த அழிவில்லாத ஊழிக்காலத்தையுடைய அயனுமாம்.

பயந்த ஒருவனென்க.

சாபமென்றது: பிள்ளையார் அசுரரையழித்துத் தேவரைக் காத்ததற்கு இந்திரன் மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே, பிள்ளையார் தங் கையில் வேலைநோக்கி, "நமக்கு எல்லாந்தந்தது இவ்வேல்" என்ன, அருகிருந்த அயன் "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ" என்றானாக, "நங் கையில் வேலுக்கு நீகொடுப்பதொரு சத்தியுண்டோவென்று கோபித்து, "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச்செல்வாய்" என்ற சாபத்தை.

காண்வர—அழகு தோன்ற,

பகலில் தோன்றும் இகல் இல் காட்சி—ஒருபொருள் பலவாமாறு பகுத்துக்காண்டற்கு வேறுபடத் தோன்றும் தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய,

நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு—நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்துமூவரும்,

என்றது: ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவனென்னும் ஒரோவோர்பொருள்கள் பலவாகப் பகுக்குங்காற் பன்னிருவர் பதினொருவர் எண்மர் இருவராகப் பகுக்க நான்குகூறாய் முப்பத்துமூவராயினாரென்றவாறு. பதினொருவராகிய மூவரென்க. அவர் ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாம். ஒடு - எண்ணொடு.

ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர்—பதினெண்வகையாகிய உயர்ந்தநிலையைப் பெற்றவரும்,

என்றது - பதினெண்கணங்களை. அவர்: தேவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், கின்னரரும், கிம்புருடரும், இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாசகணமும், தாராகணமும், நாகரும், ஆகாயவாசிகளும், போகபூமியோரும் எனவிவர். இவர்க்குப் பிறவாறுமுரைப்பர். பெறீஇயர் - தொழிற்பெயர்.

மீன் பூத்தன்ன தோன்றலர்—உடுக்கள் பொலிவுபெற்றுத் தோன்றினாலொத்த தோற்றத்தையுடையராய்,

மீன் சேர்பு வளி கிளர்ந்தன்ன செலவினர்—மீன்சருலாவுகின்றவிடத்தே சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினையுடையராய்,

வளி இடைத் தீ எழுந்தன்ன திறலினர்—காற்றிடத்தே நெருப்பெழுந்தாலொத்த வலியினையுடையராய்,

தீப் பட உரும் இடித்தன்ன குரலினர்—நெருப்புப்பிறக்க உருமேறு இடித்தாற் போன்ற குரலினையுடையராய்,

இவை வினையெச்சமுற்று.

[விழுமிய, உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்:] தம் விழுமிய பெறுமுறை குறை உறு மருங்கிற் கொண்மார்—தம்முடைய சீரிய படைத்தல்காத்தல் அழித்தலென்னுந்தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறைமையினைக் குறைவேண்டிநின்று பெறுங்கூற்றாலே முடித்துக்கோடற்கு,

அந்தரக் கொட்பினர்—ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்,

[வந்துடன் காண:—] உடன் வந்து காண—சேரவந்து காணும்படியாக,

தா இல் கொள்கை மடந்தையொடு—வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வயானையாருடன்,

[சின்னாள், ஆவினன்குடி யசைதலும் உரியன்:] ஆவினன்குடி சின்னாள் அசைதலும் உரியன்—ஆவினன்குடியென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலுமுரியன்;

பலர்புகழ்மூவருந் தலைவராகவேண்டி (கசுஉ) அதற்குக் குறைபாடுண்டாகியவிடத்து நான்முகவொருவனைக்கருதி (கசுரு) ஒன்றுபுரிகொள்கைப் (கசுசு) புள்ளணி நீள்கொடிச்செல்வனும் (கருக), மூரண்மிகு செல்வனும் (கருச), யானையெருத்தமேறிய செல்வனும் (கருரு), முப்பத்துமூவரும் (கசுஎ), பதினெண்கணங்களும் (கசுஅ) தோன்றலர் (கசுகூ) செலவினர் (கஎ0) திறலினர் (கஎக) குரலினர் (கஎஉ) கொட்பினராய் உடன்வந்து (கஎச) தம் விழுமிய (கஎஉ) பெறுமுறை குறைஉறுமருங்கின் முடித்துக் கோடற்கு (கஎரு) மென்மொழிமேவலர் இன்னரம்புளர (கசஉ) முனிவர் (கஙஅ) மேவர (கஙகூ) முற்புகக் (கஙஎ) காணத் (கஎச) தான் ஆவினன்குடியிலே காண்வர (கசுரு) அசைதலுமுரியனென முடிக்க.

கந்தருவர் - பாட்டான் முனிவுதீர்ப்பார். முனிவர் தம்மை மருமைபற்றி முன்னேசென்றார்.

இனிச் சித்தன்வாழ்வென்று சொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன்குடியென்று பெயர்பெற்றதென்றுமாம். அது "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ் - வில்லந் தொறுமூன்றெரியுடைத்து - நல்லரவப் - பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின் - நாட்டுடைத்து நல்ல தமிழ்" என்று ஒளவையார் கூறியதனானுணர்க. * சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்.

அதாஅன்று—அதுவன்றி,

௪.—திருவேரகம்.

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது—ஓதல் ஓதுவித்தல் வேட்டல்

* இது முருகக்கடவுள் ஆயிரநாமத்துள் ஒன்று.

வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னும் ஆறாகிய நன்மைபொருந்திய இலக்கணத்தில் வழுவாமல்,

வழாமல், வழுவாமலெனத் திரிக்க.

இருவர்ச் சுட்டிய பல் வேறு தொல் குடி—தாயுந் தந்தையுமாகிய இருவர்குலத்தையும் உலகத்தார் நன்றென்றுமதித்த பலவாய்வேறுபட்ட பழைய குடியிற்பிறந்த இருபிறப்பாளர் (கஅ௨)

குடி - *குண்டினர், காசிபர் என்றாற்போல்வன.

[அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண், டாறினிற் கழிப்பிய] அறுநான்கு இரட்டி ஆண்டு நல்லிளமை ஆறினிற் கழிப்பிய — இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதங்கூறிய நெறியிலே போக்கிய இருபிறப்பாளர் (கஅ௨)

பிரமசரியங்காத்த அந்தணர்.

அறன் நவில் கொள்கை—அறத்தை எப்பொழுதுங் கூறுகின்ற கோட்பாட்டினையும்,

மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து—நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய †மூன்றுவகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்றுதீயானுண்டாகிய செல்வத்தினையுமுடைய,

இருபிறப்பாளர்—உபநயனத்துக்கு முன்பு ஒருபிறப்பும் பின்பு ஒருபிறப்புமாகிய இருபிறப்பினையுமுடைய அந்தணர்,

பொழுது அறிந்து நுவல—தாங்கள் வழிபடுங்காலமறிந்து தோத்திரங்களைக் கூற,

ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்—முந்நூற்கொண்டு முப்புரியாகுதலின், ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தேகொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணூலையும்,

ஞாணினையும் (கஅ௩) கொள்கையினையும் (கஅ௦) செல்வத்தினையுமுடைய (கஅக) இருபிறப்பாளரென்க.

புலராக் காழகம் புலர உடீஇ—நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்துபுலர உடுத்து,

என்றது - ஈரத்துடனேயிருந்து வழிபடுதல் கூறிற்று.

உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து—தலைமேலே வைத்த கையினையுடையராய்த் தன்னைத்துதித்து,

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி—ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய, மறையவுச்சரிக்கப்படும் மந்திரத்தை,

அது "நமக்குமாராய" என்பதாம்.

நா இயல் மருங்கில் நவிலப் பாடி—நாப் புடைபெயரும் அளவிலே பயில உச்சரித்து,

* குண்டலரென்றும் பிரதிவேறுபாடுண்டு.

† இவற்றுட் பின்னைய இரண்டன் வகையும் இக்காலத்து வழங்குவனவற்றிற்கு வேறுபட்டிருத்தலின், இம்மூன்று வகையும் சாகாபேதமாக இருத்தல்வேண்டுமெனக் கூறுகின்றனர்.

விரை உறு நறு மலர் ஏந்தி—மணமிக்க நறியபூவை எடுத்து,

பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன்—பெரிதுமகிழ்ந்து ஏரகமென்கின்றவூரிலே இருத்தலுமுரியன்;

இருபிறப்பாளர் (௧௮௨) புலராவுடைஇத் (௧௮௪) தற்புகழ்ந்து (௧௮௫) நறுமலரேந்திக் (௧௮௮) கூப்பியகையராய் (௧௮௬) நவிலப்பாடிப் (௧௮௭) பொழுதறிந்து நுவல (௧௮௨.) அதற்குப் பெரிதுமகிழ்ந்து ஏரகத்துறைதலும் உரியனெனமுடிக்க.

ஏரகம் - மலைநாட்டகத் தொருதிருப்பதி.

அதா அன்று—அதுவன்றி,

௫.—குன்றுதோறாடல்.

பைங்கொடி—பச்சிலைக்கொடியாலே,

எல்லாவற்றினும் பசுத்திருத்தலிற் பச்சிலையென்று பெயர்பெற்றது. பச்சிலையென்றது சினைவினைமுதன்மேலேற்ற பைங்கொடியென்றார்

நறைக்காய்—நறுநாற்றத்தையுடைய காயை,

அது சாதிக்காய்.

இடைஇடுபு—நடுவேயிட்டு,

வேலன்—படிமத்தான்,

அம் பொதிப் புட்டில்—அழகினையுடைத்தாய்ப் பொதிதலையுடைய தக்கோலமென்னும் முதலின்காய்,

அது புட்டில்போறலிற் புட்டிலென்றார்.

விரைஇ—கலந்து,

குளவியொடு—காட்டுமல்லிகையுடனே,

வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்—வெண்டாளியிலையுங் கட்டின கண்ணியையுடையனாய்,

நறுஞ் சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின்—நறிய சந்தனத்தைப்பூசின நிறம் விளங்கும் மார்பினையுடைய வேலன் (௧௯௦),

வேலன் பைங்கொடியாலே (௧௯௦) புட்டில்விரைஇ (௧௯௧) நறைக்காயிடையிடுபு (௧௯௦) குளவியொடு (௧௯௧) கூதாளத்தையுங் கட்டின கண்ணியனாய் (௧௯௨).

கண்ணியன் - வினையெச்சவினைக்குறிப்புமுற்று.

கொடுந் தொழில் வல் வில் கொலைஇய கானவர்—கொடிய தொழிலையுடைய வலியவில்லாற் கொல்லுதலைச்செய்த குறவர்,

“குலைஇய” என்ற பாடத்திற்கு வில்லைவளைத்த கானவரென்க. எனவே கோறல் பெற்றாம.

நீடு அமை விளைந்த தேக் கள் தேறல்—நெடுகின மூங்கிலிலே யிருந்து முற்றின தேனாற்செய்த கட்டெளிவை,

குன்றகச் சிறு குடிக் கிளையுடன் மகிழ்ந்து—மலையிடத்துச் சிறியவூரிலே இருக்கின்ற சுற்றத்தோடே உண்டுமகிழ்ந்து,

தொண்டகச் சிறு பறைக் குரவை அயர—அந்நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற்குக் குரவையாட,

கானவர் (௧௯௪) தேறலைமகிழ்ந்து குரவையாடவென்க.

[விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற், குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி:]

விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங் காந் கண்ணி—விரலதலைப்பாலே வலிய வலர்த்தவலர்ந்த பூவாகலின் வேறுபடுகின்ற நறியமணத்தினையுடைய தலையிற் சூடும் மாலையினையும்,

குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி—அதுதான் ஆழ்ந்த சுனையிற்பூத்த பூவாற் செய்த வண்டுவீழ்கின்ற கண்ணி.

இஃது ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படு பொருண்மேல் நின்றது. கார்க் குண்டுசுனை யென்று பாடமாயின், கரிய ஆழ்ந்த சுனையென்க.

இணைத்த கோதை—இதழ் பறித்துக்கட்டின மாலையினையும்,

அணைந்த கூந்தல்—சேர்த்தின கூந்தலினையும்,

முடித்த குல்லை—இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங்குல்லையினையும்,

இலை உடை நறும் பூ—இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,

செங் கால் மராஅத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உணத் தொடுத்த பெருந் தண் மாத் தழை—செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச் சுரும்பு தேனையுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை,

குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தழை யென்க.

[திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ:] காழ் திருந்து அல்குல் திளைப்ப உடீஇ—வடங்கள் திருந்தும் அல்குலிடத்தேஅசையும்படி உடுத்து,

அல் குற்றிளைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று.

[மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]

மயில் கண்டு அன்ன மகளிரொடு—சாயலுடைமையான் மயிலைக் கண்டாற்போன்ற மகளிரொடு,

மடநடை மகளிர்—மடப்பம்பொருந்திய ஒழுக்கத்தினையுமுடைய மகளிர்,

தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க.

உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவமவுருபோடு முடிந்தது.

கண்ணியினையும் கோதையினையுஞ் சேர்த்தின கூந்தலினையும், மடநடையினையுமுடைய மகளிரென்க.

இம் மகளிர் தன்னைச் சேவிக்கு மகளிர்.

செய்யன் — சிவந்தவன்,

சிவந்த ஆடையன் செவ்வரைச் செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன்—சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர் அசையுங்காது பொருந்தி,

கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்—கச்சைக் கட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச் சூடி,

குழலன் கோட்டன் குறும் பல்லியத்தன்—குழலை யூதிக் கொம்பைக் குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,

தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்கொடியன் — கிடாயைப் பின்னிட்டு மயிலையேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,

நெடியன்—தான் வேண்டிய வடிவுகோடலிற் பிள்ளையாயிராது நெடுகவளர்ந்து,

தொடி அண் தோளன்—தோளிலே தொடியையணிந்து,

நரம்பு ஆர்த்து அன்ன இன் குரல் தொகுதியொடு—நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய பாடுமகளிரோடே,

இவர்கள் தன்னைச் சேவித்துப்பாடுமகளிர்.

[குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல், மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகி லினன்:]

மருங்கிற் கட்டிய குறும்பொறிக் கொண்ட—இடையிலே இறுகக்கட்டிய உதரபந்தத்தின்மேலே உடுப்பதாக வுட்கொண்ட,

நிலன் நேர்பு நறுந் தண் சாயல் துகிலினன் — காலளவிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலையுடுத்து,

[முழவுறழ் தடக்கையி னியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து:]

மென்றோட் பல் பிணை இயல—மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணைபோலும் மகளிர் குரவையாடி அசைய,

இவர்கள் மெய்தீண்டி விளையாடுதற்குரிய மகளிர்.

முழவு உறழ் தடக் கையின் தழீஇ ஏந்தித் தலைத் தந்து—தன்னுடைய முழவை யொத்த பெருமையையுடைய கையினாலே அவர்கள் கையினைத் தழீஇ எடுத்துக் கொண்டு முதற்கைகொடுத்து,

[குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே:] குன்றுதோறு ஆடலும் தன் நின்ற பண்பு—மலைகடோறுஞ்சென்று விளையாடுதலும் தனக்கு நிலைபெற்ற குணம்;

கண்ணியன் ஆடையனென்பனமுதலியன வினைமெச்சவினைக் குறிப்பு முற்று; *"முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ் சூத்திரவிதியால், செய்தெனெச்சப்பொருளையுணர்த்தின.

கானவர் (௧௯௪) குரவையயர (௧௯௭), அதனைக்கண்ட மென்றோட் பல்பிணை (௨௧௬) குரவையாடி யசைய (௨௧௭), அதனைப்பொருந்திச் செய்யன் (௨௦௬) வேலன் (௧௯௦) தொடுத்த கண்ணியைச்சூடி (௧௯௨) உடுத்து (௨௦௪) பொருந்திக் (௨௦௫) கட்டி அணிந்து சூடி (௨௦௮) ஊதிக் குறித்து எழுப்பி (௨௦௯) பின்னிட்டு ஏறி (௨௧௦) உயர்த்து வளர்ந்து தொடியையணிந்து (௨௧௪) நரம்பார்த்தத் (௨௧௫) தொகுதியுடனே (௨௧௨) மகளிரோடே (௨௦௫) மலைகடோறுஞ்சென்று (௨௧௭) தழீஇ (௨௧௪) எந்தித் (௨௧௫) தலைத்தந்து (௨௧௬) ஆடலும் நின்றதன் பண்பெனவினைமுடிக்க.

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வென்றியு, மெய்த்தக் கூறு மியல்பிற் றாகும்" எனவரும்.

அதாஅன்று—அதுவன்றி,

௫.—பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து—சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாகவைத்து மறியையறுத்து,

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௩௬.

வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ — கோழிக்கொடியோடே தான் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி,

ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும் — ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட தலைமைபொருந்தின விழாவின்கண்ணும்,

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் — தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன்மனம் பொருந்துதல்வருகின்ற இடத்தினும்,

வேலன் தைஇய வெறி அயர் களனும் — படிமத்தான் இழைத்த வெறியாடு களத்தினும்,

பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு நிற்றலின் வேலனென்றார்; இது* "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" என புறத்திணையிற் கூறியது.

காடும் காவும் கவின்பெறு துருத்தியும் — காட்டினும் பொழிலினும் அழகுபெறுகின்ற ஆற்றிடைக்குறையினும்,

யாறும் குளனும் — ஆறுகளினுங் குளங்களினும்,

வேறு பல் வைப்பும் — முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும்,

சதுக்கமும் — நாற்சந்தியினும்,

சந்தியும் — முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும்,

புதுப் பூங் கடம்பும் — புதிய பூக்களையுடைய கடம்பினும்,

மன்றமும் — ஊர்க்குநடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியினும்,

பொதியிலும் — அம்பலத்தினும்,

கந்து உடை நிலையினும் — ஆதீண்டு குற்றியையுடைய இடத்தினும்,

[மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர] மாண் தலைக் கொடியொடு உருகெழு வியனகர் (௨௪௪) அமைவர மண்ணி — மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கோழிக்கொடியோடே உருகெழு வியனகரை அமைவரப்பண்ணி,

ஒடு - வேறுவினை யொடு.

இனி, மாண்டலைக்கொடியென்று பாடமாயின், பேய்முதலியன பலியை நுகர மக்கள் தலைமகள் நிலையும், உடல் புள்ளிவடிவுமாக எழுதின கொடியென்க.

நெய்யோடு ஐயவி அப்பி — நெய்யோடே வெண்சிறுகடுகையும் அப்பி,

ஐது உரைத்து — தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாம லுச்சரித்து,

குடந்தம்பட்டு — வழிபட்டு,

வணக்கம் குடந்தமென்றும் உரைப்பர்; குடவென்பது தடவென்பதுபோல வளைவை உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப்பிறந்த பெயருமாம். †

கொழு மலர் சிதறி — அழகிய மலர்களைத் தூவி,

முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ — தம்மிற் பகைத்தல் கொண்ட வடிவினையுடைய இரண்டு துகிலை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக வுடுத்து,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௫.

† இதன்பின்னே, குடந்தமாவது - "நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி - நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்" என்று ஒரு பிரதியிலுள்ளது.

செந்நூல் யாத்து—சிவந்தநூலைக் கையிலே காப்புக்கட்டி,
நூலொழுக்கி எல்லைப்படுத்தென்றுமாம்.
வெண் பொரி சிதறி—வெள்ளிய பொரியைத் தூவி,
மத வலி நிலைஇய மாத் தாள் கொழு விடை—மிகுதியையுடைய வலி நிலைபெற்ற பெருமையையுடைத்தாகிய காலையுடைய கொழுவிய கிடாயினது,
குருதியொடு விரைஇய தூ வெள் அரிசி—உதிரத்தோடே பிசைந்த தூய வெள்ளரிசியை, *
சில் பலிச் செய்து—சிறுபலியாக இட்டு,
பல் பிரப்பு இரீஇ—பலபிரப்பும் வைத்து,
இனிப் பிரப்புக்கூடையென்பாருமுளர்.
சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து—சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனமுதலியவற்றையுந் தெளித்து,
இனிச் சிறுபசுமஞ்சள் மஞ்சளில் ஒரு சாதிவிசேடமுமாம். விரை - ஆகுபெயர்.
[பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை துணையற வறுத்துத் தூங்க நாற்றி:]
பெருந் தண் கணவீர மாலை—பெரிய குளிர்ந்த செவ்வலரிமாலையையும்,
நறுந் தண் மாலை — ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்,
அறுத்து — தலையொக்க அறுத்து,
துணை அறத் தூங்க நாற்றி — தமக்கு ஒப்பில்லாதபடி அசையத்தூக்கி,
இனித் தம்மில் இணையொத்த அறுப்பாக அறுத்தென்றுமாம்.
நளி மலைச் சிலம்பில் நல் நகர் வாழ்த்தி — செறிந்த மலைப்பக்கத்திலுள்ள நல்ல ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் நீங்குகவென்று வாழ்த்தி,
நகர் - பிள்ளையார் கோயிலென்றுமாம்.
நறும் புகை எடுத்து — நறிய தூபங்கொடுத்து,
குறிஞ்சி பாடி — அந்நிலத்திற்கடைத்த குறிஞ்சிப்பண்ணைப் பாடி,
இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க — முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,
உருவப் பல் பூத் தூஉய் வெரு வரக் குருதிச் செந்தினை பரப்பி—சிவந்த நிறத்தினையுடைய பலபூக்களையுந் தூவி அச்சம்வரும்படி உதிரங்கலந்த சிவந்த தினையினையும் பரப்பி,
குறமகள் முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருகனுக்குரும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படியாகப் பிள்ளையார்வரும்படி வழிபடுத்தின அச்சம்பொருந்தின அகற்சியையுடைய நகரின்கண்ணே,
* "வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறுபான்மை யேனையோரும் ஆடுவாரென்றலிற், குறமகள் வெறியாட்டுக் கூறினர்.
குறமகள் (உ௪உ) மண்ணி(உஉ௭)அப்பி உரைத்துப்(உஉ௮)பட்டுச் சிதறி உடுஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்க நிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென வினைமுடிக்க
சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ரு

ஆடு களம் சிலம்பப் பாடி— அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கேற்பனவற்றைப் பாடி,

[பலவுடன்,கோடுவாய் வைத்து:] கோடு பல உடன் வாய் வைத்து—கொம்புகள் பலவற்றையுஞ் சேரவூதி,

கொடு மணி இயக்கி—கொடிய மணியையும் ஒலிப்பித்து,

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியினையுடைய * பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

பிணிமுகம்-மயிலுமாம்.

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை விரும்புவோர் தாங்கள் விரும்பினகாரியங்களை விரும்பினாற்போலப் பெற்றுநின்று வழிபட,

நகரிலே (உ௩௪) பாடி வைத்து இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலுமுரியன் (௨௪௯) என்க.

விழவின்கண்ணும் (உ௨0) நிலையின்கண்ணும் (உ௨௧) சந்துடைநிலையின்கண்ணும் (உ௨௬) உறைதலுமுரியன் (௨௪௯) என்க.

ஆண்டாண்டுறைதலும்—களனும் (உ௨உ)காடும் காவும் துருத்தியும்யாறும் குளனும் வைப்பும் சதுக்கமுஞ் சந்தியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிந்தவாறே—யான் அறிந்தபடியே கூறினேன்;

ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக — யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலேயாயினுமாக பிறவிடங்களிலே யாயினுமாக,

உம்மை-ஐயவும்மை.

[காண்டக முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி:] முந்து நீ கண்டுழிக் காண்டக முகன் அமர்ந்து ஏத்தி — முற்பட நீ கண்டபொழுது அழகு தக்கிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்றார் அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அச்சம்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

கை தொழூஉப் பரவி—முன்னர்க் கைகளைத் தலைமேலேவைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி தண்டனிட்டு,

நெடும் பெருஞ் சிமயத்து † நீலப் பைஞ்சுனை —நெடிய பெரிய இமவானுச்சியிற் றருப்பைவளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகுபெயர்; என்றது சரவணப்பொய்கையென்றவாறு.

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப — ஆகாயமும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீத் தன்னங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் றெய்வமாகிய தீயை.

* பிணிமுகம் முருகற்குரிய யானையென்பதை, "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாடலிற் "சேயுயர்பிணிமுக மூர்ந்தம ருழக்கி" என்பதனுரையானுணர்க.

† "நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனை" என்றார் பரிபாடலிலும்.

அவன் அங்கையேற்பவென்றது: இறைவனிடத்தினின்றும் இந்திரன்வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன்கூறிய முத்தீக்குண்டத் திட்டதனைக் கூறிற்று.

அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ — அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவுபொருந்திய செல்வ,

என்றது: அங்ஙனம் அங்கியின்கணிட்டுச் சத்திகுறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம்மனைவியர்க்குக் கொடுப்ப அருந்ததியொழிந்தோர் விழுங்கிச் சூன்முதிர்ந்து, சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று.

ஏற்கையிலுலே அறுவராற் பைஞ்சுனையிலே பயக்கப்பட்ட செல்வவென்க; இது பரிபாடலிற் * "பாயிரும் பனிக்கடல்" என்னும் பாட்டானுணர்க.

ஆல் கெழு கடவுட் புதல்வ — கல்லாலின் கீழிருந்த கடவுளினுடைய புதல்வ,

கடவுளரென உயர்திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணைமுடிபுகொள்ளும் உயர்திணையாய் நிற்றலின், அஃறிணைப்பாற்பட்டு †"உணரக்கூறிய" என்னும் புறனடையான் முடிந்தது.

மால் வரை மலை மகள் மகனே — பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே,

வரை - மூங்கிலுமாம்.

மாற்றோர் கூற்றே — பகைவர்க்குக் கூற்றுவனே,

[வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:]

வெற்றிக் கொற்றவை சிறுவ — வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் வனதுர்க்கையினுடைய புதல்வ,

வெல் போர்க் கொற்றவை — தான் வெல்லும்போரைச் செய்யுங் கொற்றவை,

என்றது: மகிடனைச் செற்றதனை.

இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி — பூணணிந்த தலைமையினையுடைய காடுகாளுடைய குழவி,

காடுகிழாளென்பது இக்காலத்துக் காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சத்தியாகலின், அவளுடைய குழவியென்றார்.

[வானோர் வணங்குவிற் றானைத் தலைவ:]

வானோர் தானைத் தலைவ—தேவர்கள் படைத்தலைவ,

என்றது: தேவசேனாபதி என்றதாம்.

வணங்கு வில்—வளையும் வில்லையும்,

வில்லையும், தேவராகிய தானையையுமுடைய தலைவனென்க.

மாலை மார்ப—இன்பத்திற்குரிய மாலையணிந்த மார்ப,

நூல் அறி புலவ—எல்லா நூல்களையும் அறியும் புலவ,

புலவன்-அறிவுடையவன்.

செருவில் ஒருவ—போர்த்தொழிலில் ஒருவனாகி நிற்பாய்,

பொரு விறல் மள்ள—பொருகின்ற வெற்றியினையுடைய மள்ள,

மள்ளன்-இளமைப்பகுதித் திருநாமத்தோன்.

அந்தணர் வெறுக்கை—அந்தணருடைய செல்வமாயிருப்பாய்,

---

* பரிபாடல், ரு.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், கசo.

அறிந்தோர் சொல் மலை—சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களினீட்டமாயிருப்பாய்,

மங்கையர் கணவ—தெய்வயானையாரும், வள்ளிநாச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவ,

மைந்தர் ஏறே—வீரர்க்கிடபமே,

வேல் கெழு தடக் கைச் சால் பெருஞ் செல்வ—வேல்பொருந்தின பெருமையையுடைய கையானமைந்த பெரிய செல்வ,

என்றது: வேல் வெற்றியாற்பெற்ற அச்செல்வத்தை.

[குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து, விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ:]

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்துக் கிழவ—குருகாம் பெயர்பெற்ற மலையைப்பிளந்த குறையாத வெற்றியையுடைய கிழவ,

விண் பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ—தேவருலகைத் தீண்டும் நெடிய வரைகளையுடைய குறிஞ்சிநிலத்துக்கு உரிமையுடையாய்,

அதற்குரியனாதல் * "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்பதனானுணர்க.

பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே—பலரும் புகழ்ந்துசொல்லும் நன்றாகிய சொற்களையுடைய பரசமயத்தினுள்ளார்க்கு ஏற்றின் தன்மையை உடையவனே,

என்றது: கல்விமதத்தையுடைய யானைபோல்வார்க்குச் சிங்கவேறு போல்வாயென்றதாம்.

[அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக:] பெறல் அரு மரபின் பெரும் பெயர் முருக—பிறர்க்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும்பொருளையுடைய முருக,

பெயர் - பொருள். † "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" எனவும், ‡ "சொற்பெயர் நாட்டம்" எனவும்வரும். பெரும்பொருளென்றது - வீட்டினை.

[நசையுநர்க் கார்த்து மிசைபேராள:] நசையுநர்க்கு ஆர்த்தும் பேர் இசை ஆள—அவ்வீட்டைப் பெறவேண்டுமென்று நச்சிவந்தார்க்கு அதனை நுகர்விக்கும் பெரியபுகழை ஆளுதலையுடையாய்,

பேரிசை யென்று மாறுக.

[அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய், மண்டமர் கடந்தநின் வென்றுடகலத்து:]

அலந்தோர்க்கு அளிக்கும் சேஎய்—பிறரால் இடுக்கட்பட்டுவந்தோர்க்கு அருள்பண்ணும் சேய்,

மண்டு அமர் கடந்த வென்று ஆடு நின் அகலத்துப் பொலம் பூண் சேஎய்—மிக்குச்செல்கின்ற போர்களைமுடித்த வென்றாடுகின்ற நினதுமார்பிடத்தே பொன்னாற் செய்த பேரணிகலங்களையணிந்த சேயென்க.

பரிசிலர்த் தாங்கும் உரு கெழு நெடு வேஎள்—இரந்துவந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல்பொருந்திய நெடியவேளே,

பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்—தேவரும் முனிவரும் ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௫.

† பதிற்றுப்பத்து, ஒன்பதாம்பத்து, ௧௦.

‡ ,, மூன்றாம்பத்து, ௧.

இயவுள்—கடவுளுமாம்.

[சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு:] போர் மிகு மொய்ம்பிற் சூர் மருங்கு அறுத்த மதவலி—போர்த்தொழிலிலே மிகுகின்ற வலியாலே சூரபன்மாவின்குலத்தை இல்லையாக்கின மதவலியென்னும் பெயரையுடையாய்,

பொருந—உவமிக்கப்படுவாய்,

பொருவப்படுமவன், பொருநனென நின்றது.

குரிசில்—தலைவன்,

[எனப்பல, யானறி யளவையி னேத்தி யாறுது:] என யான் அறி அளவையின் ஆறுது பல ஏத்தி—என்று யானறிந்து நினக்குக்கூறிய அளவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து,

நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்—நின் தன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கு அரிதாகையினாலே,

நின் அடி உள்ளி வந்தனென்—நின் திருவடியைப் பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன்;

நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய்—நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய்,

எனக் குறித்தது மொழியா அளவையில்—என்றுசொல்லி நீகருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ்செய்வதற்கு முன்னே,

முந்துநீகண்டுழி முகனமர்ந்து (௨௫௧), மகனே, கூற்றே (௨௫௭), குழவி(௨௫௯), வெறுக்கை, சொன்மலையாயிருப்பாய் (௨௬௫), மைந்தரேறே (௨௬௪), புலவரேறே (௨௬௮), சேயே (௨௭௧), வேளே (௨௭௩), இயவுளே (௨௭௪), மதவலி (௨௭௫), புலமையோய் (௨௮௦) என்றுமுன்னர் எதிர்முகமாக்கி ஏத்தி (௨௫௪) யென அண்மைவிளியல்லாதனவற்றை முன்னர்க்கூட்டி முடிக்க. அங்ஙனம் எதிர்முகமாக்கி யேத்திப் பின்னர்ப் பரவி வணங்கிச் (௨௫௨) செல்வ (௨௫௫), புதல்வ (௨௫௬), சிறுவ (௨௫௮), தலைவ (௨௬௦), மார்ப, புலவ (௨௬௧), ஒருவ, மள்ள (௨௬௨), கணவ (௨௬௪), செல்வ (௨௬௫), கிழவ (௨௬௭), முருக (௨௬௯), இசைபேராள (௨௭௦), பொருந (௨௭௬) வென்று அண்மையாகவிளித்து, மன்னுயிர்க்கருமையின் (௨௭௮) யானறியளவையினேத்தி (௨௭௭) நின்னடியுள்ளிவந்தனென் (௨௭௯) என்று நீ குறித்தது மொழியாவளவையினென முடிக்க.

[குறித்துடன், வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்:] வேறு பல் உருவிற் குறும் பல் கூளியர் உடன் குறித்து—வேறுவேறாகிய பலவடிவினையுடைய சிறிய பலராகிய சேவித்துநிற்பார் சேரக்கருதி,

* "நின் கூர்நல்" லம்பிற் கொடுவிற் கூளியர்" என்றார் பிறரும்.

சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி—வியாபெருக்கமாய் களத்தே தாங்கள் பொலிவுபெறத் தோன்றி,

[அளியன் றானே முதுவா யிரவலன்:] முது வாய் இரவலன் தான் அளியன்—அறிவுமுதிர்ந்த வாய்மையையுடைய புலவன்றான் அளிக்கத்தக்கான்;

[வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென, வினியவு நல்லவு நனிபலவேத்தி:] பெரும நின் வண் புகழ் நயந்து இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி வந்தோன் என—பெரும, நினது வளவிய புகழினைக்கூறவிரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதிபயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்தோனென்றுகூற,

* புறநானூறு, ௨௩.

கூளியர் (உ௮உ) குறித்துத் (உ௮௩) தோன்றி (உ௮௫) அளியன் (உ௮௪) பெரும நின் வண்புகழை கூறநயந்து (உ௮௫) இனியவும் நல்லவுமாக எந்தி (உ௮௬) வந்தோன் (உ௮௭) என்று கூறவென முடிக்க.

தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்—தெய்வத்தன்மையமைந்த வலிவிளங்கும் வடிவினையும்,

வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி—வானைத்தீண்டும் வளர்ச்சியினையுமுடைய தான் அவையை வந்தணுகி,

அணங்கு சால் உயர் நிலை தழீஇ—வருத்தமமைந்த தெய்வத்தன்மையை உள்ளடக்கிக்கொண்டு,

[பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி:] மணம் கமழ் தெய்வத்துப் பண்டைத் தன் இளநலம் காட்டி—மணம் நாறுகின்ற தெய்வத்தன்மையையுடைய முன்புண்டாகிய தன் இளையவடிவைக் காட்டி,

[அஞ்சலோம்புமதி யறிவனின் வரவென:] நின் வரவு அறிவல் அஞ்சல் ஓம்புமதி என—நீ வீடுபெற நினைத்துவந்த வரவை யான் முன்னேயறிவேன்; அது நினக்கு எய்துதலரிதென்று அஞ்சுதலைப் பரிகரியென்று,

அன்புடை நன்மொழி அளைஇ—நின்மேல் அன்புடைத்தாகிய நல்ல வார்த்தைகளைப் பலகாலும் அருளிச்செய்து,

[விளிவின்று, இருணிற முந்நீர் வளைஇய வுலகத், தொருநீ யாகித் தோன்ற:] இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒரு நீயாகி விளிவு இன்று தோன்ற—இருண்டநிறத்தையுடைய கடல்சூழ்ந்த உலகத்திடத்தே நீ யொருவனுமே பிறர்க்கு வீடளித்தற்குரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி,

விழுமிய பெறல் அரும் பரிசில் நல்கும் மதி—சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தருவன்;

* "இருமுன் றென்னு மேனை யிடத்தொடுந். தருநிலை யுடைய வென்மனார் புலவர்." எனறதனுனல் † "அவ்வச் சொல்லிற்கு" என்னும் புறனடையதனானுதன் மதி படர்க்கைக்கண்வருதல் கொள்க.

இனி மதிபலவுடனெனக் கூட்டி, அறிகள் பலவுடனே பரிசில் நல்குமென்று கூறுவாருமுளர்.

[பலவுடன், வேறுபஃ றுகிலி னுடங்கி:] வேறு பல் துகிலின் பல உடன் நுடங்கி—வேறுபட்ட பலவாகிய துகிற்கொடிகளைப்போலத் தாம் பலவுங் கூடவசைந்து,

அகில் சுமந்து ஆரம் முழுமுதல் உருட்டி—அகிலை மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி,

வேரற் பூவுடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு—சிறுமூங்கிலினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப்பிளந்து,

விண் பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த தண் கமழ் அலர் இறால் சிதைய—தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின்மண்டிலத்தைப்போல வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடு கெட,

நன் பல ஆசினி முது சுளை கலாவ—நன்றாகிய பல ஆசினிகளினுடைய முற்றிய சுளை தன்னிடத்தே கலக்க,

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், உ௭.

† ,, ,, ,, ௪௭.

மீமிசை நாக நறுமலர் உதிர—மலையினுச்சியிலுண்டான சுரபுன்னையின் நறிய மலர்கள் உதிர,

ஊகமொடு மாமுக முசுக்கலை பனிப்ப—கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க,

* "கலைமையன் காட்சி யுழைக்கு முரித்தே." † "நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்." என்றார்.

பூ நுதல் இரும் பிடி குளிர்ப்ப வீசி—பொறிகளையணிந்த மத்தகத்தையுடைய பெரிய பிடி குளிரும்படி வீசி,

பெருங் களிற்று முத்து உடை வான் கோடு தழீஇ—பெரிய யானையினுடைய முத்தையுடைத்தாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி,

[தத்துற்று, நன்பொன் மணிநிறங் கிளர:] நன் பொன் மணி நிறம் கிளரத் தத்துற்று—நல்ல பொன்னும் மணியும் நிறம்விளங்கும்படி மேலே பொங்கிக்குதித்து,

தத்துற்று- தத்துதலையுற்று.,

பொன் கொழியா—பொடியான பொன்னைத் தெள்ளி,

வாழை முழுமுதல் துமியத் தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி—வாழையினது பெரிய முதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரியகுலை உதிர அவ்விரண்டினையும் மோதி,

கறிக் கொடிக் கருந் துணர் சாய—மிளகினதுகொடியின் கரிய கொத்துக்கள் சாய,

[பொறிப்புற, மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக், கோழி வயப்பெடையிரிய:] பொறிப் புற மட நடை மஞ்ஞை கோழி வயப் பெடை வெரீஇப் பலவுடன் இரிய—பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தையுடைத்தாகிய ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே சேவலினுடைய வலியையுடைய பேடை வெருவிப் பலவுஞ் சேரக்கெட,

[கேழலொடு, இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம், பெருங்கல் விடரளைச் செறிய:] கேழலொடு வெளிற்றின் இரும் பனைப் புன் சாய் அன்ன குரூஉ மயிர் யாக்கைக் குடா வடி உளியம் பெருங் கல் விடர் அளைச் செறிய— ஆண்பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பையொக்க கரிய நிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும், வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல்லிடை முழைஞ்சிலே சேர,

கருங் கோட்டு ஆமா நல் ஏறு சிலைப்ப—கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க,

சேண் நின்று இழுமென இழிதரும் அருவி— மலையின் உச்சியினின்றும் இழுமென்னும் ஓசைபடக் குதிக்கும் அருவியையுடைய

பழம் முதிர் சோலை மலை கிழவோனே—பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோனே,

நுடங்கிச் சுமந்து உருட்டிக் கீண்டு நிமிர்ந்து சலாவ உதிரப் பனிப்ப வீசித் தழீஇத் தத்துற்றுக் கொழியாத் துமிய உதிரத்தாக்கிச் சாய இரியச் செறியச் சிலைப்ப இழிதரும் அருவியெனமுடிக்க.

கிழவோனென்றபெயர் உடைமையொடு புணர்க்கவுங் கொள்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௬௫.

† ,, ,, ,, ௬௮.

கழலவன் (௬) மார்பினன் (௧௧) சென்னியனாகிய (௪௪) சேயுடைய (௬௧) சேவடி படரும் உள்ளத்தோடே (௬௨) செல்லுஞ்செலவை நீநயந்தனையாயின் (௬௪), நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப இன்னேபெறுதி (௬௬); அதுபெறுதற்கு அவன்யாண்டுறையுமெனின் திருப்பரங்குன்றமர்ந்துறைதலுமுரியன்; அதுவன்றி (௭௭) அலைவாய்ச்சேறலும் நிலைஇயபண்பு; அதுவன்றி (௧௨௫) ஆவினன்குடி அசைதலுமுரியன்; அதுவன்றி (௧௭௬) ஏரகத்துறைதலுமுரியன்; அதுவன்றிக் (௧௮௯) குன்றுதோறாடலும் நின்றதன்பண்பு; அதுவன்றி (௨௧௭) விழவின்கண்ணும் (௨௨௦) [illegible]லையின்கண்ணும் (௨௨௧) கந்துடைநிலையினுமென்னும் (௨௨௬) உறைதலுமுரியன் (௧௮௯); களனும் (௨௨௨) காடு (௨௨௩) முதலியன ஆண்டாண்டுறைதலும் (௨௪௯) உரியன் (௧௮௯); நகர்நிலை (௨௪௧); பாடி (௨௪௫) வைத்து இயக்கி (௨௪௬) வாழ்த்தி (௨௪௭) வழிபட (௨௪௮) உறைதலுமுரியன் (௧௮௯); இவ்விடங்களையும் படியே கூறினேன் (௨௪௯); இனி யாண்டாண்டாயினுமாகப் பிறவிடங்களிலேயாயினுமாக (௨௫௦) முகத்துநீகண்டுழிமுகனமர்ந்து முன்னமொழிமுகமலர்ந்தேத்திப் (௨௫௧) பரவி வணங்கி (௨௫௨) அண்மையாகவிளித்து யானறிய அளவையிற் போற்றி (௨௭௭) நின்னடி யுள்ளி வந்தேனென்று (௨௭௮) நீகுறித்தது மொழிவதன்முன்னே (௨௮௧) கூளியர் (௨௮௨) குறித்துத் (௨௮௩) தோன்றிப் (௨௮௪) பெருமை (௨௮௫) இரவலன் நீஅளிக்கத்தக்கான் (௨௮௪) வந்தோனென்றுகூற (௨௮௫) மலைகிழவோனாகிய (௨௭௭) குரிசிலும் (௨௭௯) தான்வந்தெய்தித் (௨௮௮) தழீஇக் (௨௮௯) காட்டி (௨௯௦) அருசலோம்புமதியென்று (௨௯௧) அன்புடை நன்மொழியளைஇ (௨௯௨) ஒருநீயாகித்தோன்ற விழுமிய (௨௯௪) பெறலரும்பரிசில் நல்குவனென (௨௯௫) வீடுபெறக் கருதிய புலவனை நோக்கி வீடுபெற்றானொருவன் ஆற்றுப்படுத்ததாக வினைமுடிக்க.

இது, புறத்திணையியலுள் * "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனான் முற்கூறிய கந்தழியைப் பெற்றானொருவன் அதனைப் பெறாதானொருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று.

கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த் தானேநிற்குந் தத்துவங்கடந்த பொருள்; அது † "சார்பினுற் றோன்றாது தானருவாய் * * மைதீர் சுடர்" என்பதாம்; இதனை ‡ "உற்றவாக்கையி னுறுபொருணறுமல ரெழுதரு நாற்றம்போற்-பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க.

முருகாற்றுப்படை யென்றதற்கு வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததென்று பொருள்கூறுக.

மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார்பாடிய திருமுருகாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.

† வெண்பா: "சார்பினுற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ் - சார்பெனின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ - வாய்மொழியான் மெய்யான் மனத் தா னறிவிறந்த - தூய்மையதா மைதீர் சுடர்."

‡ திருவாசகம், அதிசயப்பத்து, ௯.

இரண்டாவது

பொருநராற்றுப்படை.

அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
யெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி *ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
யெண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
யண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்குங்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னாய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துந்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி
யறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்

---

* ஒழுங்கிய வென்றும் பாடம்.

மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னாணடச் சாய்ந்த நலங்கிள ரொருத்தி
னுடைமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்குல்
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மாற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு
ளன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட் கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந
வறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய பறவையின் யானுமவ
னிழுமென் சும்மை யிடனுடை வரைப்பி

னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசையேன் புக்கென் னிடும்பை தீர
வெய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
யிருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய
லொன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணு வழியிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ
டுருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ
யீரும் பேனு *மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு †நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்
திழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
வார வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றவன்
திருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி
யனந்தர் நடுக்க மல்லது யாவது
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையுங்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்

---

* இமிர்ந் தென்றும் பாடம்.

† நுழைவேலா வென்றும் பாடம்.

கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉ
யதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவையு
வேறுபல் லுருவின் விரகு தந்திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியா
ழொண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநா
ளவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால்வறைக் கருனை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
யுயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென் வெல்வே
லுருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசி
றாய்வயிற் றிருந்து தாய மெய்தி
யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்

ஞுடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
வாளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு
மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
றாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநுங்
*கையது கேளா வளவை யொய்யெனப்
பாசி வேரின் †மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
யெரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தே
ரூட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
றாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவருஞ் செலவின் வெகுளி வேழந்

* கையது கொள்ளா வென்றும் பாடம்.
† மாசொடு மிடைந்த வென்றும் பாடம்.

நாளிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி யாயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னொல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றூழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க
ணீற்றி யாமை தன்பார்ப் போம்பவு
மிளையோர் வண்ட லயரவு முதியோ
ரவைபுகு பொழுதிற் றம் பகைமுரண் செலவு
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
யறைக்கரும்பி னரிநெல்லி
னினக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவி
னனைஞாழலொடு மரங்குழீஇய
வவண்முனையி னகன்றுமாறி
யவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பி
னோங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவுங்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்

துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
தியாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயராத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவுந்
தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பரதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா * னாடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
யொருகுடையா னொன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனொடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னோன் வாழி வெல்வேற் குரிசின்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மா
ணெல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவு
மருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையு
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனி குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்

---

* நாடுகெழீஇ யென்றும் பாடம்.

சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

இதன்பொருள்.

அறாஅ யாணர் அகன் தலைப் பேர் ஊர்——இடையறாத செல்வவருவாயினையுடைய அகன்ற இடத்தையுடைய பெரிய ஊர்களிடத்து,

சாறு கழி வழிநாட் சோறு நசை உறாது——விழாக்கழிந்த பின்னாளில் ஆண்டுப் பெறுகின்ற சோற்றை விரும்புதல்செய்யாது,

வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந——விழாக்கொண்டாடும் வேற்றுப்புலத்தைக் கருதிய * விரகையறிந்த பொருந,

இஃது அண்மைவிளி·

குளப்பு வழி அன்ன கவடு படு பத்தல்——மான்குளம்பழுத்திய இடத்தையொத்த இரண்டருகுந்தாழ்ந்த நடுவுயர்ந்த பத்தலினையும்,

விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை——விளங்கினது எரிகின்ற நிறத்தையுடைய விசித்துப் போர்த்தலுற்ற தோல்,

எய்யா இளஞ் சூல் செய்யோள் அவ்வயிற்று——பிறர் அறியப்படாத இளைய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோளது அழகினையுடைய வயிற்றின்,

செய்யோளென்றார், மயிரொழுங்கு விளங்கித் தோற்றுதற்கு.

ஐது மயிர் ஒழுகிய தோற்றம் போல——ஐதாகிய மயிர் ஒழுங்குபடக்கிடந்த தோற்றரவுபோல,

பொல்லம் பொத்திய பொதி உறு போர்வை——இரண்டுதலையுங் கூட்டித்தைத்த மரத்தைப்பொதிதலுறும் போர்வையினையும்,

அளை வாழ் அலவன் கண் கண்டு அன்ன துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி——முளையிலேவாழ்கின்ற ஞெண்டின் கண்ணைக் கண்டாலொத்த பத்தலிரண்டுஞ்சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக்காரணமாகிய முடுக்குதலமைந்த ஆணியினையும்,

தோல் நெகிழாமல் முடுக்கின ஆணியென்றுமுரைப்பர். அன்ன ஆணியென்க.

எண்ணாள் திங்கள் வடிவிற்றாகி அண்ணா இல்லா அமை வரு வறு வாய்——உவாவிற்கு எட்டாநாளிற் றிங்களின்வடிவை உடைத்தாய் உண்ணாக்கில்லாத பொருந்துதல்வந்த வறியவாயினையும்,

பாம்பு அணந்து அன்ன ஓங்கு இரு மருப்பின்——பாம்பு தலையெடுத்தாலொத்த ஓங்கின கரிய தண்டினையும்,

மாயோள் முன்கை ஆய் தொடி கடுக்கும் திவவின் (கரு)——கரியநிறத்தையுடையோளுடைய முன்கையில் அழகினையுடைய நேர்ந்த தொடியையொக்கும் வார்க்கட்டினையும்,

கண்கூடு இருக்கைத் திண் பிணித் திவவு——ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடைத்தாகிய திண்ணியபிணிப்பினையுடைய திவவு,

இது நரம்புதுவக்கப்படுவேது.

---

* விரகு-உபாயம்.

ஆய் தினை அரிசி அவையல் அன்ன வேய்வை போகிய விரல் உளர் நரம்பின் கேள்வி போகிய நீள் விசித் தொடையல்—அழகினையுடைய தினையரிசியிற் குத்தலரிசியையொத்த குற்றம்போகிய விரலாலசைக்கும் நரம்பினையுடைய இசைமுற்றுப் பெற்ற நீண்ட விசித்தலையுடைய தொடர்ச்சியினையும்,

மணங் கமழ் மாதரை மண்ணுறுத்து அன்ன காட்சி (௨௦)—கலியாணஞ்செய்தமை தோற்றுகின்ற மாதரை ஒப்பித்தாலொத்த அழகினையுமுடைய,

அணங்கு மெய்ந் நின்ற அமை வரு காட்சி—யாழிற்குரியதெய்வம் தன்னிடத்தே நின்ற இலக்கணம் அமைதல்வரும் அழகு:

ஆறு அலை கள்வர் *படை இட—வழியையலைக்கின்ற கள்வர் தங்கையிற் படைக் கலங்களைக் கைவிடும்படி,

அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை—அருளின் மாறாகிய மறத்தினையவர்களிடத்துநின்று பெயர்க்கும் மருவுதலினிய பாலையாழை,

பாலை - ஆகுபெயர். "கோடே பத்தர் யாணி நரம்பே - மாடக மெனவரூஉம் வகையின தாகும்" என்றதனால், மாடகமொழிந்தன கூறினார்.

பத்தலினையும் (௪), பொல்லம்பொத்திய (௮) பச்சையாகிய (௫) போர்வையினையும் (௮), ஆணியினையும் (௧௦), வறுவாயினையும் (௧௨), மருப்பினையும் (௧௩), வார்க்கட்டினையும் (௧௫), நரம்பின்றொடர்ச்சியினையும் (௧௭), காட்சியினையும் (௨௦) உடைய பாலையாழென முடிக்க.

"கொன்றை கருங்காலி குமிழ் முருக்குத் தணக்கே" என்பதனால், கோட்டிற்கு மரம் கொன்றையும் கருங்காலியுமாம்; குமிழும், முருக்கும், தணக்கும் பத்தற்கு மாம்.

வாரியும்—நரம்புகளைக்கூடத் தழுவியும்,
வடித்தும்—உருவியும்,
உந்தியும்—தெறித்தும்,
உறழ்ந்தும்—ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறித்தும்,
வடித்தல் - நரம்பெறிதலென்றுமுரைப்பர்.

சீர் உடை நன்மொழி நீரொடு சிதறி—சீரையுடைத்தாகிய தேவபாணியினை நீர்மையுடன் பரக்கப்பாடி,

சீரெனவே பாணியுந் தாக்கும் உளவாயின.

அறல்போற் கூந்தல்—ஆற்றறல்போலும் கூந்தலினையும்,

பிறை போற் திரு நுதல்—பிறைபோல அழகினையுடைய நுதலினையும்,

கொலை வில் புருவத்து—கொலைத்தொழிலையுடைய விற்போலும் புருவத்தினையும்,

கொழுங் கடை மழைக் கண்—அழகிய கடையினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

இலவு இதழ் புரையும் இன் மொழித் துவர் வாய்—இலவினது இதழையொக்கும் இனியசொல்லையுடைய செம்மையுடைத்தாகிய வாயினையும்,

பல உறு முத்தின் பழி தீர் வெண் பல்—பலவுஞ்சேர்ந்த முத்துக்கள்போற் குற்றந்தீர்ந்த வெள்ளிய பல்லினையும்,

---

* படை விட்டென்றும் பாடம்.

பழமுத்தென்றார், ஒருகோவையாயிருத்தலின். இனிப் புலவிலையுற்ற முத்தென்றுமாம.

[மயிர்குறை கருவி மாண்கடை யன்ன பூங்குழை யூசற் பொறைசால் காதின்:]

மயிர் குறை கருவி மாண் கடை அன்ன காதின்—மயிர்வெட்டுகின்ற கத்திரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த காதினையும்,

பூங்குழை ஊசல் பொறை சால் காது—பொலிவினையுடைய மகரக்குழையினுடைய அசைவினைப் பொறுத்தலமைந்த காது.

நாண் அட சாய்ந்த நலம் கிளர் எருத்தின்—நாணம் வருத்தலாற் பிறரைநோக்காதுகவிழ்ந்த நன்மைவிளங்குகின்ற கழுத்தினையும்,

ஆடு அமை பணைத் தோள்—அசைகின்ற மூங்கில் போலும் பெருந்தலையுடைய தோளினையும்,

அரி மயிர் முன்கை—ஐம்மைமயிரினையுடைய முன்கையினையும்,

நெடு வரை மிசைஇய காந்தள் மெல் விரல்—நெடிய மலையின் உச்சியிடத்தனவாகிய காந்தள்போலும் மெல்லிதாகிய விரலினையும்,

கிளி வாய் ஒப்பின் ஒளி விடு வள் உகிர்—கிளியினது வாயோடொப்பினையுடைய ஒளிவிடுகின்ற பெருமையையுடைத்தாகிய உகிரினையும்,

அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து முலை (௩௬)—பிறர்க்கு வருத்தமெனத் தோற்றின சுணங்கணிந்த மார்பிடத்து முலையினையும்,

ஈர்க்கு இடை போகா ஏர் இள வனம் முலை—ஈர்க்கும் நடுவேபோகாத எழுச்சியையுடைய இளைய அழகினையுடைய முலை.

நீர்ப் பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்—நீரிடத்துப் பெயர்தலையுடைய சுழிபோல உத்தமவிலக்கணங்கள் நிறைந்த கொப்பூழினையும்,

உண்டென உணரா உயவும் நடுவின்—உண்டென்று பிறருணரப்படாத வருந்துமிடையினையும்,

உயவிடென்று பாடமாயின், வருந்துதலையுடையவென்க.

வண்டு இருப்ப அன்ன பல் காழ் அல்குல்—பல வண்டினங்களின் இருப்பைபொத்த பலமணிகோத்த வடங்களையுடைய மேகலையணிந்த அல்குலையும்,

காழ்-ஆகுபெயர்.

இரும் பிடித் தடக் கையின் செறிந்து திரள் குறங்கின்—பெரிய பிடியினுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மில்நெருங்கி ஒன்றித் திரண்ட குறங்கினையும்,

பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப—கணைக்காற்கு இலக்கணமென்றற்றப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனையிலக்கணங்கள்திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

[வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி:]

வருந்து நாய் நாவின் சீறடி—ஓடியிளைத்த நாயினது நாப்போலச் சிறிய அடியினையும்,

தாட்கொப்பப் பெருந் தகு அடி—தாளுக்குப்பொருந்தப் பெருமை தக்கிருக்குமடியென்க.

பெருவென்னுமுதனிலை பெருமையையுணர்த்திநின்றது.

அரக்கு உருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின்—சாதிலிங்கத்தை உருக்கின தன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினாலே,

பரற் பகை யுழந்த நோயொடு சிவணி—குச்சான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயோடேபொருந்தி,

மரற் பழுத்தன்ன மறுகு நீர் மொக்குள்—மரற்பழுத்தாற்போன்ற துளும்புநீரை யுடைய கொப்புளம்,

நன் பகல் அந்தி நடை இடை விலங்கலின்—நன்றாகிய உச்சிக்காலமான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்தலாலே,

பெடை மயில் உருவிற் பெருந் தகு பாடினி—பெடைமயிலாகின்ற மயிலைப் போலும் சாயலினையுமுடைய கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும், நுதலினையும் (உரு), புருவத்தினையும், கண்ணினையும் (உசு), வாயினையும் (உஎ), பல்லினையும் (உஅ); காதினையும் (ஙo), எருத்தினையும் (ஙக), தோளினையும், கையினையும் (ஙஉ), விரலினையும் (ஙங), உகிரினையும் (ஙச), முலையினையும் (ஙரு), கொப்பூழினையும் (ஙஎ), நுசுப்பினையும் (ஙஅ), அல்குலினையும் (ஙகூ), குறங்கினையும் (சo), சீறடியினையும் (சஉ), உருவினையுமுடைய பாடினியென்க.

இங்ஙனம் சீறடியுங்கூட்டி எண்ணுதற்கால் தலைமுதல் அடியீறாகக் கூறிற்றும்.

பாடின பாணிக்கு ஏற்ப—பாடின தாளத்திற்குப் பொருந்த,

நாடொறுங் களிறு வழங்கு அதர்க் கானத்து அல்கி—நாடோறும் யானைகள் வரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

[இலையின் மராத்த வெவ்வந் தாங்கி, வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கின்;]

இலை இல் மராத்த வலை வலந்தன்ன மெல் நிழல் மருங்கில்—இலையில்லாத மராத்திடத்தனவாகிய வலையை மேலேகட்டினதையொத்த மெல்லிய நிழலிடத்தே,

எவ்வம் தாங்கி—கொப்புளால்வந்த வருத்தந்தாங்கி,

இனி ஞாயிற்றின் வெம்மையால் தனக்குவந்த வருத்தத்தைத்தாங்கி இலையில்லாத மராமரமென மராமரத்தின்மேலேற்றுதலுமாம்.

காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை—காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளைச் செய்துவிட்ட பின்பு,

பொருந (ரு), பாடினி (சஎ) செந்நிலனொதுங்கலின் (சக), அவளடிகள் (சஉ), பரற்பகையுழந்த நோயொடுசிவணித் (சச) தம்மிடத்தேகொண்ட மொக்குளால் (சரு) தனக்குவந்த வருத்தத்தைத் தாங்கித் (ருo) தான் நடையைத்தவிர்தலாலே (சசு) கானத்தின் (சகூ) மென்னிழன் மருங்கிற் (ருக) தங்கி (சஅ) பாலையாழை (உஉ) வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும் (உரு) வாசித்து, பாடின பாணிக்கேற்பச் (சஅ) சீருடைநன்மொழி நீரொடுசிதறிச் (உஎ) காடுறைகடவுட்கடன் கழிப்பியபின்றை யெனமுடிக்க.

கடன்கழித்தல் - தடாரியைவாசித்தல்.

பீடு கெழு திருவிற் பெரும் பெயர் நோன் தாள் முரசு முழங்கு தானை மூவருங் கூடி—பெருமைபொருந்தின செல்வத்தினையும் பெரிய பெயர்களையும் வலியையு

டைய முயற்சியையும் வெற்றிமுரசுமுழங்கும் படையினையுமுடைய சேரசோழபாண்டியர் தம்மிற் பகைமைநீங்கிச் சேர்ந்து;

அரசவை யிருந்த தோற்றம் போல—செல்வக்குறைபாடின்றி அரசிருந்தற்குரிய அவையாகவிருந்த தோற்றரவுபோல,

தோற்றம்போல இன்மைதீரவந்தனென் (கஉக) என மேலேகூட்டுக.

இனி அரசவையிருந்த தோற்றம்போல வலிவும் மெலிவுஞ் சமனுமாகப்பாடுதலைப் பற்றியவென்று பாட்டின்மேலேற்றிப் பொருள்கூறின், குலமுஞ் செல்வமும் வீரமு முதலியவற்றால் தம்மிலொத்தாரை உவமித்தலின், அவர்க்கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங்குணங்கள் எய்தாவாதலின், அங்ஙனங்கூறல் பொருந்தாமையுணர்க. அன்றியும் பயனே ஈண்டு உவமையென்றுமுணர்க.

இனிப் பாட்டிற்கிருந்தவாச்சியத்தை யுடைமையின், அரசரோடு உவமித்தா ரென்பாருமுளர்.

பாடல் பற்றிய பயன் உடை எழாஅற் கோடியர் தலைவ—மிடற்றுப்பாடலைத் தொடர்ந்து இசைக்கும் பயன்களைத் தன்னிடத்தே உடைத்தாகிய யாழையுடைய கூத்தர்க்குத்தலைவனே,

இவன் போர்க்களம்பாடும் பொருநனாதலானும், கூத்தருள் இவனிற்சிறந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனங் கூறினார்.

கொண்டது அறிந—பிறர் மனத்துக்கொண்டதனைக் குறிப்பால் அறியவல்லாய்,

அறியாமையின் நெறி திரிந்து ஒராஅது—வழியறியாமையினாலே இவ்வழியைத் தப்பி வேறொருவழியிற் போகாதே,

ஆற்று எதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே—இவ்வழியிலே என்னைக்காணுதலும் நீமுற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயன்,

[போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந] புகழ் மேம்படுந போற்றிக் கேண்மதி—புகழ்த்தார்பலரோடு அரசவைகளிலே மேம்பட்டவனாய், யான்கூறுகின்றவற்றை விரும்பிக்கேட்பாயாக,

ஆடு பசி உழந்த நின் இரும்பேர் ஒக்கலொடு நீடு பசி ஒராஅல் வேண்டின்—அடுகின்ற பசியாலே வருந்தின நின்னுடைய கரிய பெரியசுற்றத்தோடே தொன்றுதொட்டுவந்தபசி நின்னைக் கைவிடுதல் விரும்புவையாயின்,

நீடு இன்று எழுமதி—நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக;

வாழி—நீவாழ்வாயாக;

ஏழின் கிழவ—குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென்னும் நரம்பு ஏழின்கண் உரிமையுடையாய்,

[பழுமரம் உள்ளிய பறவையின் யானும்] யானும் பழுமரம் உள்ளிய பறவையின்—செல்வமில்லையானாலும் முன்பு பழுத்தமரத்தை நினைத்துச்செல்கின்ற புட்போல,

அவன் இழுமென் சும்மை இடன் உடை வரைப்பின்—அவனுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மதிலில்,

நசையுநர்க்கு அடையா பெரு வாயில்—நசைவந்தார்க்கு அடைத்தலில்லாததன்றாகிய பெரிய கோபுரவாயிலின்கண்ணே,

இசையேன் புக்கு—வாயிலோனுக்குக் கூறுமற்புகுந்து,

என் இடும்பை தீர—என்னுடைய மிடி தீர்தல் காரணமாக,

எய்த்த மெய்யேன் எய்யேனாகி—முன்பு இளைத்த உடம்பையுடைய யான் அவ் வாயிற்கண்ணே சென்ற உவகையாலே பின்பு இளைப்புத்தீர்ந்து,

பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்பக் கைக் கசடு இருந்த என் கண் அகன் தடாரி—படம்விரித்த பாம்பினது பொறியையொப்பக் கையினாலே வடுப்பட்டுக்கிடந்த எனது கண்ணகன்ற உடுக்கையிற் ருேற்றுவித்த,

[இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல், ஒன்றியான் பெட்டா வளவையின்:]

இரு சீர்ப் பாணிக்கு ஏற்ப ஒன்று யான் பெட்டா அளவையின்—இரட்டைத்தாளத்திற்குப் பொருந்த ஒருபாட்டினை யான் பேணிப்பாடுவதற்கு முன்னே,

விரி கதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்—விரிகின்ற கிரணத்தையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே,

ஒன்றிய கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி—முன்பே தன்னோடே பொருந்திய நட்டாரைப்போல என்னுடன் உறவுகொள்ளுதலை விரும்பி,

வேளாண் வாயில் வேட்பக் கூறி—தான் உபகாரத்தைச் செய்தற்கு வழியாகிய மொழியினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி,

கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇ—தன் கண்ணினாலே காணும்படி தனக்கு அணித்தான இடத்திலே என்னை இருத்தி,

பருகு அன்ன அருகா நோக்கமொடு—என்னைக் கண்ணாலே பருகுந் தன்மையை யொத்த கெடாத பார்வையாலே,

[உருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ] என்பு உருகுபவைபோல் குளிர் கொளீஇ—என்னை உருகும் மெழுகுகளைப்போல் நெஞ்சுருகும்படி குளிர்ச்சியைக் கொளுத்தி,

நோக்கத்தாலே (எஎ) கொளுத்தியென்க.

ஈரும் பேனும் இருந்து இறைகூடி—ஈரும்பேனும் தங்கியிருந்து அரசாண்டு,

[வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர் துவர நீக்கி]

வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த துன்னல் சிதாஅர் நீக்கி—வேர்ப்பாலே நனைந்து மறுகள் உள்ளேயோடுதற்குக் காரணமாகிய தைத்தற்றொழிலையுடையனவாகிய சீலையை என்னிடத்தினின்றும் போக்கி,

நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து அரவு உரி அன்ன அறுவை துவர (அக) நல்கி—கண்ணிற்பார்வை இழைபோன வழியறியமாட்டாத நுண்மையையுடையவாய்ப் பூத்தொழிலின் முற்றுப்பெற்ற தன்மையவாய்ப் பாம்பினது தோலையொத்த துகிலை மிகநல்கி,

துவரவென்பதனை இதனொடு கூட்டுக.

[மழையென மருளும் மகிழ்செய் மாடத், திழையணி வனப்பி னின்னகை மகளிர்:]

இழை அணி வனப்பின் இன்னகை மகளிர்—இழைகளையணிந்த அழகினையுடைய பாடலானுங் கூத்தானும் அரசனுக்கு இனியமகிழ்ச்சியைச் செய்யுமகளிர்,

இதனை "இலைகை மாயமோ டேற்றோர் குறுகி" என்றார், சிறுபாணாற்றிலும்.

[போக்கில் பொலங்கல நிறையப் பல்கால், வாக்குபு தரத்தர]

மருள் செய்யும் மகிழ் மழையென மாடத்துப் பல்கால் வாக்குபு தரத்தர—கண்டோர் மயங்குதலைச்செய்யுங் கள்ளை மழையென்னும்படி மாடத்திடத்தே பல்காலும் வார்த்துத் தரத்தர,

மகிழ் - ஆகுபெயர்.

போக்கு இல் பொலம் கலம் நிறையத் தரத்தர—குற்றமற்ற பொன்னாற்செய்த வட்டில்நிறையத் தரத்தர,

வருத்தம் வீட ஆர உண்டு பேர் அஞர் போக்கி—வழிபோனவருத்தம் போம்படி நிறையவுண்டு நாமொன்றும் பெறுகிலேமென்று நெஞ்சிற்கிடந்த பெரிய வருத்தத்தையும்போக்கி,

செருக்கொடு நின்ற காலை—மகிழ்ச்சியுடனே நின்ற அந்திக்காலத்தே,

மற்றவன் திருக்கிளர் கோயில் ஒருசிறைத் தங்கி—இங்ஙனம் மிகுதீர்ந்தபின்பு அவனுடைய செல்வம்விளங்குகின்ற கோயிலில் ஒருபக்கத்தே கிடந்து,

அவனைச் சேவித்துநிற்கின்ற நங்குலத்திலுள்ள மகளிர் (௮௫) பொலங்கலநிறைய (௮௬) மகிழை (௮௪) வார்த்துத் தரத்தர (௮௭) உண்டு போக்கிக் (௮௮) கோயிலில் ஒருசிறைத் தங்கியென முடிக்க.

தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது அதன் பயம் எய்திய அளவை மான—மிக்க தவத்தைச்செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்தவுடம்பைப் போகடாதேயிருந்து அத்தவத்தாற்பெறும் பயனைப்பெற்ற தன்மையையொப்ப,

மக்களென்னாது மாக்களென்றார், வீடுபேறு கருதாது செல்வத்தைக் கருதுதலின்.

ஆறு செல் வருத்தம் அகல நீக்கி—வழிபோனவருத்தத்தை என்னிடத்துச் சிறிதும் நில்லாமற்போக்கி,

[அனந்தர் நடுக்க மல்லது யாவதும், மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து]

அனந்தர் நடுக்கம் அல்லது மனம் கவல்பு யாதும் இன்றி எழுந்து—கள்ளின் செருக்காலுண்டான மெய்ந்நடுக்கமல்லது வேறு மனக்கவற்சி சிறிதுமின்றித் துயிலுணர்ந்து,

கவல்பு - கவற்சியெனப் பெயராய் நின்றது.

மாலை அன்னதோர் புன்மையும்—யான் அவனைக் காண்பதற்கு முன்னுள்ள மாலைக்காலத்துள் என்னிடத்தில்நின்ற சொல்லிற்கெட்ட புன்மையையும்,

அன்னது - நெஞ்சறிசுட்டு.

காலைக் கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும் மாழாந்து (௯௦)—அவனைக்கண்டபின் மற்றைநாட்காலத்தில் என்னைக்கண்டவர் பெருஞ்செல்வனென்று மருளுதற்குக் காரணமான வண்டினம் இடையறாதுமொய்க்கின்ற தன்மையையும் யான்கண்டு மயங்கி,

மாழாந்தெழுந்தென இதனொடுங் கூட்டுக.

பலநறுந்தாரங்களும் சூழ்தலுடைமையின், வண்டுசூழ் நிலையென்றான்.

கனவென மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப—இது கனவாயிருக்குமென்று கலங்கிய என்னுடையநெஞ்சு நனவென்று துணிய,

வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப—வலிய மிடியாலுண்டாகிய வருத்தம்பொதிந்த கூட்டத்தார் மனம் மகிழ்ச்சி மிக,

கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட—அவற்குரியபுகழ்களைத் தாங்கள் முற்றக் கற்று என்பின்னின்ற இளையவர் அவற்றைச் சொல்லிக்காட்ட,

கல்லாவென்பது - செய்யாவென்னுமெச்சம். இனித் தத்தந் தொழிலன்றி வேறொன்றுங்கல்லாத இளைஞர் நெருநல்வந்தவன் இவனென்று அரசனுக்குச் சொல்லிக்காட்ட வென்றுமாம். என்றது - இவனை வேறுபாடுகூறிற்றும்.

கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்—அதுகேட்டு அவர்களைக் கடுகவழைத்துவாருமென்று வாயிலோர்க்குக்கூறி யாங்கள்சென்றபின் தான் அணுகவாருமென்றுஅழைக்கையினாலே,

*"ஏனோருந் தம்மென" என்புழித் தம்மென்பது வாருமெனநின்றாற்போல வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய்நின்றது.

அதன் முறை கழிப்பிய பின்றை—அக்காட்சியிடத்துச் செய்புமுறைமைகளை யாங்கள் செய்துமுடித்தபின்பு,

பதன் அறிந்து—காலமறிந்து,

துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின், பராஅரை வேவை பருகெனத் தண்டி—அறுகம்புல்லாற்றிரித்த பழுதைதின்ற செம்மறிக்கிடாயினது அழகினையுடைய புழுக்கினதிற் பரிய மேற்குறங்கு நெகிழவெந்ததனை விழுங்கென்று பலகாலலைத்து,

[காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை, யூழி னூழின் வாய்வெய் தொற்றி:] காழிற் கோழூன் சுட்ட கொழுங் குறை வெய்து வாய் ஊழின் ஊழின் ஒற்றி—இருப்புநாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரியதசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்தினும்வலத்தினுஞ் சேர்த்தி ஆற்றித்தின்று,

அவை அவை முனிகுவம் எனினே—புழுக்கின இறைச்சியையும், சுட்ட இறைச்சியையும் யாங்கள் இனி வேண்டேமென்கையினாலே,

சுவைய வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ—இனிமையுடையவாய் வெவ்வேறாகிய பலவடிவினையுடைய †பண்ணியாரங் கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களையிருத்தி,

உபாயங்களாற் பண்ணுதலின், விரகென்றார்; ஆகுபெயர்.

[மண்ணமை முழவின் பண்ணமை சீறியா, ழொண்ணுதல் விறலியர் பாணி தூங்க:] பண் அமை சீறியாழ் ஒண்ணுதல் விறலியர் மண் அமை முழவின் பாணி தூங்க—பண்குறைவற்ற சிறிய யாழையுடைய ஒள்ளிய நுதலினையுடைய விறல்படப்பாடியாடுவோர் மார்ச்சனையமைந்த முழவினது தாளத்திற்கு ஆடும்படி,

மகிழ்ப் பதம் பன்னாள் கழிப்பி—மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே பலநாள்போக்கி,

இனிப் பதம் - காலமுமாம்.

---

* மதுரைக்காஞ்சி: "யாவரும் வருக வேனோருந் தம்மென, வரையா வாயிற் செறாஅ திருந்து, பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென"

† பண்ணிகாரமென்றும் பிரதிபேதமுண்டு.

ஒருநாள் அவிழ்ப் பதங் கொள்க என்று இரப்ப—ஒருநாள் சோறாகிய உணவை யுங் கொள்வாயாகவென்று வேண்டிக்கொள்கையினாலே,

முகிழ்த் தகை முரவை போகிய முரியா அரிசி விரலென நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்—முல்லைமுகையின் நகைகளையுடைய வரிபற்ற இடைமுறியாத அரிசி விரலென்னும்படி செவ்விதாக ஒன்றோடொன்றுசேராத சோற்றையும்,

புழுக்கலரிசியை ஆக்கினமை தோன்ற நிரலமை புழுக்கலென்றார்.

பரல் வறைக் கருனை காடியின் மிதப்ப அயின்ற காலை—பாலைப் பொரித்தத ...டிய பொரிக்கறிகளையும் கழுத்திடத்தேவந்து நிரம்பும்படி விழுங்கினகாலத்தே,

புளிக் காடியைப் புளிக்கயாக்கிப் புளிங்கறிபோலே நிரம்ப விழுங்கினகாலையென்றுமுரைப்பர்.

பயின்று இனிது இருந்து—அவனைவிடாதே இனிதாகவிருந்து,

[கொல்லை யுழு கொழு வேய்ப்பப் பல்லே, யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி] பல்லே கொல்லை உழு கொழு ஏய்ப்ப எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி—எம்முடையபற்கள் கொல்லைநிலத்தேயுழுத கொழுவையொப்பப் பகலும்இரவும் இறைச்சியைத்தின்று முனைமழுங்கி,

உயிர்ப்ப இடம் பெறாஅது ஊண் முனிந்து—இளைப்பாற இடம்பெறாதே இவ் வுணவுகளை வெறுத்து,

ஏற்றனவெல்லாம் உண்டற்றொழிற்கு உரிமையுடைமையின், ஊண்முனிந்தென்றார்.

[ஒருநாட், செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய செல்வசேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கிளந்தன மாக:]

செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய செல்வ—குற்றத்தைச்செய்தெழுந்த பகைவரைத் திறைகொள்ளுந் துறைகளிலெல்லாம் முடியப்போன செல்வா,

பெயர்ந்து எம் தொல் பதிச் சேறுமென மெல்லென ஒருநாள் கிளந்தனமாக—இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வேமென்று மெத்தென ஒருநாளிலேசொன்னேமாக,

தொல்பதியென்றார், இதுவுந் தமக்குப்பதியென்பது தோன்ற.

[வல்லே, யகறிரோவெம் மாயம் விட்டெனச், சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு:] சிரறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு எம் ஆயம்விட்டு வல்லே அகறிரோ என—அதுகேட்டுக் கோபித்தான்போல எமக்குவருத்தத்தைச்செய்த பார்வையுடனே எம்திரளைக் கைவிட்டு விரைந்துபோகின்றீரோவெனச் சொல்லி,

[துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென:]

பிடி புணர் வேழம் அடி துடி அன்ன தூங்கு நடைக் குழவியொடு கொள்க என—பிடியொடுபுணர்ந்தகளிறுகளைத் தம்முடைய துடியின்கண்ணையொத்த அசைந்த நடையினையுடைய கன்றுகளுடனே கைக்கொள்வாயாகவென்று சொல்லி,

[தன்னறி அளவையிற் றரத்தர:] பெட்டவை (௧௨௬) தன் அறி அளவையில் தரத்தர—பின்னுந் தானே விரும்பியிருந்த ஊர்திகள் ஆடைகள் அணிகலங்கள் முதலியவற்றைத்தான் அறிந்த அளவாலே மேன்மேலேதர,

யானும் என் அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு—யானும் என்னுடையகுறைகளை யானறிந்த அளவாலேவேண்டுவனவற்றை வாரிக்கொண்டு,

இன்மை தீர வந்தனென்—நீ எக்காலமும் இல்லையாம்படி வந்தேன்.

யானும் அவன் (சுச) வரைப்பின் (சுரு) வாயிற்கண்ணே (சுசு) புக்கு என் இடும்பைதீர்தல் காரணமாக (சுஎ) எய்யேனாகி (சுஅ) விடையற்காலத்தே (எ௦) ஒன்று யான்பெட்டாவளைவயிற் (எரு) கொளல்வேண்டிக் (எசு) கூறி (எ௧) இருந்த (எசு) நோக்கத்தாலே (எஎ) குளிர்கொளுத்திச் (எஅ) சிதார்நீக்கித் தூவெள் (அ௨) நல்கி (அரு) மகளிர் (அ௫) மகிழ் (அச) வார்த்துத்தரத்தர (அஎ) ... போக்கி (அஅ) இன்றகாலைத் (அக) தங்கி (கூ௦) நீக்கி (கூரு) எழுந்து (கூ..) ... (கூஅ) சொல்லிக்காட்டக் (க00) கூவுதையிறாமல (க௦க) கழிப்பியபின்னைத (க௦உ) தாண்டி (க0ச) ஒற்றி (க0ரு) வேண்டேமென் கையினோமே (க0எ) இரீஇத் (க0அ) ...நுகக் (கக0) கழிப்பி (ககக) இரப்ப (ககஉ) அயின்றகாலத்திலே இருந்து (ககரு) மழுங்கி (ககஅ) முனிந்து (கககூ) சேறுமென (க௨௦) ஒருநாட் (ககரு) கிளந்தனமாக (கஉஉ) அகறிரோவெனச் சொல்லித் (கஉரு) ... யானும் (கஉஎ) தவற்செயமாக்கள் (கூக) அதன் பயமெய்திய அளவைமான (கூஉ) வேண்டிய முகந்துகொண்டு (கஉஅ) அரசவையிருந்த தோற்றம்போல (ருரு) இன்மைதீர வந்தனென் (கஉகூ) என வினைமுடிக்க.

வெல்வேல் உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்—வென்ற வேலினையுடைய அழகினையுடைத்தாகிய பலதேரினையுடைய இளஞ்சேட்சென்னியுடைய புதல்வன்.

வென்ற வேற்புதல்வன்.

முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்—முருகனது சீற்றம்போலும் சீற்றத்தையுடைய உட்குதல்பொருந்திய தலைவன், .

தாய் வயிற்று இருந்து தாயம் எய்திப் பிறந்து (கஉஎ)— தாயுடைய வயிற்றிலேயிருந்து அரசவுரிமையைப்பெற்றுப் பிறந்து,

தான் பிறக்கின்றகாலத்துப் பிறவாதே நல்லமுகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையினாலே அரசவுரிமையைப்பெற்றுப் பிறந்தென்றுமாம்.

எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப—முன்பு தன்வலியறியாத பகைவர் பின்பு தன்வலியினையறிந்து ஏவினதொழிலைச் செய்ய,

செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப— ஏவல்செய்யாத பகைவர்தேசம் மனக்கவற்சி பெருக,

[பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி, வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்கு:] வெவ் வெஞ் செல்வன் பௌவம் மீமிசைப் பகற்கதிர் பரப்பி விசும்பு படர்ந் தாங்கு — வெம்மையையுடைய எல்லாரும்விரும்புதலையுடைய இளஞாயிறு கடலின்மீதே பகற்பொழுதைச்செய்யுங் கிரணங்களைப் பரப்பிப் பின்னர் விசும்பிலே மேற்சென்றாற்போல,

[பிறந்துதவழ் கற்றதற் றொட்டு:]

தவழ் கற்றதற் றொட்டு—தவழ்தலைக் கற்றநாள் தொடங்கி,

பிறந்து முன்னேகூட்டிற்று.

சிறந்தநன், னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப, ஆளி நன்மான் அணங்குடைக் குருளை, மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி:

மீளி மொய்ம்பின் மிகு வலி செருக்கி— கூற்றுவனுடைய வலியைக் கெடுக்கின்ற மிகுகின்ற வலியாலே களித்து,

செல்லமை விசும்புபடர்ந்தாங்குத் (கஙகூ) தவழ்கற்றதற்றொட்டு (கஙஎ) மிகுகின்றவலியென்க.

இவன் பின்பு அரசாட்சிபெற்றானாதலின், தவழ்கற்றதற்றொட்டு நாடுசெகிற்கொண்டானென்றல் பொருந்தாமையுணர்க.

சிறந்த நன்னாடு செகிற் கொண்டு நாள் தொறும் வளர்ப்ப — ஏனையோர்நாட்டிற் சிறந்த நன்னாட்டைத் தோளிலேவைத்துக்கொண்டு நாடோறும் வளர்த்தற்காரணமாக,

தோள்வலியாலே பகைவென்று நாடுகோடலைப்பற்றி, நாடுசெகிற்கொண்டென்றார்.

[முலைக்கோள் விடாஅ மாத்திரை:] ஆளி நன் மான் அணங்கு உடைக் குருளை (கஙக) முலைக் கோள் விடாஅ மாத்திரை—ஆளியாகிய நல்ல யாளினது வருத்துதலையுடைய குருளை முலையையுண்டலைக் கைவிடாத இளையபருவத்தே,

யாளியை ஆளியென்றார், * "கடிசொல்லில்லை" என்பதனான். † "நாயே பன்றி" என்னுஞ் சூத்திரத்து 'ஆயுங்காலை' என்பதனாற் குருளையென்பது முடித்தாம்.

ஞெரேரென—கடுக,

தலைக் கோள் வேட்டங் களிறு அட்டாங்கு—முற்பட இரையைக் கோடற்குக் காரணமான வேட்டையிலே களிற்றைக் கொன்றாற்போல,

இரும் பனம்போந்தைத் தோடும்—கரிய பனங்குருத்தில் அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும்,

‡ "தோடே மடலே" என்னுஞ் சூத்திரத்துப் 'பிறவும்' என்றதனாற் போந்தை முடித்தாம். அதனிடத்தினின்றும் போந்ததனாற் போந்தையென்றார். "இரும்பனைக் கொண்டு கடைகழுமிய வடங்குளிறை வலனகலத்து" என்றார்பிறரும்.

[கருஞ்சினை, யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்:] கருஞ் சினை வேம்பின் அரவாய் அம் குழைத் தெரியலும்—கரிய கொம்பினையுடைய வேம்பினுடைய வாளரத்தின வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற்செய்த மாலையும்,

ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மிலைந்த இரு பெரு வேந்தரும் ஒருகளத்து அவிய—நறிய மாலைகளில் மேலாதற்குக் காரணமான பெரியதலையிலே ஏனையோர் சூடும் அடையாளப்பூக்களிற் சிறப்ப அவற்றைச்சூடிய சேரனும் பாண்டியனும் ஒரு களத்தே படும்படி,

வெண்ணில் தாக்கிய வெருவரு நோன் தாள் கண் ஆர் கண்ணிக் கரிகால் வளவன்—வெண்ணியென்கின்ற ஊரிடத்தே பொருத அச்சந்தோன்றுகின்ற வலியையுடைய முயற்சியையும் கண்ணுக்கு அழகுநிறைந்த ஆத்திமாலையினையுமுடைய கரிகாற்சோழன்,

¶ "முச்சக் கரமும்" என்னுங் கவியானே கரிகாலனதுணர்க.

தாயமெய்திப் (கஙஉ) பிறந்து (கஙஎ) மிகுவலிசெருக்கித் (கசo) தெவ்வர் ஏவல்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ருகூ.

† ,, பொருளதிகாரம், மரபியல், அ.

‡ ,, ,, ,, அகூ.

¶ வெண்பா: முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால், இச்சக் கரமே யளந்ததால், செய்ச்செய்; யரிதான் மற்றன்றெருடுக்கு மாப்புனனீர் நாடன், கரிகாலன் கானெருப் புற்று.

கேட்பச் (கஉரு) செய்யார்தேஎம் தெருமரல்கலிப்ப (கஉசு) நாடுசெகிற்கொண்டு நாடோறும்வளர்த்தல்காரணமாகக் (கஉஅ) குருளை (கஉகூ) களிறட்டாங்கு (கசஉ) இரு பெருவேந்தரும் அவியத் (கசரு) தாக்கிய (கசஎ) கரிகால் வளவனெனமுடிக்க.

[தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித், தொழுதுமுன்] நிழல் மருங்கின் தாள் அணுகுபு குறுகித் தொழுது—அருளைத் தன்னிடத்திலேயுடைய திருவடிகளை அண்ணிதாக நின்றுசேர்ந்து வணங்கி,

முன் நிற்குவிராயின்—நும்முடைய வறுமைதோன்ற முன்னே நிற்பீராயின்,

[பழுதின், றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கி:] ஈற்று ஆ விருப்பிற் பழுதின்று போற்றுபு நோக்கி—ஈற்றுத்தொழிலையுடைய பசுத் தனதுகன்றுக்குப் பால்சுரந்து கொடுக்கவேண்டுமென்னும் விருப்பம்போல நம்மிடத்துநிற்கின்ற மிடியின்றும்படி பேணிப்பார்த்து,

நுங் கையது கேளா அளவை—நும்மிடத்துள்ள கலையைத் தான்கேட்பதற்கு முன்னே,

ஒய்யென—கடுக,

பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னற் சிதாஅர் நீக்கி—கொட்டைப்பாசியினது வேர்போலே அழுக்கோடே குறைந்த தையலையுடைய துணிகளைப்போக்கி,

தூய கொட்டைக் கரைய பட்டுடை நல்கி—தூயவாகிய இளமுகிழ்ப்புழுடிகளைக் கரையிலேயுடைய பட்டாகிய உடைகளைத் தந்து,

கொட்டை - தும்புமாம்.

பெறல் அருங் கலத்திற் பெட்டாங்கு உண்க என—பெறுதற்கரிய பொற்கலத்தே விரும்பினபடியே உண்பாயாகவென்றுசொல்லி,

[பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர, வைகல் வைகல் கைகவி பருகி:] பூக் கமழ் கை கவி தேறல் வாக்குபு தரத் தர வைகல் வைகல் பருகி—தீப்பூ நாறுகின்ற தன்கடுமையாற் சிறிதமையுமென்று கைகவித்தற்குக்காரணமான கட்டெளிவை மென்மேலே வார்த்துத் தரத்தர நாடோறும்நாடோறும் பருகி,

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" என்றார்பிறரும்.

எரி அகைந்தன்ன எடில் தாமரை—நெருப்புத் தழைத்தாலொத்த ஒருவன்செய்ததன்றித் தனக்கென இதழில்லாத தாமரையை,

எனவே பொற்றாமரைக்கு வெளிப்படைகூறினர். *"தோடே மடலே" என்னுஞ் சூத்திரத்தேகூறினர்.

சுரி இரும் பித்தை பொலியச் சூட்டி—கடைகுழன்ற கரியமயிரிலே பொலிவுபெறச்சூட்டி,

நூலின் வலவா நுணங்கு அரில் மாலை வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய—நூலாற்கட்டாத நுண்மையையும் பிணக்கத்தையுமுடைய பொன்னரிமாலையை வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தத்தோடே பாடினிசூட,

கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந் தேர்—யானைக்கொம்பாற் செய்த தாமரை முகையினையுடைய நெடிய தேரிலே,

ஊட்டு உளை துயல்வர ஓரி நுடங்க—சாதிலிங்கமூட்டின தலையாட்டம்பொங்கக் கழுத்தின்மயிரசைய,

பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி — பாலையொத்த நிறத்தினையுடைய குதிரைகள் நான்கினைச் சேரப்பூட்டி,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல். அசு.

நான்கு - நால்கெனப் பெயர்த்திரிசொல்.

காலின் ஏழடிப் பின் சென்று—தான் காலாலே ஏழடிப் பின்னேவந்து,

ஏழடிவருதல் தர்மம்; எழிசைக்கும் வழிபாடுசெய்தாருசக் கருதுதலின்.
* "செலவினும்வரவினும்" என்னுஞ் சூத்திரத்துப் பொருளினியாற் சென்றென்பது
வந்தென்னும்பொருட்டாய் நின்றது.

[கோலின், மூறு களைந்து:] இன் தாறுகோல் களைந்து—செலுத்துதற்கினிதாகிய
செலவுமுடுக்குங்கோலைப் போக்கி,

என்றதனுற் கடிவிசைத்து நீர் இருத்தலாற்றுரென்று கருதி இயற்கையிற் செலவமையுமென்றார்.

ஏறென்று ஏற்றி—இங்ஙனம் ஏறென்று ஏறவிட்டு,

வீறு பெறு பேர் யாழ் முறையுளிக் கழிப்பி—வீணையாழ்களின் வீறுபெற்ற யாழ்ப்
பாணர்க்குக் கொடுக்குமுறைமைகளை நினக்குத் தந்துவிட்டு,

நீர் வாய்த் தண்பணை தழீஇய தளரா இருக்கை நன் பல் ஊர நாட்டொடு—
நீரோடைப் பொழுதுந் தன்னிடத்தேயுடைத்தாகிய தண்ணிய மருதநிலஞ்சூழ்ந்த அசை
யாத குடியிருப்பினையுடைய நன்றான பலவூர்களையுடைய நாடுகளுடனே,

[நன் பல், வெருஉப்பறை நுவலும் பருஉப்பெருந் தடக்கை, வெருவருஞ் செலவின்
வெகுளி வேழம்:]

பறை வெருஉ நுவலும் வேழம்—பறை எல்லார்க்கும் அச்சத்தைச்சாற்றுதற்குக்
காரணமாகிய யானை,

பருஉப் பெருந் தடக்கை வெருவரும் செலவின் வெகுளி நன்பல் வேழம்—
பருத்த பெரியவளைவினையுடைய கையினையும் அச்சந்தோன்றும் ஓட்டத்தினையும்
கோபத்தினையுமுடைய நன்றாகிய பலயானைகள்,

தரவு இடைத் தங்கல் ஓவிலன்—தருதற்கிடையே தங்கி நிலைபெறுதலை ஒழிந்
திலன்;

இனித் தரலிடத்துத் தாழ்த்தலிலனென்றுமாம்.

வரவிடைப் பெற்றவை பிறர்பிறர்க்கு ஆர்த்தி—வருதலிடத்துப் பெற்றபொருள்
களைப் பிறர்க்குப்பிறர்க்குக் கொடுத்து,

தெற்றெனச் செலவு கடைக்கூட்டுதிராயின்—கடிதின் அவனிடத்துநின்றும் போ
கின்ற போக்கைக் கூட்டுவுபோக்குவீராயின்,

பல புலந்து—அதுபொறுமற் பலகாலும்வெறுத்து,

நில்லா உலகத்து நிலைமை தூக்கி—செல்வமும் யாக்கையுமுதலியன நிலைநில்
லாத உலகத்துப் புகழைச் சீர்தூக்கிப் பார்த்து,

நிலைபெறுந் தன்மையுடைத்தாகலிற் புகழை நிலைமையென்றார்; ஆகுபெயர்.

செல்க என—இங்ஙனம்போகெனக்கூறி,

விடுக்குவன் அல்லன்—நும்மைக் கடுக விடுவானல்லன்;

தெருமந்து மருண்டீராயின் (கநீ0) நோக்கி (கநீக) நல்கிப் (கநீஉ) பாடினி
அணிபெறத் (கநீ௩) தொடீஇ (கநீ௪) வாங்குபு தகைத்தரப் (கநீ௫) பருகுவித் (கநீ௬) தெற்
றெனச் (கநீ௭) செலவு கடைக்கூட்டுதிராயின் அதுபொறுமை புலந்து (கநீ௮) தேரிலே

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உஅ.

(௧௬௫) குதிரையைப்பூட்டி (௧௬௪) ஏற்றி (௧௬௭) முறைநடந்து ஏழடிப்பின்சென்று (௧௬௬) விடுக்குவனல்லன் (௧௭௭); பின்னர் நின்னை நோக்கி நில்லாவுலகத்து நிலையாமையைச் சொல்லி (௧௭௫) [illegible] (௧௭௩) பெற்றவை பிறர்பிறர்க்கார்த்தி (௧௭௪) இரவலர்க்குச் செல்வமாகவெனக்கூறி (௧௭௭) அங்ஙனம் நீபோதற்கு நாட்டோடு (௧௭௦) [illegible] (௧௭௨) [illegible] விடைத்தங்கல் ஒவிலன் (௧௭௩) எனமுடிக்க.

நில்லாவுலகத்து நிலைமைதூக்கிப் பலவுலந்து செல்லுநாள் விலக்குதல் [illegible] பாருமோர்.

ஒலிநிரைத் திரை பிறழிய இருப்பௌவத்துக் கரைசூழ்ந்த அகன் [illegible] மாநிலக்கிழவன் (௨௨௭) நாடு (௨௪௮)—ஒலிக்கின்றதும் ஒசைபடைத் திரை [illegible] பெரியகடலினது கரைசூழ்ந்த அகன்ற பரப்பினையுடைய இவ்வுலகத்து [illegible] உடையவனது தாகிய சோழநாடு,

[மாமாவின் வயின்வயினெற், றூம்தாழை [illegible], [illegible] குடிவயினான்:]

மாமாவின் வயின் வயின் நெற்கூடு [illegible] (௨௪௨)—ஒருமாநிலத்தில் ஒருமாநிலத்தில் இடந்தோறும் இடந்தோறும் நெற்கூடுகள் பொருந்தின சோழநாடு,

தாழ் தாழைத் தண் தண்டலை குடி வயினான்—தாழ்ந்த [illegible] தெங்கினையுடைய குளிர்ந்த மரச்சோலைகளிலிருக்கின்ற குடிமக்களிடத்தில்,

செஞ் சோற்ற பலி மாந்திய கரும் காக்கை—[illegible] சிவந்த சோற்றையுடையவாகியபலியை விழுங்கின கரியகாக்கை,

[கவவுமுனையின், மனைநொச்சி நிழலாங்க ணீற்றியாமை தன்பார்ப் போம்பவும்—]

மனை நொச்சி நிழல் ஆங்கண் ஈற்று யாமை தன் பார்ப்பு கவவு முனையின் ஓம்பவும்—மனையைச்சூழ்ந்த நொச்சியினது நிழலிடத்திருக்கின்ற ஈற்றுத்தொழிலையுடைத்தாகிய யாமை தன்னுடையபார்ப்பைத் [illegible] வெறுக்குமாயின், [illegible] பசித்தகாலத்துத்தின்பதாகப் பாதுகாத்துவைப்பவும்,

எனவே மருதநிலத்திலிருக்குங்காக்கை நெய்தனிலத்துப்பார்ப்பைத் தின்னு மென்றார். *" தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" [illegible] பார்ப்பென்றார்.

இளையோர் வண்டல் அயரவும்—அவ்வூரிலுள்ள [illegible] இளையோர் [illegible] குன்றிலே வண்டலிழைத்து விளையாடவும்,

[முதியோர், அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்:] முதியோர் அவை புகு பொழுதில் தம் முரண் செலவும் பெரிதாண்ட (௨௪௮)—பகைமை முதிர்ந்தோர் தமது அரசவையிற் சென்று புகுங்காலத்து [illegible] மாறுபாட்டைப் போக்கும்படியாகவும் பெரிதாண்டவென மேலேகூட்டுக.

என்றது வழக்குமாறுபாட்டை [illegible] அவ்வழக்கு [illegible] † "உரைமுடிவு காணான்" என்னும் பழமொழி கூறிற்று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௩.

† பழமொழி, உ௧.—உரைமுடிவு காணா னிளமையோ னென்ற, நரைமுது மக்க ளுவப்ப; நரைமுடித்துச் சொல்லாற் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும். என்பது. தமக்குள் மாறுபட்டு வழக்குத் தீர்க்கும்படி முறைசெய்ய வேண்டி வந்த [illegible] ஆராய்ந்து முறைசெய்ய [illegible] அவ்வுதிரம்பார்த்து இளையனென்றிகழ்ந்த நரைமுதுமக்கள் [illegible]

முடக்காஞ்சிச் செம்மருதின், மடக்கண்ண மயிலாலப், பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனிமாந்தி :] பைம்பாகற் பழம் செஞ்சுளைய துணரிய கனி மாந்தி முடக் காஞ்சிச் செம்மருதின் மடக் கண்ண மயில் ஆல—பசிய பாகற்பழத்தையும் சிவந்த சுளையையுடையவாகிய குலைகொண்ட பலாப்பழத்தையுந்தின்று வளைவையுடைய காஞ்சிமரத்திலும் செவ்விய மருதிலுமிருந்த மடப்பத்தைத் தம்மிடத்தேயுடையவாகிய பெடைமயில்கள் ஆரவாரித்தழைக்கும்படி அங்குநின்றும்போந்து,

[அறைக்கரும்பி னரிநெல்லி, னினைக்களம ரிசைபெருக, வறளடும்பி னிவர்பகன்றைத், தளிர்ப்புன்கின் றாழ்காவின், னனைஞாழலொடு மரங்குழீஇய, வவண்முனையி னகன்மாறி, யவிழ்தளவி னகன்றோன்றி, நகுமுல்லை யுகுதேறுவீப், பொற்கொன்றை மணிக்காயா, நற்புறவி னடைமுனையிற், சுறவழங்கு மிரும்பௌவத், திறவருந்திய வினைஞர், பூம்புன்னைச் சினைச்சேப்பி, னோங்குதிரை யொலிவெரீஇத், தீம்பெண்ணை மடற்சேப்பவுங், கோட்டெங்கின் குலைவாழைக், கொழுங்காந்தண் மலர்நாகத்துத், துடிக்குடிஞைக் குடிப்பாக்கத், தியாழ்வண்டின் கொளைக்கேற்பக், கலவம் விரித்த மடமஞ்ஞை, நிலவெக்கர்ப் பலபெயர :]

யாழ் வண்டின் கொளைக்கு ஏற்பக் கலவம் விரித்த மடமஞ்ஞை நிலவு எக்கர்ப் பல பெயர—யாழோசைபோலும் வண்டினது பாட்டினைக்கேட்டு அதற்குப்பொருந்தத் தோகையைவிரித்த அறியாமையையுடைய மயில் நிலவுபோலும் இடுமணலிலே பலபகுதிப்படஆடவும்,

பெடை தங்குகின்ற மருதநிலத்தைவிட்டுப் பாட்டைக்கேட்டு நெய்தனிலத்தே போந்தமைபற்றி மடமஞ்ஞையென்றார்.

அகவர் (௨௱) அறைக் கரும்பின் அரி நெல்லின் இனைக் களமர் இசைபெருக வறள் அடும்பின் இவர் பகன்றைத் தளிர்ப் புன்கின் தாழ் காவின் நனை ஞாழலொடு மரம் குழீஇய அவண் முனையின் அகன்று மாறி நீக்கிற முல்லைப் பல் திணை நுவல (௨௱௫)—நாட்டில்வாழ்வார் அறுத்தலைச்செய்யும் கரும்பின்கண்ணும் அரிகின்ற நெல்லின்கண்ணும்மெழுப்பின திரண்ட களமருடைய ஓசைமிகுகையிடத்திலே நீரற்றவிடத்தில்லுற்ற அடும்பினையும் படர்கின்ற பகன்றையினையும் தளிரையுடைத்தாகிய புன்கினையும் தாழ்ந்த சோலைகளையுமுடையதாய் அரும்பின ஞாழலோடே ஏனைமரங்களுங்கிடைக்கின்ற அந்நாட்டை வெறுத்தார்களாயின் அவ்விடத்தை நீங்கி நெஞ்சாலேகைவிட்டு நீலநிறத்தையுடைய முல்லைக்கொடி படர்ந்த பலகாட்டுநிலத்தேசென்று அந்நிலத்தைக்கொண்டாடவும்,

அகவர் இசைபெருக முனையின் அகன்று மாறிப் பல்திணை நுவலவென முடிக்க.

கானவர் (௨௱) அவிழ் தளவின் அகல் தோன்றி நகு முல்லை வீ உகு தேறு பொன் கொன்றை மணிக்காயா நல் புறவின் நடைமுனையின் மருதம் பாட (௨௱௰)—முல்லைநிலத்துவாழ்வார் அவிழ்கின்றதளவினையும் பரந்ததோன்றியினையும் அலர்கின்றமுல்லையினையும் பூ உகுகின்றதேற்றாவினையும் பொன்போலும் பூவினையுடைய கொன்றையினையும் நீலமணிபோலும் பூவினையுடைய காயாவினையுமுடைய நல்லகாட்

* யாமுடித்துவந்து முறைவேண்டிவந்த இருதிறத்தாருஞ் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தானென்னுஞ்சோழன்: அதலால், தத்தங் குலத்துக்குத்தக்கவிச்சைகள் கற்பதற்குமுன்னே செம்பாகமுளவாமென்றவாறு.

டில் உறைகின்றஒழுக்கத்தை வெறுக்கின் மருதநிலத்தேசென்று அவ்வொழுக்கத்தைப் புகழவும்,

தளவு - முல்லைவிசேடம்.

சுற வழங்கும் இரும் பௌவத்து இறவு அருந்திய இன நாரை பூம் புன்னைச் சினைச் சேப்பின் ஓங்கு திரை ஒலி வெரீஇ தீம்பெண்ணை மடற்சேப்பவும்—சுறாத்திரியுங் கரியகடலின்கண் இறவைத்தின்ற திரண்டநாரைகள் பூக்களையுடைய புன்னைக் கோட்டிலே தங்கின் அதன்மேலெழுகின்ற உயர்ந்ததிரையினது ஆரவாரத்திற்கு வெருவி மருதநிலத்தில் இனியபனையினது மடலிலேதங்கவும்,

கோள் தெங்கின் குலை வாழை கொழுங் காந்தள் மலர் நாகத்துத் துடிக் குடிஞைக் குடிப் பாக்கத்துப் பரதவர் (உகஅ) அவண்முல்லையின் (ககஅ) குறிஞ்சி பாட (உகவ)—குலைகொண்ட தெங்கினையும் குலையினையுடைய வாழையினையும் கொழுவிய காந்தளினையும் மலர்ந்த சுரபுன்னையினையும் துடியோசைபோலும் ஓசையினையுடைய பேராந்தையினையுமுடைய குடியிருப்பையுடைத்தாகிய பாக்கத்தில்வாழும் பரதவர் அவ்விடத்தைவெறுப்பின் குறிஞ்சிநிலத்தேசென்று அவ்விடத்தைப் புகழவும்,

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யொடு நறவு மறுகவும்—தேனாகியநெய்யோடே கிழங்கையும் விற்றவர்கள் மீனினதுநெய்யோடே நறவையுங் கொண்டுபோகவும்,

தீங் கரும்போடு அவல் வகுத்தோர் மான் குறையொடு மது மறுகவும்—இனிய கரும்போடே அவலைக் கூறுபடுத்தி விற்றவர்கள் மானினதுதசையோடே கள்ளையுங் கொண்டுபோகவும்,

[குறிஞ்சி பரதவர் பாட நெய்தல் நறும்பூங் கண்ணி குறவர் சூட]

குறவர் நெய்தல் நறும் பூங்கண்ணி சூட—குறவர் அந்நிலத்துப் பூக்களைவெறுக்கின் நெய்தலினது நறிய பூவாற்செய்த கண்ணியைச் சூடவும்,

[கானவர் மருதம் பாட அகவர் நீனிற முல்லைப் பஃறிணை நுவலக் கானக்கோழி கதிர்குத்த:]

கானக் கோழி கதிர் குத்த—காட்டிடத்துக் கோழிகள் நெற்கதிரைத் தின்னவும்,

மனைக் கோழி தினைக் கவர—மருதநிலத்தின் மனையிற்கோழிகள் தினையைத் தின்னவும்,

வரை மந்தி கழி மூழ்க—மலையிடத்திற்குரியமந்திகள் கழியிலேமூழ்கவும்,

கழி நாரை வரை யிறுப்ப—கழியிற்றிரியும்நாரைகள் மலையிலேகிடக்கவும்,

தண் வைப்பின் நால் நாடு குழீஇ—குளிர்ந்த வைப்புக்களையுடைய நான்குகூறாகிய நாடுகள் திரண்டு,

நால் நாடென்றார், * "நடுவ ணைந்திணை நடுவண தொழிய" என்னுஞ்சூத்திரத்தால.

பார்ப்போம்டவும் (கஅசு) அயரவும் (கஅள) மயிலால (ககூ) மடமஞ்ஞை (உகஉ) பலபெயரவும் (உகங) நாரை (உ0௬) சேப்பவும் (உ0ள) அகவர் (உஉ0) அகன்றுமாறிப் (ககூஅ) பஃறிணைநுவலவும் (உஉக) கானவர் (உஉ0) நடைமுல்லையின் (உ0உ) மருதம்பாடவும் (உஉ0) பாக்கத்துப் (உக0) பரதவர் குறிஞ்சிபாடவும் (உகஅ) கிழங்கு மாறியோர் (உகச) நறவுமறுகவும் (உகரு) அவல்வகுத்தோர் (உகசு) மதுமறுகவும் (உகள) குறவர் கண்ணிசூடவும் (உகஅ) கோழி கதிர்குத்தவும் (உஉஉ) மனைக்கோழி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உ.

நிலைக்க[illegible] (உ[illegible]) [illegible] (உஉச) காளை [illegible] (உஉ௫) [illegible] (உஉ[illegible]) மாமாவின் [illegible] (௩௪௦) கூடுகெழீஇய (௧௮௨) [illegible] (உ௩௮) [illegible].

அழீஇ யென்னுஞ் செய்தெனெச்சம் பிறவினைகொண்டது; * "அம்முக் கிளவியும்" என்றதனாற் [illegible].

[யானைமறு[illegible], பொருளுடையா [illegible], பெரிதாண்ட பெருங்கேண்மை, அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல், அன்னோன் வாழி வென்வேற் குரிசில்:]

அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல் ஒருகுடையான் ஒன்றுகூற [illegible] போர் (௧௮[illegible]) [illegible] செல்ல (௧௮[illegible]) பெருங்கேண்மை பெரிது ஆண்ட வென்வேற் குரிசில்— நடுவுநின்றித் தருமத்தோடு கூடிய வழியை உலகம் அறிதற்குக் காரணமாகிய செவ்வியகோலாலும் தன்னுடைய கொடைக்கேற்ற பொருளுடைமையாலும் தனது ஆணையே [illegible] கூறும்படியாகவும் [illegible] முறைமையாற் செல்லும்படியாகவும் பெரிய [illegible] நெடுங்காலம் உலகை [illegible] வென்ற வேலையுடைய தலைவன்,

ஒருகுடை யென்றதனாலும், ஒன்றுகூற என்றதனாலும் இவன் மண்முழுதும் ஆண்டானென்றார்.

அன்னோன்—யான்கூறிய அத்தன்மைகளையுடையோன்,

வாழி—வாழ்வாயாக;

இறுதி யகரங்கெட்டுநின்றது.

[மன்னர்நடுங்கத் தோன்றிப் பன்மாண், எல்லை தருநன் பல்கதிர் பரப்பி:]

மன்னர் நடுங்கத் தோன்றி—பகைவர் [illegible] விளங்கி,

பன்மாண் எல்லை தருநன் பல்கதிர் பரப்பி—பல்லுயிர்களும் மாட்சிமைப்படுதற்குக் காரணமாகிய பகற்பொழுதைத் தருகின்ற ஞாயிறு [illegible] பலகிரணங்களைப் பரப்புகையினாலே,

குல்லை கரியவும்—கஞ்சங்குல்லை தீயவும்,

கோடெரி நைப்பவும்—மரக்களுடைய கொம்புகளை நெருப்புத்தின்னவும்,

[அருவி மாமலை நிழத்தவும்:] மாமலை அருவி † நிழத்தவும்—பெருமையையுடையமலை தன்னிடத்தருவிகளை இல்லையாக்கவும்,

மற்றக் கருவி வானங் கடற்கோள் மறப்பவும்—இவ்வொழிந்த தொகுதியையுடைய மேகம் கடலிடத்துமுகத்தலை மறப்பவும்,

பெருவறன் ஆகிய பண்பில் காலையும்—பெரிய வற்கடமுண்டாகிய நற்குணமில்லாத காலத்தும்,

கரியவும் நைப்பவும் (உ௪௨) நிழத்தவும் [illegible] மறப்பவும் [illegible] [illegible].

[நறையு நரந்தமு மகிலு மாரமுந், துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி:] நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும் பொறை துறை துறை தோறும் உயிர்த்து ஒழுகி—நறைக்கொடியும் நரந்தப்புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையைத் துறைதோறும் துறைதோறும் இளைப்பாறித்தள்ளிப் போய்,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், [illegible].

† "ஓய்த லாய்த னிழத்தல் சாஅ, யாவயி னான்கு முள்ளது நுணுக்கம்." என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், [illegible].

நுரைத் தலைக் குரைப் புனல்—நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர்,

வரைப்பு அகம் புகுதொறும்—குளத்திலுங் கோட்டத்திலும் புகுந்தோறும்,

வரைக்கப்படுதலின், வரைப்பு ஆகுபெயர்.

புனல் ஆடும் மகளிர் கதுமெனக் குடைய—நீராடுமகளிர் கடுகக் குடைந்து விளையாட,

புனல் ஒழுகிப் புகுதொறும் மகளிர் குடையவென்க.

கூனிக் குயத்தின் வாய் நெல் அரிந்து—வளைந்தவின் அரிவாளின் வாயாலே நெல்லையறுத்து,

நெல்லு முக்காய்த்துத் தரையிலேவிழுதலின், வளைந்தவரிவாளென்றென்றார்.

சூடு கோடாகப் பிறக்கி—சூட்டை மலையாகவடுக்கி,

நாடொறும் குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை—நாடோறுங் கடாவிட்டு மேருவென்னும்படி திரட்டின தொலையாத நெற்பொலி,

[கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ், சாலி நெல்லின் சிறைகொள் வேலி, யாயிரம் விளையுட் டாகக், காவிரி புரக்கு நாடுகிழ வோனே:]

கடுந் தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும் விளையுட்டாக—நெருங்குந் தெற்றின குதிரின்கண்ணே வெற்றிடம் இல்லையாம்படி கிடத்தற்குக்காரணமான விளைதலை யுடைத்தாக,

கடுந்தெற்றுமூடை-கோட்டையுமாம்.

சிறை கொள் வேலி ஆயிரம் சாலி நெல்லின் விளையுட்டாக—வரம்பு கட்டின வேலிநிலம் ஆயிரக்கலமாகிய செந்நெல்லின் விளையுட்டாக,

காவிரி புரக்கும் நாடு கிழவோன்—காவிரி பாதுகாக்கும் நாடு தனக்கே உரித்தாந் தன்மையுடையோன்.

வறஞ்செய்ய காலையும் (உகூஎ) புனல் (உசo) ஒழுகிப் (உசக) புகுதொறும் (உசo) மகளிர் குடைந்து விளையாடக் (உசக) கூனி அரிந்து (உசஉ) பிறக்கிக் (உசங) குவைஇய குப்பை (உசச) கிடத்தற்குக்காரணமான (உசரு) விளையுட்டாகக் (உசஎ) காவிரி புரக்கு நாடு (உசஅ) எனவினைமுடிக்க.

பொருந (ரு), கோடியர்தலைவ, கொண்டதறிந (சுஉ), புகழ்மேம்படுந (சுக), வழிவிழைவ (அரு), காடுறை கடவுட்கடன் கழிப்பியபின்றை (கூஉ), நெறிதிரிந்தோராஅது (கூஅ) ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன்பயனே (கூக), போற்றிக்கேண்மதி (அo), நின்னிரும்பேரொக்கலொடு (அக) பசியோராஅல்வேண்டின், நீடின்று (அஉ) எழுமதி (கூரு), யானும் (கூச) இன்மைதீர வந்தனென் (கஉ௫), உருகெழுகுரிசிலாகிய (கருக) உருவப்பஃறேர் இளையோன்சிறுவன் (கூ௩o), கரிகால்வளவன் (கசஅ), நாடுகிழவோன் (உசஅ), குரிசில், அன்னோன் (உருக) சேணியூர்மருங்கிற் குறுகி (கசக) மன்னர்நடுக்கத்தோன்றி (உருஉ), வாழ்கெனத் (உருசு) தொழுது முன்னிற்குவிராயின் (சுறுo), காட்டொடு (கஎo) வேழங் (கஎஉ) தரவிடைத் தங்கலோவிலன் (கஎரு) எனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

*"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி***வேண்டும்" என்பதனான், இங்ஙனமுடிந்தது.

†"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" என்பது இதற்குவிதி.

‡"ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்பதனாற், பின்னர் வஞ்சி மிகவும்வந்தன வென்றுணர்க.

சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த வுரை முற்றிற்று.

வெண்பா.

௧. எரியு மேற்றத்தி னானும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாந் தேரி
னரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

௨. அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமால் வளவனெனத் தேறேன் திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை.

௩. முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகா
லிச்சக் கரமே யளந்ததாற் செய்ச்செ
யரிகான்மேற் றேன்றொடுக்கு மாப்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

---

* "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬௬.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.

‡ " " செய்யுளியல், ௧௦௮.

வேலும்மயிலுந்துணை.

அடியிலுள்ள பாடல்கள் திருமுருகாற்றுப்படையைச் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப்பிரதிகளிலில்லாமல் திருமுருகாற்றுப்படை மட்டுமுள்ள புதிய ஏட்டுப்பிரதிகளிலும் அச்சுப்பிரதிகளிலும் இருந்தமையால் தனியே பதிப்பிக்கப்பட்டன.

நேரிசைவெண்பா.

க. குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா—யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுளையாயென் னுள்ளத் துறை.

உ. குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

ங. வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே ளிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

ச. இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தரும்.

ரு. உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

சா. அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேறோன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்.

எ. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னுன்.

அ. காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி.

கூ. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

க0. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

மூன்றாவது

சிறுபாணாற்றுப்படை.

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கற
*லயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
யைதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅ
யுயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பாற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கி
னின்செறி நீர்தரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த

* அயிலுருக்கனையவாகியென்றும், அயிலுருத்தனையவாகி யென்றும் பாடம்.

முல்லை சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி
னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழன்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணுறை மெல்குபுபெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
*நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
றென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

---

* நகாஅவன்னவென்றும் பாடம்.

றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
யேம வின்றுணை தழீஇயிற குளர்ந்து
காமர் தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்

லாவக்கடற் றனை யதிகனுங் காவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றா
ணறுவீ நாகமு மகிலு மாரமுந்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றருஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெய்ன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நா
டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தனோ னாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென வட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு

மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரு
மிவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயி
னலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவுங்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரி
னோங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமா விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோண்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து
நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
றளையவிழ் தெரியற் றகையோற் பாடி
யறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயி லவிழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே லுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தி
னுறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
யெயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொடு

டாமான் குட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
*புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவன்
மதிசே ரரவின் மானத் தோன்று
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தண ரருகா வருங்கடி வியன்நக
ரந்தண் கிடங்கினவ னாமூர் செய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விருங்கா ழுலக்கை யிருப்புமுகந் தேய்த்த
வவைப்பு மாணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவி
ரொரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
வடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய னாதலுஞ்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
வஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையு
மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்

---

* புலவுக்கய லெறிந்த வென்றும் பாடம்.

கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு * மோடிய துணர்தலு
மரியே ருண்க ணரிவைய ரேத்த
வறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
வின்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
வங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணியா னாது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு
மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
யானா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி

* ஊடியதுணர்தலுமென்றும்பாடம்.

நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
யுருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
வுள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
னல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

இதன்பொருள்.

[மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போல:] பணைத் தோள் மாநிலமடந்தை மணிமலை அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போல—மூங்கிலாகிய தோளையுடைய பெருமையினையுடைய மண்மகளுடைய மணி கள்தங்கின மலையாகிய அழகினையுடைய முலையிடத்தே கிடந்தசையும் முத்துவடம்போல,

[செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும்பொழில்:] சேய் வரற் கரை கொல் கான்யாற்றுச் செல் புனல் உழந்த நறும் பொழில்—மலைத்தலையி னின்றும் வருதலையுடைய கரையைக் குத்துகின்ற காட்டாற்றிடத்து ஓடுகின்ற புன லாலே வருந்தின நறிய பொழிலிடத்து,

இரண்டுமலையினின்றும் வீழ்ந்து இரண்டு ஆற்றிடைக்குறையைச் சூழ்வந்து பின்னைக் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று; இது மெய்யுவமம். பெருக்காற் கோடுகள் வருந்துதலின், உழந்தவென்றார். இதனாற்பயன்: ஆற்றிடைக்குறையில் நின்றமரம் இளவேனிற்காலத்து மிகவும் பூத்ததாயிற்று.

[குயில்குடைந் துதிர்த்த புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக், கதுப்பு விரித் தன்ன காழக மணற்கறல், வயிலுருப் பனைய வாகி யையதுடங்கு, வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப:]

சாஅய் அகம் நுணங்கு அறல் குயில் குடைந்து உதிர்த்த புதுப பூஞ் செம்மல் சூடிப் புடை நெறித்துக் கதுப்பு விரித்தன்ன வேனில் நின்ற (கூ)—கருமையை இடத்தேயுடைய நுண்மையையுடைய அறல் குயில்கள் சிறகாலுளர்ந்து உதிர்த்த புதிய பூக்களாகிய வாடலைச் சூடித் தம்மிடமெல்லாம் அறல்பட்டு மயிரை விரித்தாலொத்த தன்மையவாக இளவேனில்நின்றவெனக.

பொழிலிடத்தறலென்க.

வெயில் உருப்பு உற்ற வெம் பரல்— வெயிலால் வெம்மையுற்ற வெவ்விய பருக்கை,

அயில் உருப்பு அனையவாகிக் கிழிப்பச் சுரன் மராஅத்த வரி நிழல் முதல் அசைஇ (கஉ) ஐது நடந்து—வேல் காய்ந்த தன்மையவாய் அடியைக் கிழிக்கையினாலே அருங்கானகத்துநின்ற கடம்பினுடைய செறியாத நிழலையுடைத்தாகிய அடியிலே இளைப்பாறிப் பின்பு போகவேண்டுதலின், மெத்தென நடந்து,

[வேனி னின்ற வெம்பத வழிநாட், காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப், பாலை நின்ற பாலை நெடுவழி:] வேனில் நின்ற காலை வழி நாள் ஞாயிற்றுக் கதிர் கடாவுறுப்ப வெம்பதப் பாலை நின்ற பாலை நெடுவழி—இளவேனில் நிலைபெற்ற காலத்திற்குப் பின்னாகிய நாளிலே ஞாயிற்றினுடைய கதிர் வெம்மையைச் செலுத்தலைச் செய்கையினாலே வெய்ய செவ்வியையுடைய பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநிலமாகிய தொலையாத வழியினையுடைய சுரமென்க. (கஉ)

*“நடுவுநிலைத் திணையே” என்னுஞ் சூத்திரத்துரையாற் பாலைத்தன்மை கூறினும்; அதுகொண்டு உணர்க. பாலைநின்ற பாலைவழி - “ஆறுசென்றவியர்” போல் நின்றது.

[சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ] என் றதனை முன்னேகூட்டுக.

[ஐதுவீ ழிருபெய லழகுகொண் டருளி, நெய்கனிந் திருளிய கதுப்பின்:] அருளி ஐது வீழ் இரு பெயல் அழகு கொண்டு நெய் கனிந்து இருளிய கதுப்பின்— உலகிற்கு அருளுதலைச்செய்து மெல்லிதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு எண்ணெயிலே முற்றுப்பெற்று இருண்ட மயிரினையும்,

[கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிக்குஞ் சாயல்:] மயில் பலவுடன் மணி வயிற் கலாபங் கதுப்பெனப் பரப்பி மயிற் குளிக்குஞ் சாயல்—மயில்கள் பலவுங்கூடி நீலமணிபோலுங் கண்ணினையுடைய தோகைகளை மகளிர் மயிரைவிரித்தாற்போல விரித்துப்பார்த்து இவர் சாயற்கு ஒவ்வேமென்று பேட்டிற்குள்ளே சென்று மறைதற்குக் காரணமாகிய கலாபுலனாகிய மென்மையினையும்,

சாஅய் உயங்கு நாய் நாவின் நல்லெழில் அசைஇ வயங்கு இழை உலறிய அடியின்—ஓடியிளைத்து வருந்துகின்ற நாயினது நாக்கினுடைய நல்ல அழகைவருத்தி வறுமையாலே விளங்குகின்ற சிலம்புமுதலியனவில்லாமற் பொலிவழிந்த அடியினையும்,

[அடிதொடர்ந், தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின்:] ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின் அடி தொடர்ந்து—இழுக்கப்பட்டு நிலத்தேசெறியும் கரிய பிடியினது பெருமையையுடைய கைபோலத் தாமும் அடிபோடே தொடர்புபட்டு முறையாற் பருத்து,

[சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை:

* தொல்காப்பியம், பொருளதிகாரம் அகத்திணையியல், க.

மால்வரை ஒழுகிய வாழையெனச் சேர்ந்து—பெருமையையுடைய மலையிலே ஒழுங்குபடவளர்ந்த வாழையெனத் திரண்டு,

சேரிரண்டு முரிச்சொல் முதனிலையாகச் சேர்ந்தென்னும் வினையெச்சமாய் வந்தது.

குறங்குடன் சேர்ந்த குறங்கின்—ஒருகுறங்குடனே ஒருகுறங்கு நெருங்கியிருக்கின்ற குறங்கினையும்,

வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி—வாழையினது பூவென்னும்படி அழகு பெற்ற பனிச்சையினையும்,

[ஓதி, நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்து] களிச் சுரும்பு நளிச் சினை வேங்கை நாள் மலர் நச்சி ஓதி அரற்றுஞ் சுணங்கிற் சுணங்கு பிதிர்ந்து—களிப்பினையுடைய சுரும்புகள் செறிவினையுடைத்தாகிய கொம்பினையுடைய வேங்கையினது நாட்காலத்து மலரென்று விரும்பிப் பாட ஆரவாரிக்கும் [illegible]த்திற்றோன்றிய சுணங்குடனே ஒன்றித்திற்றோன்றிய சுணங்குபிதிர்பட்டு,

யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளிப் பூண் அகத்து ஒடுங்கிய வெம் முலை—புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது விளங்குகின்ற முகையை இகழ்ந்து மெல்லிய பணிகள் இடையிலே கிடக்கின்ற விருப்பத்தையுடைய முலையினையும்,

[முலையென. வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின், இன்செறி நீர்தரு மெயிற்றின்] வண் கோட் பெண்ணை முலையென வளர்த்த நுங்கின் இன் செறி நீர் தரும் எயிற்றின்—பெரிய குலையினையுடைய பனை முலையென்னும்படி வளர்த்த நுங்கினது இனிய செறிந்த நீர் தன்னீர்மையாற் றரும் எயிற்றினையும்,

[எயிறெனக், குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின்] குல்லை அம் புறவிற் குவி முகை எயிறெனை அவிழ்ந்த முல்லை சான்ற கற்பின்—கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டிடத்தே குவிந்த அரும்பு எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லைகூடுதற்கமைந்த கற்பினையும்,

கற்பின் மிகுதிதோன்ற முல்லைகூறிற்று; முல்லை இல்லிருப்பு. கதுப்பிற் கதுப்பென்பது முதல் இத்துணையும் [illegible]த்தொடை நிரந்து வந்ததென்றறிக. * "இறுவாயொன்றல்" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும்.

மெல்லியல் மடமான் நோக்கின் வாள் நுதல் விறலியர்—மெல்லிய இயல்பினையும், மடப்பத்தினையுடைய மான்போலும் பார்வையினையும், ஒளியையுடைத்தாகிய நுதலினையுமுடைய விறல்பட ஆடுமகளிர்;

கதுப்பினையும் (க௯), ஓதியினையும் (உஉ), நுதலினையும், நோக்கினையும் ([illegible]), எயிற்றினையும் ([illegible]), முலையினையும் (உரு), குறங்கினையும் (உ௦), அடியினையும் ([illegible]), சாயலினையும் ([illegible]), மெல்லிய இயல்பினையும், கற்பினையு (௩௦) முடைய விறலியரென்க.

நடை [illegible] அசைஇய நன் மென் சீறடி கல்லா இளையர் மெல்லத் தைவர—நடையான் இளைத்து ஓய்ந்த நன்மையையுடைய மெல்லிய சிறிய அடியைத் தந் தொழிலையொழிய வேறொன்று கல்லாத இளையர் மெத்தென்று வருட,

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் இன் குரல் சீறியாழ் இடவயின்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், [illegible]

தழீஇ—பொற்கம்பியினையொத்த முறுக்கடங்கின நரம்பினது இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி,

நைவளம் பழுநிய நயம் தெரி பாலை கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க—நட்டபாடையென்னும் பண் முற்றுப்பெற்ற இனிமை தெரிகின்ற பாலையாழை வாசித்தலைவல்ல பாணனாகியமகன் வாசிக்குமுறைமையை அறிந்து வாசிக்க,

இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ—வள்ளியோரின்மையின் பரிசிலர் செல்லாத உலகத்தே பரிசில்தருவாரை விரும்பி,

இனி இயங்குமவையம் சகடமாகலின், உலகத்திற்கு இயங்காவையமென வெளிப்படை கூறிற்றுமாம்.

துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப—நின்னை வெறுத்தன்மிக்க வருத்தத்தோடேகூடின வறுமை நின்னைக் கொண்டுபோகையினாலே,

முனிவு இகந்து இருந்த முது வாய் இரவல—வழிவருத்தந் தீர்ந்திருந்த பேரறிவு வாய்த்தற்றொழிலையுடையையாய இரவல,

துயர் ஆற்றுப்படுக்கையினாலே பொருந (௩௧) ஏழையர் தம்முடைய (௩௧) சீறடியை (௩௨) வெம்பரல் (௮) அயிலுருப்பனையவாகிய (௪) இடுக்கையினாலே (௮) வருந்தி உலைவுமிகச் (௧௨) பின்னும் ஆற்றுந்தகைபெற ஐதுநடந்து (௭) அசைவுடையல் இளைத்து ஒய்ந்த அடியை (௩௨) இளையர் தைவரப் (௩௩) பாணமகன் (௩௭) பாலையை (௩௬) இயக்க (௩௭) வள்ளியோர் நசைஇச் (௩௮) சீறியாழ் இடவயிற்றழீஇ (௩௫) முனிவிகந்திருந்த இரவலவென முடிக்க.

கொழு மீன் குறைய ஒதுங்கி வள் இதழ்க் கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை—கொழுவிய மீன் துணியக்கடந்து வளவிய இதழையுடைத்தாகிய செங்கழுநீர்ப்பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமை,

பைங்கறி நிவந்த பலவின் நீழல் மஞ்சள் மெல்லிலை மயிர்ப் புறம் தைவர—பசிய மிளகுகொடிபடர்ந்த பலாவினிழலிலே மஞ்சளினுடைய மெல்லியவிலை தனது மயிரையுடைய முதுகைத்தடவ,

விளையா இளங்கள் நாற மெல்குபு பெயரா—முற்றாத இளையதேன் நாறுமென்று அசையிட்டு,

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்—காட்டுமல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளும்,

குடபுலம் காவலர் மருமான்—மேற்றிசைக்கணுள்ள நிலத்தைக் காத்தற்றொழிலையுடைய சேரர்குடியிலுள்ளோன்,

எருமை, நீழலிலே தைவரப் பெயராக் கொள்ளும் குடபுலமென முடிக்க.

ஒன்னார் வடபுல இமயத்து வாங்கு வில் பொறித்த எழூஉ உறழ் திணி தோள் இயல் தேர்க் குட்டுவன்—பகைவருடைய வடக்கின்கண்ணதாகிய நிலத்திடத்தே நிற்கும் இமவானின்கண்ணே வளையும் வில்லை வைத்த கணையமரத்தை மாறுபடுந் திணிந்த தோளினையும் நடக்கின்ற தேரினையுமுடைய குட்டநாட்டையுடையோன்,

வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது—பெருகுகின்ற நீரையும், கோபுரவாயிலையுமுடைய வஞ்சியென்னுமூரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்.

மருமான் (௪௭) குட்டுவன் (௪௯) அவனுடைய வஞ்சியும் வறிதென முடிக்க.

அதாஅன்று—அஃதன்றி,

நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து அறை வாய்க் குறுந்துணி—தேனைப் பூக்கள் தம்மிடத்தினின்று துளிக்கும் இளமைமுதிர்ந்த நுணாமரத்தினது வெட்டின வாயையுடைய குறியகுறட்டை,

[அயிலுளி பொருத, கைபுனை செப்பங் கடைந்த மார்பின்:] அயில் உளி கடைந்த கை புனை செப்பம் பொருத மார்பின் மந்தி (௫௯)—கூர்மையையுடைய உளிகள் உள்ளேசென்றுகடைந்த சாதிலிங்கந் தோய்ந்த செப்புச்சேர்ந்த மார்பின்மந்தி,

செய் பூங் கண்ணி செவி முதல் திருத்தி—கிடேச்சையாற்செய்த பூவினையுடைய மாலையைச் செவியடியிலே நெற்றிமாலையாகக் கட்டி,

நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த மந்தி (௫௯)—வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய உப்புவாணிகருடைய சகடவொழுங்கோடே கூடவந்த மந்தி,

மகாஅர் அன்ன மந்தி—அவர்கள் வளர்த்தலின் அவர்கள் பிள்ளைகளை யொத்த மந்தி,

மடவோர் நகாஅர் அன்ன நளி நீர் முத்தம் வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி—அவ்விடத்து மடப்பத்தையுடைய மகளிருடைய எயிற்றையொத்த செறிந்த நீர்மையையுடைய முத்தை வாள்வாய்போலும் வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்து,

[தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின், உளரியல் ஐம்பா லுமட்டிய ரீன்ற:]

நுசுப்பின் நல்கூர் புறம் தோள் மறைக்கும் உமட்டியர்—நுசுப்பினது நல்கூர்ந்த புறத்தைத் தோள் மறைக்கும் உமட்டியர்,

என்றது:—இடை தனது நுண்மையால் நெகிழுமளவுங் காலத்து ஊற்றின்பம் பெறுது மிடிப்பட்ட புறத்தினைத் தோள் இறுகமுயங்கி அவ்வின்பத்தைக்கொடுத்தற்குக் காரணமான உமட்டியரென்றவாறு.

ஊற்றின்பம் பெற்றறியாதென்றும் புறங்கூறுதலை யென்றுமாம்.

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற—அசைகின்ற இயல்பினையுடைய ஐந்துபகுதியாகிய மயிரினையுடைய உப்புவாணிகத்தியர்பெற்ற,

கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்—விளங்குகின்ற பூணையுடைய பிள்ளைகளுடனே தானும் கிலுகிலுப்பை கொண்டு விளையாடும்,

தத்து நீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்—முறிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊர்க்கரசன்,

மந்தி முத்தையடக்கி உமட்டியரீன்ற புதல்வரோடே ஆடுங் கொற்கை யென முடிக்க.

தென் புலம் காவலர் மருமான்—தெற்கின்கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்றொழிலையுடையார் குடியிலுள்ளோன்,

[ஒன்னார், மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக், கண்ணார் கண்ணிக் கடுந் தேர்ச் செழியன்:]

ஒன்னார் மண் மாறு கொண்ட செழியன்—பகைவர்நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன்,

மாலை வெண்குடைக் கண்ணார் கண்ணிக் கடுந் தேர்ச்செழியன்—முத்தமாலையையுடைய கொற்றக்குடையினையும் கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய செழியன்,

[தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே:] நனை மகிழ் தாங்கரு மரபின் தமிழ் நிலைபெற்ற மறுகின் மதுரையும் வறிது—தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பொறுத்தற்கரிய முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரையும் வறிது;

நனைமகிழ்—வினைத்தொகை.

கோமான் (௬௨) மருமான் (௬௩) செழியன் (௬௫) அவனுடைய மதுரையும் தரும் பரிசில் சிறிதாயிருக்கும்.

அதாஅன்று—அவ்வூரன்றி,

[நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த:] பொய்கை நறு நீர் அடைகரை நிவந்த—பொய்கையிடத்து நறிய நீரடைகரையிலே நின்று வளர்ந்த,

துறுநீர்க் கடம்பின் துணை ஆர் கோதை—நெருங்குகின்ற தன்மையையுடைய கடம்பினுடைய இணைதனிறைந்த மாலை,

* கோதைபோலப் பூத்தலிற் கோதையென்றார்.

[ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்:] கோவத்து அன்ன கொங்கு உறைத்தலிற் சேர்பு ஓவத்து அன்ன உண் துறை மருங்கின்—தன்னிடத்து இந்திரகோபத்தையொத்த தாதையுதிர்த்தலின் அத்தாதுசேர்ந்து சித்திரத்தையொத்த உண்ணுந்துறையிடத்தே நின்ற,

வருமுலை அன்ன வண் முகை உடைந்து திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை—எழுகின்ற பெரியமுலையையொத்த பெரிய முகைநெகிழ்ந்து அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மையையுடைய தாமரையிடத்து.

† "பொருளே யுவமஞ் செய்தனர்" என்னுஞ் சூத்திரத்தாற் பொருளை யுவமஞ் செய்தார்.

ஆசு இல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன செவிதழ் பொதிந்த செம்பொன் கொட்டை ஏம இன் துணை தழீஇ—குற்றமில்லாத அங்கையைச் சாதிலிங்கந்தோய்ந்தாலொத்த சிவந்த இதழ்சூழ்ந்த செம்பொன்னாற் செய்தாலொத்த பீடத்திலே தன்னுயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித் துயில்கொண்டு,

இறகு உளர்ந்து காமர் தும்பி காமரம் செப்பும் தண்பணை தழீஇய தளரா இருக்கை—அத்துயிலெழுந்து விருப்பமருவின தும்பி சீகாமரமென்னும் பண்ணைப்பாடும் மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய,

குணபுலம் காவலர் மருமான்—கிழக்கின்கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்றொழிலையுடையார் குடியிலுள்ளோன்,

[ஒன்னார் ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும், தூங்கெயி லெறிந்த தொடி விளங்கு தடக்கை:] கதவம் ஓங்கு எயில் உருமுசுவல் சொறியும் ஒன்னார் தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை—கதவத்தையுடைய உயர்ந்த மதிற்றலையிலே உருமேறு தன்கழுத்தைத் தினவுதீரத்தேய்க்கும் பகைவர் தூங்கெயிலை அழித்த தொடி விளங்கும் பெருமையையுடைய கையினையும்,

---

* "கடம்பு சூடிய கன்னி மாலைபோல்" என்றார் சிந்தாமணியினும்; குணமாலையாரிலம்பகம், ௧௪௦.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், ௧.

நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன் — [illegible] ஆராயப்படாத உலகநிறைந்த நல்லபுகழினையும் நல்லதேரினையுமுடைய சோழனது,

ஓடாப் பூட்கை உறந்தையும் அரிது — தன்னை[illegible]த்திருந்தோர் ஓடாமைக்குக் காரணமாய மேற்கோளையுடைய உறந்தையென்னும் ஊரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்;

அது *" முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய - புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென" என்பதனானுணர்க.

அதாஅன்று—அவ்வூரன்றி,

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன் கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய — மழை [illegible] பெய்கையினாலே உண்டான செல்வத்தையுடைய மலைப் பக்கத்தில் [illegible] திரியுமயில் ஆடியதற்குக் குளிர்ந்ததுகொலென்று அருண மிகுதியாற் போர்வையைக்கொடுத்த,

அருந் திறல் அணங்கின் ஆவியர் பெருமகன் — பெறுதற்கரிய வலியையுடைத் தாகிய [illegible]வினையுடைய ஆவியர்குடியிற் பிறந்த பெரியமகன்,

† பெருங் கல் நாடன் பேகனும் — பெரிய மலைநாட்டையுடைய பேகனென்னும் வள்ளலும்,

நல்கிய பெருமகனாகிய பேகனுமெனமுடிக்க.

சுரும்பு உண நறு வீ உறைக்கும் நாக நெடுவழி — சுரும்புண்ணும்படி நறியபூத் தேனைத் துளிக்கும் சுரபுன்னையையுடைத்தாகிய நெடிய வழியின்கண்,

சிறு வீ முல்லைக்குப் பெருந் தேர் நல்கிய — சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடி [illegible] கொள்ளுதற்குக் கருதிப் பெரிய ‡ தேரைக்கொடுத்த,

பிறங்கு வெள் அருவி வீழும் சாரல் பறம்பின் கோமான் பாரியும் — மிகுகின்ற வெள்ளிய அருவி குதிக்கும் பக்கத்தினையுடைய பறம்பென்னும் மலைக்கரசனாகிய பாரியென்னும் வள்ளலும்,

கறங்கு மணி வால் உளைப் புரவியொடு வையகம் மருள ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த காரி (யு) — ஒலிக்கும் மணியினையும் வெள்ளிய தலையாட்டத்தினையுமுடைய குதிரையோடே [illegible], அருளினையுடையனவாகிய மொழியினையும் [illegible] கேட்டுவியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி,

ஈரநன்மொழிமருளவென்றுமாறுக.

அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடு வேல் கழல் தொடித் தடக்கைக் காரியும் — தன்னிடப்பட்டார் தலைதுமியக் [illegible]யையுடைய கோபத்தின்மிகுதியினாலே தானெரியும் அச்சந்தோன்றும் நெடிய வேலினையும் உழலுந்தொடியினையணிந்த பெருமையையுடைய கையினையுமுடைய காரியென்னும்வள்ளலும்,

[நிழறிகழ் நீல நாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த:] நாகம் நல்கிய நிழல் திகழ் நீலக் கலிங்கம் ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொ

---

* சிலப்பதிகாரம், நாடுகாண்காதை,

† [illegible] பெருங்கனாடனென மூலத்தும் பெரிய கனாடனென உரையிலும் வேறுபாடுண்டு.

‡ "[illegible] தேர மயிற்குப் போர்வையு, மெல்லிலைசேர் [illegible]த் திசைவிளக்கத் தொட்ட - [illegible] விறைவ[illegible] - [illegible] விசை கடன்" என்பது வெண்பாமாலை, பாடாண்படலம், கூ.

டுத்த ஆய் (௯௯)— பாம்பு ஈன்றுகொடுத்த ஒளிவிளங்கும் நீலநிறத்தையுடைய உடையினை ஆலின்கீழிருந்த இறைவனுக்கு நெஞ்சுபொருந்திக் கொடுத்தஆய்,

சாவந் தாங்கிய சாந்து புலர் திணி தோள் ஆர்வ நன் மொழி ஆயும்—வில்லையெடுத்த சந்தனம் பூசிப்புலரும் திண்ணிய தோளினையும் கேட்டோர்க்கு விருப்பத்தைச்செய்யும் நன்றாகிய சொல்லினையுமுடைய ஆயென்னும் வள்ளலும்,

மால் வரைக் கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி * ஔவைக்கு ஈந்தஅதிகன் (௧0௩)—பெருமையையுடைய மலையிற் கமழும்பூக்களையுடைய பக்கமலையிலேநின்று அழகுபெற்ற கருநெல்லியினது அமிழ்தின்தன்மைய தன்னிடத்தேயுண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம்புபெறாதே ஔவைக்குக் கொடுத்த அதிகன்,

உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் அரவக் கடல் தானை அதிகனும்—தன்னிடத்துறையும் கொற்றவையது வலியினையுடைய சினம் நின்றெரியும் ஒளிவிளங்கும் நெடிய வேலினையும் ஆரவாரத்தையுடைய கடல்போலும் படையினையுமுடைய அதிகமானென்னும் வள்ளலும்,

கரவாது நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது கொடுத்த நள்ளியும் (௧0எ)— தன்மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாதுகூறி நட்புச்செய்தோர் மனமகிழும்படி அவர்கள் இல்லறம் நடத்துதற்கு வேண்டும்பொருள்களை நாடோறும் கொடுத்தநள்ளியும்,

முனை விளங்கு தடக் கைத் துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங் கோட்டு நளி மலைநாடன் நள்ளியும்— பகைப்புலத்தே கொலைத்தொழிலான் விளங்கும்பெருமையையுடைய கையினையுடைய துளியையுடையமழை பருவம்பொய்யாதுபெய்யும் உயர்ச்சியாற் காற்றுத்தங்கும் நெடிய சிகரங்களையுடைய செறிந்த மலைநாட்டையுடையனாகிய நள்ளியென்னும் வள்ளலும்,

நளி சினை நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்துக் குறும் பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த ஓரி (௧௧௧)—செறிந்த கொம்புகளிடத்தே நறிய பூக்களெருங்கின இளமையையுடைய முதிர்ந்த சுரபுன்னையையும், குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக்கொடுத்த ஓரி,

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த ஓரிக் குதிரை ஓரியும்—காரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய காரியென்னும் பெயரையுடையானுடனே போர்செய்த ஓரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய ஓரியென்னும் வள்ளலும்,

---

* ஔவை அதிகமானிடத்து நெல்லிக்கனி பெற்றமையைப் பின்வருஞ் செய்யுளானுமுணர்க. புறநானூறு ௯௧ "வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார், களம்படக் கடந்த கழறொடித் தடக்கை, யார்கலி நறவி னதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தார் வஞ்சி, பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே."

திணை பாடாண்டிணை. துறை வாழ்த்தியல். அதிகமானெடுமானஞ்சியை ஔவையார் நெல்லிப்பழம்பெற்றுப் பாடியது.

காரி: கரியகுதிரையென்றும் ஓரி: பிடரிமயிரென்றுங் கூறுவாருமுளர்.

[எனவாங், கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ, ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்:]

எனவாங்கு எழுவர் ஆங்குப் பூண்ட ஈகைச் செந்நுகம்—என்றுசொல்லப்பட்ட எழுவரும் அக்காலத்தே மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை.

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் எழுவர்—தம்மேலே வருகின்ற போர்களைக்கடந்த கணையத்தோடு மாறுபடுகின்ற திணிந்த தோளினையுடைய எழுவர்,

[விரிகடல் வேலி வியலகம் விளங்க, வொருதான் றாங்கிய வரனுடை நோன்றா, ணறுவீ நாகமு மகிலு மாரமுந், துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய, பொருபுன றருஉம் போக்கரு மரபிற், றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்ன ருள்ளும், மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா, ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன், களிற்றுத் தழும்பிருந்த கழறயங்கு திருந்தடிப், பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை, நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு:]

விரி கடல் வேலி வியலகம் விளங்க ஒரு தான் தாங்கிய நல்லியக்கோடனை நயந்தீர்செலின் (உகூக)— பரந்த கடலாகிய வேலியையுடைய உலகமெல்லாம் விளங்கும்படி ஒருவனாகியதானே பொறுத்த நல்லியக்கோடனை விரும்பிச் செல்லின்,

மறு இன்றி விளங்கிய உரன் உடை நோன் தாள் வடு இல் வாய் வாள் உறு புலித் துப்பின் ஓவியர்பெருமகன்— குற்றமின்றி விளங்கிய அறிவையுடைத்தாகிய வலியையுடைய முயற்சியினையும் பகைவர்முகத்திலும் மார்பிலும் வெட்டின வாய்த்தவாளினையும் மிக்க புலிபோலும் வலியினையுமுடைய ஓவியருடைய குடியிலுள்ளோன்,

நறு வீ நாகமும் அகிலும் ஆரமும் துறை ஆடும் மகளிர்க்குத் தோட்புணை ஆகிய பொரு புனல் தரூஉம் இலங்கை— நறிய பூக்களையுடைய சுரபுன்னையையும் அகிலையும் சந்தனத்தையும் குளிக்குந்துறையிலே புனலாடுமகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாகக் கரையைக்குத்துகின்ற நீர்தருமிலங்கை,

கருவொடு போக்கரு மரபின் இலங்கை— கருப்பதித்த முகூர்த்தத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினையுடைய இலங்கை;

தொன் மா இலங்கைப் பெயரிய நன் மா இலங்கை—பழையதாகிய பெருமையினையுடைய இலங்கையினது பெயரைப்பெற்ற நன்றாகிய பெருமையையுடைய இலங்கை,

மன்னருள்ளும் ஓவியர் பெருமகன்— அவ்விலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர்குடியிற் பிறந்தோன்,

களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி— யானையைச்செலுத்துதலாலுளதாகிய தழும்புகிடந்த வீரக்கழல் கிடந்தசையும் பிறக்கிடாத அடியினையும்,

பிடிக் கணம் சிதறும் கை— பிடித்திரளைப் பலர்க்குங் கொடுக்குங்கை,

பெயல் மழைத் தடக்கை—பெய்தற்றொழிலையுடைய மழைபோன்ற பயனையுடைய பெரியகையினையுமுடைய,

பல்லியக் கோடியர் புரவலன்— பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தலை வல்லவன்,

பேர் இசை நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு— பெரிய புகழையுடைய நல்லியக்கோடனைக் காண்டற்குவிரும்பிய கோட்பாட்டுடனே,

பெருமகன் புரவலனாகிய நல்லியக்கோடனெனமுடிக்க.

தாங்கரு மரபின் தன்னும்— பிறரால் பொறுத்தற்கரிய குடிப்பிறந்தோர்க்குரிய முறைமைகளையுடைய தன்னையும்,

தந்தை வான் பொரு நெடு வரை வளனும் பாடி— அவன்றந்தையுடைய தேவருலகத்தைத்தீண்டும் நெடிய மலையிற் செல்வத்தையும்பாடி,

முன் நாள் சென்றனமாக—நாலுபத்துநாளைக்குமுன்னே போனேமாக,

இந்நாள்— இற்றைநாள்,

திறவாக் கண்ண சாய் செவிக் குருளை—விழியாத கண்ணையுடையவாகிய வளைந்த செவியினையுடையகுட்டி,

* "நாயே பன்றி புலிமுய னான்கு, மாயுங் காலைக் குருளை யென்ப."

கறவாப் பால் முலை கவர்தல் நோனாது— பிறரால் கறக்கப்படாத பாலினையுடைய முலையையுண்ணுதலைத் தன்பசிமிகுதியாற் பொறுத்தலாற்றாது,

புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில் — ஈன்றணிமையையுடைய நாய் கூப்பிடும் பொலிவழிந்த அடுக்களையில்,

காழ் சோர் அட்டில் (௧௩௨)— கழிகள் ஆக்கையற்று விழுகின்ற அட்டில்,

முது சுவர்க் கணச் சிதல் அரித்த அட்டில் (௧௩௨)— பழைய சுவரிடத்தெழுந்த திரண்ட கறையான்றின்ற அட்டில்,

[பூழி பூத்த புழற்கா ளாம்பி:] பூழி புழல் காளாம்பி பூத்த அட்டில்—(௧௩௨) நுளைந்தபுழுதி உட்பொய்யாகிய காளானைப் பூத்த அட்டில்,

[ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வளைக்கைக் கிணைமகள்:] ஒடுங்கு பசி உழந்த ஒல்கு நுண்மருங்குல் வளைக் கைக் கிணை மகள்— ஒடுங்குதற்குக் காரணமான பசியாலே வருந்திய நுடங்கும் நுண்ணிய இடையினையும் வளையலையணிந்த கையினையுமுடைய கிணைவனுடையமகள்,

வள் உகிர்க் குறைத்த குப்பை வேளை உப்பிலி வெந்ததை— பெரிய உகிரால் கிள்ளின குப்பையினின்ற வேளை உப்பின்றாய் அட்டிலில் (௧௩௨) வெந்ததனை,

மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்— வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கூறுவோர் காண்டற்கு நாணித் தலைவாசலையடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூடவிருந்து அடையத்தின்னும்,

அழி பசி வருத்தம் வீட— அறிவுமுதலியன அழிதற்குக் காரணமான பசியானுளதாகிய வருத்தங்கள் விட்டுப் போம்படி,

பொழி கவுள் தறுகண் பூட்கை மணி தயங்கும் மருங்கிற் சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி யாம் அவணின்றும் வருதும்— மதம் வீழுகின்ற கதுப்பினையும் கடுகக் கொல்லுதலாகிய மேற்கோளினையும் மணியசையும் பக்கத்தினையும் சிறியகண்ணையுமுடைய யானையுடனே பெரியதேரையும் பெற்று யாம் அவனிடத்துநின்றும் வாராநின்றேம்,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், அ.

இது நிகழ்காலத்து வருதல், * "உம்மொடு வரூஉங் கடதற" என்புழிக் கூறிற்றாம்.

நீயிரும் நயந்து இவண் இருந்த பெரும் பேர் ஒக்கல் செம்மல் உள்ளமொடு செல்குவிராயின்— நீங்களும் ஆசைப்பட்டுப் பெறும் பரிசில்விரும்பி இவ்விடத்திருந்த வறுமையாற் சுற்றமாகிய பெரிய சுற்றத்துடன் தலைமையையுடைத்தாகிய நெஞ்சுடனே அவனிடத்தே போவீராயின்,

[அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவுந், தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங், கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு, நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவுங், கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தர:]

கடல் உலாய் நிமிர்தர அலைநீர்க் கானல் வெண்மணல்— கடல்பரந்து ஏறிப் பொருதலாலே அலையையுடைய நீரையுடைய கரையில் வெள்ளிய மணலிடத்துநின்ற,

தாழை அன்னம் பூப்பவும் — தாழை அன்னம்போலப் பூக்கையினாலும்,

தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்— இளவேனிற்காலந் தொடங்குகின்ற காலத்தே செருந்தி தனிலைக்கண்டாரைப் பொன்னென்று மருளப்பண்ணுகையினாலும்,

கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்— முதற் சூலையுடைய கழிமுள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கையினாலும்.

கண்ணியாய்நின்று அரும்புதலிற் கடுஞ்சூல்.

கழாஅல— கழற்ற,

நெடுங் கால் புன்னை நித்திலம் வைப்பவும்— நெடிய தாளினையுடைய புன்னை நித்திலம்போல அரும்புகையினாலும்,

பாடல் சான்ற நெய்தல் நெடுவழிப் பட்டினம் (கஉக)—புகழ்தலமைந்த நெய்தனிலத்து நெடியவழியிற் பட்டினம்,

மணிநீர் வைப்புப் பட்டினம் (கஉஅ)—நீலமணிபோலும் கழிசூழ்ந்த ஊர்களையுடைய பட்டினம்,

மதிலொடு பெயரிய பட்டினம் (கஉகூ)—மதிலோடே பெயர் பெற்ற பட்டினம்,

என்றது எயிற்பட்டின மென்றதாம்.

பனி நீர்ப் படுவிற் பட்டினம் படரின்— குளிர்ச்சியையுடைய குளங்களையுடைத்தாகிய எயிற்பட்டினத்தே செல்வீராயின்,

படு - மடுவுமாம்.

ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன — உயர்ந்த தன்மையையுடைய ஒட்டகம் உறக்கத்தேகிடந்தாலொத்த,

வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின் — மிகுகின்ற திரைகொணர்ந்த மணத்தையுடைய அகிலாகிய விறகாலே,

கரும் புகைச் செந்தீ மாட்டி— கரிய புகையையுடைய சிவந்த நெருப்பை யெரித்து,

பெருந் தோள் மதி ஒக்கலுஉம் மாசு அறு திரு முகத்து நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த— பெரிய தோளினையும் மதி [illegible] பெற்றிலேமேயென்று

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், [illegible].

விரும்புதற்குக் காரணமான மறுவறுகின்ற அமைதியினையுடைய முகத்தினையும் மூன்னையினையுடைத்தாகிய வேல்போலும் பார்வையினையுமுடைய நுளைச்சாதியிற்பிறந்த மகள் அரிக்கப்பட்ட,

பழம் படு தேறல் பரதவர் மடுப்ப— பழைதாகிய களிப்புமிகுகின்ற கட்டெளிவைப் பரதவர் எடுத்துவந்து வாயிலேயூட்டித் தே வைக்க,

கிளை மலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான் தளை அவிழ் தெரியல் தகையோன் பாடி— கொத்திலெழுந்த பூக்களையுடையவாகிய தோட்டங்களையுடைய கிடங்கிலென்னும் ஊர்க்கரசனாகிய அரும்புநெகிழ்ந்த மாலையினையுடைய அழகையுடையோனைப் பாடி,

அறல் குழல் பாணி தூங்கியவரொடு— தாளவறுதியையுடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப ஆடின மகளிரோடே,

வறல் குழல் சூட்டின்— உலர்தலையுடைய குழல்மீனைச் சுட்டதனோடே,

வயின் வயின் பெறுகுவிர்— மனைதோறும் மனைதோறும் பெறுகுவிர்;

பட்டினம் படரிற் (௧௫௫) கிடங்கிற்கோமானாகிய (௧௬௦) தகையோனைப்பாடி (௧௬௧) ஆடினமகளிரோடே (௧௬௨) நீங்களும் சூட்டோடே (௧௬௩) தேறலைப் பரதவர்மடுப்ப (௧௫௯) அவற்றை வயின்வயிற் பெறுகுவிரென முடிக்க.

பைந் நனை அவரை பவழம் கோப்பவும்— பசுத்த அரும்புகளையுடைய அவரை பவழம்போலப் பூக்களை முறையே தொடாநிற்கவும்,

கரு நனைக் காயாக் கணம் மயில் அவிழவும்— கரிய அரும்பினையுடைய காயாக்கள் திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவாநிற்கவும்,

கொழுங் கொடி முசுண்டை கொட்டம்கொள்ளவும்— கொழுவிய கொடியினையுடைய முசுண்டை கொட்டம்போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ளாநிற்கவும்,

கொட்டை - நூற்கின்ற கொட்டையுமாம்.

செழுங் குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்— வளவிய குலையினையுடைய காந்தள் கைவிரல்போலப் பூவாநிற்கவும்,

கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்— கொல்லையிடத்து நெடியவழிகளிலே இந்திரகோபம் ஊராநிற்கவும்,

இச் செயவெனெச்சமெல்லாம் கண்டு நிகழ்கால முணர்த்தி நின்றன; ஞாயிறுபட்ட வந்தானென்றாற்போல.

முல்லை சான்ற முல்லையம் புறவின்— இவைகாலமுணர்த்தி இங்ஙனம் நிகழ்த்தாநிற்கவும் கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்து ஆற்றியிருந்த தன்மையமைந்த முல்லைக்கொடிபடர்ந்த அழகினையுடைய காட்டிடத்து

இது, * “மாயோன் மேய” என்னும் சூத்திரத்தானுணர்க.

விடர் கால் அருவி வியன் மலை மூழ்கிச் சுடர் கால் மாறிய செவ்வி நோக்கி— முழைஞ்சுகளிலே குதிக்கும் அருவியினையுடைய பெரிய அத்தகிரியிலே ஞாயிறு மறைந்து அவன்கிரணங்கள்போன அந்திக்காலத்தைப் பார்த்து,

[திறல்வே னுதியிற் பூத்த கேணி, விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்:] திறல் வேல் நுதியிற் கேணி பூத்த விறல் வேல் வென்றி வேலூர் எய்தின்— முருகனை,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௫.

யில் வலியினையுடைத்தாகிய வேலினுடைய போலே சேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெற்றியையுடைய வேலூரைச் சேரின்,

என்றது: நல்லியக்கோடன் தன்பகைக்கு அஞ்சி முருகனைவழிபட்டவழி அவன் கனவிற்பூவைவாங்கி பகைவரை யெறியென்று கனவிற்கூறி அதற் பூவைத் தன் வேலாக நிருமித்துத் தேவர் கதைகூறிற்று. இதனால் வேலூரென்று பெயராயிற்று.

உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை— மிகுகின்ற வெயிலுக்கு உள்ளுறைநின்றோர் வருந்தப்பட்ட வெப்பம் விளங்குகின்ற குடிலிலிருக்கின்ற,

எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ் சோறு— எயினக்குலத்தின் மகளிராலே அடப்பட்ட இனிய புளிங்கறியிடப்பட்ட வெவ்வியசோற்றை,

புளி - தித்திப்புமாம்.

தேமா மேனிச் சில்வளை ஆயமொடு— தேமாவின் தளிர்போலும் மேனியையும் சிலவாகிய வளையினையுமுடைய நும்மகளிருடைய திரளுடனே,

ஆமான் சூட்டின்— ஆமானினது சூட்டிறைச்சியை யுடைய,

அமைவரப் பெறுகுவிர்— பசிகெடப் பெறுகுவிர்;

வேலூரெய்தின் (கஎரு) சூட்டினையுடைய (கஎஎ) சோற்றை (கஎ௬) ஆயத்தோடே (கஎசு) அமைவரப் பெறுகுவிரெனமுடிக்க.

முல்லையுங் குறிஞ்சியுஞ் சேர்ந்திருத்தலிற் சேரக்கூறினார்; இரண்டுங்கூடியல்லது பாலைத்தன்மை பிறவாமையின்.

[நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக், குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி:] நாட்கோதை தொடுத்த நறும் பூஞ் சினைக் குறுங் காற் காஞ்சிக் கொம்பர் ஏறி— நாட்காலத்தே மாலைகட்டினாற்போல இடையறவுபடாமற் றொடுத்த நறிய பூக்களையுடைய சிறிய கொம்புகளையும் குறிய தாளினையுமுடைய காஞ்சிமரத்திற் பெரியகொம்பிலே யேறி,

நிலை அருங் குட்டம் நோக்கி நெடிது இருந்து— ஒருகாலத்தும் நிலைப்படுதல் அரிதாகிய ஆழத்திற்றிரிகின்ற மீன்களை யெடுக்குங் காலத்தைக்கருதி நெடும்பொழுதிருந்து,

புலவுக் கயல் எடுத்த பொன் வாய் மணிச் சிரல் வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை— பொன்னிறத்தையுடைய கயலை முழுகியெடுத்த பொன்னிறம்போலும் வாயையுடைய நீலமணிபோன்ற சிச்சிலியினது பெரிய உகிர்கிழித்த வடுவழுந்தின பசிய இலையினையுடைய,

முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட்போது— முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய வெண்டாமரையினது அரும்புவிரிந்த நாட்காலத்திற் பூவை,

கொங்கு கவர் நீலச் செங்கட் சேவல்— தேனை நுகர்கின்ற நீலநிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு,

பூவைத் தேனையென்றது, *"தெளிந்து" என்றதனான்முடிக்க.

மதி சேர் அரவின் மானத் தோன்றும்—திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பை யொப்பத் தோன்றும்,

---

* "முதன்முனைவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுன் வருதல் றெள்ளி தென்ப" என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல், ௫.

மருதம் சான்ற மருதத் தண் பணை—ஊடியுங்கூடியும் போகநுகரும் தன்மைய மைந்த மருதநிலத்திற் குளிர்ந்த வயலிடத்து,

[அந்தண ரருகா வருங்கடி வியனகர், அந்தண் கிடங்கி னாவிய ரூமூ ரெய்தின்:]

அம் தண் கிடங்கின் அருங் கடி வியன் நகர் அந்தணர் அருகா அவன் ஆமூர் எய்தின்—அழகினையுடைய குளிர்ந்த கிடங்கினையும் அரியகாவலையும் அகற்சியையுடைய அகங்களையுமுடைய அந்தணர் சுருங்காத அவனுடைய ஆமூரைச் சேர்வீராயின்,

[வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி, னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை:]

வலி புணர் எருத்தின் வலம் பட நடக்கும் நோன் பகட்டு உரன் கெழு உழவர் தங்கை—இழுத்தற்குரிய வலிபொருந்தின கழுத்தினாலே வெற்றியுண்டாக நடக்கும் மெய்வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய அறிவுபொருந்தின உழவருடைய தங்கையாகிய,

உரன் - அறிவு; *"உரவோ ரெனினு மடவோ ரெனினும்" என்றாற்போல.

பிடிக் கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்துத் தொடிக் கை மகளே—பிடியினது கையை யொத்த பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள்,

மக முறை தடுப்ப—உழவர் தங்கையாகிய (கசு0) மகளேத் (ககஉ) தான் உள்ளேயிருந்து தன்பிள்ளைகளைக்கொண்டு நும்மை அடைவே எல்லாரையும் போகாது விலக்குகையினாலே,

இனிப் பிள்ளைகளை உபசரிக்குமாறுபோல உபசரித்து விலக்கமென்றுமாம்.

இருங் காழ் உலக்கை இருப்பு முகம் தேய்த்த அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு—கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடைய முகத்தைத் தேயப்பண்ணின குத்துதல்மாட்சிமைப்பட்ட அரிசியாலாகின கட்டியாகிய வெள்ளியசோற்றை,

கவைத் தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்—கவைத்த காலினையுடைய ஞெண்டும் பீர்க்கங்காயுங்கலந்த கலப்புடனே பெறுகுவிர்;

தண்பணையின் (கஅசு) ஆமூரெய்தின் (கஅஅ), உழவர் தங்கையாகிய (கசு0) மகளேத் தடுக்கையினாலே (ககஉ) சோற்றைக் (ககச) கலவையொடு பெறுகுவிரென முடிக்க.

[எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக், கருமறிக் காதிற் கவையடிப்பேய்மக, ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப, நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்:]

எரி மறிந்து அன்ன நாவின்—மேனோக்கியெரிகின்ற நெருப்புச் சாய்ந்தாலொத்த நாவினையும்,

கரு மறிக் காதின் - வெள்யாட்டுமறிகளை அணிந்த காதினையும்:

† கவை அடிப் பேய் மகள்—கவைத்த அடியினையுடைய பேய்மகள்,

நிணன் உண்டு சிரித்த இலங்கு எயிற்றுத் தோற்றம் போல—நிணத்தைத்தின்று சிரித்த விளங்குகின்ற எயிற்றினது தோற்றரவு போல,

---

* பதிற்றுப்பத்து, எட்டாம்பத்து, ௩.

† "இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள், *** கண்டோட் டுணைக் கவையடி. பெயர்த்துத், தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக் கண்டனன்" என்றார் மணிமேகலையிலும்; ௬ - வது சக்கரவாளக்கோட்டம்புக்ககாதை.

பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர்ப் பணைத்தாள் அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப நீறு அடங்கு தெருவின் ஊர்—தாங்கொன்ற பிணங்களின்றலைகளைக் காலாலே தள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும் பெருமையையுடைய கால்களையுமுடைய தலைமையையுடையவாகிய யானைகளின் மதவருவி எழுந்ததுகளை அவிக்கையினாலே புழுதியடங்கின தெருவினையுடைய ஊர்,

அவன் சாறு அயர் மூதூர்—அவனுடைய விழாநடக்கின்ற பழைய ஊர்,

சேய்த்தும் அன்று சிறிது அணியதுவே—தூரிய இடத்ததுமன்று; சிறிதாக அணியஇடத்ததே.

மூதூர் அணியதென்க.

[பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை நாவி னந்தணர்க் காயினுங், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, வடையா வாயிலவ னருங்கடை குறுகி:]

பொருநர்க்கு அடையாவாயினும் புலவர்க்கு அடையாவாயினும் அரு மறை நாவின் அந்தணர்க்கு அடையாவாயினும் அருங் கடை வாயில் குறுகி—கிணைப்பாணர்க்கு அடைக்கப்படாவாயினும், அறிவுடையோர்க்கு அடைக்கப்படாவாயினும், அரிய வேதத்தையுடைத்தாகிய நாவினையுடைய அந்தணர்க்கு அடைக்கப்படாவாயினும் ஏனையோர்க்கு உள்ளே சேறற்கரிய தலைவாயிலையணுகி,

அடையாவென்றபன்மை நான்குவாயிலையுங்கருதி.

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன அவன் வாயில்—அதுதான் தெய்வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒருகண்ணை விழித்துப்பார்த்தாலொத்த அவனுடைய கோபுரவாசல்,

அன்றிப் பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறைநாவி னந்தணர்க்காயினும் அடையாவாயிலென்றுற் பொருளின்மையுணர்க.

செய் நன்றி அறிதலும்—பிறர் தனக்குச்செய்த நன்றியையறிந்து அவர்க்குத் தானும் நன்மைசெய்தலையும்,

சிற்றினம் இன்மையும்—அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்கடிரள் தனக்கில்லாமையையும,

இன் முகம் உடைமையும்—நோக்கினோர்க்கு இனியமுகத்தை எக்காலமும் உடையனாதலையும்,

இனியன் ஆதலும்—*முகத்தினினிய நகாஅ அகத்து இன்னாதவனாகாயல் நெஞ்சுமுகத்திற்கேற்ப இனியனாதலையும்,

செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த—எக்காலமுந் தன்னுடனே செறிந்து விளங்குகின்ற தலைமையினையுடைய பலகலைகளையுணர்ந்தோர் புகழ,

அஞ்சினர்க்கு அளித்தலும்—தன்வீரத்தைக்கண்டு அஞ்சிவந்து அடிவீழ்ந்தார்க்கு அருள்செய்தலையும்,

வெஞ்சினம் இன்மையும்—கொடிய சினமில்லாமையையும்.

கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்.

ஆண் அணி புகுதலும்—வீரர்நின்ற அணியிலேசென்று அவ்வணியைக் குலைத்தலையும்,

* திருக்குறள், கூடாநட்பு, ௪. "முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சரை யஞ்சப் படும்."

* "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய" என்றுகூறிப் †"பெண்ணு மாணும் பிள்ளையு மவையே" என்றதனால் ஆணென்றது ஆண்பாலையே யுணர்த்துமேனும் அணி புகுதலென்றதனால் ஈண்டு வீரனை யுணர்த்திற்று.

அழி படை தாங்கலும்—தனது கெட்ட படையிடத்தே தான்சென்று பகைவரைப் பொறுத்தலையும்,

வாள் மீக் கூற்றத்து வயவர் ஏத்த—வாள்வலியாலே மேலாகிய சொல்லையுடைய வீரர் புகழ,

கருதியது முடித்தலும் — தன்னெஞ்சுகருதிய புணர்ச்சியைக் குறைவறாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறுக்காற் பிறப்பறுமையிற் கருதியதைமுடிக்கவேண்டு மென்றார்.

காமுறப் படுதலும்—அங்ஙனந் தானே யின்பமுறாதே அம்மகளிருந் தம்மாலே மிக்கவின்பத்தைப்பெறும் தன்னை விரும்பப்பட்டிருத்தலையும்,

ஒருவழிப் படாமையும்—அவர்கள் அங்ஙனம் விரும்பினார்களென்று அவர்கள் வசத்தனாகாமையையும்,

ஓடியது உணர்தலும்—தான் அவர்வசத்தனாகாமையின் அவர் வருந்தியதன்மையையுணர்ந்து அவரைப்பாதுகாத்தலையும்,

இனி அவர்கள் நெஞ்சில் நிகழ்ந்ததனையுணர்ந்து அவர் குறைமுடித்தலென்றுமாம்.

அரி ஏர் உண் கண் அரிவையர் ஏத்த—செவ்வரிபொருந்தின மையுண்கண்ணினையுடைய மகளிர்புகழ,

அறிவு மடம் படுதலும் — தான்கூறுகின்றவற்றையுணரும் அறிவில்லாதார்மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தலையும்,

அறிவு நன்கு உடைமையும்—தன்னைப்போல் அறிவுடையார்மாட்டு நன்றாக அறிவுடையனாயிருத்தலையும்,

‡ "ஒளியார்மு னொள்ளிய ராதல் வெளியார்முன் - வான்சுதை வண்ணங் கொளல்" என்றார்பிறரும்.

வரிசை அறிதலும்—பரிசிலருடைய தரமறிந்து அவரவர்பெறுமுறைமைப்படி கொடுத்தலையும்,

கொடுத்தல் இதற்குங் கூட்டுக.

வரையாது கொடுத்தலும்—அங்ஙனம் கல்விமிகுதியில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலை மேற்கொள்ளாதே அவர்களளவிற்குத் தக்கனவற்றைக் கொடுத்தலையும்,

இனித் தனக்கென ஒன்றும் வரைந்துவையாமற் கொடுத்தலெனறுமாம்.

பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த—பிறர்கைப் பெற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர் புகழ,

பன்மீன் நடுவண் பான்மதி போல—பலமீன்களுக்கு நடுவிருந்த பால்போலும் ஒளியையுடைய கலைநிறைந்த மதிபோல,

இன்னகை ஆயமோடு இருந்தோற் குறுகி—இயலிசைநாடகத்தாலும், இனிய மொழிகளாலும் இனியமகிழ்ச்சியைச் செய்யும் கிளையோடே இருந்தவனையணுகி,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௫௦.

† " " " ௫௧.

‡ திருக்குறள், அவையறிதல், ௪.

கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு கண்டு மதி உவமையாயிற்று.

பையுடன் ஏகம் பாம்பு பிடித்தன்ன அம் கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்—கரியவண்களையுடைய கரியகுரங்கு பாம்பின்றலையைப் பிடித்தகாலத்து அப்பாம்பு ஒருகாலிறுகவும் ஒருகால் நெகிழவும் அதனைச் சுற்றுமாறுபோன்ற அழகினையுடைய தண்டிடத்தே செறியச் சுற்றின நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந்து இறுகவேண்டுமிடத்து இறுகும் நரம்புக்குவக்கும் வார்க்கட்டினையும்,

[மணிநிரைத் தன்ன வனப்பின்வா யமைத்து:]

மணி நிரைத்த அன்ன வனப்பின்—இரண்டுவிளிம்புஞ் சேரத்தைத்த முடுக்கின ஆணிகளாலே மணியை நிரைத்துவைத்தாலொத்த அழகினையும்,

வாயமைத்து—பொருந்தப்பண்ணி,

வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து—வயிறுசேர்ந்து ஒழுங்குபட்ட தொழில்வகை யமைந்த பத்தரினையும்,

வயிறு - பத்தரினடுவு. தாழிபோலப் பண்ணப்பட்ட பத்தலின், அகளமென்றார்.

கானக் குமிழின் கனி நிறங் கடுப்பப் புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு—காட்டிடத்துக் குமிழினுடைய பழுத்தினது நிறத்தையொப்பப் புகழ்ப்படுந் தலைகூட்டின கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வையோடே,

[தேம்பெய், தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பின்:]

தேம் பெய்து புரி அடங்கு நரம்பின்—தேனொழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே பெய்துகொண்டு முறுக்கடங்கின நரம்பினையுமுடைய,

அமிழ்து பொதிந்து இலிற்றும் நரம்பு—அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு,

இஃது ஓசையினிமைக்குக் கூறிற்று. *"தீந்தேன் மணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" என்றார் பிறரும்.

பாடுதுறை முற்றிய—சீர் பாடுந்துறைகளெல்லாம் முடியப்பாடுதற்கு,

முற்றிய - செய்யியவென்னும் வினையெச்சம்.

பயன் தெரி கேள்வி கூடுகொள் இன்னியம்—தனது பயன்விளங்குகின்ற இசைகளைத் தான் கூடுதல்கொண்ட இனியயாழை.

பச்சையோடே (உ[illegible]) வாயமைக்கப்பட்ட வனப்பினையும் (உ[illegible]), திவவினையுடைய (உ[illegible]), அகளத்தினையும் (உ[illegible]), நரம்பினையுமுடைய (உ[illegible]) இன்னியமெனமுடிக்க.

[குரல்குரலாக, நூனெறி மரபிற் பண்ணி:] நூல் நெறி மரபிற் குரல் குரலாகப் பண்ணி—இசைநூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து.

பாடுதுறை முற்றுதற்கு இன்னியத்தைக் குரல் குரலாகப் பண்ணியெனமுடிக்க.

[ஆறலை, முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்:] முதுவோர்க்கு ஆறலை

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையார் இலம்பகம். உ௰௦: "மணிவரும் வைம்பொற் பத்தர் பல்வினைப் பவள வாணி, மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத்திற்றே, மணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ், கனிபுகழ் காளை கொண்டு கடலகம் வணக்க லுற்றான்."

குவித்த கையினை எனவும்—* அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தம்முன் முதியோர்க்குப், பலகாலுங் குவித்த கைகளையுடையையென்றும,

இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்—வீரரெதிர்தற்கு மனமகிழ்ந்து கொடுத்த மார்பினையுடையையென்றும்,

† "வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம் - மகளிர்க் கல்லது மலைப்பறியலையே" ‡"மகளிர் மலைத்த லல்லது மள்ளர் - மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" §"விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற் - கரும்பூண்ற வெறிந்தாங்கவ னினதூழினி யெனவே" என்றார் பிறரும்.

மகளிருமாம்.

ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்—ஏரினையுடைய குடிமக்களுக்கு நிழல் செய்த செங்கோலையுடையையென்றும்,

தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்—தேரினையுடைய அரசர்க்கு வெம்மை செய்த வேலையுடையை யென்றும்,

நீ சில மொழியா அளவை—நீ சிலபுகழ்மொழிக் கூறுதற்கு முன்னே,

[மாசில், காம்புசொலித் தன்ன அறுவை யுடீஇ:] காம்பு சொலித்து அன்ன மாசு இல் அறுவை உடீஇ—மூங்கில் அனையையுரித்தாலொத்த மாசில்லாத உடையினை உடுக்கப்பண்ணி,

இனி மூங்கின்முளையிற் பட்டையுமாம்.

பாம்பு வெகுண்டு அன்ன தேறல் நல்கி—பாம்பேறி மயக்கினாற்போல மயக்கின கட்டெளிவைத் தந்து,

[காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப், பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்,

---

* ஆசாரக்கோவை, கஎ:—"அரசனு வாத்தியாயன் றாய்தந்தை தம்முன், னிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாவருங் கண்ட நெறி."

† பதிற்றுப்பத்து, ஏழாம்பத்து, ந:—"பார்ப்பார்க் கல்லது பணிப்பறி யலையே, பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ, நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே, வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம், மகளிர்க் கல்லது மலைப்பறி யலையே, நிலந்திறம் பெயருங் காலை யாயினுங், கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே"

‡ புறநானூறு, கo:—"வழிபடு வோரை வல்லறி தீயே, பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே, நீமெய் கண்ட தீமை காணின், ஒப்ப நாடி யத்தக வொறுத்தி, வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற், றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே, யமிழ்தட் டானுக் கமழ்குய் யடிசில் வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை, மகளிர் மலைத்த லல்லது மள்ளர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப, செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ், நெய்தலங் கான னெடியோய், எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே."

திணை - பாடாண்டிணை. துறை - இயன்மொழி. சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

§ சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், கஉ:—"விருந்தாயினை யெறிநீ யென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூண்ற வெறிந்தாங்கவ னினதூழினி யெனவே, யெரிந்தாரயி லிடைபோழ்ந்தமை யுணராதவ னின்றான், சொரிந்தார்மல ரமரங்கையர் தொழுதார்விசும் படைந்தான்."

பனிவரை மார்பன் பயந்த:] காழ் எரி கடிட்டிய கணைகவர் துணிப் பூ விரி கச்சைப் புகழோன் தன்முன் பயந்த பனிவரை மார்பன்— காண்டாவனத்தை நெருப்புண்ணும்படி யொரு கணையை உள்ளடக்கின ஆணைகாழிலையும் பூத்தொழில் பரந்த கச்சையினையுமுடைய அருச்சுனன்றனமையனாகிய வீமசேனன்கண்ட இமயம்போலு மார்பன்,

நுண் பொருட் பனுவலின் வழாஅப் பல் வேறு அடிசில்— கூறியபொருளையுடைய மடைநூல்நெறியிற் றப்பாத பலவேறுபாட்டையுடைய அடிசிலை,

[வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த, விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து, விளங்குபொற் கலத்தில:] விசும்பில் வாள் நிறக் கோள் மீன் சூழ்ந்த இளங் கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து விளங்கு பொற் கலத்தில்— ஆகாயத்தில் ஒளியையுடைத்தாகிய நிறத்தினையுடைய கோளாகிய மீன்கள்சூழ்ந்த இளைய கிரணங்களையுடைய ஞாயிற்றை இகழுந் தோற்றரவையுடைய விளங்குகின்ற பொற்கலத்திடத்தே,

விரும்புவன பேணி— நீ விரும்புவனவற்றை விரும்பி உட்கொண்டு,

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி— தம்மிடத்து மிகுகின்ற விருப்பத்தாலே தான் நின்று உண்ணப்பண்ணுவித்து;

ஆனாமரபினென்றும் பாடம்.

நீ கலிமொழியாளனை (௪௬௫) விரும்புவன பேணி (௪௭௪) உடீஇ (௪௬௯) நல்கி (௪௬௪) அடிசிலைக் (௪௭௧) கலத்தேயிட்டுத் (௪௭௪) தான்நின்று ஊட்டியென்க.

திறல் சால் வென்றியொடு தெவ்வுப் புலம் அகற்றி— வலியமைந்த வெற்றியோடே பகையைத் தத்தநிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணி,

விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி— வெற்றியையுடைத்தாகிய வேலினையுடைய முடிவேந்தர்மன்னும் அரண்களை யழித்து,

நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்— அவ்விடங்களிற்பெற்ற பொருளாலே விரும்பினோர் [illegible] புன்கண்மையையும், பாணர் புன்கண்மையையும் போக்கினபின்பு,

வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு— தன்படைத்தலைவர் மிக்கனவாய்க் கொண்டுவந்துதந்த நன்றாகிய நிறத்தினையுடைய பொருட்டிரளோடே,

தன்படைத்தலைவர் குறுநிலமன்னரை, அரசனையுமழித்து, நயவர்க்கும் பாணர்க்குங் கொடுத்த, மிக்குக்கொண்டுவந்த நிதியமென்க.

[பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி, யுருவ வான்மதி யூர்கொண் டாங்கு:] பருவ வானத்து உருவ வான் மதி பாற் கதிர் பரப்பி ஊர் கொண்டாங்கு— கூதிர்க்காலத்தையுடைய வானிடத்தே வடிவு நிறைதலையுடைய வெள்ளிய மதி பால்போலுங் கிரணங்களைப் பரப்பிப் பரத்தலைக் கொண்டாற்போல,

கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு— கூரிய சிற்றுளிகள் சென்று செத்தின உருக்கள் அழுந்தின வலியினையுடைய குறட்டிடத்தே நிறைத்த ஆர்களைச்சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடே,

குறடு - அச்சுக்கோக்குமிடம். அயில்வாய் - கூரியவாய்; என்றது சூட்டிற்கு ஆகுபெயர்.

[சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல:] முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சினைத் ததர் நனை சிதர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல— முருக்கினுடைய விசும்பிலே செல்லவளர்ந்த நெடிய கொம்பிற்செறிந்த அரும்புகள் கட்டவிழ்தற்குப் பிணியவிழ்ந்த தோற்றரவுபோல,

ததர் - கொத்துமாம். சிதர் - சிந்துதலுமாம்; சிச்சிலியுமாம்.

[உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக், கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி, யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு:]

கருந்தொழில் வினைஞர் கை வினை முற்றி உருக்குறு அரக்கு உள் எறிந்த போர்வைப் பாகர்— வலிய தொழிலைச்செய்யுந் தச்சருடைய கைத்தொழிலாற்செய்யும் உருக்களெல்லாம் முற்றுப்பெற்று உருக்கப்படுகின்ற சாதிலிங்கம் உள்ளேயிட்டு வழித்த பலகையையுடைய பாகர்,

தேர்த்தட்டுவெளி மறையப் பாவின பலகையைப் போர்வையென்றார். அதன் மேலே சுற்றுச்சுவராகப் பலகையாற்செய்த சுவரைப் பாகரென்றார். பாகரையுடைய தேரைப்பாகரென்றார்; ஆகுபெயரால்.

ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு — ஏறிப்பார்த்து உண்மையாக ஓட்டமுண்டென்று பெயர்பெற்ற அழகினையுடைத்தாகிய நடையினையுடைய தேரோடே,

நேமியோடே (௨௫௩) போர்வையையுடைய (௨௫௬) பாகரென முடிக்க.

மா செலவு ஒழிக்கும் மதன் உடை நோன் தாள் வாள் முகப் பாண்டில்— தன் கடுமையாற் குதிரையின்செலவைப் பின்னேநிறுத்தும் வனப்புடைத்தாகிய வலியினையுடைய தாளினையும், ஒளியினையுடைத்தாகிய முகத்தினையுமுடைய காளையெருத்தையும்,

வலவனொடு— அதனைச் செலுத்தும் பாகனோடு,

[தரீஇ, யன்றே விடுக்குமவன் பரிசில்:] பரிசில் தரீஇ அவனை அன்றே விடுக்கும் —யானை குதிரை அணிகலமுதலிய பரிசில்களையுந் தந்து அவனை அன்றே விடுக்கும்.

நிதியத்தோடே (௨௪௧) பாகரோடே (௨௫௮) வலவனோடே பாண்டிலையும் (௨௬௦) பரிசிலையும் (௨௪௧) தரீஇ (௨௬௦) அவன் அன்றேவிடுக்குமென முடிக்க.

மென் தோள் துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர் அகில் உண விரிந்த அம் மென் கூந்தலின் — மெல்லிய தோளினையும், துகிலணிந்த அல்குலினையும், அசைந்த இயலினையுமுடைய மகளிர் அகிற்புகையை உண்ணுதலாக விரிந்த அழகையுடைய மெல்லிய கூந்தல்போலே.

[மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித், துணிமழை தவழுந் துயல்கழை நெடுங் கோட்டு:]

துணி மழை மணி மயில் கலாபம் இடை மஞ்சு பரப்பித் தவழும் கோடு—தெளிந்தமேகம் நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடுவே தனது மஞ்சைப்பரப்பித் தவழுமலை,

சிறிதுநீர் உட்கொண்டு பக்கம் வெள்ளியதாயிருத்தலின், மேகம் மஞ்சைப் பரப்பியென்றார்.

இனி 'மணிமயில் கலாபம்' என்று பாடமாயின் மயில் தன்கலாபத்தை மஞ்சிடையிலே பரப்புதலைச்செய்து துயல்கோடென்க. துயல்வல் - ஆடுதல்.

துயல் கழை நெடுங் கோட்டு— அசைகின்ற மூங்கிலையுடைய நெடிய மலையிடத்தையுடைய குறிஞ்சி (௨௬௭)

[எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி:] எறிந்து உரும் இறந்த ஏற்று அருஞ் சென்னிக் கோடு (௨௬௫)—ஏறுதற்கு அரிதாகிய உருமேறு தானேறுதற்கு இடித்து வழியாக்கிப்போன சிகரத்தையுடையமலை.

இக்குதிரையேற்றரிதென்ப.

குறிஞ்சிக் கோமான்— குறிஞ்சியாகிய நுழைதற்கருமையுடைய நிலத்திற்குக் காவலன்,

செய்ய நாவிற் பன்னிச் செல் இசை நிலைஇய பண்பின் நல்லியக்கோடனை— கொய்யப்பட்ட தளிர்களையுடைய மாவினையும், பிறர்க்கு நில்லாமற் போகின்ற புகழ் நல்கி—த்தே நிற்றற்கும் காரணமான குணத்திலைப்புடைய நல்லியக்கோடனை,

நயந்தனிர் செலின்— விரும்பிச்செல்லின்,

ஏதுவாயிரவல (௬0) பெருமகன் (௪உஉ) புரவலனாகிய (௧உ௫) நல்லியக்கோடனை யாங்கொண்டகமையோடே (௧உ௯) முன்னாட்சென்றனமாக, இந்நாள் (௧உ௧), அழி பசிவருத்தம்வீட (௧௩0) யானையோடே நெரேய்தி (௧௩உ) யாம் அவனின்றும்வரு கின்றோம்; இனி நீயிரும் (௧௩௬) ஆம்வந்தரிடத்துச் செல்குவிராயின் (௧௩௫), வஞ்சி யும் வறிது; அதுவன்றி (௬0) மதுரையும்வறிது; அதுவன்றி (௬௭) உறந்தையும் வறி து; அதுவன்றி (அ௬) எழுவர்பூண்ட ஈகைச்செந்நுகம் (௧௧௩) ஒருதானாகிய (௧௧௫) குறித்துச் சோமானாகிய (௨௬௭) நல்லியக்கோடனை நயந்தனிர்செலின் (௨௬௯), வழி யிற் பெரும்பாணாற்றுப் பக்கத்துக் கேண்மின்; பட்டினம்படரின் (௧௫௬), வயின் வயிற் பெறுகுவிர் (௧௬௧); அதன்பின்னர் வேலூரெய்தின் (௧௭௩) அமைவரப் பெறுகுவிர் (௧௭௬); அதன்பின்னர் அவன் ஆமூரெய்தின் (௧அஅ) கலவையொடுபெறுகுவிர (௧௯௫); அவற்றைப்பெற்றபின், அவன் மூதூர் (௨0௧) சேய்த்துமன்று; சிறிது நணியதுவேயா யிருக்கும் (௨0௨), ஆண்டுச்சென்று முன்னர் அவன் கடைவாயிலைக்குறுகிப் (௨0௬) பல் ஆற்றோரேத்த (௨௧௧) வலவரேத்த (௨௧௨) அரிவையரேத்தப் (௨௧௫) பரிசில ரேத்த (௨௧அ) இருந்தோனையணுகிப் (௨௨0) பாடுதுறைமுற்றுதற்கு (௨௨அ) இன் னிசைப் பனுவல் (௨௨௬) பணிந்து (௨௩0) கையினையென்றும் (௨௩௧), மார்பினையென்றும் (௨௩௨), தோளினையென்றும் (௨௩௩), வேலினையென்றும் (௨௩௪) நீசிலமொழியா அள வை (௨௪௫) அவன் விரும்புபேணி (௨௪௪) உடைஇ (௨௩௬) நல்கி (௨௩௭) அடிசி லைக் (௨௪௧) கலத்தேநட்டுத் (௨௪௪) தான் ஊட்டி (௨௪௫) கிழியத்தோடே (௨௪௬) பாகரோடே (௨௫அ) வலவரோடே பாண்டிலையும் (௨௬0) பரிசிலையும் (௨௬௧) தந்து (௨௬0) அவன் அன்றேவிடுக்கும் (௨௬௧) என வினைமுடிவுசெய்க.

ஒருமாநாடு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்பா டிய சிறுபாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

க அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூ
ணிம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்
செம்மல் சிலைபொருத தோள்.

உ நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்கு—விடுகொடி
யோடிய மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

நான்காவது

பெரும்பாணாற்றுப்படை.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை * வகுத்தத
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பிற்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருது நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்

* விரித்ததனென்றும் பாடம்.

திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயிற்
கேளவ னிலையே கெடுகநின் னவல
மத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புல
முருமு முரறா தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செய்யா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளங்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமா வுருளி
யெழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வார்வை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்குந்
துளையணாச் சீறுர றூங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
யெல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்

மருங்குபொரு ளருத்துந் திருந்துதொடை நோன்ற
ளடிபுதை யரண மெய்திப் படப்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி *நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிண வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்புல் லடக்கிய வெண்பல் லெயிற்றியர்
பார்வை யாத்த பறைத்தாள் விளவி
னீழன் முன்றி னிலவுர லெய்த்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னோடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே

* நெடுந்திடரென்றும் பாடம்.

தொய்யா மடையிற் றேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வானமடி பொழுதி னீர்நசைஇக் குழிந்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சாத்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினர் குறும்பிற் சேப்பிற்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன * புல்லணற் காளைச்
செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு

* புல்லணர்க் காளையென்றும் பாடம்.

கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
யில்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து * மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
†முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பி
னதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பி
னள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை
யுறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக
ளளைவிலை யுணவிற் கிளையுட னருந்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
ளெருமை நல்லான் கருநாகு பெறூஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோன்றா
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட

---

* மதவிடைதெண்டியென்றும் பாடம்.

† முனைதலையிருக்கையென்றும் பாடம்.

*பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
யொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்து ணவிர்புகை † கமழக் கைமுயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலி
னின்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் ‡ பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றி
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி
லுடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ்க் கட்சி சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோன்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன

---

* பன்மல ரடுக்கிய வென்றும், பன்மலர் மிடைந்த வென்றும் பாடம்.
† பிறப்பக்கை முயன்றென்றும் பாடம்.
‡ பாய்மழையென்றும் பாடம்.

கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரே றுபொருத கண்ணகன் செறுவி
னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா னெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்து கொண்டவண்
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
யீருடை யிருந்தலை யார்ச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
றூம்புடைத் திரடா டுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்
குழுமுநிலைப் போரின் முழுமுதற் றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்

லேண்ணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
வூரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறுங்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்த
ரிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி
னவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
வெல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி

தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைதலோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை
யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்க் குவளையொடு நீல் நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமயத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையத் தோன்று

*நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
நுமணியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைப்பய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம்போ காது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த

---

* நீர்ப்பெயர்த்தென்றும் பாடம்.

மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
றாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழி றாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழந்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பல் றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயன்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் மும்புடைத் திரள்கா
யாறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியன் பாகொடு பிடித்த
விழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைந்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி

பெருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்மிதி கவளங்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்திற்
றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ணோங்கிய * நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைஇய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதா
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
வடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே கைவண் டோன்ற
னச்சிச் சென்றோர்க் † கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருங்

* நெடுமதில் வரைப்பென்றும் பாடம்.
† ஏமமாக வென்றும் பாடம்.

துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்
கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையோ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர்ப் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவ
லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைதெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக

கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
யந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வவிர்நூற் கலிங்க
யிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
யரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
றெரிகொ ளரிசித் திரள்நெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை * யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசின்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தாஅ னிருப்பிற் றானின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடவெண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
†யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெய றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரன்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்

---

* அயிரொடு பிறவுமென்றும் பாடம்.
† பலவுக்கடன் முகந்த வென்றும் பாடம்.

செந்தீப் பேணிய முனிவர்வெண் கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கு
மொளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

இதன்பொருள்.

அகல் இரு விசும்பிற் பாய் இருள் பருகி—தன்னையொழிந்த நான்குபூதமுந் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே தோன்றிப் பரந்த இருளை விழுங்காநின்று

அகலிருவிசும்பென்பது, *"நோய்தீருமருந்து" போனின்றது. பருகியென்னுஞ் செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்திநின்றது.

பகல் கான்று எழுதரு பல் கதிர்ப் பரிதி—மறைந்த பகற்பொழுதை உலகத்தே தோற்றுவித்து எழுதலைச்செய்யும் பலகிரணங்களையுடைய ஞாயிறு,

காய் சினந் திருகிய கடுந் திறல் வேனில்—கோபிக்கின்ற சினமுறுகிய கடிய வலியையுடைய முதுவேனிற்காலத்தே,

பாசிலை யொழித்த பராரைப் பாதிரி—பின்பனிக்காலத்தே பசிய இலைகளையுதிர்த்த பரிய தாளினையுடைய பாதிரியினது,

வள் இதழ் மா மலர் வயிற்றிடை வகுத்ததன் உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சை—பெருமையையுடைய இதழையுடைத்தாகிய வண்டையுடைய பூவினுடைய வயிற்றிடத்தைப்பிளந்த † புலாலினுடைய உள்ளிடத்தையொக்கும் நிறமூட்டுதலுற்ற தோல்,

பரியரைக் கமுகின் பாளை அம் பசும் பூக் கரு இருந்தன்ன கண் கூடு செறி துளை—பரிய தாளினையுடைய கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசியபூ விரியாமற் கருவாயிருந்தாலொத்த இரண்டுகண்ணுங்கூடின செறிந்த துளை,

உருக்கி அன்ன பொருத்துறு போர்வை—உருக்கி ஒன்றாக வார்த்தாற்போன்ற தோல்களின் வேறுபாடுதெரியாமல் இசைத்தலுறும் போர்வையினையும்,

பச்சைப்போர்வை; பொருத்துறுபோர்வை; துளையினையுடையபோர்வை.

சுனை வறந்தன்ன இருள் தூங்கு வறுவாய்—சுனை வற்றி உள்ளிருண்டாலொத்த இருள்செறிந்த உண்ணாக்கினையில்லாத வாயினையும்,

பிறை பிறந்தன்ன பின் எந்து கவைக் கடை—முதற்பிறை பிறந்து எந்தியிருந்தாற்போன்ற பின்பு எந்தியிருக்கின்ற கவைத்தலையுடைய கடையினையும்,

நெடும் பணைத் திரள் தோள் மடந்தை முன் கைக் குறுந் தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு திவவின்—நெடிய மூங்கிலையொத்த திரண்ட தோளினையுடைய மகளுடைய முன்கையிற் குறிய தொடியையொக்கும் நெகிழவேண்டியவழிநெகிழ்ந்து இறுகவேண்டியவழியிறுகும் வார்க்கட்டினையும்,

மணி வார்ந்தன்ன மா இரு மருப்பின்—நீலமணி ஒழுகினாலொத்த கருமைநிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய,

---

* கலித்தொகை, இரண்டாவதுகுறிஞ்சிக்கலி, ௨௪: "அலர்முலை ஆயிழை நல்லாய் கதுமெனப், பேரம ருண்கணென் னோழி மறீஇய, வாராது செவ்வ முயிர்க்கு, மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீஇ"

† பூவினுடையவென்றும்பிரதிபேதமுண்டு.

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் தொடை அமை கேள்வி—பொன்னைக் கம்பியாய் ஒழுகினாலொத்த முறுக்கடங்கின நரம்பின்கட்டமைந்த யாழை,

கேள்வி - ஆகுபெயர்.

போர்வையினையும் (௯), வாயினையும் (௧௦), கடையினையும் (௧௧), திவவினையும் (௧௨), மருப்பினையுமுடைய யாழையென்முடிக்க.

இடவயின் தழீஇ—இடத்தோட்பக்கத்தே அணைத்து,

வெந் தெறற் கனலியொடு மதி வலந் திரிதரும்—வெய்ய தெறுதற்றொழிலையுடைய ஞாயிற்றோடே திங்களும் மேருவை வலமாகத் திரிதலைச்செய்யும்,

தண் கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது— குளிர்ந்த கடல்சூழ்ந்த உலகில் நின்னைப் புரப்பாரைப் பெறாமல்,

பொழி மழை துறந்த புகை வேய் குன்றத்து—பெய்கின்ற மழைதுறத்தலால் நிலத்தின்கண்ணெழுந்த ஆவிசூழ்ந்த மலையிடத்தே,

பழு மரம் தேரும் பறவை போல— பழுத்த மரத்தைத் தேடித்திரியும் பறவைகளைப்போல,

கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்— பசிக்குறியால் அழுகின்ற சுற்றத்தாருடனே ஓரிடத்திராமற் பயனின்றி ஓடித் திரிதலைச்செய்யும்,

புல்லென் யாக்கைப் புலவு வாய்ப் பாண— பொலிவழிந்த வடிவினையும் கற்ற கல்வியை வெறுத்துக்கூறுகின்ற வாயினையுமுடைய பாண,

“நல்செவித் தாகிய கேள்வி நொந்து” என்றார்பிறரும். புலால்நாறுகின்றவாயுமாம்.

கேள்வியைத்தழீஇத் (௧௬) தாங்குநர்ப்பெறாது (௧௮) குன்றத்தே (௧௯) கடுந்திறல் வேனிற்காலத்தே (௫) பறவைபோலத் (௨௦) திரிதரும் பாணவெனமுடிக்க.

பெரு வறம் கூர்ந்த கானம் கல்லெனக் கருவி வானம் துளி சொரிந்தாங்கு— பெரிய * வற்கடமிக்க காடு உழவுத்தொழில் முதலியவற்றால் ஆரவாரமிகும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற்போல,

பழம் பசி கூர்ந்த எம் இரும் பேர் ஒக்கலொடு வழங்கத் தவாஅப் பெரு வளன் எய்தி— தொன்றுதொட்ட பசிமிக்க எம்முடைய கரிய பெரிய சுற்றத்தோடே யாங்கள் பிறர்க்குக்கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப்பெற்று,

வால் உளைப் புரவியொடு வயக் களிறு முகந்துகொண்டு யாம் அவணின்றும் வருதும்— வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரையோடே வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அவனுழையினின்றும் வாராநின்றேம்;

நீயிரும்— நீங்களும்,

[இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த், திரைதரு மரபி னுரவோ னும்பல், மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு, முரசுமுழங்குதானை மூவருள்ளு, மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி, னல்லது கடிந்த வறம்புரி செங்கோற், பல்வேற் றிரையற் படர்குவி ராயின்:]

மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும் முரசு முழங்கு தானை மூவருள்

* வறட்கால மென்றும் பிரதிபேதமுண்டு.

ளும்—அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப்புரக்கும் முரசுமுழங்குகின்ற நாற்படையினையுமுடைய சேரசோழபாண்டியரென்னுமூவரிலும்,

இலங்கு நீர்ப் பரப்பின் வளை மீக்கூறும் வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின் — விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப்பிறந்த சங்கில் மேலாக உலகங்கூறும் வலம்புரிச்சங்கையொத்த குற்றநீங்குந் தலைமையினையும்,

அல்லது கடிந்த அறம் புரி செங்கோல— மறத்தைப்போக்கின அறத்தைவிரும்பின செங்கோலினையுமுடைய,

இரு நிலம் கடந்த திரு மறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை உரவோன் உம்பல்— பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலுநிறத்தையுடையவன் பின்னிடத்தோனாகிய சோழன்குடியிற்பிறந்தோன்,

மூவருள்ளுஞ் சிறப்பினையுஞ் செங்கோலினையுமுடைய உரவோனென்க.

திருமால்குடியிற்றோன்றிய உரவோன்.

அந்நீர்த் திரை தரும் மரபின் பல் வேல் திரையன்— அக்கடலின் திரைகொண்டுவந்து ஏறவிட்டமரபாற் பலவேற்படையினையுடைய திரையனென்னும் பெயரையுடையவன்,

என்றதனால், நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால நாகலோகத்தே சென்று நாககன்னியைப்புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்றபுதல்வனை என்செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர்பெற்றகதை கூறினார்.

திரையற் படர்குவிராயின் நின் உள்ளஞ் சிறக்க— திரையனை நினைப்பீராயின் அவனைநினைத்தலின், நின் நெஞ்சு சிறப்புக்களைப்பெறுக;

சிறக்கநின்னுள்ள (௪௫) மெனமேல்வருவதனை இதனோடுகூட்டுக.

[கேளவ னிலையே கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக— நினது மிடி கெடுவதாக;

அவன் நிலை கேள்— அங்ஙனம் அவனை நினைத்துப்போகின்றநீ அவன் றன்மையைக் கேட்பாயாக;

[அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்:] அவன் கடி உடை வியன் புலம் அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக் கைப்பொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கைக் கொடியோர் இன்று— அவனுடைய காவலையுடைத்தாகிய அகலத்தையுடைய நிலம், வழிபோவாரைக் கூப்பிடும்படி வெட்டி அவர்கள் கையிலுள்ள பொருளைக் கைக்கொள்ளும் களவே உழவுபோலும் இல்வாழ்க்கைப்பொருளாகவுடைய கொடுமையையுடையோரில்லை;

உருமும் உரறாது அரவுந் தப்பா காட்டு மாவும் உறுகண் செய்யா— உருமேறும் இடியாது; பாம்புகளுங் கொல்லுதலைச்செய்யா; காட்டிடத்துப் புலிமுதலியனவும் வருத்தஞ்செய்யா; ஆகலின்,

இஃது அவனாணை கூறிற்று.

[வேட்டாங், கசைவழி யசைஇ நசைவழித் தங்கிச், சென்மோ:

ஆங்கு அசைவுழி அசைஇ— அக்காட்டிலகன் இளைத்தவிடத்தே இளைப்பாறி,

நசைவுழி வேட்டுத் தங்கிச் சென்மோ— எங்களிடத்தே நீ தங்கிப்போக வேண்டுமென்று நச்சினவிடத்தே நீயும் அதற்கு விரும்பித் தங்கிச் செல்வாயாக.

இரவல— இரத்தற்றொழிலைவல்லோய்,

[...க்கதிர் ஞுள்ளம் கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து, முழவி னன்ன முழுமர வுருளி:]

முழவின் அன்ன முழுமரம் திருந்து நிலை ஆரத்துக் கொழுஞ்சூட்டு அருந்திய உருளி— மத்தளத்தையொத்த குறட்டிடத்தே தைத்த சிக்கென்றதன்மையையுடைய ஆரிடத்தே நன்றாகிய வளைந்த மரஞ் சூழ்ந்து கிடக்கப்பட்ட உருளையையும்,

அச்சுக்கோக்கின்ற இடமுமாம். அக்குறட்டிலே தைத்துக்கிடக்கின்றது ஆர். சூட்டு - விளிம்பில்வைத்த வளைந்தமரம்.

எழூஉப் புணர்த்தன்ன பரூஉக் கை நோன் பார்— கணையமரம் இரண்டுசேர்ந்தாலொத்த பருத்தகைகளையுடைய வலிய பாரையுமுடைய,

அச்சுமரத்தின்மேலே நெடியவாய் இரண்டுபக்கத்தும் நெடுகக்கிடக்கின்ற பருமரங்களைப் பரூஉக்கையென்றார். அம்மரங்களிரண்டினையும்நெருங்கத்துளைத்துக்குறுக்கே ஏணிபோலக் கோத்ததனைப் பாரென்றார்.

[மாரிக் குன்ற மழைசுமந் தன்ன, வார்வை வேய்ந்த வறைவாய்ச் சகடம்:]

குன்றம் மாரி மழை சுமந்தன்ன வார்வை வேய்ந்த அறை வாய்ச் சகடம்— மலை மாரிக்காலத்து மேகத்தைச் சுமந்துநின்றாற்போன்ற, தொத்துளிப்பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடையசகடம்,

ஆர்வை வேய்ந்த வென்றுபாடமாயின், நிறைந்த வாருவைக்கோலாலே வேய்ந்தவென்க.

அந்த இரண்டுபாரிலுங் கால்களைநட்டுக் குடிலாகக்கட்டி மேலே வசம்புமுதலியனவற்றைக் கயிற்றாலேகோத்த பாயை எடுத்தலைக்கூறினார்.

உருளியையும், பாரையுமுடைய சகடமென்க.

வேழங் காவலர் குரம்பை ஏய்ப்பக் கோழி சேக்கும் கூடு உடைப் புதவின்— யானையைப் புனத்தில்நின்றுமேற் காக்கின்ற தொழிலையுடையார் இதண்மேலேகட்டின குடிலையொப்பச் சிறுகக்கட்டின கோழியடைக்குங் கூட்டையுடைத்தாகிய குடிலின்வாசலிலே,

முளை எயிற்று இரும் பிடி முழந்தாள் ஏய்க்கும் துளை அரைச் சீறுரல் தூங்கத் தூக்கி— முளையின்முனைபோலுங் கொம்பினையுடைய கரிய பிடியினது முழந்தாளையொக்குந் துளையைத் தன்னிடத்தேயுடைய சிறிய உரலை அசையும்படி தூக்கி,

...துளையிடுதலின், துளையரைச் சீறுரலென்றார்.

நாடக மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீங்கு இன்னியம் கடுப்ப—நாடகமாடு மகளிர் ஆடுங்களத்தே கொண்டுவந்த வாரால்பிணித்தலிறுகின இனிய முழவையொப்ப,

கயிறு பிணித்துக் காடி வைத்த கலன் உடை மூக்கின்— தகராதபடி கயிற்றாலே வலிந்து காடிவைத்த மிடாவையுடைய அப்பாரின்றலையிலே,

புளியங்காய் செல்லிக்காய்முதலியன ஊறவிட்டு வைத்ததனைக் காடியென்றார். இனிக் காடி நெய்யென்பாருமுளர்.

இனிப் பாரிற் கழுத்தானவிடத்தே வைத்த பிடாவென்றுமாம்.

மக உடை மகடூஉப் பகடு புறந் துரப்ப—குழவியைக் கைக்கொண்ட மகளிருந்து பூண்ட எருத்தை முதுகிலேயடிப்ப,

சகடம் (௫௦) புதவின் (௫௨) மூக்கின்கண்ணே (௫௭) வேப்பிலைமிடைந்த (௫௧) மகடூஉ இருந்து துரப்பவெனமுடிக்க.

கோட்டு இணர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த மகடூஉ (௫௮) — கொம்பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மென்மையையுடைய இலையைப் பிள்ளைக்குக் காவலாகக்கொண்டிருக்கின்ற மகடூஉ,

படலைக் கண்ணி—தழைவிரவின மாலையையும்,

பரேர் எறுழ்த் திணி தோள்—பரிய அழகினையும் வலியினையுமுடைய இறுகின தோளினையும்,

முடலை யாக்கை—முறுக்குண்ட உடம்பினையும்,

முழு வலி மாக்கள்—நிரம்பிய மெய்வலியினையுமுடையோர்,

[சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த, பெருங்கயிற் றொழுகை:] சிறு துளைக் கொடுநுகம் பெருங் கயிறு நெறிபட நிரைத்த ஒழுகை— சிறிய துளையினையுடைய கொடிய நுகத்தின்கண்ணே பெரியகயிற்றாலே எருதுகளை ஒருவழிப்பட நிரைத்துக் கட்டின சகடவொழுங்கினை,

துளைகளிற் செருகினகழிகள் கழுத்தசையப் பட்டுநிற்றலின், கொடுநுகமென்றார்: ஒருசகடத்திற் பலபூட்டுதல் கூறினார்.

மருங்கிற் காப்ப— எருதுகள்திருகாமல் அச்சுமுறியாமற் பக்கத்தே காத்துச்செல்ல,

சில் பத உணவின்— இடப்படும் பொருள்களுக்குச் சிறியவாக இடப்படுமுணவினது,

என்றது உப்பை. பதம் - பக்குவம்.

கொள்ளை சாற்றி— விலைசொல்லி,

பல் எருத்து உமணர் பதி போகு நெடு நெறி— விலைத்தாற் பூட்டுதற்குப் பல வெருத்தையுமடித்துக்கொண்டுபோம் உப்புவாணிகர் ஊர்கள்தோறும் செல்லும் நெடிய வழியினையும்,

பதிபோலப் போகுமென்றுமாம்.

மகடூஉத்துரப்ப மாக்கள்காப்பச் சாற்றிப்போம் நெடுநெறியையுமென்க.

எல் இடைக் கழியுநர்க்கு ஏமமாக—பகற்பொழுதுபோவார்க்கு இளைப்புத்தீர,

[மலையவுங் கடலவு மாண்பயன் றரூஉ, மரும்பொருளருத்துந் திருந்துதொடை நோன்ஞாண், வடிபுதை யரண மெய்திப் படம்புக்குப், பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின், விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள், வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச், சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக், கருவி லோச்சிய கண்ணகன் எறுழ்த்தோட், கடம்பமர் நெடுவே ளன்ன மீளி, யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்:]

மலையவும் கடலவும் மாண் பயன் தரூஉம் அரும் பொருள் அருத்தும் ஓடா வம்பலர்—மலையிலுள்ளனவும் கடலிலுள்ளனவுமாகிய மாட்சிமையையுடைய பயனை

சொங்கெரும் பெறுதற்கரிய பொருள்களை உலகத்தோரெல்லாரையும் நுகரப்பண்ணும் நெக்கிடாத புதியோர்,

என்றது - மாணிக்கமும், முத்தும், சந்தனமுமுதலியன கொண்டுபோய் விற்றுத் திரிவாரைக்கூறிற்று.

பொருகணை தொலைச்சிய புண் தீர் மார்பின்—பொருகின்ற அம்புகள் தசையைப்போக்கின புண்கள்தீர்ந்த மார்பினையும்,

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடை—பத்திரம் செருகப்பட்ட கட்டுதலுறும் சேலையினையும்,

கரு வில் திருந்து தொடை ஒச்சிய கண் அகன் எறுழ்த் தோள்—கொடியவில்லைத் தப்பாததொடையிலே நிரம்பவாங்கின இடமகன்ற வலியினையுடைத்தாகிய தோளினையுமுடைய,

கடம்பு அமர் நெடு வேள் அன்ன வம்பலர்— கடம்பிடத்தேயிருந்த நெடிய முருகனையொத்த வம்பலர்,

மீளி உடம்பிடித் தடக் கை ஓடா வம்பலர்— கூற்றுவனையொத்த வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய பிறக்கிடாதவம்பலர்,

மார்பினையும், உடையினையும், தோளினையுமுடைய வம்பலர்.

வளை வார் பாம்பின் வெண் கை ஒள் வாள் விரைய வரிக் கச்சிற் பூண்டு புடை தூங்க— மலையிடத்தே நிற்கின்ற பாம்புபோலே யானைக்கொம்பாற் கடைந்திட்ட வெள்ளிய வாயினையுடைய ஒள்ளியவாள் தன்னிடத்தில்வரியினை வரியையுடைய கச்சிலேமேலே தோளிலேகோக்கப்பட்டு ஒருபக்கத்தே தூங்காநிற்க,

நோன் தாள் அடி புதை அரணம் எய்தி—நடந்த வலியையுடையவாகிய காலில் அடியைமறைக்கின்ற செருப்பைக்கோத்து,

படம் புக்கு—சட்டையிட்டு,

வம்பலர் தூங்க எய்திப் புக்கு வழங்கும் (அ0) பெரியவழி (அக) யென்க.

தடவு நிலைப் பலவின் முழுமுதற் கொண்ட சிறு சுளை பெரும் பழம் கடுப்ப—பெருமையையுடைய நிலையினையுடைய பலாவினடியிலே குலைகொண்ட சிறியவாகிய சுளையினையுடைய பெரிய பழத்தையொப்ப,

நல்லபழம் சுளைமிக இராதென்றார்.

[மிரியல், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத், தணர்ச்செவிக் கழுதை:]

மிரியற் புணர்ப் பொறை தாங்கிய கழுதை—மிளகினை ஒத்தகனமாகச்சேர்த்த பாரத்தைத் தாங்கிய கழுதை,

வடு ஆழ் நோன் புறத்து அணர்ச் செவிக் கழுதை—வடுவழுந்தின வலியினையுடைய முதுகினையும் எடுத்தசெவியினையுமுடைய கழுதை,

கழுதைச் சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெரு வழிக் கவலை காக்கும்—கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டுபோகின்ற திரளோடே வம்பலர் (எசு) வழங்கும் பெரியவழியில் சுங்கங்கொள்வார் கவர்த்தவழிகளையும் காத்திருக்கும்,

உல்கு - சுங்கம்.

வில்லுடை வைப்பின்— விற்படையிருக்கின்ற ஊர்களில்,

வியன் காட்டு இயவின்— அகன்ற காட்டுவழிகளில்,

நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த பூளை அம் பசுங்காய் புடை விரிந்தன்ன வரிப் புற அணிலொடு— நீண்ட தாளினையுடைய இலவத்தினது அசைகின்ற கொம்பு காய்த்த பஞ்சியினையுடைய அழகினையுடைத்தாகிய பசிய காய் முற்றி முதுகு விரிந்து பஞ்சுதோன்றினாலொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே,

கருப்பை ஆடாது— எலியுந் திரியாதபடி,

[யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல், வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக, ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை:]

யாறு அறல் புரையும் வெரிந் கொழு மடல் உடை நெடுந் தகர் ஈந்து— யாற்றினது அறலையொக்கும் முதுகினையும் கொழுவிய மடலினையுமுடைய நெடிய மேட்டு நிலத்தினின்றவீந்து,

மடலினடி தன்னிடத்தேநிற்க மேலறுப்புண்டவீந்து அறல்போன்றிருக்குமாறு உணர்க.

வேல் தலை அன்ன வை நுதி ஈந்து இலை வேய்ந்த எய்ப் புறக் குரம்பை—வேலின்முனையையொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய ஈந்தினுடைய இலையாலேவேய்ந்த எய்ப்பன்றிமுதுகுபோலும் புறத்தினையுடைய குடிலில்,

[மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி, யீன்பிண வொழியப் போகி:] ஈன் பிணவு மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி ஒழியப் போகி—பிள்ளைப்பெற்றவெயிற்றி மான்றோலாகிய படுக்கையிலே அப்பிள்ளையோடே முடங்கிக்கிடக்க ஒழிந்தோர் போய்,

* "பெண்ணும் பிணவு மக்கட் குரிய" என்பதனால் வந்தபிணவென்னும் ஆகாரவீறு அல்வழிக்கண் வன்கணமன்மையிற் † குறியதன் இறுதிச்சினைகெட்டு உகரம் பெறாதுநின்றது.

[நோன்காழ், இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ, லுளிவாய்ச் சுரை யின் மிளிர மிண்டி:] இரும்பு தலை யாத்த திருந்து கணை நோன்காழ் விழுக் கோல் உளி வாய்ச் சுரையின் மிளிர மிண்டி—பூண் தலையிலேயழுத்தின நன்றாகிய திரட்சியையும் வலியையுமுடைத்தாகிய வயிரத்தினையுமுடைய சீரிய கோல்செருகின உளி போலும் வாயினையுடைய பாரைகளாலே கட்டிகள் கீழ்மேலாகக் குத்துகையினாலே,

கோல்செருகப்படுகின்ற சுரையையுடைமையிற் சுரையென்றார்; ஆகுபெயர். சுரை - குழைச்சு.

இரு நிலக் கரம்பைப் படு நீறு ஆடி—கருநிலமாகிய கரம்பை நிலத்திலுண்டாகிய புழுதியைஅளைந்து,

நுண் புல் அடக்கிய வெண் பல் எயிற்றியர்—மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயிற்குடியிற்பிறந்தமகளிர்,

போய் மிண்டுகையினாலே ஆடி அடக்கிய எயிற்றியரென்க.

மிகவிளைந்துதிர்ந்தபுல்லை எறும்பிழுத்துச் சேரவிட்டுவைத்த இடமறிந்தெடுத்தல் அந்நிலப்பண்பு.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௬௧.

† " எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், ௬௨.

பார்வை யாத்த பறைத்தாள் விளவின் நீழல் முன்றில் நிலவுரற் பெய்து—பார்வைமான்கட்டிநின்ற தேய்ந்ததாளினையுடைய விளவினது நிழலையுடைய முற்றத்திடத்துத் தோண்டின நிலவுரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து,

குறுங் காழ் உலக்கை ஓச்சி—குறிய வயிரமாகிய உலக்கையாலேகுத்தி,

நெடுங் கிணற்று வல்லூற்று உவரி தோண்டி—ஆழ்ந்த கிணற்றிற் சில்லூற்றாகிய உவரிநீரை முகந்துகொண்டு,

தொல்லை முரவு வாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி—பழைய ஓறுவாயபோன பானையிலே வார்த்தவுலையை முரிந்த அடுப்பிலேவைத்து,

[வாராது அட்ட வாடூன் புழுக்கல்:]

வாராது அட்ட புழுக்கல்—அரியாதாக்கின சோற்றை,

எயிற்றியர் பெய்து ஓச்சித் தோண்ட ஏற்றி அட்ட புழுக்கலெனமுடிக்க.

வாடூன்—உப்புக்கண்டத்தோடே,

[வாடாத் தும்பை வயவர் பெருமகன், ஓடாத் தானை:] ஓடாத் தானை வாடாத் தும்பை வயவர் பெருமகன்—முதுகிடாதபடையினையுடைய கெடாத தும்பைசூடின போர்வல்ல வீரருடைய தலைவனாகிய,

ஒண் தொழிற் கழற் காற் செவ்வரை நாடன் சென்னியம் எனின் — ஒள்ளிய தொழில்களையுடைத்தாகிய வீரக்கழலணிந்த காலினையுடைய செவ்விய மலைநாட்டையுடையவனுடைய பாணச்சாதியேமென்று கூறுவீராயின்,

தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ—தெய்வங்களுக்குச் சோறிட்டுவைத்த பலிபோலே புழுக்கலையும் வாடூனையும் (க00) தேக்கிலையிலே குவிக்கையினாலே,

[நும், பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவிர்:] பதம் நும் பை தீர் கடும்பொடு மிகப் பெறுகுவிர்—அவ்வுணவை நும்முடைய பசுமைதீர்ந்த சுற்றத்தோடே மிகப்பெறுகுவிர்;

வியன்காட்டியவுகளில் (அஉ) உல்குடைத்தாகிய (அக) நெடுநெறியையும் (சுரு) வம்பலர் (எசு) கழுதைச்சாத்தொடுவழங்கும் (அ0) உல்குடைப்பெருவழிக்கவலையையுங் காத்திருக்கும் (அக) வில்லுடைவைப்பின் (அஉ) குரம்பையில் (அஅ) எயிற்றியர் (கூச) அட்டபுழுக்கலையும்வாடூனையும் (க00) எல்லிடைக்கழியுநர்க்கேமமாகத் (கூகூ) தேக்கிலையிலே குவிக்கையினாலே (க0ச) அப்பதத்தைப் (க0ரு) பெருமகனாகிய (க0௩) செவ்வரைநாடன் சென்னியமெனின் (க0கூ) நும் (க0ச) கடும்பொடு மிகப்பெறுகுவிர் (க0ரு) எனமுடிக்க.

உல்கு இரண்டுவழிக்குங்கொள்க. குவைஇ யென்னும் செய்தெனெச்சம் காரணகாரியப்பொருட்டு.

[மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்:] மயங்கு மான் அடி பொறித்த அதர் மருங்கின்—நீரின்மையின் மயங்கித்திரியும் மானடி அழுந்திக்கிடக்கின்ற வழியிடத்திலே,

வானம் மடி பொழுதில் நீர் நசைஇக் குழித்த அகழ்—மழை பெய்தலைத்தவிர்ந்த காலத்தே நீர்நிற்கவேண்டுமென்று நச்சுதலாலே குழித்தகுளம்,

அகழப்படுதலின், அகழென்றது ஆகுபெயர்.

சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கி—அதனைச் சூழப்பறித்துக்கிடக்கின்ற மட்டுக்குழிகளினுள்ளே மறைந்தொதுங்கி,

தண்ணீர்குடிக்கவருமென்று குளத்தைச்சூழப்பறித்தகுழி.

புகழா வாகைப் பூவின்அன்ன வளை மருப்பு ஏனம் வரவு பார்த்து இருக்கும்—அகத்திப்பூவினையொத்த வளைந்த கொம்பினையுடைய பன்றியினது நீருண்ணவரும் வரவைப்பார்த்திருக்கும்,

அரைநாள் வேட்டம் அழுங்கின்—நடுவியாமத்து வேட்டை ஒழிந்தார்களாயின்,

பகல் நாள்—அதன் பிற்றைநாளிலே,

[பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும், நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇ:]

முள் அரைத் தாமரைப் புல் இதழ் புரையும் நெடுஞ் செவிக் குறு முயல் போக்கு அற—முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயலை எவ்விடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலித் தொடர் வலை மாட்டி வளைஇ—குவிந்த இடத்தையுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபிணைத்த வலைகளை * மாட்டி வளைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி—அங்காந்த வாயையுடைய நாயுடனேசென்று பசியதூறுகளையடித்து அவற்றிற்கிடவாமலோட்டி,

[கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம்.]

கடறு கூட்டுண்ணும் அருஞ் சுரம்—காட்டிலுள்ளமுயல்களைக் கொள்ளைகொண்டுண்ணும் அரிய பாலைநிலம்,

கடுங்கட் கானவர்—தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (௧௧௬) பயம்பின் ஒடுங்கிப் (௧௦௮) பார்த்திருக்கும் (௧௧௦) இராவேட்டமழுங்கிற் பகலுளிலே (௧௧௧) முயலைப் போக்கறவளைத்து (௧௧௩) எருக்கிக் (௧௧௨) கூட்டுண்ணும் (௧௧௬) அருஞ்சுரமெனமுடிக்க.

அருஞ் சுரம் இறந்த அம்பர்க் குறும்பிற் சேப்பின்—இவ்வரியநிலத்தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (௧௨௬) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனால் நண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலங்கூறி அதனைக் கடந்தநிலமுங் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரென்றுமுரைப்பர்.

[பருந்துபட, வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி;] ஒன்னாத் தெவ்வர் நடுங்கப் பருந்து பட ஓச்சி—பொருந்ாதபகைவர் அஞ்சப் பருந்துகள்படியக் குத்தி,

வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணிப் பலகையொடு நிரைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலானாறும் வாயையுடையவேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே நிரைத்துவைத்து,

முடி நாட் சாபஞ் சாத்திய கணை துஞ்சு வியன் நகர்—தலையிலே முடிந்தநாணையுடைய வில்லைச்சாத்திவைத்த அம்புதங்கும் அகற்சியையுடைய வீடுகளையும்,

ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

* மூட்டிவளைத்தென்றும் சிலபிரதிகளிலுள்ளது.

வளைத் தேன் புரையுங் கவைக் கடைப் புதையொடு கடுந் துடி தூங்குங் கணைக் கால் பந்தர்—மலையிற் றேனிறாலையொக்குங் குதையினையுடைத்தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுக்களுடனே ஓசைமிக்க துடியுந்தூங்குந் திரண்ட காலையுடைய பந்தரினையும்,

தொடர் நாய் யாத்த துன்னருங் கடி நகர்—சங்கிலிகளாலே நாய்களைக்கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

[வாழ்முள் வேலிச் சூழ் மிளைப் படப்பை:] முள் வாழ் வேலிச் சூழ் மிளைப் படப்பை—முள்ளினையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற்காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

கொடு நுகந் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் சேர்த்த உட்கதவையுடைய வாயிலினையும்,

செந்நிலை நெடு நுதி வயக் கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலையினையும் நெடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர்வாசலினையுமுடைய,

பகைவரைக்குத்துதற்குக்கழுவைத்தார்.

கொடு வில் எயினர் குறும்பிற் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினச்சாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணைக்காற்பந்தர் (௧௨௧) முதலியவற்றையுடைய குறும்பென்க.

களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி—களர்நிலத்தே வளர்ந்த ஈந்தினது விதையைக் கண்டாற்போன்ற மேட்டுநிலத்தே விளைந்த நெல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின் வறை காலியாத்தது வயின்றொறும் பெறுகுவிர்—நாய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டைகளையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்ததனை மனைகடோறும்பெறுகுவிர்;

சேப்பிற் பெறுகுவிரென்க.

யானை தாக்கினும் அரவு மேற் செலினும் நீல் நிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும் சூல் மகள் மாறா மறம் பூண் வாழ்க்கை—யானை தன்னெதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நீலநிறத்தையுடைய மேகத்திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற்கொண்டமகள் அவையிற்றிற்கஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

வலிக் கூட்டுணவின் வாட் குடிப் பிறந்த—தமது வலியாற் கொள்ளைகொண்டு உண்ணும் உணவினையுடைய வாட்டொழிலே செய்யுங் குடியிற்பிறந்த,

புலிப் போத்தன்ன புல் அணற் காளை—புலியினது போத்தையொத்த புல்லென்ற தாடியையுடைய அந்நிலத்துத்தலைவன்,

செல் நாய் அன்ன கருவிற் சுற்றமொடு கேளா மன்னர் கடி புலம் புக்கு—தான் குறித்தவிலங்கின்மேலே செல்கின்றநாய் அதனைத் தப்பாமற் கொள்ளுமாறுபோன்ற கொடியவில்லையெடுத்த காவலாளருடனே தன்வார்த்தைகேளாத பகைவருடைய காவலையுடைய நிலத்தேசென்று,

நாள் ஆ தந்து நறவு நொடை தொலைச்சி—விடியற்காலையிலே அவர்கள்பசுக்களை அடித்துக்கொண்டுபோந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகப்போக்கி,

இல் அடு கள் இன் தொப்பி பருகி—அதற்குப் பின்பாகத் தமதில்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய நெல்லாற்செய்த கள்ளையுண்டு,

மல்லல் மன்றத்து மத விடை கெண்டி—வளப்பத்தினையுடைய மன்றிலே வலியையுடைய ஏற்றை அறுத்துத்தின்று,

மடி வாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்ப—தோலை மடித்துப்போர்த்த வாயையுடைய மத்தளந் தங்களுக்குநடுவே முழங்காநிற்ப,

[சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளையூஉப், பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை, முரண்டலை கழிந்த பின்றை:] சிலை நவில் எறுழ்த் தோள் ஓச்சி வலன் வளையூஉப் பகல் மகிழ் தூங்கும் தூங்கா முரண் தலை இருக்கை கழிந்த பின்றை—வில்லைப்பயின்ற வலியையுடைய இடத்தோளையெடுத்து வலப்பக்கத்திலேவளைந்து பகற்பொழுதிலே மகிழ்ச்சியுடனேயாடும் அசையாப்பொருதலையுடைய குடியிருப்பினைக் கடந்தபின்பு,

இதனாற் குறிஞ்சிநிலம் முற்கூறித் தலைப்பகைப்புலமும் பிற்கூறினார்.

மறிய குளகு அரை யாத்த குறுங்கால்—ஆட்டுமறிகள் நின்றுதின்னுந் தன்மையையுடைய தழைகளைத் தம்மிடத்தேகட்டின குறிய கால்களையும்,

[குரம்பைச், செற்றை வாயில்:]

செற்றை வாயில்—சிறுதூற்றையுடைய வாயிலினையும்,

குரம்பை— குரம்பையினையும்,

செறி கழிக் கதவின்— கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும்,

[கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்:] கழித் தலைக் கற்றை வேய்ந்த சாம்பின்— வரிந்த கழிகளிடத்தே வரகுகற்றைகளாலே வேய்ந்த சேக்கையையும்,

[அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள:] உதள அதளோன் துஞ்சும் காப்பின்—கிடாயினுடைய தோல்களைப் பாயலாகவுடைய முதியோன் துயில்கொள்ளுங் காவலையுமுடைய,

"மொத்தையுந் தகரு முதளு மப்பரும், யாத்த வெள்ளை யாட்டின் கண்ணே" என்றார்மரபியலில்.

காலினையும் (கசஅ) வாயிலினையும் கதவினையும் (கசகூ) சாம்பினையும் (கருo) காப்பினையு (கருக) முடைய குரம்பை (கசஅ) யென்க.

நெடுந் தாம்பு தொடுத்த குறுந் தறி முன்றில்—தாமணிதொடுத்த நெடிய தாம்புகள்கட்டின குறியமுளைகளையுடைய முற்றத்தினையும்,

கொடு முகத் துருவையொடு வெள்ளை சேக்கும் இடு முள் வேலி எருப்படு வரைப்பின்—வளைந்த முகத்தினையுடைய செம்மறியாட்டுடனே வெள்ளாடுகிடக்கும் கட்டுமுள்ளாகிய வேலியினையுமுடைய எருமிகுகின்ற ஊரிடத்து,

குரம்பையினையும் (கசஅ) முற்றத்தினையும் (கருஉ) வேலியினையுமுடைய வரைப்பென்க.

[நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி:]

நள் இருள் விடியல் புள் எழ—செறிந்த இருள்போகின்றகாலைப்பொழுதிலே பறவைகள் துயிலெழாநிற்க,

போகியென்பதனைமேலேகூட்டுக.

புலிக் குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி—புலியினது முழக்கம்போலும் முழக்கத்தையுடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றைவலித்து,

ஆம்பி வால் முகிழ் அன்ன கூம்பு முகை உறை அமை தீந்தயிர் கலக்கி—குடைக்காளானுடைய வெள்ளிய முகைகளையொத்த குவிந்த முகிழ்களையுடைய உறையாலே இறுகத்தோய்ந்த இனியதயிரைக்கடைந்து.

முகை - மொட்டு. முகிழ் - ஆடையின்மேற் புடைக்கின்றது.

நுரை தெரிந்து—வெண்ணெயையெடுத்து,

புகர் வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇப் போகி (௧௫௫)—தயிர் புள்ளியாகத்தெறித்த வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற்செய்த சுமட்டைத்தலையிலேவைத்து முற்கூறிய குறிஞ்சிநிலத்தேறப்போய்,

நாள் மோர் மாறும்—காலையிலே மோரைவிற்கும்,

நல் மா மேனி—நன்றாகிய மாமையாகிய நிறத்தினையும்,

சிறு குழை துயல்வரும் காதின்—தாளுருவியசையுங் காதினையும்,

பணைத் தோள்—மூங்கில்போலுந் தோளினையும்,

குறு நெறிக் கொண்ட கூந்தல்—குறிதாகிய அறலைத் தன்னிடத்தேகொண்ட மயிரினையுமுடைய,

ஆய்மகள்—ஆய்ச்சாதியிற்பிறந்தமகள்,

மேனிமுதலியவற்றையுடையமகள்.

அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி—மோரைவிற்றதனாலுண்டாகிய நெல் முதலியவற்றாலே சுற்றத்தாரெல்லாரையும் உண்ணப்பண்ணி,

நெய் விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளாள்—பின்பு தான் நெய்யைவிற்கின்றவிலைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்,

எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம் குடி (௧௬௬)—பாலெருமையையும், நல்ல பசுவையும், கரிய எருமைநாகினையும் நெய்க்கொப்பாகச்சொல்லி வாங்குங்குடி,

கட்டியென்றுபாடமோதி வார்த்தென்றுகூறுதலுமாம்.

குறிஞ்சிநிலத்தே நெய்யைவிற்று அவர்கள் அடித்துக்கொண்ட எருமைமுதலாயவற்றை விலையாகவாங்கினளென்க.

மடி வாய்க் கோவலர்—சீழ்க்கைபிடித்தலாலே மடித்த வாயையுடைய இடையர்

குடி வயின் சேப்பின்—குடியிருப்பிலே தங்குவீராயின்,

[இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன, பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்:] ஞெண்டின் இருங் கிளைச் சிறுபார்ப்பு அன்ன பசுந் தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்—ஞெண்டினது பெரிய சுற்றமாகிய சிறிய பார்ப்பையொத்த செவ்வித்தினையரிசியாலாக்கின விலுத்தசோற்றைப் பாலுடனேபெறுகுவிர்;

புள்ளெழுந்திருக்க (௧௫௫) வாங்கிக் (௧௫௬) கலக்கித் தெரிந்து (௧௫௮) இரீஇப் (௧௫௯) போகி (௧௫௫) மாறும் (௧௬௦) ஆய்மகள் (௧௬௨) என்க.

மடிவாய்க்கோவலர் (௧௬௭) வரைப்பிடத்து (௧௫௪) ஆய்மகள் (௧௬௨) அருத்திச் (௧௬௩) கொள்ளாளாய்ப் (௧௬௪) பெறூஉங் (௧௬௫) குடிவயிற்சேப்பின் (௧௬௭) மூரல் பாலொடும்பெறுகுவிரெனமுடிக்க.

தொடு தோல் மரீஇய வடு ஆழ் நோன் அடி—செருப்புப்பொருந்தியதாற்கிடந்த வடுவழுந்தின வலியையுடைய அடியினையும்,

விழுத் தண்டு ஊன்றிய கை—பசுக்களுக்கு வருத்தஞ்செய்யும் தடியையூன்றின கை,

மழுத் தின் வன் கை—மரங்களை ஒடியெறிந்துகொடுக்கும் கோடாரியாற் றழும்பிருந்த வலியகையினையும்,

உறிக் கா ஊர்ந்த மறுப் படு மயிர்ச் சுவல்—இரண்டுதலையினும் உறியினையுடைய காக்கள் மேலேயிருந்ததனால் உண்டாகிய தழும்புமிக்க மயிரொழிந்த தோட்பட்டினையும்,

மேம் பால் உரைத்த ஓரி—எல்லாமணமும் பொருந்தும் பசுக்கறந்த பாலாடையைத் தடவின மயிரையும்,

[ஓங்குமிசைக், கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட, பல்பூ மிடைந்த படலைக் கண்ணி:] காட்ட ஓங்கு மிசைக் கோட்டவும் கொடியவும் பல் பூ விரைஇ மிடைந்த படலைக் கண்ணி—காட்டிடத்தனவாகிய உயர்ச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளிலுள்ளவுமாகிய பலபூக்கள் கலந்துநெருங்கிய கலம்பகமாகிய மாலையினையும்,

ஒன்று அமர் உடுக்கை—ஒன்றாய்ப்பொருந்திய உடையினையுமுடைய,

கூழ் ஆர் இடையன்—பாற்சோற்றையுண்கின்ற இடையன்,

அடிமுதலியவற்றையுடைய இடையன்.

கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி—கன்றுகள்பொருந்தின பசுத்திரளோடே காட்டிலேதங்கி,

[அந்நுணவிர்புகை கமழக் கைம்முயன்று, ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்:]

ஞெலிகோல் அம் நுண் அவிர் புகை கமழக் கைம்முயன்று கொண்ட செந் தீ ஞெகிழி தொட்ட கருந் துளைக் குழலின்—தீக்கடைகோலிலே அழகிய நுண்ணிதாய்விளங்கும் புகைமுற்படப்பிறக்கும்படி கையாலேகடைதலைமுயன்றுகொண்ட சிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியாற்றுளையிட்ட கரிய துளையினையுடைய குழலாலெழுப்பின,

பெருவிறலென்பதனை இடையனென்பதனோடே முன்னேகூட்டியுரைக்க.

இனி, ஞெலிகோல் பசுத்தகோல், ஞெகிழி கடைகின்றகோலென்றுமுரைப்பர்.

இன் தீம் பாலை முனையின்—மிகவுமினிய பாலையென்கின்ற பண்ணினைத் தான் வெறுக்கில்,

[குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி:] குமிழின் புழற் கோட்டுத் தொடுத்த மரற் புரி விரல் எறி நரம்பின் வில் யாழ் இசைக்குங் குறிஞ்சி—குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வலித்துக்கட்டின மரற்கயிறாகிய விரலாலேதெறித்திசைக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்குங் குறிஞ்சியென்கின்றபண்ணை,

பல் காற் பறவை கிளை செத்து ஓர்க்கும்—பலகாலினையுடைய வண்டுகள் தஞ் சுற்றத்தினோசையாகக்கருதிச் செவிகொடுத்துக்கேட்கும்,

* "வண்டுந் தும்பியும்" என்னுஞ் சூத்திரத்திற் செவிப்பொறியான் இவையுணர்தல்கூறினும்.

புல் ஆர் வியன் புலம் போகி— புல்லுநிறைந்த அகற்சியையுடைய நிலத்தைக்கடந்துபோய்,

முன்னர் இடையர்குடியிருப்புக்கூறிப் பின்னர் அவர்பசுக்கள்முதலியன நிற்கின்ற முல்லைநிலமுங்கூறினர்.

முள் உடுத்து எழு காடு ஓங்கிய தொழு உடை வரைப்பின்— முள்ளுத் தன்னிடத்தேசூழ்ந்து எழுகின்ற விடத்தேர்தொடர் முதலிய காடுகள்சூழவளர்ந்த தொழுக்களையுடையவூர்களில்,

இது, பசுக்கள்முதலியனமேயாமற் காக்கின்ற இளங்கட்டையுடைய படைத்தலைவரிருப்புக்கூறிற்று.

பிடிக் கணத்து அன்ன குதிர் உடை முன்றில்— பிடித்திரள்நின்றாற்போன்ற வரகுபுகுத்தியனதிரளுங் குதிர்களையுடைய முன்றிலினையும்,

களிறு தாள் புரையுந் திரி மரப் பந்தர்— யானையினது காலையொக்கும் வரகுதிரிகை நட்டுநிற்கும் பந்தரினையும்,

குறுஞ் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி நெடுஞ் சுவர் பறைந்த புகை சூழ் கொட்டில்— குறிய சகடத்திலுருளைகளோடே கலப்பையையும் சார்த்திவைக்கையினாலே நெடிய சுவரிடத்திற்றேய்ந்த புகைசூழ்ந்த கொட்டிலினையுமுடைய,

பசுக்கட்டி ஒருபக்கத்திலே அடுப்பெரித்து ஒருபக்கத்திலே தொழிலொழிந்த நாளில் சகடையினுருளையையும் கலப்பையையுஞ்சார்த்தி எருதுகளுங் கட்டிநிற்றலிற் கொட்டிலென்றார்.

பருவ வானத்துப் பா மழை கடுப்பக் கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்— மாரிகாலத்தையுடைய விசும்பிடத்தே பரந்த மேகத்தையொப்ப வரகுவைக்கோலாலே வேய்ந்த அழகினையுடைய குடியிருப்பினையுடைய சிறியவூர்களிலே,

சீறூர்— அம்முல்லைநிலத்து உழுதுண்பாரிருப்பு.

நெடுங் குரற் பூளைப் பூவின் அன்ன குறுந் தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி— நெடிய கொத்தினையுடைய சிறுபூளையினது பூவையொத்த குறிய தாளினையுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய சோற்றை,

புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன அவரை வான் புழுக்கு அட்டி— நிறத்தையுடைய கொத்தினையுடைய வேங்கைப்பூவைக் கண்டாலொத்த அவரைவிதையினது நன்றாகியபருப்பை மிகவிட்டு,

வேங்கைப்பூ பரிகளையுடைய விதைக்கு உவமை. புழுக்கு - புழுங்கலென்றது; கும்மாயமுமாம். பருப்புச்சோறுமென்ப.

† [பயில்வுற், றின்சுவை மூரற் பெறுகுவிர்:]

இடையன் (கஎகு) அல்கிப் (கஎஎ) பாலையைத்தான்முனையின் (கஅ0) அதனைக் கைவிட்டு விரலாலே வாசிக்குங்குறிஞ்சியைப் (கஅஉ) பறவைபோர்க்கும் (கஅரு) புல

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ருக.

† இதற்கு ஒருபிரதியிலும் உரைகிடைத்திலது. கலத்தலின்றேலே இனிய சுவையினையுடைத்தாகிய மூரலோடே பெறுகுவிரென்க.

த்தைப் போய் (கஅச) வரைப்புக்களின் (கஅரு) முன்றின் (கஅசு) முதலியவற்றையுடைய சீறூர்களிலே (சகூக) வரசின்சொன்றியைப் (சகூரு) புழுக்கையட்டி (சகூ௬) மூரலோடேபெறுகுவிரெனமுடிக்க.

ஞாங்கர்— அந்நிலத்திற்குமேல்,

குடி நிறை வல்சிச் செஞ் சால் உழவா— அக்குடியிருப்புங் நிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாகவுழுகின்ற உழவுத்தொழிலையுடையோர்,

ஒருசால் இருசாலென்றல் உழவுத்தொழிற்குமரபு.

நடை நவில் பெரும் பகடு புதவிற் பூட்டி—உழவுத்தொழிலிலேபயின்ற பெரிய எருதுகளை வாயிலிலே நுகத்தைப் பூட்டிக் கொண்டுசென்று,

பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில் உடுப்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி—பிடியினது வாயையொத்த வளைந்தவாயையுடைய கலப்பையினுடைய உடும்பினது முகத்தையொத்த பெருங்கொழு மறைய அமுக்கி,

தொடுப்பு எறிந்து உழுத துளர் படு துடவை—முற்பட விளைவுழுது விதைத்த பின்னர் இடையே உழுத களைகளைக் கொட்டுச்செதுக்கிய தோட்டத்தை,

அரி புகு பொழுதின்— அறுக்கும்பருவம் வருங்காலத்தே,

[இரியல் போகி, வண்ணக் கடம்பி னறுமல ரன்ன, வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற், கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்:]

குறுங் காற் கறை அணற் குறும்பூழ் — அதன்கட்டங்குங் குறுங்காலினையும் கருமையையுடையகழுத்தினையுமுடைய குறும்பூழ்,

வண்ணக் கடம்பின் நறு மலர் அன்ன வளர் இளம் பிள்ளை தழீஇ— வெள்ளிய நிறத்தையுடைய கடம்பினது நறுநாற்றத்தினையுடைய பூவையொத்த வளருகின்ற இளையபிள்ளைகள் மிகவும் பறத்தலாற்றாதனவற்றையும் கூட்டிக்கொண்டு,

* "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" என்றார்.

இரியல் போகிக் கட்சி சேக்கும் — அவர்களாரவாரத்திற்கஞ்சிக் கெடுதற்றன்மையையுடையவாய் ஆண்டுநின்றுங் காட்டிலேதங்கும்,

வன்புலம் இறந்த பின்றை— முல்லைநிலத்தைப் போனபிள்பு,

முற்றுங்குடிச்சீறூருழவரால் உழுதற்குரிய முல்லைநிலமுங்கூறினார். இது மருதநிலத்தைச்சேர்ந்த முல்லைநிலம்.

உழவர் பூட்டி ஊன்றி உழுததுடவை அரிபுகுபொழுதில் குறும்பூழ் பிள்ளை தழீஇப் போகிச் சேக்கும் வன்புலமென்க.

மென்தோல் மிதி உலைக் கொல்லன் முறி கொடிறு அன்ன — மெத்தென்றதுருத்தியை அமுக்கியூதுகின்ற உலையிற் கொற்றொழில்செய்கின்றவனுடைய முறிந்த கொடிற்றையொத்த,

கவைத் தாள் அலவன் அளற்று அளை சிதைய— கப்பித்தகாலையுடைய ஞெண்டினது சேற்றின்கண்ணுண்டாகிய முழைகெடும்படி,

பைஞ் சாய் கொன்ற மண் படு மருப்பிற் கார் ஏறு பொருத கண் அகன் செறு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௪.

வின்— பழையகோரையை அடியிலே குத்தியெடுத்த மண்ணிடக்கின்ற கொம்பையு டைய கரிய கடாக்கள் தம்மிற்பொருத இடமசன்ற செய்யின்கண்,

[illegible] நுண் தொளி நிரவிய வினைஞர் — தாம் உழப்பட்ட அந்த நுண்ணிய சேற்றை ஒக்கமிதித்தஉழவர்,

முடி நாறு அழுத்திய நெடு நீர்ச் செறுவில் — முடியாகக்கிடக்கின்ற நாற்றை நட்ட கொடியநீரையுடைய செய்களில்,

வினைதயக் கொண்ட மருப்பின் எறும்பொருத செறுவிற் றொளியைநிரவிய வினை ஞர் நாற்றையழுத்திய செறுவென்க.

களைஞர் தந்த கணைக் கால் நெய்தற் கட் கமழ் புதுப் பூ முனையின்—அச்செய் யிற் களைகளைப்பறிப்பார் பறித்து எறட்ட திரண்டதாளினையுடைய நெய்தலினது தே னாறுகின்ற புதியபூவை வெறுத்தீராயின்,

[முட்சினை, முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக், கொடுங்கால் மாமலர் கொ ய்து கொண்டு] முகை சூழ் முள் சினை முள்ளித் தகட்ட கொடுங் கால் பிறழ் வாய் மா மலர் கொய்து கொண்டு—அரும்புகள் சூழ்ந்த முள்ளையுடைய கொம்புகளையுடை ய முள்ளியின் இதழையுடையவாகிய வளைந்த காலையும் பிறழ்ந்தவாயையும் கருமை யையுமுடைய பூவைப்பறித்துக்கொண்டு,

அவண பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப் புணர் நார்ப் பெய்த புனைவு இன் கண்ணி— அவ்விடத்திலுண்டாகிய தண்டான்கோரையைப் பல்லாலே மென்று மெ[illegible] முடிந்த நாராற்கட்டின புனைதற்கினியமாலையை,

சா உடை இருந் தலை ஆரச் சூடி——சருமைத்தாகிய கரிய தலைநிறையும்படி சூடி,

பொன் காண் கட்டளை கடுப்பச் சண்பின்—பொன்னையுரைத்து மாற்றுக்காணும் உரைகல்லையொப்பச் சண்பினது,

புன் காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின் — புல்லிய காயிற்றோன்றினதாதை அக்கதிரைமுறித்து அடித்துக்கொண்ட மார்பினையும்,

தாதுநீளக்கிடந்தது உரைத்தாற்போன்றது.

இரும்பு வடித்தன்ன மடியா மென் தோல்— இரும்பைத் தகடாக்கினாலொத்த திரையாத மெல்லிய தோலினையுமுடைய,

கருங் கை வினைஞர் காதல் அம் சிறாஅர் — வலிய கையாற்றொழில்செய்வாரு டைய விருப்பத்தையுடைய அழகிய சிறுபிள்ளைகள்.

பழஞ்சோற்று அமலை முனைஇ—பழைய சோற்றினது கட்டியைவெறுத்து,

வரம்பிற் புதுவை வேய்ந்த கவி குடில் முன்றில் அவல் எறி உலக்கைப் பாடுவி றந்து—வரம்பிடத்துப் புதிய வைக்கோலாலேவேய்ந்த கவிந்த குடிலினுடைய முற் றத்தே அவலிடிக்கும் உலக்கையினது ஓசைசெறிகையிலே,

குடில்கள்-பன்றிமுதலியனவற்றைக் காத்தற்குக் கட்டினவை.

அயல கொடுவாய்க் கிள்ளை படு பகை வெரூஉம் — அதற்கு அயலிடத்தனவா கிய வளைந்த வாயையுடைய கிளிகள் தமக்குண்டாகின்ற பகையாக நினைத்தஞ்சும்.

நீங்கா யாணர் வாங்கு கதிர்க் கழனி — இடையறாத புதுவருவாயினையுடைய வளையுங்கதிரினையுடைத்தாகிய கழனியிடத்து,

கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன — எறியப்பட்டார்க்குக் கடுக்குந்தன்மை யைக் கொடுத்தலையுடைத்தாகிய குளவிச்சாதியையொத்த,

பைதற விளைந்த பெருஞ் செந் நெல்லின் — பசுமையறும்படி முற்றின பெரிய செந்நெல்லினுடைய,

தூம்பு உடைத் திரள் தாள் துமித்த வினைஞர்—உள்ளூப்பொய்யையுடைத்தாகிய திரண்டதாளையறுத்த தொழில்செய்வார்,

பாம்பு உறை மருதின் ஓங்கு [illegible] நீழல்— பாம்புகிடக்கின்ற மருதின் உயர்ந்த கொம்பாலுண்டாகிய நிழலிலே,

பழையமரமாதலிற் பாம்புகிடக்குமென்றார்.

பலி பெறு வியன் களம் மலிய ஏற்றி— [illegible]றையுந்தெய்வங்கள் பலி[illegible]றுகின்ற அகன்ற களங்களிலே மிகவுநிறையப் போராகவிட்டு,

[கணங்கொள் சுற்றொடு கைபுணர்ந் தாடுந், துணங்கையம் பூதந் [illegible]த்தவைபோல்:] கணங்கொள் சுற்றமொடு கை புணர்ந்து துணங்கை ஆ[illegible] அம் பூத[illegible] துகில் உடுத்தவைபோல்—திரட்சிகொண்ட தம்முடைய சுற்றத்தோடே ஒழுங்காகச்செறிந்து நின்று துணங்கைக்கூத்தா[illegible]கின்ற அழகினையுடையபூதங்கள் வெள்ளி[illegible] துகிலையுடுத்துநின்றவைபோல,

என்றது - தம்மில் விளையாடுவ[illegible]ருத்திரண்ட பூதமென்றவாறு.

சிலம்பி வால் நூல் வலந்த மரு[illegible]ற் குழூஉ நிலைப் போரின் முழு முதல் தொலைச்சி—சிலந்தியினது வெள்ளியநூல்சூழ்ந்த [illegible] பலவாகத்திரண்ட தன்மையினையுடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கியிரித்து,

பகடு ஊர்பு இழிந்த பின்றை—ஏர்கள் [illegible]விட்டுப் போனபின்பு,

துகள் தப வையுந் துரும்பு நீக்கி—குற்றமறும்படி வைக்கோலையுங் கூளத்தையும் அதனிடத்துநின்றுநீக்கி,

பைதற—ஈரம் உலராநிற்க,

குடகாற்று எறிந்த குப்பை—மேல்காற்றாலே கையாலே தூவித்தூற்றின பொலி,

வடபாற் செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்— [illegible] மேருவாகிய மலைபோலே மிகும்படி தோன்றும்,

தண் பணை தழீஇய தளரா இருக்கை—மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்புக்களில்,

மார்பினையும் (உஉக) தோலினையுமுடைய (உஉஉ) வினைஞர்சிறு[illegible] (உஉ௩) [illegible]னைஇ (உஉ௪) அவலெறியுலக்கைப்பாடுவிறக்[illegible] (உஉரு) [illegible] (உஉ௭) கழனிகளில் (உஉ௮) விளைந்த நெல்லினை [illegible] துமித்தவினைஞர் (உ[illegible]) ஏற்றித் (உ௩௩) தொலைச்சி (உ௩௭) நீக்கி (உ௩௯) [illegible]குப்பை (உ௪௦) தோன்றும் இருக்கை யெனக்கூட்டுக.

பகட்டு ஆ ஈன்ற கொடு நடைக் குழவிக் [illegible] தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல் —பெருமையையுடைய பசுக்களீன்ற [illegible] அழகையுடைய [illegible] கட்டின தாமணியையுடைய நெடியதாம்புகள் [illegible]கிடக்கின்ற தறிகள்நட்ட பக்கத்தினையும்,

* "முழுவலி துஞ்சும் நோய்[illegible] நோன்[illegible] நுண்கொ[illegible] யுழிஞை வெல்போ ரறுகை" என்றார்பிறரும். கவை-ஆகுபெயர்.

---

* பதிற்றுப்பத்து, ஐந்தாம்பத்து; "முழுவலி துஞ்ச [illegible]ருடை, நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை, சேண [illegible] மொழிந்து". அறுகையென்பான் [illegible]

[ஏணி யெய்தா நீணெடு மார்பின்:] நீள ஏணி எய்தா நெடு மார்பின்—நீண்ட ஏணிக்கெட்டாத நெடிய வடிவினையும்,

முகடு துமித்து அடுக்கிய பழம் பல் உணவின் — தலையைத்திறந்து உள்ளே சொரியப்பட்ட பழையவாகிய பல நெல்லினையுமுடைய,

பல்லுணவென்றார், செந்நென்முதலிய சாதிப்பன்மைகருதி.

குமரி மூத்த கூடு ஓங்கு நல்லில்—அழியாத்தன்மையவாய் முதிர்ந்த கூடுகள் வளர்ந்த நல்ல இல்லினையும்,

அவ்வில்லினையும், மார்பினையும், உணவினையுமுடைய கூடென்க.

தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்—தச்சசாதியிற் பிறந்த தொழில்செய்தற்குரிய சிறியோர் பிறர்விரும்பும்படி பண்ணின பிறராலே ஏறப்படாத நல்ல சிறுதேரை உருட்டிக்கொண்டுதிரிந்த பிள்ளைகள்,

தளர் நடை வருத்தம் வீட—தமது தளர்நடையாலுண்டானவருத்தந் தம்மைவிட்டு நீங்கும்படி,

அலர் முலைச் செவிலி அம் பெண்டிர்த் தழீஇப் பால் ஆர்ந்து அமளித் துஞ்சும் அழகு உடை நல்லில்—பால்சுரந்த முலையினையுடைய செவிலித்தாயராகிய அழகினையுடைய மகளிரைத் தழுவிக்கொண்டு அம்முலையிற் பாலை நிறையவுண்டு தமதுபடுக்கையிலே துயில்கொள்ளும் அழகையுடைத்தாகிய நல்ல இல்லினையும்,

செவிலியம் பெண்டிரென்பது ஒருமைபன்மைமயக்கம்.

தொல் பசி அறியாத் துளங்கா இருக்கை மல்லல் பேர் ஊர் மடியின்—ஏனைநாட்டிற்குஇயல்பாகிய பழையபசியையறியாத அசையாத குடியிருப்பினையுமுடைய வளப்பத்தையுடைத்தாகிய பெரிய ஊரின்கண்ணே தங்கின்,

மடியா வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்—தொழிலொழிந்திராத தொழில்செய்வார் கொண்டுவந்த வெள்ளிய நெற்சோற்றை மனையின்கண்ணேவாழும் கோழிப்பெடையிறைச்சியிற் சமைத்த பொரியலோடு பெறுகுவிர்;

* "கோழி கூகை யாயிரண் டல்லவை, சூழுங் காலை யளகெனல் அமையா" என்றார்.

செறுவிற் (உசஉ) புதுப்பூமுனையின் (உசச) மாமலர் கொய்துகொண்டு (உசரு) வட்டிப் (உசஎ) பெய்தகள்ளணியைச் (உசஅ) சூடித் (உசகூ) தளராவிருக்கைகளிற் (உரு0) கூடோங்கு நல்லில்லையும் (உருக) அழகினையுடைய நல்லில்லையும் (உருஉ) துளங்காவிருக்கையினையுமுடைய (உருங) பேரூரிலே தங்குவீராயின் (உருச) வல்சியை (உருரு) வாட்டொடும்பெறுகுவிரெனக் கூட்டுக.

[மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத், தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன், கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்கு:] மழை விளையாடும் கழைவளர் அடுக்கத்து அணங்கு உடை யாளி தாக்கலிற் கணம் சால் வேழம் பல உடன் கதழ்வு உற்றாஅங்கு—மேகங்கள் விளையாடித்திரியும் மூங்கில்வளர்கின்ற பக்கமலையிலே தம்மைவருத்துந் தன்மையுடைய யாளிபாய்கையினாலே திரட்சியமைந்த யானைபலவுங்கூடக் கலங்கிக் கூப்பிட்டாற்போல,

எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொ

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ருரு.

றும்—ஆலையாரவாரிக்கும் மாறாத ஓசையையுடைய கருப்பஞ்சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகைசூழ்ந்த கொட்டில்கடோறும்,

ஆலை - ஆகுபெயர்.

கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்—கரும்பினது இனிய சாற்றை முற்படக்குடித்துப் பின்னர் அக்கரும்பின்கட்டியைத் தின்பீராக.

* “மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி,” † “வீழ்களிறு மிசையாப் புலியினும்” என மிசைதல் தின்றற்பொருளின் மேனின்றது

[வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத், தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை:] வெண்கோடு விராஇ வேழம் நிரைத்துத் தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த குறியிறைக் குரம்பை—வஞ்சிமரமும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்குநடுவே கலந்துநாற்றி வேழக்கோலை வரிச்சாக நிரைத்துத் தாழைநாராற்கட்டித் தருப்பைப்புல்லாலே வேயப்பட்ட குறியவிறப்பையுடைய குடிலினையும்,

முடிந்து - முடித்தெனவிகாரம். குறியிறை - பண்புத்தொகையாதலின், மருவின்பாத்தியதாய் நின்றது.

பறி உடை முன்றில்—மீன்வாரியெடுக்கும் பறிகளையுடைய முற்றத்தினையுமுடைய,

கொடுங் காற் புன்னைக் கோடு துமித்து இயற்றிய பைங்காய் தூங்கும் பாய் மணற் பந்தர்—வளைந்த காலையுடைய புன்னைகளினது கொம்புகளை வெட்டியிட்ட பசியகாய்கள்நாலும் பரந்த மணலையுடைய பந்தரிலே,

பைங்காய் - சுரைக்காய்முதலியன; புன்னங்காயுமாம்.

இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி—இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து பின்பு,

புலவு நுனைப் பகழியும் சிலையும் மானச் செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும் மை இருங் குட்டத்து மகவொடு வழங்கி—புலவு நாறுகின்ற முனையினையுடைய அம்பையும்வில்லையுமொப்பச் சிவந்தவரியினையுடைய கயல்களோடே பசியஇறாப் பிறழும் கருமையையுடைய பெரிய ஆழ்ந்த குளங்களிலே பிள்ளைகளோடேயுலாவி மீனைப் பிடித்து,

கோடை நீடினுங் குறைபடல் அறியாத் தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்—கோடைக்காலம் நீட்டித்து நின்றதாயினும் வற்றுதலையறியாத கையை மேலே கூப்பிமுழுகி நீர்நிலைகாட்டுங்காலத்துக் கையமிழ்ந்தும் குளங்களினுடைய கரையைக்காத்திருக்கும்,

---

* கலித்தொகை, இரண்டாவது குறிஞ்சி, ௪௩:—“வாங்குதோ னெல்லொடு வாங்கிவரு வைகன், மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி, தூங்கிலை வாழை நளிபுக்கு ஞாங்கர், வருடை மடமறி பார்வைடத் துஞ்ச, மிருநேங்கு சோலை விலங்குநீர் வெற்ப”.

† அகநானூறு, களிற்றியானைநிரை, ௨௯:—“தொடங்குவினை தவிரா அசைவி னோன்றாட், கிடந்துயிர் மறுகுவ தாயினு மிடம்பட—வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த—தாழ்வி லுள்ளந் தலைத் தலைச் சிறப்ப”.

* "வெளிற்றுடற் குருதிவெள்ள நிலையிது வென்பவேபோற், களிற்றுயிர்ப் பிறழ்டம் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி யளித்தவை பாடியாட" என்றார் பிறரும்.

கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்—வளைந்த முடியினையுடைய வலையை வீசுவாருடைய குடியிருப்பிலே தங்குவீராயின்,

பாத்தியில் (உசஎ) துன்றி (உசூஅ) வழுங்கிக் (உஎக) காத்திருக்கும் (உஎரு) வலைஞரென முடிக்க.

தாம்பையினையும் முன்றிலினையு (உசூ௩) முடைய குடி (உஎச) யென்க.

அவையா அரிசி அங்களித் துழவை—குத்தாத கொழியலரிசியை அழகினையுடைய களியாகத் துழாவி யட்ட கூழை,

மலர் வாய்ப் பிழாவிற் புலர ஆற்றி—அகன்ற வாயையுடைய தட்டுப்பிழாவிலே உலரவாற்றி,

பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும் பூம்புற நல்லடை அளைஇ—பாம்பு கிடக்கின்ற புற்றின்கட்கிடக்கும் புற்றாம்பழஞ்சோற்றையொக்கும் பொலிவுபெற்ற புறத்தினையுடைய நல்ல முளையையிடித்துச் சேர அதனை அதிலேகலந்து.

நெல்லடையும் பாடம்.

[தேம்பட எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி] தேம் பட இரு எல்லையும் இரு இரவும் முறை கழிப்பி—இனிமைபிறக்கும்படி இரண்டுபகலும் இரண்டிரவும் அரியாமல் வைத்து,

[வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த, வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி:]

வல் வாய்ச் சாடியின் வழைச்சு அற விளைந்த—வலியவாயினையுடைய சாடியின் கண்ணே இளமையறும்படி முற்றின,

விரல் அலை அரியல் வெந்நீர் நறும்பிழி—விரலாலே அலைத்து அரிக்குந்தன்மையை யுடைத்தாகிய வெவ்விய நீர்மையையுடைய நறியகள்ளை,

தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்—மிகவும் உலராத மீனைச் சுட்டதனோடே இனைத்தவளவிலே பெறுகுவிர்;

ஆற்றி (உஎக) அளைஇ (உஎஅ) கழிப்பி (உஎகூ) விளைந்த (உஅ0) பிழியென்க.

குடிவயிற் சேப்பின் (உஎச) பிழியைப் பெறுகுவிரென முடிக்க.

பச்சூன் பெய்த சுவல் பிணி பைந்தோல்—செவ்வியான இறைச்சியிட்டுவைத்த தோளிடத்தே சேர்த்து நாற்றின பசியதோலினையுடைய,

[illegible] - [illegible] விற்கோக்கும் இரையிட்டுவைக்குந் தோற்பையை.

கோள் வல் பாண் மகன்—மீனைத் தப்பாமற்பிடிக்கவல்ல பாண்சாதியிற்பிறந்தவன்,

[தலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக், கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப், பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை:]

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், கூகஉ:— "வெளிற்றுடற் குருதிவெள்ள நிலையிது வென்பவேபோற், களிற்றுசிர்ப் பிறழ்பு பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி, யளித்தவை பாடியாடக் குறாரி நக்கு வேழம், விலித்தன கழுகும் பாறும் விளாவிற்றுக் கிடந்தவன்றே."

நெடுங் கழை தலை வளித்து யாத்த நாண தூண்டில் கொளிஇப் பொதி இரை—நெடிய மூங்கிற்கோலைத் தலையிலேவளித்துக்கட்டின கயிற்றிடத்தே தூண்டிலைக் கொளுத்தி அதனைமறையப் பொதிந்த இரையை,

கொடு வாய் இரும்பின் மடிதலை புலம்ப நடுங்கக் கதுவிய போழ் வாய் வாளை—வளைந்த வாயினையுடைய தூண்டிலினது மடித்ததலை இரையின்றித் தனிக்கும்படியாகக் கயிறுநடுங்கக் கௌவி அகப்படாதுபோன அங்காந்தவாயையுடையவாளைமீன்,

நீர் நணிப் பிரம்பின் நுடங்கு நிழல் வெரூஉம் நீத்து உடை நெடுங்கயம் — நீர்க் குஅணித்தாய்நின்ற பிரம்பினது காற்றலசையுநிழலை நீரிற்கண்டஞ்சும் பெருக்கினையுடைய நெடியகுளத்திலே,

தீப் பட மலர்ந்த கடவுள் ஒண் பூ அடைதல் ஓம்பி—நெருப்பின்றன்மை நீரிலே யுண்டாகப்பூத்த கடவுள்சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப்பூவைப் பறித்துமுடித்தலைப் பரிகரித்து,

[உறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை, யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப:]

ஓங்கு உறை கான்மாறிய உயர் அகல் இரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப—ஓங்குகின்ற துளி கால்விழுதல்தவிர்ந்த உயர்ச்சியையுடைய அகன்ற பெரிய வானத்திடத்துக் குறைவில்லாகிய இந்திரவில்லையொப்ப,

[அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, முரண்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை:] அரக்கு இதழ்க் குவளையொடு நீலம் நீடி முரண் பூ மலிந்த முதுநீர் கனைந்தலை (உ௯௩) பொய்கை— சாதிலிங்கம்போன்ற இதழையுடைய குவளையோடே நீலப் பூவம்வளர்ந்து ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலையுடைய ஏனைப்பூக்களு மிக்க முதிய நீரையுடைத்தாகிய அகன்றவிடத்தையுடைய பொய்கைகளிடத்தே,

குறுநர் இட்ட கூம்பு விடு பல் மலர் பெரு நாள் அமயத்துப் பிணையினிர் கழிமின்—பறிப்பார் நுங்களுக்கிட்ட குவிதல்நெகிழ்ந்த பலபூக்களைப் பெரிதாகிய நாட்காலத்தேசூடிப் போமின்;

வாளை (உ௮௭) வெரூஉங் (உ௮௮) கயத்திலே மலர்ந்த (உ௮௯) பூவை ஓம்பிக் (உ௯௰) குறைவிலேய்ப்பப் (உ௯உ) பூமலிந்த பொய்கைகளிடத்தே, (உ௯௪) குறுநரிட்டமலரைப் (உ௯௫) பிணையினிர்கழிமினெனமுடிக்க.

செழுங் கன்று யாத்த சிறு தாள் பந்தர்—வளவிய கன்றைக்கட்டின சிறியகால்களையுடைய பந்தரினையும்,

[பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்:]

பைஞ்சேறு மெழுகிய நன்னகர்—ஆப்பியான் மெழுகிய நன்றாகிய அகங்களையும், படிவம்—தாம் வழிபடுந்தெய்வங்களையுமுடைய உறைபதி (௩0௧) யென்க.

மனை உறை கோழியொடு ஞமலி துன்னாது—மனைகளிலேதங்குங்கோழிகளுடனே நாயுஞ்சேராமல்,

வளை வாய்க் கிள்ளை மறை விளி பயிற்றும்—வளைந்தவாயினையுடைய கிளிகள் வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும்,

மறை காப்பாளர் உறைபதிச் சேப்பின்—வேதத்தைக் காத்தலையுடையோர் இருக்கின்ற ஊரிடத்தே தங்குவீராயின்,

துன்னாமல் (உ௯௯) உறையும்பதியென்க.

பெருவல் வானத்து வடவயின் விளங்கும்— பெரிய நன்றாகிய விசும்பிடத்து வடதிசைக்கண்ணே நின்றுவிளங்கும்,

சிறுமீன் புரையும் கற்பின் —அருந்ததியையொக்கும் கற்பினையும்,

நறு நுதல்— நறிய நுதலினையுமுடைய,

வளைக் கை மகடூஉ வயின் அறிந்து அட்ட — வளையையுடையவாகிய கைகளையுடைய பார்ப்பினி பதமறிந்தட்டனவற்றை,

என்றது - பாற்சோறு பருப்புச்சோறுமுதலியவற்றை.

சுடர்க் கடை— ஞாயிறுபட்ட காலத்தே,

பறவைப் பெயர்ப்படு வத்தம்—பறவையினது பெயரைப்பெறுநெல்லு,

என்றது-இராசான்னமென்னும் பெயர்பெறுகின்ற நெல்லென்றவாறு. ஆகுதி பண்ணுதற்கு இந்தநெல்லுச்சோறே சிறந்ததென்று இதனைக்கூறினார். இனி மின்மினி நெல்லென்பாருமுளர்; இப்பெயர் வழக்கின்மையும், ஆகுதிக்குச் சிறவாமையு முணர்க.

[சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து, கஞ்சக நறுமுறி யளைஇ:] மாதுளத்துப் பசுங்காய் கறி கலந்து கஞ்சக நறுமுறி அளைஇச் சேதா நறு மோர் வெண்ணெயின் உருப்பு உறு போழொடு— கொம்மட்டிமாதுளையினுடைய பசியகாய் மிளகுபொடிகலக்கப்பட்டுக் கருவேம்பினது நறியஇலையளாவப்பட்டுச் சிவந்தபசுவினது நறியமோரிற்கடைந்தெடுத்த வெண்ணெயின்கண்ணேகிடந்து வேகவின் வெம்மையுறுகின்ற வகிரோடே,

[பைந்துணர், நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த, தகைமாண் காடியின்:] நெடுமரக் கொக்கின் பைந்துணர் நறு வடி விதிர்த்த தகை மாண் காடியின்—நெடிய மரமாகிய மாவினது பசியகொத்திடத்து நறிய வடுவினைப் பலவாகப்போகட்ட அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகறியோடே,

வகைபடப் பெறுகுவிர் —சோற்றின்கூறுகளுண்டாகப் பெறுகுவிர்;

சேப்பின் (௩௦௧) மகடூஉ (௩௦௨) வத்தத்தானுண்டான அரிசியை (௩௦௫) அட்டவற்றைச் (௩௦௨) சுடர்க்கடையிலே (௩௦௫) போழோடே (௩௦௯) காடியோடே பெறுகுவிரென்க.

வண்டல் ஆயமொடு உண்டுறைத் தலைஇப் புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை — விளையாட்டினையுடைய திரள்களோடே நீருண்ணுந்துறையிலேகூடி நீராடுகின்றமகளிர் போகட்டுப்போன பொன்னாற்செய்த மகரக்குழையினை,

இரை தேர் மணிச் சிரல் இரை செத்து எறிந்தென — இரையைத்தேடுகின்ற நீலமணிபோலுஞ்சிச்சிலி தனக்கு இரையாகத்துணிந்தெடுத்ததாக,

புள் ஆர் பெண்ணைப் புலம்பு மடற் செல்லாது—பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்தமடலிற்போகாமல்,

கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த வேள்வித் தூணத்து அசைஇ—நூற்கேள்வியையுடைய அந்தணர் செய்தற்கரிய கடனைச் செய்துமுடித்த யாகசாலையிடத்துநட்ட யூபத்தின்மேலேயிருந்து,

[யவனர், ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட:] யவனர் உயர்மிசைக் கொண்ட ஓதிம விளக்கின்— சோனகர் கூம்பின்மேலிட்ட அன்னவிளக்குப்போல,

ஈண்டுக் காரன்னமென்றுணர்க.

வைகுறும் மீனின்— இராக்காலம் விடிதற்குக்காரணமான * வெள்ளியாகிய மீன்போல,

பையத் தோன்றும்—ஒளி விட்டுவிளங்காது தோன்றும்,

நீர்ப்பெயற்று எல்லைப்போகி—நீர்ப்பெயற்றென்னும் ஊரினெல்லையிலேபோய்,

அசைஇ விளக்கின் மீனிற்றோன்றும் நீர்ப்பெயற்றென்க.

பாற் கேழ் வால் உளைப் புரவியொடு வடவளந் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளி நீர்ப் படப்பை — பால்போலும் வெள்ளியநிறத்தினையும் வெள்ளிதாகிய தலையாட்டத்தினையுமுடைய மேற்றிசைக்கணுள்ளவாசிக் குதிரைகளுடனே வடதிசைக்கணுளவாகிய நுகரப்படும்பொருள்களைக் கொண்டுவந்துதரும் மரக்கலங்கள்சூழ்ந்துகிடக்கப்பட்ட பெருமையையுடைய கடற்பக்கத்தினையும்,

[மாட மோங்கிய மணன்மலி மறுகிற், பரதர் மலிந்த பல்வேறு தெருவிற் சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்:]

மணல் மலி மறுகின் சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின் — மணல்மிக்க தெருவுகளில் தொழில்செய்வார்காக்கப்படும் மிகவுமுயர்ந்த பண்டசாலைகளையும்,

தொழில்செய்வார் - கம்மகாரர்.

பரதர் மலிந்த மாடம் ஓங்கிய பல் வேறு தெருவின்—பரதவர்மிக்க மாடங்களுயர்ந்த பலவாய்வேறுபட்ட தெருக்களையும்,

நெல் உழு கட்டொடு சுறவை துன்னு மேழகத் தகரோடு எகினம் கொட்கும் கூழுடை நல்லில்—நெல்லினைப் பெறுதற்குழுகின்ற எருதுகளுடனே பசுக்கள்நெருங்காவாய் மேழகக்கிடாயோடே நாயுஞ்சுழன்று திரியும் சோறுடைய நன்றானஅகங்களையுமுடைய பட்டினம் (௩௩௬).

இது திமிலர்முதலியோரிருப்புக்கூறிற்று.

[கொடும்பூண் மகளிர்:]

உயர் நிலை (௩௩௨) வான் தோய் மாடத்துக் (௩௩௩) கொடும்பூண் மகளிர்—உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகத்தைத்தீண்டும் மாடத்துறையும் வளைந்த பேரணிகலங்களையுடைய மகளிர்,

கொன்றை மென் சினைப் பனி தவழ்பவைபோற் பைங்காழ் அல்குல் நுண்டுகில் நுடங்க—கொன்றையிடத்து அரும்புகளையுடைய மெல்லிய கொம்புகளிலே பனிமசுகிடந்து தவழ்கின்றவைபோலப் பசிய மணிகள்கோத்த வடங்களையுடைய அல்குலிற்கிடக்கின்ற மெல்லியதுகிலசைய,

மால் வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும் பீலி மஞ்ஞையின் இயலி—பெருமையையுடைய பக்கமலையிலே மனவெழுச்சிமிக்கு ஆரவாரிக்கும் தோகையையுடையமயில்போலே உலாவி,

[கால, தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை, வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ:]

தமனியக் கால பொன் சிலம்பு ஒலிப்ப வரிப் பந்து அசைஇ — பொற்பூண்களையுடைய கால்களிடத்தனவாகிய பொன்னாற்செய்த சிலம்புகளாரவாரிப்ப நூலால் வரிதலையுடைய பந்தையடித்து இளைத்து,

* வெள்ளிதாகிய மீனென்றும் பிரதிபேதமுண்டு

[கைபுனை குறுந்தொடி தத்தப் பைப்பய, முத்த வார்மணற் பொற்கழங் காடும்:] முத்த வார் மணற் பைப்பயக் கை புனை குறுந்தொடி தத்தப் பொற் கழங்கு ஆடும்—முத்தையொத்த வார்ந்தமணலிலே மெத்தென மெய்ந்தொளக் கையாற்புனைந்த குறுந்தொடியசையப் பொன்னாற்செய்த கழலைக்கொண்டு விளையாடும்,

மாடத்து (௩௩) மகளிர் (௩௨௦) நுடங்க (௩௨௧) இயலி (௩௩) ஒலிப்ப (௩௨) அசைஇப் (௩௩) பின்னர்க் கழங்காடும் (௩௫) பட்டின (௩௩) மென்க.

இது வணிகரிருப்பைக்கூறிற்று.

பட்டையயினையும் (௩௨௧) வரைப்பினையும் (௩௨௪) தெருவினையும் (௩௨௫) இல்லினையு (௩௨௭) முடையபட்டின (௩௩) மென்க.

பட்டினமருங்கின் அசையின்—பட்டினத்திடத்தே இளைப்பாறுவீராயின்,

முட்டில்—முட்டில்லையாகப் பெறுகுவி (௩௪௫) ரெனமேலே கூட்டுக.

பைங்கொடி படாகையும் பலர் புகு வாயில்—பசியகொடிகளையும் கள்ளுண்பார்பலரும் புகுகின்ற வாயிலிடத்து,

[செம்பூத் தூய செதுக்குடை முன்றில்:] தூய செம்பூச் செதுக்கு உடை முன்றில்—தெய்வத்திற்குத் தூவின செய்யபூவாடலையுடைய முற்றத்தில்,

கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய வார்ந்து உகு சின்னீர் வழிந்த குழம்பின்—கள்ளைச்சமைக்கின்றமகளிர் மட்டுக்கழுவின வடிந்துசிந்தும் சிலநீர் பலகால்வடித லின் நிறைந்துவழிந்த குழம்பிடத்து,

ஈர்ஞ்சேறு ஆடிய இரும் பல் குட்டிப் பன்மயிர்ப் பிணவொடு—ஈரத்தையுடைய சேற்றையளைந்த கரிய பல்வாகிய குட்டிகளையுடைய பல்வாகிய மயிர்களையுடைய பெண்பன்றிகளுடனே,

பாயம் போகாது—புணர்ச்சியைக் கருதுங்கருத்தாற் போகாமல்,

என்றது-புணரிற் கொழுப்பின்றாமென்றவாறு.

நெல்மா வல்சி தீற்றி—நெல்லையிடித்த மாவாகிய உணவைத் தின்னப்பண்ணி,

பல்ஞாள் குழி நிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக் கொழு நிணத் தடியொடு—பலநாள் குழியிலேநிறுத்திப் பாதுகாத்த குறிய காலையுடைய ஆண்பன்றியிற் கொழுவிய நிணத்தையுடைய தசையோடே,

* "ஆற்றலொடு புணர்ந்த வாண்பால்" ...தலின் ஏற்றையென்றார்.

கூர் நறாப் பெறுகுவிர்—களிப்புமிக்க கள்ளைப் பெறுகுவிர்;

வாயிலிடத்து (௩௩௭) முற்றத்துக் (௩௩௮) குழம்பிடத்துச் (௩௪௦) சேறு (௩௪௧) என்க.

போகாமற் (௩௪௨) குழிநிறுத்து (௩௪௪) என்க.

அசையிற் (௩௩௯) பெறுகுவிரென்க.

[வானம் ஊன்றிய மதலை போல. வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி, விண் பொர நிவந்த வேயா மாடத்து:]

வானம் ஊன்றிய மதலை போல விண் பொர நிவந்த மாடம்— ஆகாயத்தே திரி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௩௩ "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப"

நின்ற தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றிவைத்த ஒருபற்றுக்கோடுபோல விண்ணைத்தீண்டும்படி யோங்கினமாடம்,

சாத்திய வணி ஏறருஞ் சென்னி மாடம் — தன்னிடத்துச்சாத்திய வணியால் ஏறுதற்கரிய தலையினையுடையமாடம்,

வேயா மாடத்து — கற்றைமுதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடத்திடத்தே,

இரவில் மாட்டிய இலங்கு சுடர் — இராக்காலத்தேகொளுத்தின விளங்குகின்ற விளக்கு,

[ஞெகிழி, யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந் துறை:] உரவு நீர் அழுவத்து ஞெகிழி ஓடு கலம் கரையும் துறை — உலாவுகின்ற கடற்பரப்பிலேவந்து நாமசேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேறோர்துறைக்கண் ஓடுங்கலங்களை இதுநந்துறையென்றழைக்குந்துறை,

இனி ஞெகிழியைக் கடைக்கொள்ளியாக்கி அதனையெரித்துக்கொளுத்தின இலங்குசுடரென்றுமுரைப்பர்.

பிறக்கு ஒழியப் போகி—பின்னேகிடக்கப்போய்,

[கறையடிக், குன்றுறழ் யானை மருங்குலேய்க்கும், வண்டோட்டுத் தெங்கின்:]

குன்று உறழ் கறை அடி யானை மருங்குல் ஏய்க்கும் தெங்கின் — மலையோடு மாறுபடுகின்ற உரல்போன்ற அடியினையுடைய யானையினுடம்பையொக்கும் சருச்சரையையுடைத்தாகிய தெங்கினுடைய,

[வாடுமடல் வேய்ந்த:]

வண்டோட்டு (ஙருங) வாடு மடல் வேய்ந்த — வளவிய இலையினையுடைய உலர்ந்த பழுத்தலை முடைந்துவேய்ந்த தனிமனை (ஙருரு) யென்க

மஞ்சள் முன்றில் — மஞ்சளையுடைய முற்றத்தினையும்,

மணம் நாறு படப்பை — மணநாறுகின்ற பூந்தோட்டங்களையுமுடைய,

தண்டலை உழவர் தனி மனைச் சேப்பின் — தோப்புக்குடிகளுடைய பயில்லாத மனைகளிலே தங்கின்,

[தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்:]

தாழ் கோள் பலவின் பழம் — தாழ்ந்த குலைகளையுடைய பலாவினது பழம்,

சூழ் சுளைப் பெரும் பழம் — தின்பார் விரும்பிச்சூழும் சுளையையுடைய பெரிய பழத்தையும்,

வீழ் இல் தாழைக் குழவித் தீநீர் — வீழுதில்லாத தாழையாகிய தெங்கின் இளநீராய இனியநீரையும்,

* "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" என்றதனாற் குழவித்தீநீரென்றார்.

கவை முலை இரும்பிடிக் கவுள் மருப்பு ஏய்க்கும — கவைத்த முலையினையுடைய பெரிய பிடியினுடைய கவுளிடத்துக் கொம்புகளையொக்கும்,

[குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்:] குலை கூனி முதிர் வாழை வெண்பழம் — குலைகள் தம்பெருமையாலே நிலத்தே தாழ்வளைந்து முற்றின வாழையினது வெள்ளிய பழத்தையும்,

திரள் அரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந் தீம் பல்தாரம் முனையின் — திர

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், உச.

ண்ட அடியையுடைய பனையினது நுங்கோடே வேழம் இனியபலபண்டங்களையும் வெறுக்கின்,

[செம்பின், மூளைப்புறம்.] மூளைப்புறச் செம்பின — மூலையை இடத்தேயுடைய செம்பினது இலையோடே,

முதிர் கிழங்கு ஆர்குவிர் — முற்றின வள்ளிமுதலியன கிழங்குகளைத் தின்பீர்; செப்பிற் (கூஎ) பழத்தையும் (கூகூ) நீரையும் (கூ௫எ) பழத்தையும் (கூகூ) நுங்கோடே (கூ௫0) பலபண்டங்களையுமூளையிற் (கூ௬க) கிழங்கார்குவிரெனக.

பகற் பெயல் மழை வீழ்ந்தன்ன மாத் தாட் கமுகின் புடை சூழ் தெங்கின் — பகற்பொழுதிலே பெய்தலையுடைய மழை கால்வீழ்ந்தாலொத்த பெரிய தண்டினையுடைய கமுகுகளின் பக்கத்தேசூழ்ந்த தெங்கினுடைய,

மூப்புடைத் திரள் காய் — மூன்றுபுடைப்பினையுடைய திரண்டகாய்,

பழுத்தால் அடி மூன்றாகப்படைத்தல் அறிகில்பு. இனி மூப்புடைத்திரள் காயும் பாடம்

ஆறு செல் வம்பலர் காய் பசி தீரச் சோறு அடு குழிசி இளக விழூஉம் — வழிச் செல்கின்ற புதியோர் தமது மிக்கபசிதீரும்படி சோற்றையாக்குகின்றபானை அடுப்பினின்றும் அசைந்துவிழும்படி நிலத்தேவிழும்,

வீயா யாணர் வளங் கெழு பாக்கத்து — கெடாத புதுவருவாயினையுடைய செல்வம்பொருந்தின பாக்கத்திடத்து,

பன்மரம் நீளிடைப் போகி — பலமரங்கள்வளர்ந்த இடத்திலேபோய்,

[நன்னகர், விண்டோய் மாடத்து விளங்குசுவருடுத்த:] விளங்கு சுவர் உடுத்த விண் தோய் மாடத்து நன்னகர் — விளங்குகின்ற மதில்சூழ்ந்த விசும்பைத்தீண்டும் மாடங்களையுடைய நன்றாகிய ஊர்களிலே,

* வாடா வள்ளியின் வளம் பல தரூஉம் நாடு பல இறந்த பின்றை — வாடுங்கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக்கூத்தின் வளம்பலவற்றையுந் தருதற்குக்காரணமாகிய புறநாடுபலவற்றையும் போனபின்பு,

வளம்பலவென்றார், இக்கூத்து ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாய் வருதலின்.

என்றது-சிறப்புடையநாடுகளைப்பாடித் தாழ்ச்சிபெற்ற இழிகுலத்தோரூரையும் புறநாடுகளைப் பாடாமற்றொழுக்கின்றார், அவைபுறநாடென்பதுதோன்ற அவர்கள் காண்டற்குரிய வள்ளிக்கூத்தினைக்கூறி அதனைவெளிப்படுத்தினார். இது, புறத்திணையியலில் * "வெறியறிசிறப்பு" என்னுஞ்சூத்திரத்து 'வாடாவள்ளி' என்பதனாலும், † "மண்டமரட்ட மறவர் குழாத்திடை" என்னு முதாரணத்தானும் உணர்க.

நீடு குலைக் காந்தள் அம் சிலம்பிற் களிறு படிந்தாங்கு — நீண்ட பூங்கொத்துக்களையுடைய காந்தளையுடைய அழகிய பக்கமலையிலே யானை கிடந்தாற்போல,

பாம்பு அணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண் — பாம்பணையாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுடைய ‡ திருவெஃகாவிடத்து,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ரு.

† "மண்டமரட்ட மறவர் குழாத்திடைக் - கண்டான் முருகனுங் கண்களித் - தான் - பண்டே - குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப - பிறமகள் நோற்றாள் பெரிது."

‡ திருவெஃகாவென்பது திருமாலினுடைய நூற்றெட்டுத் திருப்பதியுளொன்று. இது காஞ்சிப்பதியிலுள்ளது.

காந்தளொன்றதற்கேற்பப் பாம்பனையென மெலித்தார்.

[வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்:]

வெயில் நுழைபு அறியாப் பொதும்பர்— ஞாயிற்றின்கதிர் தோன்றியகாலத்தும் படுகின்றகாலத்தும் பட்டுச் சிதறுஞ் செல்லுதலறியாத பொதும்பர்,

குயில் நுழை பொதும்பர்— இலைநெருக்கத்தாலே குயில்கள் நுழைந்துசெல்லும் இளமரக்காவில்,

குறுங் கால் காஞ்சி சுற்றிய நெடுங் கொடிப் பாசிலைக் குருகின் புன் புற வரிப் பூ—குறிய காலினையுடைய காஞ்சிமரத்தைச்சூழ்ந்த நெடிய கொடியினையும் பசிய இலையினையுமுடைய குருக்கத்தியினுடைய புற்கென்றபுறத்தினையும் வரிகளையுமுடைய பூக்கள் உறைப்ப (சிதற) வென்க.

கார் அகற் கூவியன் பாகொடு பிடித்த இழைசூழ் வட்டம் பால் கலந்தவை போல் — கரிதாகிய சட்டியிலே அப்பவாணிகன் பாகுடனே வெண்மையாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட நூல்போலச் சூழ்ந்துகிடக்கின்ற அப்பம் பாலிலே கிடந்தவைபோல,

சட்டியிலே கிடந்த அப்பம் பின்பு பாலிலேகிடந்தவைபோலவென்க.

பிடித்தவட்டமென்க.

நிழல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப—நிறங்கிளர்கின்ற வார்ந்த மணலிடத்துக் குழிகளினின்ற நீரிடத்தே மிகவிழும்படி,

உறைப்பவென்றதனை துளிப்பவென்றல் சந்தி நடையின்மையானே "உப்புறைப்ப" என்றாற்போலக்கொள்க.

புனல் கால் கழீஇய பொழில்தொறும்—நீர் பெருகியகாலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப்போன பொழில்கடோறும்,

என்பதனால், முன்பு நீர்நின்றுபோகலிற் பூத்தவென்றார்.

திரள் கால் சோலைக் கமுகின் சூல் வயிற்றன்ன நீலப் பைங்குடந் தொலைச்சி — திரண்ட தண்டினையுடைய சோலையிடத்துநிற்குங் கமுகினுடைய சூற்கொண்டவயிற்றையொத்த பச்சைக்குப்பிகளையுண்டு போக்கி,

நாளும் பெருமகிழ் இருக்கை மரீஇ—நாடோறும் பெரிய மகிழ்ச்சியையுடைய இருப்பைமருவி,

சிறு கோட்டுக் குழவித் திங்கள் கோள் சேர்ந்தாங்கு —சிறிய கோட்டையுடைய இளதாகிய பிறையைச் செம்பாம்பு தீண்டினாற்போல,

இஃது இல்பொருளுவமை.

சுறவுவாய் அமைத்த சுரும்பு இமிர் சுடர் நுதல்— மகரவாயாகிய தலைக்கோலத்தைச் சேர்த்தின சுரும்புகள்சூழும் ஒளியையுடைய நுதலினையும்,

நறவு பெயர்த்து அமைத்த நல்லெழில் மழைக் கண்—கள்ளினை உண்டுபொருந்திய நன்றாகிய அழகினையுடைய குளிர்ச்சியையுடைத்தாகிய கண்களையுமுடைய;

கள்ளுண்ணுதலைத் தம்முள் மேற்கொள்கின்றமையிற் பெயர்த்தென்றார்.

மடவரல் மகளிரொடு பகல் விளையாடி—மடப்பம் தோற்றுதலையுடைய மகளிரோடே பகற்பொழுது விளையாடி,

பெறற்கு அருந் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபின் பூமலி பெருந்துறை — பெறுதற்கரிய பழைமையையுடைத்தாகிய புகழினையுடைய துறக்கத்தை

யொக்கும் தப்பாமல் நீர்வருமுறைமையினையுடைய பூமிக்குகின்ற பெரிய துறையிடத்தே.

ஆகவே, துகாபொருள்துறைவின்மையிற் றறகக்மேய்க்குமென்றுா.

செவ்வி கொள்பவரோடு அசைஇ—இளவேனிற்செவ்வியை நுகர்வாரோடு இளைப்பாறி,

அவ்வயின் அருந் திறற் கடவுள் வாழ்த்தி—அத்திருவெஃகாவணையில் அரியதிறலினையுடைய திருமாலைவாழ்த்தி,

[சிறிதுநும், கருங்கோட் டின்னிய மியக்கினிர்கழிமின்:] நும் கருங்கோட்டு இன்னியம் சிறிது இயக்கினிர் கழிமின்—நும்முடைய கரிய தண்டினையுடைய இனியயாழைச் சிறிதுவாசித்து அவ்விடத்துநின்றும் போமின்;

ஆங்கட் (கூ௭௬) பொதும்பர்க் (கூ௭௭) குருகின்பூ (கூ௭௮) உறைப்பக் (கூ௭௯) கழீஇ பொருதுறையாடும் (கூ௮0) மகளிரோடேபகல்விளையாடிப் (கூ௮௭) பெருந்துறைச் (கூ௮௧) செவ்விகொள்பவரோடசைஇ (கூ௮௩) நீலப்பைங்குடந் தொலைச்சி (கூ௮௨) மரீஇக் (கூ௮௪) கடவுள்வாழ்த்தி (கூ௮௫) இயக்கினிர்கழிமினெனமுடிக்க.

[காழோ ரிகழ்பதநோக்கிக் கீழ, நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங், கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற், களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்:]

*வெளிறு இல் கந்திற் கதன் அடக்கிய களிறு கீழ நெடுங்கையானை—** கனைந்நின்கின்ற:

நெய் மிதி கவளம்— நெய்யைவார்த்து மிதித்தகவளங்களை,

கடுஞ் சூல் மந்தி காழோர் இகழ் பதம் நோக்கி கவரும் காவின்—முதிற்பட்ட சூலையுடைய மந்தி பரிக்கோலையுடையோர் நெகிழ்ந்தசெவ்வியைப்பார்த்து எடுத்துக் கொண்டுபோய்த்தின்னுஞ் சோலையினையும்,

திண்டேர் குழித்த குண்டு நெடுந் தெருவின்— திண்ணியதேர்கள் பலகால் ஓடிக்குழித்த தாழ்ச்சியையுடைய நெடியதெருவினையும்,

[படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க் கடைகால் யாத்த பல்குடி கெழீஇக், கொடையுங் கோளும்:]

தொலைவு அறியா மைந்து மலி பெரும்புகழ்ப் படை— கெடுதலறியாத வலிமிகுகின்ற பெரிய புகழினையுடைய படையினையும்,

கொடையும் கோளும் கெழீஇக் கால்யாத்த பல்குடிக் கடை— பண்டங்களைவிற்றலும் கொள்ளலும்பொருந்தி அவ்விடத்து நெருங்கின பலகுடிகளையுடைய கடையினையுமுடைய மூதூர் (௪௧௧).

வழுக்குறாத் தடுத்த அடையா வாயில்— உலகத்துக் கொடுப்பாரைக் கொடாமற் றடுத்த பரிசிலர்க்கடையாத வாசலினையும்,

ஆகக் கொடை பெருமையாற் பிறர்தவிர்ந்தாரென்றுா.

மிளை சூழ் படப்பை— காவற்காடுசூழ்ந்த பக்கத்தினையும்,

[நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி:] நான்முக ஒருவற் பயந்த நீனிற

* இந்தப்பாகத்துக்கு எந்தப்பிரதிகளிலும் உரைகிடைத்திலது. வயிரமுள்ள கந்தைச் சேர்த்தடக்கிய ஆண்யானைகளும், கீழ்தாழ்ந்த நெடியகையை யுடைய பெண்யானைகளுந்தின்கின்றவென்க.

உருவின் நெடியோன் கொப்பூழ்ப் பல் இதழ்த் தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி—நான்குமுகத்தையுடைய ஒருவனைப்பெற்ற நீலநிறத்தையுடைத்தாகிய வடிவினையுடைய திருமாலுடைய திருவுந்தியாகிய பலஇதழையுடைய தாமரையினது கொட்டைபோலே அழகுவிளங்கத்தோன்றி,

இதனாற் * பழமையுஞ் சிறப்புந் தூய்மையுங் கூறினார்.

சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்—செங்கலாற்செய்யப்பட்டு உயர்ந்த புறப்படைவீட்டைச்சூழ்ந்த மதிலினையும்,

[இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக், கொழுமென் சினைய கோளி யுள்ளும்:] கொழு மென்சினைய இழுமென் புள்ளின் ஈண்டு கிளைத் தொழுதிக் கோளியுள்ளும்—கொழுவிய மெல்லிய கொம்புகளிடத்தனவாகிய இழுமென்னும் ஓசையையுடைய பறவைகளுடைய திரளுகின்ற சுற்றத்திரட்சியையுடைய பூவாமற் காய்க்கு மரங்களில் விசேடித்தும்,

பழம் மீக்கூறும் பலாஅப் போல—பழத்தின் இனிமையான் மேலாகச்சொல்லும் பலாமரத்தையொக்க,

புலவுக் கடல் உடுத்த வானஞ் சூடிய மலர் தலை உலகத்துள்ளும்—புலால்நாற்றத்தையுடைய கடலாற்சூழ்ந்த ஆகாயங்கவிந்த அகன்ற இடத்தையுடைய உலகத்து நகரில் விசேடித்தும்,

பலர் தொழ விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்—பலசமயத்தாருந் தொழும்படி எடுத்த விழாக்களாலே எல்லாநகரிகளின் மேலான பழைய வெற்றியினையுடைய பழையஊராகிய,

அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வானத்து அந்திவாய் ஆடுமழை கடுப்ப—அழகிய இடத்தையுடைய வளரும்பிறையைத் தன்மேலேசூடிச் செக்கர்வானமாகிய அந்திக்காலத்தேயுலாவுகின்ற மேகத்தையொப்ப,

கொம்பும் யானையும் குருதியும் உவமிக்கப்படும்பொருள்.

[வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப, வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப், பேரமர்க் கடந்த கொடிஞ்சி நெடுந்தே, ராராச் செருவி னைவர் போல:]

வெண்கோடு இரும்பிணம் குருதி ஈர்ப்பப் பொருது—வெள்ளிய கொம்பினையுடைய கரியயானைப்பிணத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டுபோம்படி பொருது,

ஈர் ஐம்பதின்மரும் களத்து அவியப் பேர் அமர் கடந்த ஐவர்போல—துரியோதனன் முதலிய நூற்றுவரும் களத்திலேபடும்படி பெரியபோரைவென்ற தருமன் முதலியோரைப்போல,

கொடிஞ்சி நெடுந்தேர் ஆராச் செருவின் ஐவர்—முன்னே தாமரைமுகையினையுடைய நெடியதேரினையும் நிரம்பாத போரினையுமுடைய ஐவர்

அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த—தன்னெண்ணின்கண் அடங்காத படையுடனே கோபித்துத் தன்மேல்வந்த,

ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து—[illegible] பொருந்தாத பகைவர் தோற்றவிடத்தே வெற்றிக்களிப்புத்தோன்ற ஆரவாரித்து,

[கச்சி யோனே கைவண் டோன்ற, னச்சிச் சென்றோர்க் கேம [illegible]] வை

* பெருமையுமென்றும் பிரதிபேதமுண்டு.

[illegible]ன் தோன்றலை நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய கச்சியோனை — கைவளப்பத் [illegible] தன்பா[illegible] சென்றோர்க்குப் பாதுகாவலாகி [illegible]யிருக்கின்றான்,

[illegible]யினையும் ([illegible]) [illegible]வினையும் ([illegible]), வளப்பினையும் ([illegible]); அடை[illegible] ([illegible]), [illegible]யையும் ([illegible]), [illegible]யினையும் ([illegible]), படையினை யு (கூகஅ) முடைய மூதூர் (சகக) என்க.

[illegible] ([illegible]) [illegible] ([illegible]) விழவுமேம்பட்ட (சகக) மூதூரென்க.

[illegible] ([illegible]) [illegible]போலக் ([illegible]) குறுந்தியிப்பப் ([illegible]) பொரு[illegible] ([illegible]) [illegible] ([illegible]) மூதூராகிய ([illegible]) [illegible]யிருக் கின்றானென்க.

[[illegible] வெளிய வாசலின், மலைந்தோர் தேஎ [illegible]]

மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்படத் தெறலும் — தன்னுடனே பொருதார் [illegible] மக்களின்றப் பாழ்படி [illegible],

[நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப:] நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப அளி [illegible] — [illegible] விரும்பியிருந்தோர் [illegible] திருமட்[illegible] அளித் தலும்,

[illegible] — தல [illegible] நடக்[illegible]

[illegible] — [illegible] உறவுகொ [illegible] அவன்[illegible],

துப்புக் கொளல் வேண்டிய துணையிலோரும் — அவன் பகையைத்தெறும் [illegible],

கல் வீழ் அருவி [illegible] — [illegible] அருவி அம் [illegible] சென்றாற் போல,

பல் வேறு வகையிற் பணிந்த மன்னர் — பலவாகிய வேறுபட்ட திறைகளை கூறுபாட்டோடே சென்று வணங்கின அரசர்,

[இமையோர் [illegible], [illegible] விளங்கு [illegible] பொன்கொழித் [illegible] கருங் கங்கை.]

இமையோர் உறையும் சிமையச் செவ்வரை விளங்கு சுடர் நெடுங்கோட்டு — தேவர்களிருக்கும் உச்சியையுடைய [illegible] மேருவினது விளங்குகின்ற ஒளியை யுடைய நெடிய சிகரத்தினின்றும்,

பொன் கொழித்து இழிதரும் போக்கு அருங் கங்கை — பொன்னைக் கொழித்துக் [illegible] நலரிதாகிய கங்கையாகிய ஆற்றிலே,

[illegible] கங்கை — [illegible] வெளிய [illegible] கங்கை

[illegible] — பெரிய நீரைக்கட[illegible] கெடுதலை யுடையமாக்கள்,

[illegible]

ஒருமரப் பாணியில் தூங்கி யாங்கு — ஒன்றான தோணியாகைகயிறாலே அது வருங்காலம் பார்த்திருந்து தூங்கினாற்போல,

தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச் செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்து — கெடாத யானைமுதலிய செல்வங்களோடே நெருங்கி நின்று திரண்டு காலம்பார்த்திருக்கும் வளவிய நகரின்முற்றத்தினையுடைய வியனகர் (௪௨௦)

எளியவாகலின் (௪௨௨), நயந்தனிர் சேறிரும் (௪௨௫) துணையிலோருமாய்ப் (௪௨௯) பணிந்தமன்னர் (௪௨௮) தூங்கியாங்கு (௪௩௭) செவ்விபார்க்கு முற்றமென்க.

பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்குங் கருங்கைக் கொல்லன் — பெரிய கையினையுடைய யானைக்கு வளைந்துகிடக்கும பூணைச்சேர்க்கும் வலியகையினையுடைய கொல்லன்,

இரும்பு விசைத்து எறிந்த கூடத் திண்ணோசை வெரீஇ — இரும்பைக் கையை யுரத்துக்கொட்டின கூடத்தெழுந்த திண்ணியஓசையை வெருவி,

[மாடத், திறைபுறை புறவின் செங்காற் சேவல் இன்றுயி லிரியும் பொன்றுஞ்ச வியனகர்:]

மாடத்துப் புறவின் செங்காற் சேவல் இன்றுயில் இரியும் நகர் — மாடத்திடத்துப் புறவினுடைய சிவந்த காலையுடைய சேவல் இனிய துயிலை நீங்கும் நகர்,

இறை உறை நகர் — இறைவனிருக்கு நகர்,

பொன் துஞ்சு வியன் நகர் — திருத்தங்குகின்ற அகலத்தையுடைய கோயிற்கண்ணே இருந்தோன் (௪௩௭)

குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட் பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு — கீழ்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்றுதொழிலையுடைய நீர்க்குநடுவே பகற்பொழுதைச்செய்யுஞாயிறு தன்கிரணங்களைப்பரப்பித் தோன்றினாற்போல,

[முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி, யிடைதெரிந் துணரு மிருள்தீர் காட்சிக், கொடைக்கட னிறுத்த கொடுமடி யுள்ளத், துருப்பிற் சுற்றமோ டிருந்தோற் குறுகிப், பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான், கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப், புலவர் பூண்கட னாற்றி:]

இடை தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி — நிலைமையை ஆராய்ந்தறியும் மயக்கந்தீர்ந்த அறிவாலே,

முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப அருளி — முறைப்பாட்டை விரும்புவார்க்கும் காரியங்களைக் குறைவாக வேண்டுவார்க்கும் அவரவர் விரும்புவனவற்றை விரும்புவனவற்றை அருளிச்செய்து,

புலவர் பூண் கடன் ஆற்றி — புலவர்க்குப் பொன்னணிகலன்களையும், வேறுபட்ட ஏனைய பிறகலங்களையுங் கொடுத்து,

வேண்டினர்க்குக் கொடைக் கடன் இறுத்த கொடுமடி உள்ளத்து உருப்பில் சுற்றமோடு இருந்தோற் குறுகி — வேண்டிவந்த பரிசிலர்க்குக் கொடையாகிய கடனை முடித்த குவியாத நெஞ்சத்தோடே கொடுமையில்லாத மந்திரச்சுற்றத்தோடே இருந்தோனையணுகி,

ஞாயிறுபோல இருளைக்கடிந்து முறைவேண்டுநர்க்குங் குறைவேண்டுநர்க்கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக்கொடுத்தலின், அதனை உவமித்தார்.

கடல் சுற்றத்திரட்சிக்கு உவமையாக்கலுமொன்று.

பொறி வரிப் புகர்முகம் தாக்கிய வயமான் கொடுவரிக் குருளை கொள வேட்டாங்கு—ஒளியினையும் வரியினையுமுடைய யானையைப்பாய்ந்த வலியையுடைய சிங்கத்தினுடைய வளர்ந்த வரியினையுடைய குருளை அவ்யானையின் மத்தகத்தைக் கொள்ளவிரும்பினாற்போல,

பகைவர் கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி அல்லது—பகைவரது காவலையுடைய மதில்களையழித்து ஆண்டிருந்த அரசருடைய முடிக்கலமுதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடிபுனையும் வெற்றியினை விரும்புதலல்லது,

இதனால் * "இகன்மதிற்குடுமிகொண்ட மண்ணுமங்கலம்" என்னுந்துறை கூறினார்: குடுமிகொள்ளும் வென்றியெனவே மண்ணுமங்கலமாயிற்று.

வினை உடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தடக் கைக் கொண்டி உண்டித் தொண்டையோர் மருக—அம்மதிலரசர் சந்துசெய்தற்குடம்பட்டாராயினும் அதற்கு மனம்பொருந்துதல் செல்லாமைக்குக்காரணமாகிய உலகெங்கும்பரக்கும் வாளையுடைத்தாகிய பெருமையையுடைய கையினையும் பகைப்புலத்துக் கொள்ளையாகிய உணவினையுமுடைய தொண்டையோருடைய குடியிலுள்ளவனே,

மள்ளர் மள்ள—வீரர்க்கு வீரத்தைக்கொடுக்கின்றவனே,

மறவர் மறவ—கொடியோர்க்குக் கொடியவனே,

செல்வர் செல்வ—செல்வமுடையோர்க்குங் கொடுத்தலைவிரும்புபவனே,

செரு மேம்படுந—போர்த்தொழிலிலே மிக்கவனே,

பெரும (சசுக) —பெருமானே,

வெண்டலைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற பைம்பூட் சேஎய் பயந்த மா மோட்டு—வெள்ளிய திரையினையுடைய கடலிலேசென்று கடியசூரனைக்கொன்ற பசிய பூணினையுடைய முருகனைப்பெற்ற பெருமையையுடைய வயிற்றினையும்,

துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு—பேய்களாடுந் துணங்கைக்கூத்தினையும் அழகினையுமுடைய இறைவிக்குப் பேய்மகள் சில நொடிசொன்னாற்போல,

[தண்டா ஈகைநின் பெரும்பெயர் ஏத்தி வந்தேன் பெரும வாழிய நெடிதென:]

தண்டா ஈகை நின் பெரும்பெயர் ஏத்தி வந்தேன் நெடிது வாழிய என—அமையாக்கொடையினையுடைய நின் பெரியபெயருட் சிலவற்றைச்சொல்லிப் புகழ்ந்துவந்தேன்; நெடுங்காலம் வாழ்வாயாகவெனச்சொல்லி,

இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி—தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத் தன்னிடத்தேயுடைய பெரியயாழை வாசிக்குமுறைமையிலே வாசித்து,

முறையுளி, உளி-பகுதிப்பொருள்விகுதி.

கடன் அறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி—முற்படக் கண்டக்காற் செய்யுங் கடனை அறிந்தமுறைமையோடே கையாற்றொழுது வாழ்த்தி,

நின் நிலை தெரியா அளவை—நின்னுடைய கலைகளெல்லாந் தெரிவதற்குமுன்னே,

அந் நிலை—நீநின்ற அந்த நிலைதன்னிலே,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், [illegible]

காவல் அம் தண் பொழில் வீவின்று விளங்க—நாவலந் தீவென்று பெயர்பெற்ற அழகினையுடைய குளிர்ந்த உலகமெல்லாம் கேடின்றாக விளங்கும்படி,

நில்லா உலகத்து நிலைமை தூக்கி—யாக்கையுஞ் செல்வமுமுதலிய நிலையில்லாத உலகத்திடத்து நிலைபேறுடைய புகழை நாம் பெறுதல் நன்றென்று ஆராய்ந்து,

அந்நிலை அணுகல் வேண்டி—முற்படநின்ற சேய்நிலத்துநின்று தன்னை அணுகுதற்கு விரும்பியழைத்து,

நின் அரைப் பாசி அன்ன சிதர்வை நீக்கி—நின்னுடைய அரையிற்கிடந்த கொட்டைப்பாசியின் வேரையொத்த பீறின சீரையைப்போக்கி,

[ஆவி யன்ன வவிர்நூற் கலிங்க, மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇ:]
ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம் உடன் இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடீஇ—பாலாவியையொத்த விளங்குகின்ற நூலாற்செய்த துகில்களைப் படிசேரக் கரிய பெரிய சுற்றத்தாரோடே சேர உடுக்கப்பண்ணி,

கொடு வாள் கதுவிய வடு ஆழ் நோன் கை வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை—வளைந்த அரிவாளைக்கொண்ட வடுவழுந்தின வலியையுடைத்தாகிய கையினையுடைய மடையனாக்கின பலஇறைச்சியிற் கொழுவிய தசைகளும்,

பலகாலுமறுத்தலால், தழும்பிருந்த கையென்றார். கதுவுதல்-கைக்கொள்ளுதல்.

அரி செத்து உணங்கிய பெருஞ் செந்நெல்லின் தெரி கொள் அரிசித் திரள் நெடும் புழுக்கல்—நிறத்தால் ஞாயிற்றைப்பார்த்து உலர்ந்த பெரிய செந்நெல்லினுடைய * பொறுக்கிக்கொண்ட அரிசியாலாக்கின திரண்ட இடைமுறியாத சோறும்,

அரிசெத்தென்றதற்கு உவமையின்றாக வேண்டுமாம். இனி அரிசெய்தென்று பாடமாயின், அரிதலைச்செய்தென்றாகும்.

அருங்கடித் தீஞ்சுவை அமுதொடு—பெறுதற்கரிய மிகுதியையுடைய இனிய சுவையினையுடைய கண்டசருக்கரைமுதலியவற்றோடே,

பிறவும்—கூறியொழிந்தனவும்,

விருப்பு உடை மரபின் கரப்பு உடை அடிசில்—விருப்பமுடைத்தாகிய முறைமையினையுடைய தலையாப்புப்பரத்தலையுடைய அடிசிலை,

அமுதோடே (௪௭௩) குறையும் (௪௭௨) புழுக்கலும் (௪௭௪) பிறவுமாகிய (௪௭௫) அடிசிலைப் (௪௭௬) பரப்பி (௪௭௮) ஊட்டியென்க.

[மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி, மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந், தானா விருப்பிற் றானின் றூட்டி, மங்குல் வானத் திங்க ளேய்க்கும்;]

மங்குல் வானத்து மீன் பூத்தன்ன வான் கலம் திங்கள் ஏய்க்கும் வான்கலம் மகமுறை பரப்பி—திசைகளையுடைய ஆகாயத்திடத்தே உடுக்கள்தோன்றினாற்போன்ற சிறிய வெள்ளிக்கலங்களையும், திங்களையொக்கும் பெரியவெள்ளிக்கலங்களையும் நம்முடைய பிள்ளைகளுக்கு இடையேபரப்பி,

எனவே தலைவராயினோர்க்குப் பொற்கலம்பரப்புவரென்றார்.

தான் முகன் அமர்ந்து ஆனா விருப்பின் மகமுறை நோக்கி நின்று ஊட்டி—தான் முகம்பொருந்தி அமையாத விருப்பத்தோடே நம்முடைய பிள்ளைகளைப்பார்த்து நின்று உண்ணப்பண்ணுவித்து,

ஆடு வண்டு இமிரா அழல் அவிர் தாமரை நீடு இரும் பித்தை பொலியச் சூட்டி—

* பொறுக்கிக்கொண்டவென்றும் பிரதிபேதமுண்டு.

...ஸாவும் வண்டுகள் ஒலியாத நெருப்பிடத்தே கிடந்துவிளங்கின பொற்றாமரையை நீண்ட கரிய மயிரிடத்தே அழகுபெறச் சூட்டி,

பொற்றாமரை [illegible] சூட்டுமென்றல் பொருந்தாமையுணர்க.

உரவுக் கடல் முகந்த பருவ வானத்துப் பகற் பெயல் துளியின் மின்னு நிமிர்ந் தாங்கு—பலவுஞ்சேரவுலாவுகின்ற கடலிடத்தேமுகந்த கார்க்காலத்து மேகத்தினின்றும் பகற்காலத்தே பெய்தலையுடைத்தாகிய துளியின்கண்ணே மின்னோடினாற் போல,

புனை இருங் கதுப்பகம் பொலியப் பொன்னின் தொடை அமை மாலை விறலியர் மலைய—கைசெய்த கரியமயிரிடம் அழகுபெறும்படி, பொன்னாற்செய்து சேரக்கட்டு தலமைந்த மாலையை விறல்படஆடுமகளிர் சூடாநிற்க,

[நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல், வளைகண் டன்ன வாலுளைப் புரவி, துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி:] நூலோர் புகழ்ந்த மாட்சிய துணை புணர் தொழில மால் கடல் வளை கண்டன்ன வால் உளைப் புரவி நால்கு உடன் பூட்டி—குதிரைநூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த் தனித்துத்தொழில்செய்யாமல் இணங்கியோடுந் தொழிலையுடையவாய்க் கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய கழுத்தின்மயிரையுடைய குதிரைகள்நான்கைச் சேரப் பூட்டி,

நால்கு—நான்கெனப்பெயர்த்திரிசொல்.

அரித்தேர் நல்கியும் அமையான்—பொன்னாற்செய்த தேரைத்தந்தும் கொடைமேல் விருப்பந்தவிரானாய்,

செருத் தொலைத்து ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஒழிந்த விசும்பு செல் இவுளியொடு பசும்படை தரீஇ—தம்முடன்வந்து பொருந்தோரையுடைய போர்களை மாளப்பண்ணித் தன்னோடேபொருந்தாத பகைவர்முதுகிட்டோடுகையில் விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பசியபொன்னாற்செய்த பக்கரைகளையுந்தந்து,

[அன்றே விடுக்குமவன் பரிசில்] அவன் அன்றே பரிசில் விடுக்கும்—அவன் நீசென்ற அற்றைநாளே இவையொழிந்த பரிசில்களையுந்தரும்;

இன்சீர்க் கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்—இனியதாளத்திலே கின்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வங்களையுடைய சாரலிடத்து,

மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்—மயில்கள் ஆரவாரிக்கும் மரம்நெருங்கின இளமரக்காட்டினையுமுடைய,

கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீ புறவின்—முசுக்கலைகள்பாய்ந்துதிர்த்த மலர்கள்சிந்தின காட்டினையும்,

மந்தி சீக்கும் மா துஞ்சு முன்றில்—மந்திகள் அவ்விடத்துக்கிடக்கு தூறலைவாரும் யானையும்புலியுந் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (சகூசா) இறும்பினையு (சகூரு) முடைய சாரலிடத்து (சகூச) முன்றிலிலே (சகூஎ) வேட்கு (சகூகூ) மென்க.

செந்தீப் பேணிய முனிவர்—சிவந்ததீயைக் கைவிடாமற்காத்துப்போந்த இருடிகள்,

வெண்கோட்டுக் களிறு தரு விறகின் வேட்கும்—வெள்ளிய கொம்பினையுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமித்தையாலே வேள்வியைச்செய்யா

மந்திசிந்தலும், மாத்தாட்சுழும், களிறு சிறந்தருளலும் இருமகளாலினையால் கிழ்ந்தவென்றுணர்க.

ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே:

ஒளிறு மலை—இவற்றுள் எங்குமலை,

இலங்கு அருவிய மலை—விளங்குகின்ற அருவிகளையுடையமலை,

மலைகிழவோன்—இச் சிறந்த மலையையாருர் உரிமையையுடையோன்.

புலவுவாய்ப்பாண (உஉ), பெருவளவெய்த (உச) முகந்துகொண்டு (உள) யாம் அவனூரினின்றும் வருகின்றேம்; நீயும் (உ௯) இரையற்பட்டாருமீராயின் (௬௭) நின்னுள்ளகுறைக்க (சரு); நின்னவலமெகெக (௬௮); இரவல (௬௧) அவனிலைநேகள் (௬௮), அவன்புலம் கொடியோரிறை (சக): அதுவேயன்றி அப்புலத்தில் உருறரும ரறுது; அரசன் தயபா (சஉ); மாசை உறுகட்செய்யா ஆகலின், ஆட்கு (சக) அசை வழி அசைஇத் தங்கிச் (சச) செல்லமோ (சரு), அங்ஙனஞ்செல்லுங்கால் வில்லு டைவைப்பிற் (௮௩) குரமைபயில் (௮௮) எயிற்றியர் (௯௨) தாங்கொட்ட பழுக்கலையும் வாடூனையும் (க௦௦) எல்லிடைக்குப்பொக்கு மயமாறு (௯௬) நேக்கியபிலேதுவிக்கை யிறுலே (க௦௪) அப்பதத்தைந் (க௦௫) பெருமசநூயப (க௦௩) வளாவுடன் சென்னாய மெனிற் (க௦௬) கடும்போமேட்டிக்கப்பெறுகுவீர் (க௦௭); பின்னர் அருஞ்சுரமிறந்த அம் பர்க் (கக௭) குறும்பிற் சேப்பின் (கக௮) சொன்றிமைப (கக௯) வறைசவியாத்தறுவ யின்றொரும்பெறுகுவீர் (கஉஉ); பின்னர்க் காங்க (கஉ௭) முரண்டலை (க௩௭) பிடு க்கை (க௪௯) கழிந்தபின்னைக் (க௪௭) குடிவயிற் சேப்பின் (க௪௮) ஆம் பாவொடு ம்பெறுகுவீர் (க௬௮); பின்னர்ப் பறைபோக்கும் (க௬௯) புலம்பெயப்போக்கு (க௭௦) சீறூர்களிலே (க௭௧) வாலின் சோற்றை (க௭௨) புழுக்கையொடு (க௭௯) மூரலோடேபெறுகுவிர் (க௯௬); பின்னர் நாற்கர் (க௯௭) வன்புலம் கழிந்தபின்னைத் (உ௦௬) மல்லற்பேருர்மடியின் (உ௦௮) வெச்சியை (உ௦௯) வாட்டொடும் பெறுகுவீர் (உ௧௬); பின்னர்க் கரும்பின்றீஞ்சாறு விரும்பினிர் பருகுமின் (உ௬௨); பின்னர் ஊர் குடிவயிற் சேப்பின் (உ௭௭), பிழியைச் (உ௮௪) குட்டொடும் பெறுகுவீர் (உ௮௮); பின்னர்த் தீப்பட மலர்ந்த (உ௯௩) பூவைப்போம்பிச் (உ௯௦) குறுகிட்டமனைவர் (உ௯௫) பிணையினிர் கழிமின் (உ௯௬); பின்னர் மறைகாப்பாளர் உறைபதிச்சேப்பின் (௩௦௧) வெந்தந்தாலுண்டாக வரிசியை (௩௦௫) வசைமகளிர் வயினறிந்து வற்றைச் (௩௦௪) சுடர்க்கடைமேல் (௩௦௫) போந்தோர் (௩௦௭) காடியோடே பெறுகுவீர் (௩௪௦); பின்னர் நீர்ப்பெயற்கெல்லை போகிப் (௩௨௬) பட்டினமருங்கின் மலையின் முட்டுப்பாடின்றாகக் (௩௩௯) கொழுகிணத்தடியொடு கூர்முப்பெறுகுவீர் (௩௪௫); பின்னர்த் துறைபிறக்கொழியப்போகித் (௩௫௧) தனிமனைச்சேப்பின் (௩௫௫), ஆண்டைத் தீம்பழம்முலையிற் சேபியவேயாடே (௩௫௬) முகிர்த்திறங்காதுவர் (௩௬௦) இவற்றை இவ்வழியின்கண்ணே பெற்றுப் பின்னைப் பன்மரநீளிடை போகி (௩௬௮) நாடுபலகழிந்தபின்னைப (௩௬௯) பள்ளியமர்ந்தோன் ஆங்கட் (௩௭௩) தெய்வ றொறும் (௩௭௦) ஆடி (௩௮௭) அசைஇ (௩௯௨) தொலைச்சி (௩௯௩) மற்றன் (௪௦௫) கடவுள்வாழ்த்தி (௩௯௯) இயக்கினிர் கழிமின் (௪௦௪), இங்ஙனஞ்சென்று நாடன தோன்றல் (௪௨௦) இப்பொழுது ஐவர்போலத் (௪௧௮) குருதிப்பலிப் (௪௧௯) போருது (௪௧௫) ஆர்த்துப் (௪௧௭) பகைமேற் சென்று நின்று ஈக்கிச்சென்றோர்க்கு ஏமமா கிய (௪௨௧) படப்பை (௪௦௯) முதலியவற்றையுடைய விருது மேம்பட்ட ஆற்றாகிய (௪௧௧) கச்சியிடத்தே யிருந்தோன (௪௨௦). அவ்வூரிற் பணிந்தவன்னர் (௪௨௪) செவ்வியார்க்கும் முற்றத்திலே (௪௩௫) புகுட பொன்றுதக வேமைகாக்கமே

(௪௪௦) பல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (௪௪௨) மிக்ககாட்சியாலே (௪௪௫) அருளிப் (௪௪௪). பூண்கடனாற்றிக் (௪௫௦) கடனிறந்த உள்ளத்தோடே (௪௪௯) சுற்றத்தோடேயிருந்தோனைக் குறுகித் (௪௫௭) தொண்டையோர் மருகனே (௪௫௪), மள்ளனே, மறவனே (௪௫௫), செல்வனே, செருமேம்படுநனே (௪௫௬), பெருமானே (௪௬௧), செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு (௪௫௯) நின் பெயருட்சி லவர்நறைச் சொல்லிப் புகழ்ந்து (௪௬௦) வந்தேன்; வாழ்கவெனச்சொல்லிக் (௪௬௧) கழிப்பிப் (௪௬௨) பழிச்சி (௪௬௩) நின்றானுடைய கலைகளெல்லாந் தனக்குத்தெரிவதற்கு முன்னே (௪௬௪) மகிழ்ப்பெருவோய் (௫௦௦) நில்லாவுலகத்துநிலைமை தூக்கி (௪௬௫) அந்நிலையணுகல் வேண்டிக் (௪௬௭) சிதர்வைநீக்கி (௪௬௮) உடீஇ (௪௭௦) அமுதோடே (௪௭௩) குறையும் (௪௭௨) புழுக்கலும் (௪௭௪) பிறவு (௪௭௫) மாகிய ஆரசிலைக் (௪௭௬) கலங்களைப் பரப்பிக் (௪௭௭) தான் ([illegible]) முகனமர்ந்து மகமுறைநோக்கி (௪௭௮) முன்னின்றூட்டி ([illegible]) விறலியர் மாலைவேயாநிற்க (௪௮௬) நுமக்குத் தாமரை (௪௮௧) பொலியச்சூட்டி (௪௮௨) அரிக்கேர்கலியும் அமையானாய் (௪௯௦) இவுளியொடு பசும்படைதரீஇ (௪௯௧) அவன் அன்றே (௪௯௨) அந்நிலையிலே (௪௯௪) நாவலந்தண்பொழில் வீயின்றலங்கும்படி ([illegible]) இவையொழிந்தபரிசில் களையுந் (௪௯௯) தருமெனவினைமுடிவு செய்க.

இப்பாட்டில் ஒருமைப்பன்மை மயக்கம், "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி * * * போற்றல் வேண்டும்" என்பதனாற்கொள்க.

தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

ஐந்தாவது

முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகிவ்வல னேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமா ணோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் * களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்

---

* களைமாயோளெனவும் பாடம்,

கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற் றங்கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்த லஞ்சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி * நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்

* மிழற்றிய வென்றும் பாடம்.

படம்புகு * மிலேச்ச ருழைய ராக
மண்டம ரசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழ வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர வருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரிவல னேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழிய

* மிலேச்சரென்றும் பாடம்.

துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர்கூறினார்; முல்லைசான்ற கற்புப்பொருந்தியதனால். இல்லறநிகழ்த்துதற்குப் பிரிந்துவருந் துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறநிகழ்த்திய இயற்கை முல்லையாமென்றுகருதி இருத்தலென்னும்பொருட்கு முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர்கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள்கூறலே அவர்கருத்தாயிற்று. *"தானேசேறல்" என்னும்விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு.

இது, தலைவன் வினைவயிற் பிரியக்கருதியதனை அவன்குறிப்பானுணர்ந்து ஆற்றாளாய தலைவியது நிலைமைகண்டு அவன் வற்புறுப்பவும் உடம்படாதவளைப் பெருமுதுபெண்டிர் அவன் வினைமுடித்துவருதல் வாய்வது, நீவருத்தநீங்குவாயெனக்கூற, அதுகேட்டு அவள் நீடுநினைந்து ஆற்றியிருந்தவழித் தலைவன் அக்காலத்தே வந்ததனைக் கண்டோர் வாயில்கள் தம்முட்கூறியது. இது, † "வாயி லுசாவே தம்முள வுரிய" ‡ "ஏனை வாயிலு மிருவர் தேஎத்தும் - புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" என்பனவற்றாற்கூறினார்.

நனந் தலை உலகம் வளைஇ — அகலத்தை இடத்தேயுடைய உலகத்தை வளைத்து,

[நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை:]

நேமியொடு வலம்புரி தாங்கு தடக் கை மால் (௩) — சக்கரத்தோடே வலம்புரியைத்தாங்கும் பெரியகைகளையுடையமால்,

மா § பொறித்த மால் (௩) — திருமார்பிடத்தே திருமகளைவைத்த மால்,

நீர் செல நிமிர்ந்த மா அல் போல — மாவலிவார்த்த நீர் தன்கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல,

இனி, நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம விலக்கணங்களைப்பெற்றிருக்கின்ற திருமகளையணைத்தகையிலே நீர்செல்லவென்றுமாம்.

இதனானே முல்லைக்குரிய தெய்வங்கூறினார்.

[பாடிமிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி:]

பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு — ஒலிமுழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடலைக்குடித்து வலமாகவெழுந்து மலைகளை இருப்பிடமாகக்கொண்டு,

உலகம் வளைஇ (௧) எழுந்த கொடுஞ்செலவு எழிலி — பெய்யுங்காலத்தே உலகத்தைவளைத்தெழுந்த கடிய செலவினையுடைய மேகம்,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௨௭.
† ,, ,, செய்யுளியல், ௨0௧.
‡ ,, ,, கற்பியல், ௩௭.
§ பொறித்தல்-வைத்தல். இதனைச் சிறுபாணாற்றுப்படை (௪௮) "வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த" என்பதனுரையானுமுணர்க.

மால் நீர் செல நிமிர்ந்தாற்போல மேகமும் நீர்செல நிமிர்ந்த தென்றார்.

இனி உலகத்தைத் திருவடிகளிலே அணைத்துக்கொண்டுநிமிர்ந்த மாலென்று முரைப்பர்.

பெரும்பெயல் பொழிந்த சிறு புன் மாலை—பெரிய மழையைப்பெய்த சிறும்பொழுதாகிய வருத்தஞ்செய்கின்ற மாலைக்காலத்துப் பாவைவிளக்கு (அரு) எனக்கூட்டுக.

இதனானே முல்லைக்குரிய * காரும் மாலையுங் கூறினார்,

மால்போலெழுந்த எழிலிபொழிந்த மாலையென்க.

[அருங்கடி மூதூர் மருங்கிற் போகி:] அருங்கடி மூதூர் மருங்கில் நல்லோர் (கஅ) போகி—அரியகாவலையுடைய பழைய ஊர்ப்பக்கத்துப் பாக்கத்தே படைத்தலைவரேவலால் நற்சொற் கோடற்குரியோர்போய்,

[யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது, † பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப:]

நறு வீ முல்லை அரும்பு யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப அவிழ் அலரி நாழி கொண்ட நெல்லொடு தூஉய்—நறியபூக்களையுடைய முல்லையினது அரும்புகள் யாழினது ஓசையினையுடைய இனமானவண்டுகள் ஆரவாரிக்கும்படி அவிழ்ந்தபூவை நாழியிடத்தே கொண்டுபோன நெல்லுடனே தூவி,

கை தொழுது விரிச்சி நிற்ப—தெய்வத்தை வணங்கி நற்சொற்கேட்டு நிற்க,

நல்லோர் (கஅ) போகித் (எ) தூஉய்த் தொழுது நிற்பவென்க.

என்றது:—ஒருவேந்தன் ஒருவேந்தனொடு இகல்கருதினால் போர்செய்யவேண்டுதலின், அவனாட்டந்தணர்முதலியோரைத் தன்னாட்டின்கண்ணே அழைத்தற்கும், அதனையறியாத ஆவைக் கொண்டுபோதற்கும் தான் காத்தற்குமாகத் தன்படைத்தலைவரை நோக்கி அரசன் நிரைபடித்தற்கேவியவழி, அவர் அவனூரிலின்றும்போய் ஓர்பாக்கத்துவிட்டிருந்து அரசனுக்கு மேல்வரும் ஆக்கத்தையறிதற்கு விரிச்சிகேட்கல் வேண்டுமென்று புறத்திணையியலுட் கூறினமையான், ஈண்டும் அவ்வாறே கூறினார். அது, ‡ "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் - னாதந் தோம்பன் மேவற் றாகும்." § "படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி" என்னுஞ்சூத்திரங்களானும், "நிரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி - நரைமுதியோ ளென்னுரைத்த நற்சொன் - னிரையன்றி - யெல்லைநீர் வையம் மிறையோற் களிக்குமால் - வல்லையே சென்மின் வழி." என்னும் உதாரணத்தானுமுணர்க. இவர் இது கேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சிசூடி மண்ணசையால் மேற்செல்லுமென்பது. அன்றி ¶ "எஞ்சா மண்ணசை" என்னுஞ்சூத்திரத்திற் கூறியவாறே ஈண்டுக் கூறினார். அதுமேல் "முனைகவர்ந்து" (கக) என்பதனானுணர்க.

---

* "காரு மாலையு முல்லை குறிஞ்சி - கூதிர் யாம மென்மனார் புலவர்." என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சு.

† பெருமுதுபெண்டிரென்பதற்கு ஒருபிரதியிலும் உரையில்லை. பெரிய முதிர்ந்தபெண்டிரென்க.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ.

§ " " " ௩.

¶ " " " எ.

[சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி, னுறுதுயர லமர னோக்கி யாய்மக, ணடுங் குசுவ லசைத்த கையள் கைய, கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர, வின் னே வருகுவர் தாய ரென்போ, ணன்னர் நன்மொழி கேட்டன மதனா, னல்ல நல் லோர் வாய்ப்புள்:]

நன்னர் வாய்ப்புள்—அவர்கேட்ட நன்றாகிய நற்சொல்,

ஆய்மகள் நடுங்கு சுவல் அசைத்த கையள்—இடைச்சாதியின்மகள் குளிரால் நடுங்குகின்ற தோளின்மேலே கட்டின கையளாய்நின்று,

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறு துயர் அலமரல் நோக்கி—சிறியதாம்பாலே காலிலே கட்டப்பட்ட வருத்தத்தையுடைத்தாகிய கன்றினுடைய முலையுண்ணப்பெறாநின்ற துயரானே தாய்வருமென்று சுழலுகின்ற தன்மையைப்பார்த்து,

கைய கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர—கையிடத்தனவாகிய வளைந்த கோலையுடைய இடையர் பின்னேநின்று செலுத்துதலைச்செய்கையினாலே,

தாயர் இன்னே வருகுவர் என்போள் நன்மொழி கேட்டனம்—நிரம்பமேய்ந்து நும்முடைய தாய்மார் இப்பொழுதே வருவரென்று கூறுகின்றவளுடைய நன்றாகிய வார்த்தையாகிய மொழிகள்கேட்டோம்;

அதனால்—அவள்கூறிய நற்சொல்லின் கருத்தால்,

[தெவ்வர், முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து, வருதறலைவர் வாய் வது:] தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து வருதல் வாய்வது—நந்தலைவர் முயற்சி நாடிச் சென்று பகைவர் மண்ணைக்கொண்டு பின்அவரிடத்தே வாங்கிக்கொண்ட திறையினையுடையராய் இவ்வினை தாமெடுத்துக்கொண்ட வினையை முடித்துவருவரென்று யாங்கருதிய தன்மையிலே அவர்நிற்றலுண்மை,

நல்ல—அவர் அங்ஙனம் வினைமுடித்துவருதல், நமக்கு இல்லறம் நிகழ்தற்குக்காரணமாகலின் நல்லகாரியம்;

[நீ நின், பருவர லெவ்வங் களைமாயோயெனா:] மாயோய் நீ நின் பருவரல் எவ் வங் களை என—மாமைநிறத்தையுடையோளே, நீ நின் மனத்தடுமாற்றத்தான் உளதான வருத்தத்தைப் போக்கென்றுகூற, அதுகேட்டு,

செலவழுங்கிப் பதித்து வேறுபட்ட தன்மையின், மனத்தடுமாற்றமென்றார்.

பெருமுதுபெண்டிர (சக), நல்லோர் (உஅ) போகித் (எ) தூஉய்த் தொழுது (கய) விரிச்சிநிற்ப (கக) அவர்கேட்ட நன்னர் (கஎ) வாய்ப்புள் (கஅ) ஆய் மகள் (கங) கையளாகிக் (கச) கன்றின் (கஉ) அலமரல் நோக்கித் (கரு) தாயர்இன்னே வருகுவரென்போளுடைய (கசா) நன்மொழியாகிய மாற்றங்கள் கேட்டனம்: அதன்கருத்தால் (கஎ) தலைவர் வருதல் வாய்வது (உய): நல்ல காரியம் (கஅ); மாயோய் (உக) நீ நின் (உய) பருவரலெவ்வங் களையென்று கூற (உக) அதுகேட்டு நெகிழ்ந்து (அஉ) என்க.

இங்ஙனம்பொருள்கூறாமல் தலைவிபக்கல் இருக்கின்ற பெருமுதுபெண்டிர் விரிச்சிகேட்டுவந்து தலைவர் வருவாராதல் வாய்வது நின்னெவ்வங்களையென்று பல் காலும் ஆற்றுவிக்கவும் ஆற்றாளாய்த் துயருழந்து (அய) புலம்பொடு (அக) தேற் றியும் திருத்தியும் (அஉ) மையல்கொண்டும் உயிர்த்தும் (அங) நகிழ்ந்துநெகிழ்ந்து (அச) கிடந்தோள் (அரு) எனப் பொருள்கூறியக்கால் செய்தற்குரிய இரங்கற்பொருட்ட ன்றி முல்லைக்குரிய இருத்தற்பொருட்டாகாமை உணர்க. அன்றியும் தலைவன் காலங் குறித்தல்லது பிரியானென்பதூஉம், அவன்குறித்தகாலங்கண்டால் தலைவிக்கு வருத்

தமிழுமென்பதூஉம், அது பாலையாமென்பதூஉம், அவ்வாற்றுறைக்கு இரங்கல் நிகழ்ந்தால் நெய்தலாமென்பதூஉம் மாறுகொளக்கூறுதலு முணர்க.

[காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து] காட்டவுங் காட்டவுங் கலுழ்சிறந்து காணாள்—தலைவன் புகழும் யானையும் எடுத்துக்காட்டி வற்புறுத்தவும், தோன்றல் சான்ற மாற்றார் பெருமையுற்றுக்காட்டி வற்புறுத்தவும் அன்புமிகுதலாற் கலக்கமிக்கு இவை அரசர்க்கு வேண்டுமென்று மனத்திற் கருதாதவள்,

பூப் போல் உண் கண் புலம்பு முத்து உறைப்ப—பூப்போலும் மையுண்கண்கள் தாரையாகச்சொரியாது தனித்துவீழ்கின்ற முத்துப்போலுந் துளியைத் துளிப்ப, அதுகண்டு,

கான் யாறு தழீஇய அகல் நெடும் புறவின்—காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே,

சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி—தூரியச்சேய்த்தே நாறுகின்ற பிடவமோடே ஏனைப் பசியதூறுகளையும் வெட்டி,

வேட்டுப் புழை அருப்பம் மாட்டி—பகைப்புலத்துக்கு அரியவாகவிருக்கும் வேட்டுவச்சாதியினுடைய அரண்களை யழித்து,

[காட்ட, இடுமுட் புரிசை ஏமுற வளைஇ] காட்ட இடுமுள் புரிசை ஏமுற வளைஇ—காட்டின்கண்ணவாகிய முள்ளாலிட்டவேலிக் காவலுறும்படி வளைத்து,

[படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி] புணரி படுநீரிற் பரந்த பாடி—திரையொலிக்கின்ற கடல்போற்பரந்த பாசறைக்கண்ணே [illegible].

புறவிடத்தே (உச) எருக்கி (உரு) மாட்டி (உசு) வளைஇப் (உஎ) பரந்த பாடி யென்க.

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்—தழையாலே வேய்ந்த கூரை ஒழுங்குபட்ட தெருவிடத்து,

கவலை முற்றங் காவல் நின்ற தேம்படு கவுள சிறுகண் யானை—வழிசந்தியாகிய முற்றத்தே காவலாகநின்ற மதம்பாய்கின்ற கதுப்பினையுடையவாகிய சிறியகண்களையுடைய யானை,

[ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த, வயல்விளை யின்குள குண்ணாது:] ஓங்குநிலைக் கரும்பொடு வயல்விளை கதிர்மிடைந்து யாத்த இன்குளகு உண்ணாது—வளர்கின்ற தன்மையையுடைய கரும்புகளோடே வயலிலேவிளைந்த நெற்கதிரிடையே நெருங்கப்பட்டுக் கட்டப்பட்ட சர்க்கரையும் இனிய *அதிமதுரத்தழையையுந் தின்னாமல்,

நுதல் துடைத்து அயில்நுனை மருப்பில் தம் கை இடைக் கொண்டு—அவற்றாலே தம் நெற்றியைத்துடைத்துக் கூர்மையையுடைய நுனிகளையுடைய கொம்பினிடத்தே ஏறட்ட தங் கையிலே கொண்டு நின்றனவாக,

[கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா இளைஞர் கவளங் கைப்ப:] கல்லா இளைஞர் வடமொழி பயிற்றிக் கவைமுட் கருவியிற் கவளம் கைப்ப—வடமொழி அடியிலேகல்லாத இளைஞர் யானைப் பேச்சான வடமொழிகளைப் பாகர் காற்சொல்லிக் கவைத்தமுள்ளையுடைய பரிக்கோலாலே கவளத்தைக் கையிலே குத்த,

---

* அட்டமதுரத்தழையென்றும் பிரதிபேதமுண்டு.

யானைக்குச்செய்யுந் தொழில்களொழிய வேறொருதொழிலைக் கல்லாத இளைஞரென்றுமாம்.

[கற்றோய்த் துடீஇப் படிவப் பார்ப்பான், முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர், ஓடா வல்விற் றூணி நாற்றிக், கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை:]

கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை—கூடமாகக் கால்களைநட்டுக் கயிற்றை வலித்துக்கட்டின இருப்பின்கண்ணே,

என்றது படங்குகளை.

கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசை நிலை கடுப்ப—துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களையுடைய முக்கோலந்தணன் அம்முக்கோலிலே அந்தஉடையினை இட்டுவைத்த தன்மையையொக்க,

நற்போர் ஓடா வல்வில் தூணி நாற்றி—அறத்தாற்பொருகின்ற போரிற்கு ஓடாமைக்குக் காரணமான வலியவில்லைச் சேரவூன்றி அதிலே தூணிகளைத்தூக்கி,

பூந்தலைக் குந்தம் குத்தி—பூத்தொழிலைத் தலையிலேயுடைய எறிகோல்களையுமூன்றி,

பூந்தலை-விகாரம்.

கிடுகு நிரைத்து—கிடுகுகளையும் நிரையக் குத்தி,

வாங்கு வில் அரணம் அரணமாக—இங்ஙனஞ்சூழும் விற்படையாகிய அரணே தங்களுக்கரணாக, இதற்குள்ளே விட்ட,

கயிறுவாங்கிருக்கைக்கண்ணே (சo) நாற்றிக் (ஙகூ) குத்தி நிரைத்து (சக) வாங்குவில்லரணமென்க.

வேறு பல் பெரும்படை நாப்பண்—பாடைவேறுபட்ட பலவாகிய பெரியபடைக்குநடுவே,

[வேறோர், நெடுங்காழ்க் கண்டங் கோலியக நேர்பு:]

வேறோர் அகம் நேர்பு—வேறோரிடத்தை அரசனுக்குக் கோயிலாக எல்லாருமுடம்பட்டு,

நெடுங்காழ்க் கண்டம் கோலி—நெடிய குத்துக்கோலுடனேபண்ணின பலநிறத்தாற் கூறுபட்ட மதிட்டிரையைவளைத்து,

கண்டம்-ஆகுபெயர்.

குறுந்தொடி முன்கைக் கூந்தல்அம் சிறுபுறத்து மங்கையர் (சஎ)—குறியதொடியையுடைய முன்கையினையும் கூந்தலசைந்துகிடக்கின்ற அழகினையுடைய சிறியமுதுகினையுமுடைய மங்கையர்,

இரவு பகற்செய்யும் திண்பிடி ஒள் வாள் விரவு வரிக் கச்சிற் பூண்ட மங்கையர்—இராப்பொழுதைப் பகற்பொழுதாக்குந் திண்ணிய * ஆசினையுடைய ஒள்ளியவாளை விரவினநிறத்தினையுடைய கச்சிலேபூண்ட மங்கையர்,

நெய் உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக் கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட—நெய்யைக்காலுகின்ற திரிக்குழாயையுடைய சிற்றுட்கள் நெடிய திரியை எங்குங்கொளுத்தி ஒழுங்காயமைந்த விளக்குக்கள் அவியுந்தோறும் தங்கையிற்பந்தத்தைக்கொளுத்த;

---

* கவிசினையுடையவென்றும், வாய்ச்சினையுடையவென்றும் பிரதிவேறுபாடுண்டு.

நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்—நெடிய நாக்கினையுடைய வொள்ளியமணி எறிந்துவிட்ட நடுவியாமத்தும்,

கோயில் பணிமடங்கினால் மணியெறிந்துவிடுதல் இயல்ப.

இனி யானை குதிரைமுதலியன துயில்கோடலின், அவற்றின் மணியோசை அடங்கிய நடுநாளென்றுமாம்.

அதிரல் பூத்த ஆடு கொடிப் படாஅர் சிதர் வரல் அசை வளிக்கு அசைவந்தாங்கு—புனலிபூத்த அசைகின்ற கொடியினையுடைய சிறுதூறுகள் துவலையோடே வருதலையுடைய அசைந்தகாற்றிற்கு அசைந்தாற்போல,

சிதர் - மெத்தெனவுமாம்.

துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப் பெரு மூதாளர் ஏமம் சூழ—மயிர்க்கட்டுக்கட்டிச் சட்டையிட்ட அசைந்தாரினையும் பெரிய ஒழுக்கத்தினையுமுடைய மெய்காப்பாளர் காவலாகச் சூழ்ந்துதிரிய,

[பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள் டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி:]

மாக்கள் பொழுது அளந்தறியும் பொய்யாக் காண்கையர்—அறிவில்லாதோருடைய வாழ்நாளை இத்துணையென்று அளந்தறியும் பொய்யாத காட்சியையுடையார்,

தொழுது தோன்ற வாழ்த்தி—அரசனைவணங்கி விளங்க வாழ்த்தி,

எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்—திரையெறிகின்ற கடல்சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச் செல்கின்றவனே,

நின் குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப—கிடாரத்துநீரிலேகாலுகின்ற நினது நாழிகைவட்டிலிற் சென்றநாழிகை இத்துணையென்று சொல்லாநிற்கின்றலே,

[மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை:]

மத்திகை வளைஇய உடை—புரவியையடிக்கின்ற சம்மட்டி வளைந்து கிடக்கின்ற உடை,

மறிந்து வீங்கு செறிவு உடை—அச்சம்மட்டி மறையும்படி உடம்புதாழ்ந்து பெருக்குஞ் செறிதலையுடைய புடைவையுடையினையும்,

மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து—சட்டையிட்ட அச்சம்வருந் தோற்றவினையும்,

வலி புணர் யாக்கை—இயல்பான வலிகூடின மெய்யினையுமுடைய,

வன்கண் யவனர்—தறுகண்மையினையுடைய சோனகர்,

புலித் தொடர் விட்ட புனை மாண் நல்லில்—புலிச்சங்கிலிவிடப்பட்ட கைசெய்தமாட்சிமைப்பட்ட நன்றாகிய இல்லிலே,

திரு மணி விளக்கம் காட்டித் திண் ஞாண் எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்—அழகினையுடைய மாணிக்கமாகியவிளக்கை எரியவைத்துத் திண்ணிய கயிற்றிற் றிரையைவளைத்த புறவறைக்குள்ளறையிற் படுக்கைக்கண்ணேசென்று,

[உடம்பி னுரைக்கு முரையா நாவிற், படம்புகு மிலேச்ச ருழைய ராக:] உரையா நாவின் உடம்பின் உரைக்கும் படம் புகும் மிலேச்சர் உழையராக—வார்த்தை சொல்லாத நாவினையுடைய கையாலும் முகத்தாலும் வார்த்தைசொல்லுஞ் சட்டையிடும் சாவாசிகள் பள்ளிகொள்ளும்கட்டிலைச் சூழ்ந்துதிரிய,

உரைப்பாராவென்றார், ஊமைகளென்றற்கு.

பகைக் அமர் நசையொடு கண்படை பெறாஅது—பகைவர் மனமறியாமல் மிக்குச் செய்கின்ற போரை நச்சுதலாலே கண்ணுறக்கம்பெறாமல்,

எடுத்து எறி எஃகம் பாய்தலிற் புண் கூர்ந்து பிடிக்கணம் மறந்த வேழம் உள்ளியும் (எ-ம்)— ஓச்சிவெட்டுகின்ற வாளூந்துகையினாலே புண்மிக்குப் பிடித்திரளைமறந்த வேழத்தையுள்ளியும்,

[வேழத்துப், பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமிய:] வேழத்துப் பருஉக்கை பாம்பு பதைப்பன்ன துமிய— யானையினுடைய பரியகைகள் பாம்பினது பதைக்கின்ற தன்மையையொத்த பதைப்பினையுடையவாக அற்றுவிழும்படி,

தேம் பாய் கண்ணி நல்வலந் திருத்திச் சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் —தேன்பரக்கும் வஞ்சிமாலைக்கு நன்றாகிய வெற்றியை யுண்டாக்கிச் செஞ்சோற்றுக் கடனிறுத்துப் பட்ட வீரரைநினைத்தும்,

தோல் துமிபு வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவி சாய்த்து உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்—பக்கரைகளை யறுத்துக் கூரியமுனையினையுடைய அம்புகள் வந்து அழுந்துகையினாலே செவிசாய்த்துப் புல்லுண்ணாதே வருந்துங் குதிரைகளை நினைத்தும்,

[ஒருகை பள்ளி யொற்றி யொருகை, முடியொடு கடகஞ் சேர்த்தி:] ஒருகை பள்ளி ஒற்றி ஒருகைக் கடகம் முடியொடு சேர்த்தி—ஒருகையைப் படுக்கையின்மேலேவைத்து ஒருகையிற்கடகத்தை முடியோடேசேரவைத்து,

என்றது - கையிலே தலையைவைத்தென்றாயிற்று.

நெடிது நினைந்து— இப்படை நொந்தவளவுக்கு நாளை எவ்வாறு பொருமென்று நெடிதாகநினைந்து,

பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்— பகைவரைக்கருதிவைத்த வாளைப்பிடித்த வலியினையுடைய கையாலே வெட்டிவென்று (அக) என்க.

நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி— தனக்கு எக்காலமும் விளக்கந்தங்கும் வஞ்சியை நன்றாகிய வெற்றியை நிலைபெறுத்தி,

அரசு இருந்து பனிக்கும் பாசறை (எக) — பகையரசிருந்து நடுங்குதற்குக்காரணமான பாசறை,

பனிக்கும் பாசறை— *நோய்தீருமருந்துபோனின்றது.

முரசு முழங்கு பாசறை—வெற்றிக்களிப்புத்தோன்ற முரசுமுழங்கும் பாசறை,

[இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து, நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு. நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு, மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து, மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்த:]

வதியுநன் இன்றுயில் காணாள்— தன்னிடத்தே தங்குகின்றவனை இனியதுயில் கொள்ளுதலைக் காணாளாய்,

நெஞ்சு ஆற்றுப்படுத்த புலம்பொடு—அவன் தன்னெஞ்சந் தான்போகின்றவழியிற் செலுத்துதலால் தனக்குண்டான தனிமையாலே,

---

* கலித்தொகை, இரண்டாவதுகுறிஞ்சிக்கலி, உரு. "அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப் - பேரம ருண்கணென் றோழி யுறீஇய - வாரஞ ரெவ்வ முயிர்வாங்கு - மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீஇ"

இது * "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்" என்பதாம்.

நிறைதபு புலம்பு— தனதுநிறைகெடுத்ததனிமை,

நீடு நினைந்து—இங்ஙனம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நிகழாதென்று நினைத்து,

ஓடு வளை திருத்தியும்— கழலுகின்றவளையைக் கழலாமற் செறித்தும்,

மையல்கொண்டும்— மயக்கங்கொண்டும்,

ஓய்யென உயிர்த்தும்— விரைய நெட்டுயிர்ப்புக்கொண்டும்,

ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து — அம்புதைத்த மயில்போல நடுங்கி அணிகலங்கள் நெகிழ்ந்து கலம்புலம்புறைப்ப (௨௩) எனக் கூட்டுக.

துயருழந்து தேற்றியும்— அதனைக்கண்டு தானும் வருத்தமுற்று இவள்ஆற்றியிராளென்று துணிந்தும்,

பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல —பொற்பாவை ஏந்திநின்ற தகளியிலே பரியவிளக்கு நின்றெரிய,

விளக்கு - ஆகுபெயர்.

இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து — தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும் மணியாலும் சிறப்புப்பெற்று உயர்ந்த எழுநிலையினையுடைய மாடத்திடத்து,

முடங்கிறைச் சொரிதரும் மாத் திரள் அருவி— † மூட்டுவாய்களினின்றுஞ் சொரிதலைச்செய்யும் பெருமையையுடைய திரண்ட அருவிகளினுடைய,

இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்— இனிய பலவாகிய முழங்குகின்ற ஓசைக்கண்ணே தலைவன் தான்கூறிய பருவம் பொய்யாமல் வருமென்னுங் கருத்தினளாகலின் அவனவரவினையே கருதிக்கிடந்தோளுடைய,

அஞ்செவி நிறைய ஆலின— அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன;

[வென்றுபிறர், வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு, விசயம்;]

வென்று— வெட்டிவென்று,

பிறர் வேண்டு புலம் கவர்ந்த விசயம்— பகையரசர் எக்காலமும் விரும்பும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியாலே,

ஈண்டு பெருந்தானையொடு— திரளுகின்ற பெரியபடையோடே,

அரசன் வினைமுடிந்தகாலத்தே விரைந்துபோந்தானாகலின், அதுகேட்டுவருகின்ற படையென்பதுதோன்ற ஈண்டுபெருந்தானை யென்றார்.

வெல்கொடி உயரி— எக்காலமும் வென்றெடுக்கின்ற கொடியை எடுத்து,

வலனேர்பு வயிரும் வளையும் ஆர்ப்ப— வெற்றிதோன்றிக் கொம்புஞ்சங்குமுழங்க,

அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர— நுண்மணலிடத்தனவாகிய நெருங்கின இலையினையுடைய காயா அஞ்சனம்போல அவிழ,

முறி இணர்க் கொன்றை நன்பொன் கால— தளிரினையுங் கொத்தினையுமுடைய கொன்றை நன்றாகிய பொன்னைச்சொரிய,

கோடற் குவிமுகை அங்கை அவிழ— கோடலினது குவிந்தமுகைகள் அகங்கை போலவிரிய,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௪௪.

† கூடுவாயென்றும் பிரதிபேதமுண்டு.

தோடார் தோன்றி குருதி பூப்ப — இதழ்நிறைந்த தோன்றி உதிரம்போலப் பூப்ப,

கானம் நந்திய செந்நிலப் பெருவழி — காடுதழைத்த சிவந்தநிலத்திற் பெருவழியிலே,

[வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலையொடு மடமா னுகள, எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்:]

வானம் வாய்த்த வரகு — மழைவேண்டப் பெய்தவரகு,

எதிர் செல் வெண்மழை பொழியும் திங்களில் வாங்கு கதிர் வரகின் — எதிர்காலத்துக்குப் பெய்யச்செல்கின்ற வெள்ளியமழை சிறுதுவலையைப்பொழியும் முனைபனிதொடங்குந் திங்களிலே விளைகின்ற கதிரையுடைய வரகிடத்தே,

திரி மருப்பு இரலையொடு மடமான் உகள — முறுக்குண்ட கொம்பினையுடைய புல்வாய்க்கலையோடே மடப்பத்தையுடைய மான் துள்ள,

மழையால் தழைக்கும் புல்லும் நீரும் நிறையப்பெற்றுப் புணர்ந்துதிரியுமென்ற கருப்பொருளால், அவற்றைக்கண்ட அரசனுக்கு வேட்கை மிகுதிகூறிற்று.

மலைக் (கூக) கால (கூஉ) அவிழ்ப் (கூரு) பூப்ப (கூச) உகளக் (கூசா) கானத்தியபெருவழி (கூஎ) யென்க.

இவையெல்லாம் வேட்கைமிகுதற்குக் காரணமாயின.

முதிர் காய் வள்ளியங்காடு பிறக்கு ஒழிய — தன்பருவம் வந்தால் முதிருங்காயை யுடைய வள்ளியங்காடு பின்னாக,

துனை பரி துரக்குஞ் செலவினர் — விரைந்துசெல்லும் பரியை அதனுனையை யாமறக் கடிதாகச்செலுத்துஞ் செலவினையுடையராய்வந்தவருடைய,

என்றது — * "வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, யிடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான" என்பது தோன்றக் கூறிற்று.

வினை விளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே — தானெடுத்துக்கொண்ட வினை எக்காலமும்விளங்கும் நெடிதாகிய தேரைப்பூண்டகுதிரை.

தலைவி துணைவரைவிட்டுத் தவறின்றலைவனை இன்றயிலைக்காணுறோளாய் (அ०) நெஞ்சாற்றுப்படுத்த புலம்பொடே (அக) ஓடுவளை திருத்தியும் (அஉ) மையல்கொண்டும் உயிர்த்தும் (அ௩) நடுங்கிக்கிடந்து (அச) பூப்போலுண்கண் புலம்புமுத்துறைப்ப (உகூ) அதுகண்டு தயருறுந்து (அ०) தேற்றியும் (அகூ) வற்புறுத்திப் பிரிதல்வேண்டுமெனக் கருதிக் காடலுங் காட்டவுங்காணுறதவள் (உஉ) பெருமுதுபெண்டிர் (௩०) எவ்வங்களோடைனக்கூற (உக) அதுகேட்டு நீடுநினைந்து (அஉ) பெரும்பெயல்பொழிந்த சிறுபுன்மாலையில் (கூ) இட்டசுடர் அழலாநிற்க (அரு) இம்மிழிசை ஓர்ப்பனள் கிடந்தோளுடைய (அஅ) அஞ்செவிநிறையப் (கூ०), பாசறைப்பாடியிலே (உஅ) அரசிருந்து (எக) ஒருகைபள்ளிபொற்றி ஒருகை (எரு) முடியொடுசேர்த்தி (எசு) வேழத்தை (சாகூ) புள்ளியும் (எஉ) மாவைச்சிந்தித்தும் (எச) ஒழிந்தோரை உள்ளியும் (எஉ) நினைந்து (எசு) நடுங்குதற்குக்காரணமான பாசறையிற் (எகூ) பெருமபடைநாப்பண் வேந்தன் (சாக) அகம் நேர்பு கண்டவுங்கோலி (சா௩) யவனர் (சாக) புலித்தொடர்விட்ட நல்லில்லிலே (சாஉ) பொழுதளந்தறியும் (ருரு) காண்கையர் (ருசா) கன்னல் அளைத்தென்றிசை

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ருகூ.

க்கையினுள்ளே (௫௮) மங்கையர் (௪௭) நிறை ஒளிவிளக்கங்காட்டி (௬௫) எழினிவா ங்கிய பள்ளியிலே சென்று (௬௪) இளையர் கல[illegible]வைப்பச் (௬௩) ச[illegible] (௬௮) மா ட்டப் (௬௧) பெருமூதாளர் ஏமஞ்சூழ (௫௪) பிலேச்சருறையாக (௬௬) வெண் மணிநிழற்றிய நடுநாளினும் (௫௦) மண்டமர் நசையாற் கண்படை பெறாது இருந்து (௬௭) மற்றைநாட் படைகொண்டுறுன் விரலாலே (௭௭) வென்று (௭௯) கல்லெறிவலந் திருத் திப் (௭௮) பிறர்வேண்டு புலங்கவர்ந்த (௯௦) விசயத்தாலே வெல்கொடியுயரிக் (௯௧) காடுபிறக்கொழியப் (௯௭) பெருவழியிலே (௯௫) வயிரும் வளையுமார்ப்ப (௯௨) சண்டு பெருந்தானையோடே (௯௩) துணைபிரிந்தாரக்குஞ் செலவினையுடையராய் வந்தவ ருடைய (௧௦௨) தேர்பூண்டமா (௧௦௩) ஆலின (௧௦௩) வென வினைமுடிக்க.

* "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த தவிர்ச்சி யாகும்" என்பதனால் வற்புறுத்திப்பிரிதல்வேண்டுமென்றுணர்க.

தொல்காப்பியனார் கருத்திற்கேற்ப நப்பூதனார் செய்யுள் செய்தாரென்றுணர்க. இவ்வாறன்றி ஏனையோர்கூறும்பொருள்கள் இலக்கணத்தோடு பொருந்தாவமையுணர்க.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா.

௧ வண்டடை கண்ணி வளர்ச்சி விர்லெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ - தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுதிர்த்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

௨ புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துணைபடைத் துன்னார் - முனையு
ளடன்முகந்த தானை யவர்வார முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௪௭.

ஆறுவது

மதுரைக்காஞ்சி.

ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
வோங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர் *பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பி
னிணம்வாய்ப்பெய்த பேய்மகளி
ரிணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
வஞ்சுவந்த போர்க்களத்தா
னாண்டலை யணங்கடுப்பின்

---

* பூரியவிழுத்தெருவென் றும்பாடம்.

வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கி விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
வாடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவ
னடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
வமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவு
மாவெடுத்த மலிகுரூஉத்துக
ளகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவு
மிருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்று
மிலங்கருவிய வரைநீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்ற
லுயர்ந்தோங்கிய விழுச்சிறப்பி
னிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பல்
மரந்தின்னூஉ வரையுதிர்க்கு
நரையுருமி னேறனைய
யருங்குழூமிளைக் குண்டுகிடங்கி
னுயர்ந்தோங்கிய நிரைப்புதவி
னெடுமதி னிரைஞாயி

லம்புமி ழுயிலருப்பந்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பிற்
றென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனாகுவை
வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசையிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்
கயமகைய வயனிறைக்கு
மென்றொடை வன்கிழா அ
ரதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
யிரும்பு ளொப்பு மிசையே யென்று
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பி
னிருபெயர்ப் பேராயமொ
டிலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியு

நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே
கல்காயுங் கடுவேனிலொடு
இருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகல் மீன்பிறழினும்
வெள்ளமா றாது விளையுள் பெருக
நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றுஞ்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக் கானன் முழவுத் தாழைக்
*குளிர்ப்பொதும்பர் நளித்தூவ
னிறை திமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
யிருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொ
டொலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்

* குளிர்ப்பொதும்பென்றும்பாடம்.

தஞ்சுவரத் தட்டு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன் குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
யொன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
யரிய வெல்லா மெளிதி னிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி
நனிபுகன் றுறைது மென்றுதேற் றெழுந்து
பனிவார் சிமயக் கானம் போகி
யகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குரிசி
லுறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலைதொலைச்சி
யிழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
வாசேந்தவழி மாசேப்ப
வூரிருந்தவழி பாழாக
விலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
வவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
வணங்குவழங்கு மகலாங்க
ணிலத்தாற்றுங் குழூஉப்புதவி
னரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர
நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள
வாஅ ழாமையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎ

வெழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத்தா ளுயர்மருப்பிற்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையொடு
முருகுறழ்ந் தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடுகெட வெயில்வெளவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
யரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றங்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்க
முயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
*பழிநமக் கொழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமொ டிசைவேட் குவையே
யன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவ னடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலங்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை
தவாப்பெருக்கத் தறாயாண
ரழித்தானாக் கொழுந்திற்றி
யிழித்தானாப் பலசொன்றி

* பழிநமக்கெழுக வென்றும்பாடம்.

புண்டாணுக் கூர்ந்தலிற்
றின்றாணு வினைவைக
னில்லெனுக் கல்லா வொண்டாள் வெறுக்கை
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்பக் களிறு பலதரீஇக்
கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் றாள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
யிரவு மெல்லையும் விளிவிட னறியா
தலைஇ மிசைபுநீர் நிரந்தெனப் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்பெயல் சிறத்தலிற் றாங்கா
துணைகடற் கிவர்தரு குரூஉப்புனற் றுந்தி
நிவந்துசென் னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
யொளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை

கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்
கரும்பி னெந்திரங் கட்பி னோதை
யள்ளற் றங்கிய பகடுறு விழுமங்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
யொலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிப்பறை யின்குரற்
றளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயந்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடு மிசையே யனைத்து
மகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்
சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
வாழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
வெழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழல்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய

குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
யைவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
யிஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசன்
மணிப்பூ வவரைக் குருஉத்தளிர் மேயு
மாமா கடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூசல் * இருங்கே
ழேறடு வயப்புலிப் பூசலொ டனைத்து
மிலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீஇ யொருசா
ரிருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலி னொலிக்குஞ் சும்மை
யிலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற் குன்றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட றந்த விளங்குகதிர் முத்த
மரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளைப்
பரதர் தந்த பல்வேறு கூல
மிருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்

* இருங்கேழலென்றும் பாடம்

புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைகறோறும் வழிவழிச் சிறப்ப
செய்ந்நல் சான்ற வளம்பல பயின்றாங்
கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழ் மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
யின்கலி மகளிர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவட்
கலைதாய வுயர்சிமயத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனற் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறுந்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வர
லவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையு
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் * வான விறல்வே
ளழும்பி லன்ன நாடிழந் தனருங்
கொழும்பல் பதிய குடியிழந் தனருந்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
வண்ணல் யானை யடுபோர் வேந்த
ரின்னிசை முரச மிடைப்புலத் தொழியப்
பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்

---

* மானவிறல் வேளென்றும் பாடம்.

*சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
யோவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்கு நோன்கயி றரீஇ யிதைப் புடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி யன்றொடர் பேணாது காஅய்க்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையு
மங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்
தொன்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதந்து
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராவிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேருங்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலி
னடிபடு மண்டிலத் தாதிபோகிய
கொடிபடு சுவல் இடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களமர் இருஞ்செரு மயக்கமு

* சில்காற்றசைக்குமெனவும் பாடம்.

மரியவும் பெரியவும் வருவன பெய்தலிற்
றீம்புழல் வல்சிக் கழற்கால் மழவர்
பூந்தலை முழவி னொன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பல்வகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றினர்
இருங்கலை வந்த பணைமுனை கடுப்ப
வின்னுயி ரஞ்சி யின்னு வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத் திரி விலைஞர
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருந்தா
விருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்க
ணிணைஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்
சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தன்
மயிலிய லோரு மடமொழி யோருங்
*கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றும்வேண்டும் பண்ணியங்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட

---

* கைஇயென்றும்பாடம்.

ஞெளங் காடி கணைத்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி
மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றுவற விளங்கிய வாய்பொ னவிரிழை
யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
வொர்ண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண்கா ழேற்ற வியலிரு விலோதந்
தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறு
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமா
ர்ந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பரவிச்

சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியுஞ்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் * தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
வச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களு
மறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்

* ஒருதிரமாகியென்றும் பாடம்.

பல்வேறு பண்டமோ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரு
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவுங்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினருஞ்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நருஞ்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களு
மெண்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
*தண்கட னாட் டொண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனுங்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி †யடகு
மமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேஊன் சோறுங்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவு
மின்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்

---

* தெண்கடனாடனென்றும் பாடம்.
† அடருமென்றும் பாடம்,

தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத
மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
யல்லங் காடி யழிதரு கம்பலை.
யொண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
றண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவா னியந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநக
ரெல்லை யெல்லா நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்கநா ணுக்கொள
வேழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
*தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
விளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா தூண்டு வறும்பூத் துறக்கு

* தாழ்பெயலென்றும் பாடம்.

மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லி
லாய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளி
ரொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீணிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாட்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக்
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவொ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
னொண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக்கை தொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்

ரருங்கடி வேலன் முருகொடு வளைஇ
யரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறு
முரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை
யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகையமை மோதகந்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
விரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மானுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக முளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கணையினர்

தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமு
மசைவில லெழுந்து நியம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலு
மச்ச மறியர் தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுளைத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ னவிரிழை * தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுர லேன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
†வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
விமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யாணையங் குருகின் சேவலொடு காம
ரன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன

---

* தெளிர்ப்ப வென்றும் பாடம்.

† வேதாளிய ரென்றும் பாடம்.

வம்மென் குரும்பைக் காய்படு பிறவுந்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப
விரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
யிடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளிய
ரூர்சுடு விளக்கிற் றந்த வாயமு
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடார வந்த விழுக்கல மனைத்துங்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ டன்ன சாயன் மாவின்
றளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட் கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடும் பெரும்போது புரையும் வாண்முகத்
தாய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து
திண்கா ழார நீவிக் கதிர்விடு
மொண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
வெருக்கந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்

வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்க
முடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் றாள்வலம் * வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
†வெரிநிமிர்ந் தன்ன தானை நாப்பட்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பி
னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மி
னிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செய் யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
விருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங்
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களந்தோறுங் கள்ளரிப்ப
மரந்தோறு மைவீழ்ப்ப

---

* பழிச்ச வென்றும் பாடம்.
† எரிநிகழ்ந் தென்றும் பாடம்.

நிணவூன்சுட் - டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குருஉக்குய்ப் புகை மழைமங் குலிற்
பரந்துதோன்று வியன்காற்
பல்சாலை முதுகுடுமியி
னல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பி
னிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி,
யரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவ னாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச
ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்ன
ரவரும் பிறருந் துவன்றிப் பொற்பு
விளங்கும் புகழவை நிற்புகழ்ந் தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியென்று மதுரைப்பெயரா லன்றித் திணைப்பெயரானும் பெயர்கூறினார். இத்திணைப்பெயர் பன்னிருபடலமுதலிய நூல்களிற்கூறிய திணைப்பெயரன்று; தொல்காப்பியனார்கூறிய திணைப்பெயரிற் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின். வஞ்சி மேற்செல்லலானும், காஞ்சி எதிரூன்றலானும் "வஞ்சியுங் காஞ்சியுந் தம்முள் மாறே" எனப் பன்னிருபடலத்திற்கூறிய திணைப்பெயர் இப்பாட்டிற்குப் பொருளன்மையு ணர்க. அவர் முதுமொழிக்காஞ்சிமுதலியவற்றைப் பொதுவியலென்று நூற்படல மாக்கிக் கூறலின், அவை திணைப்பெயராகாமையுணர்க.

இனி மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும்பொருளும் உடன்றொக்கது. * "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" என்பதனாற் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. அது † "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு - நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." என்பதாம். இதன்பொருள். பாங்கு அருஞ்சிறப்பின் - தனக்குத் துணையில்லாத வீடுபேறு நிமித்தமாக; பல் ஆற்றானும் - அறம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியானும், அவற்றுட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையு முதலியவற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து அக்காஞ்சியென்றவாறு. எனவே வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறுநிலையாமை சான்றோரறையுங் குறிப்பினது காஞ்சித்திணையென்பதுபொருளாயிற்று.

இச்செய்யுட்புலவர் இப்பொருடோன்றக் கூறலின், யாம் இப்பொருளெதிர உரைகூறுகின்றாம்.

[ஓங்குதிரை வியன்பரப்பின், ஒலிமுந்நீர் வரம்பாக] வியலை பரப்பின் ஓங்கு திரை ஒலி முந்நீர் வரம்பாக— அகலத்தையுடைத்தாகிய நீர்ப்பரப்பின்கண்ணே ஓங்குதிரை ஒலிக்குங் கடல் எல்லையாக,

தேன் தூங்கும் உயர் சிமைய மலை நாறிய வியன் ஞாலத்து— தேனிறால்தூங்கும் உயர்ந்த உச்சியையுடைய மலைகள் தோன்றிய அகலத்தையுடைய ஞாலத்தின்கண்ணே,

வலம் மாதிரத்தான் வளி கொட்ப— வலமாக ஆகாயத்தின்கண்ணே காற்றுச் சுழல,

வியன் நாள்மீன் நெறி ஒழுக—அகலத்தையுடைய நாள்மீன்கள் தாம் நடக்கு நெறியின்கண்ணே நடக்க,

பகற் செய்யும் செஞ்ஞாயிறும்— பகற்பொழுதை உண்டாக்குஞ் சிவந்தபகலோனும்,

இரவுச் செய்யும் வெண்டிங்களும்—இராப்பொழுதை உண்டாக்கும் வெள்ளிய மதியும்,

மை தீர்ந்து கிளர்ந்து விளங்க — குற்றமறத் தோன்றிவிளங்க,

மழை தொழில் உதவ — மேகந் தானே பெய்தற்றொழிலை வேண்டுங்காலத்தேதர,

உழவுத்தொழிற்கு உதவவென்றுமாம்.

மாதிரம் கொழுக்க— திசைகளெல்லாந் தழைப்ப,

மலைகள் விளைந்துகொழுக்கவென்றுமாம்.

[தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய] தொடுப்பின் வித்தியது ஆயிரம் விளைய— ஒருவிதைப்பின்கண்ணே விதைத்தவிதை ஆயிரமாகவிளைய,

நிலனும்—விளைநிலங்களும்,

மரனும்—மரங்களும்,

பயன் எதிர்பு நந்த— பல்லுயிர்க்குந் தம்பயன்கொடுத்தலை ஏற்றுக்கொண்டு தழைப்ப,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் - உ
† ,, ,, ,, உரு.

நோக்கு இகந்து நோக்கு விளங்க— மக்கட்குப் பசியும்பிணியுநீங்கி அழகுவிளங்க,

[மேதக மிகப்பொலிந்த, வோங்குநிலை வயக்களிறு:] மிகப் பொலிந்த ஓங்குநிலை வயக் களிறு மேதக — அறவும்பொலிவுபெற்ற உலகத்தைத்தாங்குதல் வளருந்தன்மையையுடைய வலியையுடையவாகிய திக்கயங்கள் இவர்தாங்குதலின் வருத்தமற்று மேம்பாடுதக,

அருளும் படையுமாகப் பண்ணினவிடத்துப் பண்ணிநிற்கும் யானையென்றுரைப்பாருமுளர்.

[கண்டுதண்டாக் கட்கின்பத், துண்டுதண்டா மிகுவளத்தான்:]

உண்டு தண்டா மிகு வளத்தான்— உண்டு அமையாத உணவுமிகுகின்ற செல்வத்தோடே,

கண்டு தண்டாக் கட்கு இன்பத்து—நோக்கியமையாத கட்கினிமையினையும்,

உயர் பூரிம விழுத் தெருவில்—உயர்ந்த சிறகுகளையுமுடைய சீரிய தெருவிலிருக்குமாந்தர் (உ0),

பூரிமம் - சாந்திட்ட தொட்டிகளென்பாருமுளர்.

[பொய்யறியா வாய்மொழியாற், புகழ்நிறைந்த நன்மாந்தரொடு:] வாய்மொழியாற் புகழ் நிறைந்த பொய் அறியா நன்மாந்தரொடு — மெய்ம்மொழியே எக்காலமுங் கூறுதலாற்பெற்ற புகழ்நிறைந்த பொய்யைக்கேட்டறியாத நல்ல அமைச்சருடனே,

நல் ஊழி அடிப் படர — நன்றாகிய ஊழிக்காலமெல்லாந் தமக்கு அடிப்பட்டு நடக்க,

பல் வெள்ளம் மீக் கூற—பலவெள்ளமென்னும் எண்ணைப்பெற்ற காலமெல்லாம் அரசாண்டதன்மையை மேலாகச்சொல்லும்படி,

உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக — உலகத்தையாண்ட உயர்ச்சிபெற்றோர் குடியிலுள்ளவனே,

மாதிரங் கொழுக்க (க0) வித்தியது விளைய (கக) நிலனும் மரனும் நந்த (கஉ) வளிகொட்கையிற்றுலே (ரு) மழைதொழிலுதவ (க0) வெனமுடிக்க.

வியன்ஞாலத்திடத்தே (ச) மழைதொழிலுதவ (க0) நாண்மீனெறியொழுக (கூ) ஞாயிறுந் (எ) திங்களும் (அ) விளங்க (கூ) நோக்குவிளங்கக் (கரு) களிறு (கரு) மேதக (கசு) நன்மாந்தரோடே (உ0) ஊழியடிப்பட்டு நடக்கும்படி (உக)மீக்கூற (உஉ) முந்நீர்வரம்பாக (உ) உலகமாண்ட உயர்ந்தோர்மருகவெனமுடிக்க.

இவர்கள் தருமத்திற் றப்பாமனடத்தவே இக்கூறியவையும் நெறிதப்பாமல் நடக்குமென்றார்.

பிணங்கு கோட்ட களிற்றுக் குழும்பின் நிணம் வாய்ப்பெய்த பேய் மகளிர்—பிணங்கலையுடைய கொம்புகளையுடையனவாய்ப் பட்ட ஆனையினுடைய திரளின் நிணத்தைத்தின்ற பேய்மகளிருடைய துணங்கை (உசு),

இணை ஒலி இமிழ் துணங்கைச் சீர்— இணைத்த ஆரவாரமுழங்குகின்ற துணங்கைக்கூத்தின் சீர்க்கு,

பிணை யூபம் எழுந்து ஆட— செறிந்த குறைத்தலைப்பிணம் எழுந்துநின்று ஆடுகையின்றலே,

அஞ்சுவந்த போர்க்களத்தான்— அஞ்சுதலுண்டான போர்க்களத்திடத்தே,

ஆண் தலை அணங்கு அடுப்பின் — ஆண்மக்கள் தலையாகிய நோக்கிறவரைவருத்தும் அடுப்பின்கண்ணே,

வய வேந்தர் ஒண் குருதி சினத் தீயிற் பெயர்பு பொங்க — வலியினையுடைய வேந்தருடைய ஒள்ளிய குருதியாகிய உலை சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினாலே,

[தெறலருங் கடுந்துப்பின், விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற், றொடித்தோட்கை துடுப்பாக, வாடுற்ற வூன்சோறு, நெறியறிந்த கடிவாலுவ, னடியொதுங்கிப் பிற்பெயராப், படையோர்க்கு முருகயர:]

தொடித் தோள் கை துடுப்பாக ஆடுற்ற ஊன் சோறு — வீரவளையையுடையவாகிய தோளையுடையகைகள் துடுப்பாகக்கொண்டு துழாவி அடுதலுற்ற ஊனுடையசோற்றை,

நெறி அறிந்த கடி வாலுவன் — இடுமுறைமையறிந்த பேய்மடையன்,

தெறல் அருங் கடுந் துப்பின் விறல் விளங்கிய விழுச் சூர்ப்பின் அடி ஒதுங்கிப் பிற்பெயராப் படையோர்க்கு முருகு அயர — பகைவராற் கோபித்தற்கரிய கடிய வலியினையும் வெற்றிவிளங்கிய சீரிய கொடுந்தொழிலினையுமுடையராய் இட்டஅடி வாங்கிப் பின்போகாதவீரர்க்கு வேள்விசெய்யும்படி,

அமர் கடக்கும் வியன் தானை — போரைவெல்லும் அகலத்தையுடைய படையினையுடைய,

போர்க்களத்து (உஅ) ஆடுற்றசோற்றை (ஙரு) வாலுவன் (ஙகூ) அடிபெயரா (ஙஎ) வீரர்க்கு முருகயரக் (ஙஅ) கடக்குந்தானையென்க.

[தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந:]

வரைத் தாழ் அருவிப் பொருப்பிற் கடவுள் — பக்கமலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையிலிருக்குங் கடவுள்,

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின் தொல் முது கடவுட் பின்னர் மேய பொருந — இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமைமுதிர்ந்த அகத்தியன்பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்குமேவின ஒப்பற்றவனே,

* "திசைநிலைக் கிளவி யாஅ குநவும்" என்றதனால், இராவணன் தென்றிசையாண்டமைபற்றித் தென்னவனென்றார், இப்பெயர் பாண்டியற்குங் கூற்றுவற்கும் எற்றவின்றாற்போல. அகத்தியனைத் தென்றிசையுயர்ந்த நொய்ம்மைபோக இறைவனுக்குச் சிறப்பாஇருந்தானென்பதுபற்றிக் கடவுளென்றார். இராவணனைருதல் பாயிரத்துச்சூத்திரத்து உரையாசிரியர்கூறிய உரையானுமுணர்க.

இனி † "முத்தோர் முறுவலாய் நாமணம் * * * எக்கடவுண் மற்றக் கடவுள்" என இருடிகளையுங் கடவுளென்றுகூறியவாற்றானுங்காண்க.

இதனால், அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக்கூறினார்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ருங.

† கலித்தொகை, மூன்றாவதுமருதம், உஅ:—"முத்தோர் முறுவலாய் நாமணம் புக்கக்கா - லிப்பொழுது பொழுதென் றதுவாயப்பக் கூறிய - வெக்கடவுண் மற்றக் கடவுள்,"

கூற்றுவனையுதைத்தகடவுளென்று இறைவனாக்கி, அவன்பின்னனென்றது அக [illegible]னையென்றுபொருள்கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையாலும், அப்பொருடருங்காலத்து * "முன்னவன் பின்னவன்", "முன்னோன் பின்னோன்" என்றல்லது அச்சொல் நில்லாமையானும் அதுபொருந்தாது. † "முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள - பின்னரும் பீடழிக்கு நோயுள" எனவும் பிறாண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்தியேநிற்குமென்றுணர்க.

பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு.

விழுச் சூழிய—சீரியமுகபடாத்தையுடையவாய்,

விளங்கு ஓடைய—விளங்குகின்ற பட்டத்தையுடையவாய்,

கடுஞ்சினத்த — கடிய சினத்தையுடையவாய்,

கமழ் கடாத்து அளறு பட்ட நறுஞ் சென்னிய —கமழுகின்றமதத்தாலேசேறுண்டான நறியதலையினையுடையவாய்,

வரை மருளும் உயர் தோன்றல—வரையென்றுமருளும் உயர்ந்த தோற்றத்தினையுடையவாய்,

வினை நவின்ற பேர் யானை—போர்த்தொழிலிலேபயின்ற பெரியயானை,

இச் செய்தெனெச்சக்குறிப்பாகிய வினையெச்சமுற்றுக்கள் அடுக்கிவந்தனவற்றை நவின்றவென்னும் பெயரெச்சத்தோடு முடிக்க.

சினஞ் சிறந்து களன் உழக்கவும் — சினமிக்குக் களத்துவீரரைக் கொன்றுதிரியவும்,

மா எடுத்த மலி குரூஉத் துகள் அகல் வானத்து வெயில் கரப்பவும்—குதிரைத்திரள் பகைவர்மேற்செல்லுதலாலுண்டான மிக்கநிறத்தையுடையவாகியதூளி அகலுதற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலைமறைக்கவும்,

வாம பரிய கடுந் திண்டேர் காற்று என்னக் கடிது கொட்பவும்—தாவுங்குதிரைகளையுடைய செலவுகடிய திண்ணியதேர் காற்றுச்சுற்றியடித்ததென்னக் கடிதாகச் சுழலவும்,

[வாண்மிகு மறமைந்தர், தோண்முறையான் வீறுமுற்றவும்:] வாள் மிகு மறம் மைந்தர் தோள் வீறு முறையான் முற்றவும்—வாட்போரான்மிகுகின்ற மறத்தையுடைய வீரருடையதோள் வெற்றிமுறையாகவெட்டுதலான் முற்றுப்பெறவும்,

‡ "விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூணற வெறிந்தாங்கவ னினதாழினி யெனவே" என்றார் பிறரும்.

---

* திருச்சிற்றம்பலக்கோவையார், ககஉ:— "மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள் - வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்-காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கட்-பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே."

† நாலடியார், ஙை, உ:—"முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள - பின்னரும் பீடழிக்கு நோயுள - கொன்னே - பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும் - கரவன்மின் கைத்துண்டாம் போழ்து."

‡ சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், கசுச:— "விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற்-கரும்பூணற வெறிந்தாங்கவ னினதாழினி யெனவே - யெறிந்தானவ் விடைபோழ்ந்தமை யுணராதவ னின்றான் - சொரிந்தார்மல ரமங்கையர் தொழுதார்விசும் படைந்தான்."

இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப் பொருது அவரைச் செரு வென்றும்—சேரன்சோழனாகிய இருவராகிய பெரியஅரசருடனே குறுநிலமன்னரும் இளைக்கும்படி பொருது அவரைப் போரைவென்றும் அமையாமல்,

உம்மை - சிறப்பும்மை.

[இலங்கருவிய வரைநீந்திச், சுரம்போழ்ந்த விகலாற்ற, லுயர்ந்தோங்கிய விழுச் சிறப்பின்:]

உயர்ந்து இலங்கு அருவிய வரை நீந்தி ஓங்கிய விழுச் சிறப்பின்—உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநிலமன்னரையெல்லாம்வென்று உயர்ந்த சீரிய தலைமையினாலே,

இகல் ஆற்றற் சுரம் போழ்ந்த சிறப்பின்—மாறுபாட்டைநடத்துந் தலையுடைய பகைவர்காடுகளைப் பலவழியாகப்பிளந்த சிறப்பினாலே,

நிலம் தந்த பேர் உதவி—நாட்டிலிருக்கின்ற அரசர்நிலங்களையெல்லாங்கொண்ட பெரியஉதவியையும்,

மலையும் காடும் அரணாகஇருந்தஅரசரை அழித்தவலியாலே நாட்டிலிருக்கின்ற அரசர் தத்தம்நாடுகளைவிட்டாரென்றதாம்.

பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்—பொன்னாற்செய்த தாரையணிந்த மார்பினையுமுடைய வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில்வந்தோனே,

யானை (௬௭) கானுழக்கவும் (௬௮) துகள் (௬௯) வெயில்கரப்பவும் (௫௦) தேர் (௫௧) கொட்பவும் (௫௨) மைந்தர் (௫௩) முற்றவும் (௫௪) பொருதுசெருவென்றும் அமையாமல் (௫௫) விழுச்சிறப்பின (௫௯) நிலந்தந்தஉதவியினையும் (௬௦) மார்பினையுமுடையநெடியோனென்க.

மரம் தின்னூஉ வரை உதிர்க்கும் நரை உருமின் ஏறு அனையை — மரங்களைச் சுட்டு மலைகளைநீறாக்கும் பெருமையினையுடைய உருமேற்றையொப்பை,

"கருநரைநல்லேறு" என்றார்பிறரும். இன் - அசை.

அருங் குழுமிளை—பகைவர்சேர்தற்கரிய திரட்சியையுடைய காவற்காட்டினையும்,

குண்டு கிடங்கின்—ஆழத்தினையுடையகிடங்கினையும்,

உயர்ந்து ஓங்கிய நிரைப் புதவின்—உயர்ந்துவளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும்,

நிரை - ஆகுபெயர். உயர்ச்சி ஓங்குதலைவிசேடித்துநின்றது.

நெடுமதில்—நெடியமதிலினையும்,

நிரைஞாயில்—நிரைத்த சூட்டினையுமுடைய,

அஃது எய்தால்மறைதற்கு உயரப்படுப்பது.

[அம்புடை முயிலருப்பம்:] அயில் அம்பு உமிழ் அருப்பம்—கூரிய நுனியையுடைய அம்புகளையுமிழும் அரண்களை,

மிளை (௬௪) முதலியவற்றையுடைய அருப்பமென்க.

தண்டாது தலைச் சென்று கொண்டு நீகிய விழுச் சிறப்பின்—அமையாமல் அவ்விடங்களிலேசென்று கைக்கொண்டு அவ்விடங்களினின்றும்போன சீரிய தலைமையினையுடைய கொற்றவர் (௭௪),

[தென்குமரி வடபெருங்கல், குணகுட கடலாவெல்லை:] தென் குமரி எல்லை ஆ வட பெருங்கல் எல்லை ஆக் குண குட கடல் எல்லை ஆ—தென்றிசைக்குக்குமரி எல்லையாக வடதிசைக்குப் பெரியமேரு எல்லையாகக் கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையில்வாழ்வோரெல்லாம்,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—தம்முடைய பழமையைச்சொல்லி ஏவல் கேட்கும்படி,

வெற்றமொடு வெறுத்து ஒழுகிய—வெற்றியோடே செறிந்துநடந்த,

கொற்றவர்தங் கோன் ஆகுவை—வெற்றியுடையோர்தம்முடைய தலைவனாந் தன்மையையுடையை,

வான் இயைந்த இருமுந்நீர்ப் பேஎம் நிலைஇய இரும் பௌவத்து—மேகம்படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையையுடைய அச்சம்நிலைபெற்ற கரியகடலிடத்து,

[கொடும்புணரி விலங்குபோழக், கடுங்காலொடு கரைசேர, நெடுங்கொடிமிசை யிதையெடுத்து:]

கடுங்காலொடு கொடும்புணரி விலங்கு போழ இதை எடுத்து—கடியகாற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய்விரிக்கப்பட்டு,

இன்னிசைய முரசம் முழங்க—இனிய ஓசையையுடைய முரசமுழங்காநிற்க,

பொன் மலிந்த விழுப் பண்டம் நாடு ஆர—பொன்மிகுதற்குக்காரணமாகிய சீரிய சரக்குக்களை நாட்டிலுள்ளார்நுகரும்படியாக,

[நன்கிழிதரும்:] கரை சேர (எஅ) நன்கு இழிதரும்—கரையைச்சேர வாணிகம் வாய்த்துவந்து இழிதலைச்செய்யும்,

[ஆடியற் பெருநாவாய்:] நெடுங்கொடி மிசை (எகூ) ஆடு இயற் பெரு நாவாய்—நெடியகொடி பாய்மரத்தின்மேலேயாடும் இயல்பினையுடையபெரியமரக்கலம்,

இதைஎடுத்து (எகூ) முழங்க (அ0) ஆர இழிதரு (அஉ) நாவாயென்க.

மழை முற்றிய மலை புரையத் துறை முற்றிய துளங்கு இருக்கை — கருமேகஞ்சூழ்ந்த மலைபோலக் கடல்சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும்,

துறை - ஆகுபெயர். சரக்குப்பறித்தற்குக் கடலினின்றமரக்கலங்கள் அக்கடல் சூழநின்றதற்கு மழைமுற்றியமலை உவமமாயிற்று.

நாவாய் துளங்கிருக்கையென்க.

தெண்கடற் குண்டு அகழி—தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய,

சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ — தலைமையமைந்த உயர்ந்த நெல்லின்பெயரைப்பெற்ற சாலியூரைக்கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவனே,

இதனாற் றனக்குடைவாததோர் ஊர்கொண்டானென்றார்.

இன்னை அசையாக்கி நெல்லூரென்பாருமுளர்.

இருக்கையினையும் (அங) கிடங்கினையு (அரு) முடையவனென்க.

[நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற், கயமகைய வயனிறைக்கும்:]

வயல் அகைய நிறைக்கும் கயம் நீர்த்தெவ்வும் நிரைத்தொழுவர்பாடு சிலம்பும் இசை—வயல்தழைக்கும்படி நீரைநிறைத்தற்குக்காரணமான குளங்களினீரை இடாவான்முகந்துகொள்ளும் நிரையாகநின்றுதொழில்செய்வாரிடத்தே ஒலிக்குமோசை,

ஏற்றத்தோடு வழங்கும் அகல் அம்பியின் இசை—ஏற்றத்தோடே யுலாவும் அகன்ற பன்றிப்பத்தலின்ஓசை,

மென்றொடை வன்கிழார் இசை (கரு)—மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய பூட்டைப்பொறியினோசை,

அதரி கொள்பவர் இசை(கரு)—கடாவிடுகின்றவரோசை,

பகடு பூண் தெண்மணி இசை(கரு)—எருதுகள்பூண்ட தெள்ளிய மணியினோசை,

இரும்புள் ஓப்பும் இசைப்ப—பயிர்களிற் பெரியகிளிமுதலியவற்றை யோட்டு மோசை,

ஏகாரம் - ஈற்றசை.

என்றும்—எந்நாளும்,

மணிப் பூ முண்டகத்து மணல் மலி கானற் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப—நீலமணிபோலும் பூக்களையுடையவாகிய கழிமுள்ளிகளையுடைய மணற்குன்றுகண்மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவருடைய மகளிராடுங் குரவைக்கூத்தினோசையோடேகூடி ஆரவாரியாநிற்ப,

ஒருசார் விழவு நின்ற வியல் ஆங்கண்—ஒருபக்கம் விழாக்கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறுதலின்றி அகலத்தையுடைய ஊர்களிடத்தேயிருந்து,

பாடுசிலம்புமிசை (கூ0) முதலியன குரவையொடு (கஎ) என்றும் (கரு) ஒலிப்ப ஒருசார் விழவுநின்றஊரென்க.

முழவுத் தோள் முரண் பொருநர்க்கு—முழவுபோலுந் தோளினையுடையராய்க் கல்வியான்மாறுபடுதலையுடைய தடாரிப்பொருநர்க்கு,

உரு கெழு பெருஞ்சிறப்பின் இருபெயர்ப் பேர் ஆயமொடு இலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும் — அச்சம்பொருந்திய பெரிய தலைமையையுடைய கன்றும்பிடியுமென்னும் இரண்டுபெயரையுடைய பெரியதிரளுடனே விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக்கொடுத்தும்,

இருபெயர்க்கு ஆடும் மாடுமென்பாருமுளர்.

பொலந் தாமரைப் பூச் சூட்டியும்—பொன்னாற்செய்த தாமரைப்பூவைச் சூட்டியும்,

[நலஞ்சான்ற கலஞ்சிதறும், பல்குட்டுவர் வெல்கோவே:]

நலம் சான்ற கலம் சிதறும் கோவே—நன்மையமைந்த பேரணிகலங்களை எல்லார்க்குங்கொடுக்குங்கோவே,

ஊர்களிடத்தே யிருந்து (கூஅ) பொருநர்க்குக் (ககூ) கொடுத்துஞ் (க00) சூட்டியும் (க0ரு) அமையாது கலஞ்சிதறுங்கோவேயென்க.

பல் குட்டுவர் வெல் கோவே—பலவாகிய குட்டநாட்டிலுள்ளாரை வெல்லுங் கோவே,

என்பது அடை.

இதனால், தன்னாட்டிலூர்களிலிருந்து கொடுக்கின்ற சிறப்புக்கூறினார்.

கல் காயுங் கடுவேனிலொடு—மலைகள் காய்தற்குக்காரணமாகிய கடிய முதுவேனிலாலே,

இரு வானம் பெயல் ஒளிப்பினும்—பெரியமேகம் மழையைத் தன்னிடத்தே மறைத்துக்கொள்ளினும்,

[வருவைகன் மீன்பிறழினும்:] வைகல் வரும் மீன் பிறழினும்—தான் தோன்றக்கடவ காலத்திலே தோன்றும் வெள்ளி தென்றிசையிலேஎழினும்,

வெள்ளம் மாறாது விளையுள் பெருக—யாறுகள் வெள்ளமாறாமல்வந்து விளைதல்பெருகுகையினாலே,

நெல்லின் ஓதை—முற்றின நெல்லுக் காற்றடித்தசைதலாலே எழுந்த ஓசை,

அரிநர் கம்பலை—அதனையறுப்பாருடையவோசை,

புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை—பறவைகள்கத்துகையினாலே ஆரவாரிக்குமாரவாரம்,

என்றும்—எந்நாளும்,

சலம் புகன்று சுறவுக் கலித்த புலவு நீர் வியன் பௌவத்து—தம்முள் மாறுபாட்டை விரும்பிச் சுறாக்கள் செருக்கித்திரிகின்ற புலால்நாற்றத்தையுடைத்தாகிய நீரையுடைய அகற்சியையுடைய கடலிடத்துத் துவலை (கககு),

நிலவுக் கானல் முழவுத் தாழைக் குளிர்ப் பொதும்பர் நளித் தூவல்—நிலாப்போலும் மணலையுடைய கானலிடத்துக் குடமுழாப்போலும் * காயையுடையதாழையை மேவுதலையுடைய குளிர்ச்சியையுடைய இளமரக்காவின்கண்ணேவந்து செறிதலையுடைய துவலையிலோசை,

நிணம் திமிலின் வேட்டுவர் கரை சேர் கம்பலை—நிணத்த மீன்படகாலே வேட்டையாடுவார் வந்து கரையைச்சேருமாரவாரம்,

இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு — பெரியகழியிடத்து உப்புப்பாத்தியிலே வெள்ளிய உப்பைவிற்கும் அளவரொலியோடே,

[ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலை மீக்கூறும், வியன்மேவல் விழுச்செல்வத், திருவகையா னிசைசான்ற, சிறுகுடிப் பெருந்தொழுவர், குடிகெழீஇய நானிலவரொடு, தொன்றுமொழிந்து தொழில்கேட்ப:]

சிறுகுடிப் பெருந்தொழுவர் ஒலி ஓவாக் கலி யாணர் முதுவெள்ளிலை — சிறிய குடிகளாய்ப் பெரியதொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமுமொழியாத பெருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுடைய முதுவெள்ளிலையென்னுமூர்,

இது குறுநிலமன்னரிருப்பு.

பகர்நரொலியோடே (ககள) நெல்லினோதை (ககo) முதலியவொலி என்றும் (கக்க) ஓவாதவெள்ளிலையென்க.

மீக்கூறும் இருவகையான் வியன் மேவல் விழுச்செல்வத்து இசை சான்ற குடிகெழீஇய நானிலவரொடு—உலகத்துத்தொழில்களின் மேலாகச்சொல்லும் உழவுவாணிகமென்கின்ற இரண்டுகூற்றாலே அகலம்பொருந்துதலையுடைய சீரியசெல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்துவாழ்வாருடனே,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—பழமைகூறிநின்று ஏவலைக்கேட்கும்படியாக,

கால் என்னக் கடிது உராஅய் நாடு கெட எரி பரப்பி ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து—காற்றென்னும்படி கடிதாகப்பரந்துசென்று பகைவர்நாடுகெடும்படி நெருப்பைப்பரப்பித் தலையாலங்கானமென்கின்றவூரிலே பகைவர்க்கு அச்சந்தோன்றும்படிவிட்டு,

* தாளையுடையவென்றும் பிரதிபேதமுண்டு.

* "எரிபரந்தெடுத்தல்" என்னுந் துறைகூறிற்று.

அரசு பட அமர் உழக்கி முரசு கொண்டு களம் வேட்ட — பெருநிலமன்னரிருவரும், குறுநிலமன்னரைவரும் படும்படி போரிலேவென்று அவர் முரசினைக்கைக்கொண்டு களவேள்விவேட்ட,

எழுவராவார்:—சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன்.

அடு திறல் உயர் புகழ் வேந்தே — கொல்லுகின்ற வலியுயர்ந்த புகழையுடைய வேந்தனே,

நாளிலவரோடே (௧௨௬) முதுவெள்ளிலை (௧௧௯) தொழில் கேட்ப (௧௨௦) திறலுயர்ந்தவேந்தேயென்க.

இது † தலையாலங்கானத்து வென்றமைகூறிற்று.

நட்டவர் குடி உயர்க்குவை — நின்னுடனே நட்புக்கொண்டவருடைய குடியை உயர்த்தலைச்செய்வை,

செற்றவர் அரசு பெயர்க்குவை — நின்னாற் செறப்பட்டவர் அரசுரிமையை வாங்கிக் கொடுத்தலைச் செய்வை,

பேர் உலகத்து மேஎந் தோன்றிச் சீருடை விழுச் சிறப்பின் — பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த்தோன்றுகையாலே புகழையுடைய விழுமிய தலைமையினையும்,

விளைந்து முதிர்ந்த விழு முத்தின் — சூன்முற்றி முதிர்ந்த சீரிய முத்தினையும்

இலங்கு வளை இருஞ் சேரி — விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்கு குளிப்பாரிருப்பினையும்,

முத்தினையும் சங்கினையுமுடைய சேரியென்க.

கள் கொண்டிக் குடிப் பாக்கத்து — கள்ளாகிய உணவினையுடைத்தாகிய மிக்க குடிகளையுடைய சிற்றூர்களையுமுடைய,

கொண்டி - கொள்ளப்படுதலின் உணவாயிற்று; கொள்ளையுமென்பர்.

நல் கொற்கையோர் நசைப் பொருந — நன்றாகிய கொற்கையென்னுமூரிலுள்ளோர் நச்சுதலைச்செய்யும் பொருநனே,

இதனாற் கொற்கைக்குரியோனென்றார்.

சிறப்பினையும் (௧௩௪) சேரியினையும் (௧௩௫) பாக்கத்தினையும் (௧௩௭) முடைய கொற்கை.

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று அஞ்சுவரத் தட்குப் அருங்குறும்பு எறிந்த கானவிலக்கின் — தாங்கள் செறப்பட்ட பகைவர்மனங்கலங்கும்படி அவர்களிடத்தே சென்று அவர்க்கு அச்சந்தோன்றத் தங்கும் வருத்தந்தைய அரண்களையுடைய காட்டின் வழியினையும்,

கோழூன் குறைக் கொழு வல்சி — கொழுத்த இறைச்சியையுடைய கொழுத்த திருக்கின்றசோற்றினையும்,

இதனைக் கூடவிட்டாக்குதலிற் கொழுவல்சியென்றார். கொழுவல்சி - கொழுவிதாகிய வல்சியென்றுமாம். இஃது ஆகுபெயர்.

புலவு வில் — எய்த அம்புதன்னை மீண்டுந்தொடுத்தலிற் புலால்நாற்றத்தையுடைய வில்லினையும்,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௮.

† நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றமையைப் புறப்பாட்டில் மிகவிரித்துக்கூறினர்.

பொலி கூவை—பொலிந்தகூவைக்கிழங்கினையும்,

கூவை - திரளுமாம்.

ஒன்றுமொழி—வஞ்சினங்கூறுதலையும்,

ஒலி இருப்பின்—ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையுமுடைய,

தென் பரதவர் போரேறே—தென்றிசைக்கண்வாழும் பரதவர்க்குப் போர்த்தொழிலைச்செய்யும் ஏறனையவனே,

இதனாற் பரதவரைத் தனக்குப் பணியாக அடிப்படுத்தினமை கூறினார்.

துப்பு (கச0) முதலியவற்றையுடைய பரதவரென்க.

பரதவர் - தென்றிசைக்கட்குறுநிலமன்னர். அது *"தென்பரதவர் மிடல்சாய, வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறப்பாட்டானுமுணர்க.

அரிய எல்லாம் எளிதினிற் கொண்டு—பிறர்க்கரிய நுகர்பொருள்களெல்லாம் எளிதாக நின்னூரிடத்தேயிருந்து மனத்தாற்கைக்கொண்டு,

உரிய எல்லாம் ஓம்பாது வீசி—அப்பொருளையெல்லாம் நினக்கென்று பாதுகாவாது ஊரிடத்தே யிருந்து பிறர்க்குக்கொடுத்து,

என்றது:—†"கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" கூறிற்று.

நனி நன்று உறைதும் என்னாது எற்றெழுந்து—மிகவிரும்பி ஊரின்கண்ணேயிருந்துறையக் கடவேமென்றுகருதாதே பகைவர்மேற்செல்லுதலை ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு,

இது ‡ வஞ்சிகூறிற்று.

பனி வார் சிமயக் கானம் போகி—பனியொழுகுகின்ற மலையிடத்தனவாகிய காடுகளைக்கடந்து,

சிமயம் - ஆகுபெயர்.

அகநாடு புக்கு—அவர்களுண்ணாடுகளிலே புகுந்து,

இதனால் § "தொல்லெயிற்கிவர்தல்" கூறினார்.

அவர் அருப்பம் வெளவி—அப்பகைவரரண்களைக் கைக்கொண்டு அதனாலுமமையாமல்,

இது குடுமிகொண்ட மண்ணுமங்கலங் கூறிற்று. இதனால் அரசரரண்களை யழித்தமை கூறினார்.

[யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து:] வேண்டு புலத்துப் பல யாண்டுகழிய இறுத்து — நீ அழித்தநாடுகளிற் கொள்ளவேண்டு நிலங்களிலே பலயாண்டுகளுஞ் போம்படி தங்கி,

மேம்பட மரீஇய வெல் போர்க் குரிசில்—அந்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அப்படவிருந்த வெல்லும்போரினையுடைய தலைவனே,

இது பகைவர்நாட்டைத் தன்னாடாக்கினமைகூறிற்று.

உறு செறுநர் புலம் புக்கு—தோன்றுதொட்டுவந்த பகைவர்நிலத்தேவிட்டு,

---

* புறநானூறு, ருஎஅ.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல். கஉ.

‡ வஞ்சி, மண்ணசையான் மேற்சேறல்.

§ தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், கஉ.

அவர் கடி காவின் நிலை தொலைச்சி—அவர் காவலையுடைய பொழில்களின் நிற்கின்ற நிலைகளைக் கெடுத்து,

என்றது வெட்டியென்றவாறு.

இழிபு அறியாப் பெருந் தண்பணைக் குரூஉக் கொடிய எரி மேய—வளப்பங்குன்றுதலை ஒருகாலத்துமறியாத பெரிய மருதநிலங்களை நிறத்தையுடைய ஒழுங்கினையுடைய நெருப்புண்ண,

நாடெனும்பேர் காடாக — நாடென்னும்பெயர்போய்க் காடென்னும் பெயரைப்பெற,

ஆ சேந்த வழி மா சேப்ப—பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலிமுதலியன தங்க,

ஊர் இருந்த வழி பாழாக—ஊர்களாயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க்கிடக்க,

ஊராயிருந்த இடமென்றுமாம்.

இலங்கு வளை மடமங்கையர் துணங்கை அம் சீர்த் தழூஉ மறப்ப — விளங்குகின்ற வளையினையும், மடப்பத்தினையுமுடையமகளிர் துணங்கைக்கூத்தினையும், அழகினையுடைய தாளவறுதியையுடைய குரவைக்கூத்தினையுமறப்ப,

தழூஉ - ஆகுபெயர்.

அவை இருந்த பெரும் பொதியில் கவை அடிக் கடு நோக்கின் பேய் மகளிர் பெயர்பு ஆட — சான்றோரிருந்த பெரிய அம்பலங்களிலே [illegible] அடிகளையும் கடியபார்வைகளையுமுடைய பேயாகியமகளிர் உலாவியாட,

அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்—இல்லுறை தெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து,

நிலத்து அறைந்து [illegible] புதவின் — நிலத்திலே [illegible] வாசல்காப்பாரையுடைய வாசலின்கண்ணேயிருந்து,

குழூஉ - ஆகுபெயர். இனிக் குடுமிதேய்ந்துபோதலின், மண்ணைக் கொழித்துவருமென்பாருமுளர்.

அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ—மனக்கவற்சியையுடைய பெண்டிர் வருந்திக்கூப்பிட,

கொழும் பதிய குடி தேம்பிச் செழுங் கேளிர் நிழல் சேர—வளவிய ஊர்களி[illegible]த்தனவாகிய குடிகளெல்லாம் பசியாலுலர்ந்து புறநாட்டிலிருக்கும் வளவிய சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகச் சென்று சேர,

நெடுநகர் வீழ்ந்த கரி குதிர்ப் பள்ளிக் குடுமிக் கூகை குராலொடு [illegible]—பெரியமாளிகைகளிலே வெந்துவீழ்ந்த கரிந்த குதிர்களிடங்களிலே [illegible] கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற,

கழுநீர் பொலிந்த கண் அகன் பொய்கைக் களிறு மாய் செருந்தியொடு கண்பு அமன்று ஊர்தர—செங்கழுநீர்மிக்க இடமகன்ற பொய்கைகளிடத்தே யானைநின்[illegible]றைக்கும் வாட்கோரையுடனே சண்பங்கோரையும் நெருங்கிவளர,

செருந்தி - நெட்டிக்கோரையுமாம்.

நல்லேர் நடந்த நசை சால் விளைவயல் பன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள—

நன்றாகிய எருதுகளுழுத நச்சுதலமைந்த விளைகின்ற வயலிடத்தே பலமயிரினை யுடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித்திரிய,

பிணவென்னும் அகரவீற்றுச்சொல் வகரவுடம்படுமெய்பெற்றது. * "பன்றி புல்வாய் நாயென மூன்று-மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" என்றார்.

[...அ ...ணமையின் ஒழிதவக் கெட்டு:] தவ வழி வாழாமையிற் கெட்டு—மிக நின் ஏவல்செய்து வாழாமையினாலே கெட்டு,

இனித் தவக்கெட்டெனக் கூட்டி மிகக்கெட்டென்றுமாம்.

பாழ் ஆயின—பாழாய்விட்டன,

நின் பகைவர் தேஎம்—நின்னோடு பகைத்தலைச்செய்தவருடைய நாடுகள்,

[எழாஅத் தோள் இமிழ்முழக்கின், மாஅத்தாள் உயர்மருப்பிற், கடுஞ்சினத்த களிறு பரப்பி:]

இமிழ் முழக்கின் மாத் தாள் உயர் மருப்பிற் கடுஞ்சினத்த களிறு பரப்பி—முழங்குகின்ற ஓசையையும் பெருமையையுடைய கால்களையும் தலைகளோங்கின கொம்புகளையுமுடைய கடியசினத்தையுடைய யானைகளை எங்கும்பரப்பி,

[விரிகடல் வியன்றானையொடு:] எழாத் தோள் (கனை) விரி கடல் வியன் தானையொடு—முதுகிட்டார்மேற் செல்லாத தோளினையுடைய விரிகின்ற கடல்போலும் அகற்சியையுடைய படையோடே,

முருகு உறழத் தலைச் சென்று—முருகன் பகைவர்மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,

முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய்நின்றது.

அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ—அகன்ற ஆகாயத்தின்கண்ணே படையெழுந்த ஆரவாரமொலிப்ப,

விசும்பெனவே ஆகுபெயராய்த் தேவருலகையுணர்த்திற்று.

பெயல் உறழக் கணை சிதறி—மழையோடே மாறுபடும்படி அம்புகளைத்தூவி,

பல புரவி நீறு உகைப்ப—பலகுதிரைத்திரள் ஓடுகின்றவிசையாற் றுகள்களை எழுப்ப,

வளை நரல—சங்குமுழங்க,

வயிர் ஆர்ப்ப—கொம்பொலிப்ப,

பீடு அழியக் கடந்து அட்டு—பெருமைகெடும்படி வென்று கொன்று,

அவர் நாடு கெட எயில் வௌவி—அவருடைய நாடுகளழியும்படியாக அவரிருக்கின்ற மதிலைக்கொண்டு,

சுற்றமொடு தூ அறுத்தலின்—அவர்களுக்கு உதவிசெய்யும் சுற்றத்தாரோடே கூட அவர்கள் வலியைப் போக்குதலாலே,

செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப—நின்னாற் சிறிதுசெறப்பட்டபகைவர் நின் ஏவல்கேட்டு நடக்கையினாலே,

வியன் கண் முது பொழில் மண்டிலம் முற்றி—அகலத்தை இடத்தேயுடைய பழைய நாவலந்தீவின்கணுள்ளவாகிய சோழமண்டலம் தொண்டைமண்டலமென்கின்ற மண்டலங்களை நினதாக வளைத்துக்கொண்டு,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௫௮.

மண்டலம் மண்டிலமெனமருவிற்று.

அறவியல் பிழையாது—நூல்களிற்கூறிய அறவிலக்கணத்திற் [illegible].

[அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது: பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது அறநெறி காட்டி.—நின்குலத்திற் பெரியோர்கடந்த அடிப்பாட்டின்வழியைத் தப்பாமல் அறநெறியிருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி,

கனிபுகன்றுறைநறுமென் [illegible] (௧௪௨) [illegible] (௧௪௩) [illegible] னையோர் [illegible] (௧௪௦) தலைச்சென்று (௧௪௪) அரசமண்டிலமுற்றிச் (௧௪௫) செற்ற தெவ்வர் நின்வழி [illegible] க்கையிலுறைப்ப (௧௪௬) [illegible] (௧௩௯) பாகையிலுறைய [illegible] அறநெறிகாட்டிப் (௧௯௧) பின்னர் அம்மை [illegible] சூழிருக்க [illegible] [illegible] கொண்டு [illegible] வீசிப் (௧௪௬) போகிப் (௧௪௮) புக்கு அவருருப்படங்களைவெளவிப் (௧௪௯) பின்னர் உறு செறுநர் (௧௫௨) [illegible] (௧௫௦) [illegible] புக்கு (௧௫௨) [illegible] (௧௫௫) [illegible] (௧௫௩) [illegible] (௧௮௨) [illegible] (௧௫௪) [illegible] (௧௫௫) [illegible] (௧௫௬) [illegible] (௧௫௭) [illegible] (௧௫௮) [illegible] (௧௫௭) [illegible] (௧௫௮) பாழாக (௧௫௮) மரப்ப (௧௬0) ஆட (௧௬௧) அகவச் (௧௬௬) சேர (௧௬௮) மூரல (௧௭0) ஊர்தர (௧௭௨) உகளக் (௧௭௪) கெட்டுப் (௧௭௫) பாழாயின (௧௭௬); அங்ஙனம் பாழாயினபின்பு [illegible] (௧௯௨) யாகையிலே [illegible] புலத்திறுத்து (௧௯௦) அந்நாடுகள் [illegible] வினைமுடிக்க.

[குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்] குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின் நின் வலம்படு கொற்றம் வழிவழி சிறக்க—மேற்றிசைக்கட்டோன்றிய [illegible] தலத்திற்குப் [illegible] எல்லாருந் தொழும்பிறை நாடோறுஞ் சிறக்குமாறுபோல நின்னுடைய வெற்றியாலே நின் [illegible] நாட்குண்டாங்கொற்றம் அவர்கள்வழி [illegible] யாக மிகுவதாக;

குணமுதற் றோன்றிய [illegible] ஆரிருள் மதியிற், [illegible] கெடுக [illegible] ஆக்கம்:] குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின் நின் [illegible] ஆக்கம் [illegible] கெடுக—கீழ்த்திசைக்கட்டோன்றிய நிறைந்த இருளைத் [illegible] மதி நாடோறுந் தேயுமாறுபோல நின்பகைவருடைய ஆக்கம் நாடோறுந் தேய்வனவாய்க் கெடுவனவாக;

உயர்நிலை உலகத்து [illegible] பெறினும் [illegible] [illegible] பிழை யே— ஒருபொய்யாலே உயர்ந்த [illegible] தேவருலகை [illegible] அமிழ் தத்தோடே பெறுவையாயினும் [illegible] நின் [illegible] மெய்யுடனே நட்புச்செய்தலையுடையை;

இனிப் பொய்யே [illegible] பிழையே [illegible], மெய்யை நடத்தலைச் செய்தலையென்க

[illegible] ஞம் பகைவர்க்கு அஞ்சிப் [illegible]—[illegible] கடலாகிய [illegible] டைய அகன்ற இடத்தையுடைய [illegible] உயர்ந்த தேவருலகத்துத் தேவரும் பகைவராய் [illegible] க்கு அஞ்சித் [illegible]

தென்புல மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கெழுக என்னாய்—தென்றிசைநிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படி வாணனென்னுஞ்சூரன்வைத்த சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர் கூறும்பழி நமக்கு வருவதாகவென்று கருதாய்;

விழுநிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே— சிறிதாகிய பொருளைக் கொடுத்தலையுடைத்தாகிய நெஞ்சுடனே புகழை விரும்புவை;

அன்னாய்— அத்தன்மையையுடையாய்,

[நின்னொடு முன்னிலை யெவனோ:] முன்னிலை நின்னொடு எவனோ— ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர்பொருள்கட்கு நின்னோடு என்னவுறவுண்டு;

நின்னென்றது சீவான்மாவை. முன்னிலை - ஆகுபெயர்.

[கொன்னொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக—நின்னிடத்துண்டாகியமாயை இனிக்கெடுவதாக;

அடு போர் அண்ணல்— அம்மாயையைக்கொல்கின்ற போர்த்தொழில்வல்ல தலைவனே,

கொன் ஒன்று கிளக்குவல்— பெரிதாயிருப்பதொருபொருளை யான்கூறுவன்; அஃது என்னாற்காட்டுதற்கரிது;

என்றது கந்தழியினை.

கேட்டிசின்— அதனைத் தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக;

வாழ்கவென்பதனைச் சுற்றமொடுவிளங்கி (எஎ௦) யென்பதன்பின்னேகூட்டுக.

[கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை:] சேண் விளங்கு நின் நல்லிசை கெடாது நிலைஇயர்—சேட்புலமெல்லாஞ் சென்றுவிளங்கும் நின்னுடைய நல்ல புகழ் ஒருகாலமுங்கெடாதே நிலைபெறுவதாக;

[தவாப்பெருக்கத் தறாயாணர், அழித்தானாக் கொழுந்திற்றி, யிழித்தானாப் பலசொன்றி, யுண்டானாக் கூர்நறவிற் றின்றானா வினைவைக, னிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப் பயனற வறியா வளங்கெழு திருநகர்:]

தவாப் பெருக்கத்து அறா யாணர் வளம் கெழு திரு நகர்—கெடாத பெருக்கத்தினையுடைய நீங்காத புதுவருவாயாலே செல்வம்பொருந்தின திருமகளையுடைய நகர்,

அழித்து ஆனாக் கொழுந்திற்றி தின்று— அழிக்கப்பட்டு விருப்பமையாத கொழுவிய தசையைத்தின்று,

"ஆடழிக்க" என்ப.

ஆனாப் பல் சொன்றி இழித்து ஆனாக் கூர் நறவின் உண்டு—விருப்பமையாத பலவகைப்பட்ட சோற்றைத் தீதென்றுகூறிக் களிப்பமையாத மிக்க கள்ளை உண்டு,

ஆனா இனப் பாணர் (உ.ககூ)—அவ்விரண்டிலும் விருப்பமையாத திரட்சியையுடைய பாணரென்க.

தின்று உண்டு ஆனா இனப் பாணரென்க.

வைகல்—நாடோறும்,

நிலன் எயக்கல்லா ஒண் பல் வெறுக்கை—நிலஞ்சுமக்கமாட்டாத ஒள்ளிய பல வாகிய பொருட்டிரள்களையும்,

என்றது பூண்களையும், பொன்னையும்.

பயன் அறவு அறியா நகர்—எக்காலமும் பயன்கெடுதலறியாத நகர்.

நரம்பின் முரலும் நயம் வரு முரற்சி விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்ப—யாழ்வாசித்தாற்போலப் பாடும் நயப்பாடுதோன்றும் பாட்டினையுடைய விறல பட ஆடுதலையுடையார் தம்முடைய பூணணியாத கைகளிலே குறியதொடிகளையிட,

* "நரம்பொடு வீணைநாவி னவின்றதோ வென்று நைந்தார்" என்றார் பிறரும்.

பாணர் உவப்பக் களிறு பல தரீஇ—பாணர் மகிழும்படி யானைகளைப் பலவற்றையுங் கொடுத்து,

நகரிலே யிருந்து (உகரு) நாடோறும் (உகச) விறலியர் தொடிசெறியாநிற்பப் (உகஅ) பாணருவப்ப (உகசு) வெறுக்கையையும் (உகஎ) யானையையுங் கொடுத்தென்க.

தரீஇ என்றதனைச் † "செலவினும் வரவினும்" என்னும் பொதச்சூத்திரத்தாற்கொள்க.

கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ—தன்னுடன் நட்புக்கொண்டோர் மனமகிழும்படி அழித்த அரண்களிற்கொண்ட பலபொருள்களையும் அவர்க்குச் செலுத்திக்கொடுத்து,

என்றது - அவர் வேண்டாவென்றுமறுக்கவும் தாம் வலியப்போகவிட்டென்றவாறு.

மறம் கலங்கத் தலைச் சென்று—பகைவர்மறம் நிலைகுலையும்படி அவர்களிடத்தே சென்று,

வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி—அவர்க்கு வாட்போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினை பின்பும் அதன்கட்பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி,

என்றது - வாட்போரின்கட்பெற்ற இனிமையைப் பின்னும்விரும்பி அதிலேமுயல்கின்றானென வீரசிறப்புக் கூறிற்றாம்.

உழந்தென்னுஞ் செய்தென்னெச்சம் காரணப்பொருட்டு. ‡ "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள் - வைக்குந்தன் னாளை யெடுத்து." என்றார் பிறரும். உழந்த தன்னெனப் பெயரெச்சமாயின், தன்னென்னுமொருமை மேல்வருகின்ற மன்னர் (உஉச) என்னும் பன்மைக்காகாமையுணர்க.

நாள் ஈண்டிய நல்லகவர்க்குத் தேரொடு மாச் சிறந்து—விடியற்காலத்தே வந்துதிரண்ட அரசர்விரும்பப்பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து,

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையார்லம்பகம், கசுரு:—"கருங்கொடி புருவ மேறா கயனெடுங் கண்ணு மாடா - வருங்கடி மிடறும் விம்மா தணிமணி யெயிறுந் தோன்றா - விருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ - நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்."

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உஅ.

‡ திருக்குறள், படைச்செருக்கு, ௬.

என்றது, * "தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் - சூதர் ரேத்திய துயிலெடை நிலையும்" என்னும்விதியாற் சூதர் இருசுடர்தோற்றம் தொடங்கி இன்றுகாறும் வருகின்ற [illegible] யை அரசர் கேட்டற்குவிரும்புவரென்றுகருதி விடியற்காலத்தே [illegible] பாடுவரென்பது ஈண்டுக்கூறிற்றாம்.

[illegible] அழைத்[illegible] ஆருபெயர்; † "அகவல்" போல.

இனி வைகறைபாடும் பாணரென்பாருமுளர்.

வாழ்த்தித் திரண்ட அகவரென்க.

[சூடுற்ற சுடர்ப்பூவின், பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர் சுற்றமாக, [illegible] கலஞ்செல வுண்டு] கள்ளின் இரும் பைக்கலம் செல உண்டு சூடுற்ற சுடர்ப் பூவின் பாடு புலர்ந்த நறுஞ்சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றமாக—கள்ளினையுடைத்தாகிய பெருமையினையுடைய குப்பிகள் வற்றும்படியாகக் [illegible] விளக்கத்தையுடைத்தாகிய [illegible] படியே [illegible] சீரியபடைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக்கொண்டு,

[illegible] நந்தது.

[illegible] தேசாந்தர [illegible].

[illegible] வழிபாடுதோறுடை [illegible] கேட்டு [illegible] திறைகொடுத்தற்கு,

பருந்து பறக்கல்லாப் பார்வற் பாசறை—உயரப் பறக்கும் பருந்துகளும் பறத்தலாற்றாத உயர்ச்சியையுடைய அரண்களையுடைய பாசறைக்கண்ணே,

பார்வல் - ஆகுபெயர்.

[illegible] முரசம் காலை இயம்ப—ஒலிக்கின்ற கண்ணையுடைய [illegible] முரசம் நாட்காலத்தே ஒலிப்பவிருந்து,

வெடி படக் கடந்து—பகைவர்படைக்குக் கேடுண்டாக வென்று

வெடி - ஓசையுமாம்.

[illegible] —பின்னும் [illegible] நிலங்களிலேசென்றுவிட்ட,

பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்— [illegible] பொருந்தின பெரிய [illegible] யுமுடைய அரசர்கள்.

கரைபொரு திரங்கும் கனையிரு முந்நீர்த் திரையிடு மணலினும் பலரே—கரை [illegible] இரங்கும் திரையிடு மணலினும் பலரே—செறிதலையுடைய [illegible] பொருது ஒலிக்குங் கிடைக்கின்ற மணலினும் பலரே.

ஏகாரம் - பிரிநிலை.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.

† ,, செய்யுளியல், ௮௪.

உரை செல மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே — [illegible] அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தம் [illegible] மன்னர் [illegible] ணர்வின்மையிற் பிறப்பு [illegible] பயனின்றி மாண்டோர்.

ஏகாரம் - ஈற்றசை. *"[illegible]" என்று [illegible] ல்லின்றியென்றும்.

தரீஇ (உகக) கடைஇச் (உஉ) [illegible] பணித்தோர் [illegible] கையினுமலை (உஉக) பணியார்த்தேம் பணித்துத் திறைகொள்ளுந்தரு[illegible] (உகூ) [illegible] யோர் சுற்றமாகக்கொண்டு (உஉஎ) பாசறையிலே (உகூ) முரசம்பதிந்து (உகூ) கடந்தடுதிறல் (உகூ) மன்னர் (உகூ) உலகமாண்டுகழிந்தோர் (உகூ) இணையிலா ணலினும்பலர் (உகூ) எனமுடிக்க.

இது † "[illegible]" [illegible] மையிற் கழிந்தமைகூறிற்று.

அதனால் — பயனின்மையாலே,

[குணகடல் கொண்டு குடகடல் முற்றி, [illegible] தவலும் மிசையும் நீர்த்திரள் [illegible] கழை வளர் சாரற் களிற்றினம் நடுங்க, [illegible] சிதாஅர் பெரும்பெயல் சிறத்தலின்:]

வான் குணகடல் கொண்டு குடகடல் [illegible] — [illegible] சைக் கடலிடத்தே நீரை [illegible]

இரவும் எல்லையும் விளிவிடன் அறியாது — இரவும்பகலும் ஒழிந்தஇடத்தை [illegible] றியாது,

அவலும் மிசையும் நீர்த் திரண்டு [illegible] — பள்ளமும் மேடுமாகிய பலவிடத்தும் [illegible] லைக்கிழங்கு கல்லிய அழகியகுறியிலேவீழ்ந்து [illegible]

கழை வளர் சாரற் களிற்றினம் நடுங்க [illegible] — மூங்கில் வளர்ந்த மலைப்பக்கத்தே [illegible] திரள் நடுங்கும்படி [illegible] பரந்து,

சிதாஅர் பெரும்பெயல் — சிதறுதலையுடைய பெருமழை,

சிறத்தலின் — மிகுகையினாலே.

வான் முற்றி நெருங்க [illegible] யொலிக்கும்படி பெரும்பெயல் விளிவிடனறியாது சிறத்தலினென முடிக்க.

[தாங்காது, குணகடற் கிவர்தரூஉ குருஉப்புனல் ஓங்கி, நிவந்து செல்நீத்தக் குளங்கொளச் சாற்றி:] தாங்காது உந்தி நிவந்து செல் நீத்தம் குளம் கொளச் சாற்றிக் குணகடற்கு இவர்தரும் குருஉப்புனல் — யாறுகள் தாங்காமல் யாற்றிடைக்குறையிலே ஓங்கிச்செல்கின்றபெருக்கைக் குளங்கள்கொள்ளும்படி நிறைத்துக் கீழ்த்திசைக் கடலுக்குப் பரந்துசெல்லும் நிறத்தையுடைய நீராலே,

---

* தொல்காப்பியம் பொருளதிகாரம், மரபியல், [illegible]

† „ [illegible] [illegible]

களிறு மாய்க்குங் கதிர்க் கழனி—யானைகள் நின்றால் அவற்றைமறைக்கும்படி விளைந்த கதிரையுடைய கழனியிலும்,

ஒளிறுஇலஞ்சி—விளங்குமடுக்களினும்,

அடைநிவந்த முள் தாள் தாமரை—இலைக்குமேலான முள்ளையுடைய தாள்களையுடையவாகிய ஒளியினையுடைய தாமரைப்பூவினையும்,

கள் கமழும் நறு நெய்தல்—தேனாறும் நறிய நெய்தற்பூவினையும்,

வள் இதழ் அவிழ் நீலம்—பெருமையையுடைய இதழ்விரிந்த நீலப்பூவினையும்,

மெல்லிலை அரி ஆம்பலொடு—மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவோடே,

அரி - மென்மையுமாம்.

வண்டு இறை கொண்ட கமழ் பூம் பொய்கை—வண்டுகள் தங்குதல்கொண்ட மணநாறும் பிறபூக்களையுமுடைய பொய்கைகளிலும்,

கம்புட் சேவல் இன்துயில் இரிய வள்ளை நீக்கி வயமீன் முகந்து—கம்புட்கோழி இனியதுயிலைக் கைவிட்டோடும்படி வள்ளைக்கொடிகளைத் தள்ளி வலியையுடையமீன்களை முகந்துகொண்டு,

கழனியிலும் (உசஎ) இலஞ்சியிலும் (உசஅ) பொய்கைகளிலும் (உருந) மீன்முகந்துசாற்றிய வலைஞரென்க.

கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்— விலைகூறிவிற்ற கொடியமுடிகளையுடைய வலையான்மீன்பிடிப்பார்,

வேழப்பழனத்து நூழிலாட்டு ஓதை (உருஅ)— கொறுக்கச்சியையுடைய மருதநிலத்துமீனைக் கொன்றுகுவித்தலாற் பிறந்தஓசை,

கரும்பின் எந்திரம் ஓதை—கரும்பிற்கிட்ட ஆலையிடத்தோசை,

கட்பின் ஓதை—களைபறிப்பிடத்தோசை,

அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம் கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே—சேற்றலான் அளற்றிலே வலியற்றுத்தங்கிய எருதுற்றவருத்தத்தைக் கள்ளையுண்ணுங் களமர் பெயர்க்குமாரவாரம்,

ஒலிந்த பகன்றை விளைந்த கழனி வில்லகை விளைஞர் அரிப் பறை—தழைத்த பகன்றையினையுடைய நெல்லுமுற்றியகழனியில் அந்நெல்லை வலியகையினாலே அறுப்பாருடைய அரிதலைத்தெரிவிக்கின்ற பறையோசை,

இன்குரல் தளி மழை பொழியும் தண் பரங்குன்றிற் கலி கொள் சும்மை—இனிய இடியினையுடைய துளிகளையுடைய மேகந்தங்குங் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக்கொண்டாடுமாரவாரம்,

* "வயிரியர் முழவிற் றன்ன முழக்கத் தேறோடு" என்றார்பிறரும்.

ஒலி கொள் ஆயம் ததைந்த கோதை தாரொடு பொலியப் புணர்ந்து உடன் ஆடும் இசையே — புதுநீர்விழவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர்தி

---

* அகநானூறு, நித்திலக்கோவை, ௩உஎ:—"மழையமை யடுக்கத்து வலனேர்பு வயிரியர்-முழவதிர்ந் தன்ன முழக்கத் தேறோ-டிரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்-தரவின் பைந்தலை யிடறிப் பானா-ளிரவின் வந்தெம் மிடைமுலை முயங்கி"

ரன் தம்மிடத்து நெருங்கினகோதை [illegible] பின் மாலையுடனே அழகுபெ றக் கூடி அவர்களுடனே நீராடுமோசை,

அணங்குறும் அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப— அம்மோசை முழுவதூஉம் தன்னிலே யொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தே சென்று முழங்கி ஆரவாரத்தோடே இனிதாக ஒலிப்ப,

குருகு அலற மனை [illegible] சேரியோடு— குருகென்னும் பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து [illegible] மீனைத் திருத்தும் பாணர்குடியிருப்பிற் பாடலாடலால் எழுந்த ஓசையோடே,

மருதம்சான்ற— ஊடலாகிய உரிப்பொருளமைந்த,

தண் பணை சுற்றி— மருதநிலஞ் சூழப்பட்டு,

ஒருசார்— ஒருபக்கம்,

ஒருசார் (உ௬0) சேரியோசையோடே (உ௬௧) ஓசை (உ௬௪) [illegible] (உ௬0) பறையோசை (உ௬உ) [illegible] (உ௬௩) இசையாகிய அவ்வோசைமுழுவதும் (உ௬௬) இசைக்கும்படி (உ௬௭) தண்பணைசுற்றப்பட்டு (உ௭0) என்க.

சிறுதினை கொய்ய— சிறியதினையையறுக்க,

கவ்வை கறுப்ப— எள்ளிளங்காய் முற்ற,

கருங்கால் வரகின் இருங்குரல் புலர— கரியதாளையுடைய வரகினது கரிதாகிய கதிர் முற்ற,

ஆழ்ந்த குழும்பில் திருமணி கிளர— ஆழ்ந்தகுழியிலே [illegible] மணி கிடந்துவிளங்க,

[எழுந்த கடற்றில் நன்பொன் கொழிப்ப, பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி, மடக்கட் பிணையொடு மறுகுவன உகள:] பெருங் கவின் பெற்ற சிறு தலை நௌவி எழுந்த கடற்றில் நன்பொன் கொழிப்ப மடக் கட் பிணையொடு மறுகுவன உகள— பெரிய அழகைப்பெற்ற சிறியதலையினையுடைய நெளவியாகிய [illegible] பொன்மேலே [illegible] மடப்பத்தையுடைத்தாகிய கண்ணை [illegible] பிணையோடே சுழல்வனவாய்த்துள்ள,

சுடர்ப் பூங் கொன்றை தாஅய நீழல்— [illegible] பூக்களையுடைய கொன்றைபரந்த நிழலிடத்தே,

பாஅயன்ன பாறை அணிந்து— [illegible] பாறை அழகுபெற்று,

[நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளி யன்ன ஒள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்:] நீலத்தன்ன பைம்பயிர் மிசைதொறும் சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை வெள்ளி யன்ன ஒள்வீ உதிர்ந்து தாய்— நீலமணியையொத்த பைம்பயிர்களினிடங்கடோறும் முறுக்குண்ட அரும்புகளையுடைய முசுண்டையுடனே முல்லையினுடைய [illegible] ஒளியபூக்கள் உதிர்ந்து பரந்து,

[மணிமருள் அன்ன [illegible], [illegible], கல்லோன் [illegible] வெறிக்களம் கடுப்ப:] கல்லோன் [illegible] வெறிக்களம் [illegible] காமர் துணிநீர் மெல்லவல் மணிமருள் [illegible] தோய்ப [illegible]— [illegible] த்தல்வல்லவன் இழைத்த கூத்தினையுடைய களத்தையொப்ப [illegible] விருப்பத்தையுடைய

[illegible] நிலைமணிபெற நுடங்குளும் செய் [illegible]தல் [illegible] பிற்கொடி [illegible] மாறுபா . மலர

முல்லை [illegible] அணிந்து ஒருசார் — [illegible] தந்து ஒருபக்கம்.

ஒருசார் (உஅரு) அணிந்து (உஎஅ) தாய்க் (உஅக) கொய்யக் கறுப்பப் (உஎக) புல ரக் (உஎஉ) கிளர (உஎரு) உக்ள (உஎகூ) மலரப் (உஅரு) புறவுசூழப்பட்டு (உஅ௬) என முடிக்க.

* [illegible] என்பதனாற் பல [illegible] அங்கே அணிந்தெ [illegible]

[illegible] தோரை — [illegible] அகிலே [illegible] குறிய கதிர்களையுடைய தோ ரைநெல்லும்,

நெடுங் கால் ஐயவி — நெடியதாளினையுடைய வெண்சிறுகடுகும்,

[illegible] — [illegible] வெள் ளியநெல்லோடே பிணக்கக்கொண்டு வளரப்பட்டு,

இஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும் பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி — [illegible] ருநம் கற்றரையிடத்தே குவியப்பட்டு,

[illegible] — [illegible] ர் படியுங் கிளியையோட்டும் ஆரவாரம்,

[illegible] [illegible] [illegible]

[illegible] பூசல் — பல [illegible] அலை [illegible] யோட்டுங் கானவருடைய ஆரவாரம்,

[illegible] வீழ் [illegible] பூசல் — [illegible] ஆரவாரம்,

[illegible] - இற்குலத்தோன்றின் [illegible].

கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர் நறும் பூக் கொய்யுங் [illegible] — [illegible] வாரம்,

இருங் கேழ் ஏறு அடு வயப் புலிப் பூசலொடு — [illegible] புலியி [illegible] நோடே,

ஏறு ‡ - ஆனேறுமாம்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், [illegible].

† [illegible] வினையியல், [illegible].

‡ [illegible]

அனைத்தும்—முழுவதும்,

[இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக், கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந், தருங்கடி மாமலை தழீஇ:]

இலங்கு வெள் அருவியொடு கருங்கால் வெற்பு அணிந்து—விளங்குகின்ற வெள்ளிய அருவிவீழ்கின்ற வற்றுமலை கரியவேரோடுங் கால்களையுடைய பக்கமலைகள்சூழ்ந்து,

சிலம்பகத்து இரட்ட—மலையிடத்தே மாறிமாறியொலிப்ப,

குறிஞ்சி சான்ற— புணர்ச்சியாகிய உரிப்பொருளமைந்த,

அருங்கடி மாமலை தழீஇ— பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரியமலை தழுவப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (௩௦௧), அருவியாற (௨௯௯) கருங்காலையுடையவெற்பணிதலாலே (௩௦௦) நீடி (௨௮௮) ஈண்டி (௨௯௦) விளையுஞ் சாலிற் கிளிகடிபூசல் (௨௯௧) கானவர்பூசல் (௨௯௫) அட்டபூசல் (௨௯௬) கொய்யும்பூசலொடு (௨௯௭) அனைத்துப்பூசலும் புலிப்பூசலோடே (௨௯௮) சிலம்பகத்திரட்டச் (௨௯௯) குறிஞ்சிசான்ற (௩௦௦) அருங்கடியினை யுடையமலைதழுவப்பட்டு (௩௦௧) எனமுடிக்க.

[இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப:] இரு வெதிர்க் கூர் எரி பைந்தூறு நைப்ப— பெரியமூங்கிலிற்பிறந்த மிக்கநெருப்புப் பசியதூறுகளைச் சுடுகையினாலே,

* நிழத்த யானை மேய்புலம் படர—ஓய்ந்தயானைகள் தமக்கு மேயலாமிடங்களிலே போக,

கலித்த இயவர் இயம் தொட்டன்ன — மகிழ்ந்த வாச்சியக்காரர் தம்வாச்சியத்தை வாசித்தாலொத்த,

கண் விடுபு உடைப்பூத் தட்டை கவின் அழிந்து— மூங்கிலின்கண் திறக்கப்பட்டு உடைந்து இயந்தொட்டன்ன (௩௦௪) ஓசையையுடைய தட்டை அழகழிகையினாலே

தட்டப்படுதலிற் றட்டையென்றார்.

நெருப்புறுகையினாலே (௩௦௨) பயிரின்றித் தட்டை கவினழிகையினாலே (௩௦௫) ஓய்ந்தயானை மேய்புலம் படரும்படி (௩௦௩) அருவியான்ற மலை (௩௦௬) யென்க

கவினழிய வெனத் திரித்து முடித்தலுமாம்.

அருவி ஆன்ற அணி இல் மா மலை — அருவிகளில்லையான அழகில்லாத பெரியமலையிடத்து விடாகம் (௩௦௮)

வை கண்டன்ன புல் முளி அம் காட்டு — வைக்கோலைக்கண்டாற்போன்ற ஊகம்புல்லுலர்ந்த அழகியகாட்டிடத்தில்,

கமம் சூழ்கோடை விடரகம் முகந்து—நிறைவினையுடைய சூறைவளியை முழைஞ்சிடங்கள் முகந்துகொள்கையினாலே,

கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை— காற்றுமிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய வேனிற்குன்றம் (௩௧௫)

இலை வேய் குரம்பை உழை அதள் பள்ளி உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்—குழையாலேவேய்ந்த குடிலிலிருக்கும் மான்றோலாகியபடுக்கையினையும், தழை விரவினகண்ணியினையும், கடியசொல்லினையுமுடைய இளையோர்,

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், ௩௪:—"ஒய்த லாய்த னிழத் தல் சாஅ, யாவயி னான்கு முள்ளத னுணுக்கம்."

வில்லுடைக் கையர் கவலை காப்ப — வில்லையுடைத்தாகிய கையையுடையாராய்ப் பலவழிகளில் ஆறலைக்கள்வரைக் காக்கும்படி சுரஞ்சேர்ந்து (௩௧௪) என்க.

நிழல் உரு இழந்த வேனிற் குன்றத்து — நிழல் தன் வடிவையிழத்தற்குக் காரணமான முதுவேனிற் காலத்தையுடைய மலையிடத்துச் சுரம் (௩௧௪).

பாலை சான்ற — பாலையாகிய உரிப்பொருளமைந்த.

சுரம் சேர்ந்து—அருநிலஞ் சேரப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (௩௧௩), மழை (௩௦௬) விடரகம் கோடையையுறுக்கையினாலே (௩௦௪) கடலிற்குளிருங் காலையையுடைய (௩௦௫) வேனிற்குன்றத்துப் (௩௧௩) பாலைசான்ற சுரஞ்சேரப்பட்டு (௩௧௪) என்க.

பாலைக்கு நிலமின்றென்னும் பெயர்கூறியவதனால், அது தத்தம்பொருளானும் *"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து - நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப் பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்." என முதற்பொருள்பற்றிப் பாலைநிகழ்தலானும் பாலையையும் வேறோர்நிலமாக்கினார்.

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்—ஒலிக்குங்கடல்தந்த விளங்குகின்ற ஒளியினையுடையமுத்து,

அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை—வாளரங் கீறியறுத்த இடம் நேரிதாகிய விளங்கும்வளை,

நேர்ந்தவளையுமாம்.

பரதர் தந்த பல்வேறு கூலம்—செட்டிகள் கொண்டுவருதலான்மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்,

தந்ததென்றும் பாடம்.

[இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்பு:]

இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு — கரிய கழியிடத்துப் பாத்தியில் விளைந்த வெள்ளியவுப்பு,

தீம் புளி—கருப்புக்கட்டி கூட்டிப் பொரித்தபுளி,

பரந்து ஓங்கு வரைப்பில்—மணற்குன்று பரந்துயருங் கானலிடத்தே,

வன்கைத் திமிலர் கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்—வலியகையினையுடைய திமிலர் கொழுவிய மீன்களையறுத்த துடியின்கண்போலுருண்ட துணிகள்,

என்றது கருவாடுகளை.

முத்தினையும், வளையையும், உப்பினையும், கருவாட்டினையுமேற்றின நாவா (௩௨௧) யென்க.

விழுமிய நாவாய்—சீரியமரக்கலம்,

பெருநீர் ஓச்சுநர்—மரக்கலமீகாமர்,

நனந்தலைத் தேஎத்து—அகன்ற இடத்தையுடைய யவனமுதலிய தேசத்தினின்றும்,

நன்கலன் உய்ம்மார்—இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களைக் கொண்டுசெலுத்துதற்கு,

---

* சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், காடுகாண்காதை.

புணர்ந்து—பலருங்கூடி,

உடன் கொணர்ந்த புரவியொடு—சேரக்கொண்டுவந்த குதிரைகளோடே,

அனைத்தும்—முழுவதும்.

வைகலேறும் வழிவழிச் சிறப்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினாலே வளம்பல பயின்று (௩௨௫) என்க.

நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த,

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு,

ஒருசார், பெருநீரோச்சுநர் (௩௨௧) கலனும்ம்மார் தேஎத்துக் (௩௨௨) கொணர்ந்த புரவியோடே (௩௨௩) முத்தும் (௩௧௬) வளை (௩௧௭) கடலமாணவை (௩௨௦) அனைத்தும் (௩௨௩) வழிவழிச்சிறப்ப (௩௨௪) வளம்பல பயிலப்பட்டு (௩௨௫) என்க.

நெய்தல்சான்ற (௩௨௫) பரந்தோங்கு வரைப்பின்கண்ணே (௩௧௯) வளம்பலபயிலப்பட்டெனமுடிக்க.

ஆங்கு ஐம்பால் திணையுங் கவினி—ஐம்பகுதிப்பட்ட நிலத்தின்கண்ணே ஐங்கூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று,

அமை வர—பொருந்துதல்தோன்ற,

[முழவிமிழ் மகலாங்கண், விழவுநின்ற வியன்மறுகிற்:]

முழவு இமிழும் விழவு நின்ற வியன் மறுகின்—முழவுமுழங்குந் திருநாள்நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

துணங்கை—துணங்கைக்கூத்தினையும்,

அம் தழூஉவின்—அழகினையுடைய குரவைக்கூத்தினையும்,

மணங் கமழ் சேரி—மணநாறுகின்ற பரத்தையர்சேரியினையும்,

இன் கலி யாணர்—இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுமுடைய,

அகல் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே,

[குழூஉப்பல பயின்று:] பல குழூஉப் பயின்று—பலகுடித்திரள் நெருங்கி,

ஆங்கு—அந்நாட்டில்,

பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்—புலவர் பாடுதல் முற்றுப்பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய்,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (௨௭௦) ஒருசார் மலைதழுவப்பட்டு (௩௦௧) ஒருசார் காடுதழுவப்பட்டு (௨௮௫) ஒருசார் கரந்தோப்பட்டு (௩௧௪) ஒருசார் நெய்தல்சான்ற (௩௨௫) வரைப்பின்கண்ணே (௩௧௯) வளம்பலபயிலப்பட்டு ஆங்கு (௩௨௫) ஐம்பாற்றிணையுங்கவினி (௩௨௬) அந்நாட்டிடத்து (௩௩௦) அகலாங்கட் (௩௨௭) குழூஉப்பலபயின்று (௩௩௦) அமைவரப் (௩௨௬) பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (௩௩௧) என்க.

[கலைதாய வுயர்சிமயத்து, மயிலகவு மலிபொங்கர், மந்தியாட மாவிசும்புகந்து, முழங்குகால பொருதமரம் பயில் காவின், இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவு மணற், கான்பொழில்:]

கலை தாய மலி பொங்கர் மந்தி ஆட மரம் பயில் கா—முசுக்கலைகள் தாவின மிக்க கொம்புகளிலே அவற்றின் மந்திகள் விளையாடும்படி மரம்நெருங்கின சோலை,

மா விசும்பு * உகந்து—பெரிய ஆகாயத்தேசெல்லவுயர்கையினாலே,

முழங்கு கால் பொருத மரம்—முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்,

மயில் அகவும் சாலின்—மயில் ஆரவாரிக்குங் காவிலேயே,

உயர் சிமயத்து இயங்கு புனல் கொழித்த வெண்டலைக் குவவு மணற் கான் பொழில்—உயர்ந்த மலையுச்சியிடந்தொறும் வீழ்ந்தோடுகின்ற நீர்கொழித்து எறட்ட வெளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற்குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

தழீஇய அடைகரை தோறும்—காவோடே பொழில்சூழ்ந்த நீரடையுங் கரைகடோறும்,

[தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க், கோதையி னொழுகும் விரிநீர் நல்வரல், வையைத் துறைதுறை தோறும், பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி, யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்:]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய்க் கோதையின் ஒழுகும் விரிநீர் நல் வரல் வையை—தாதுகள் சூழ்ந்த கோங்கினுடையபூவும் ஏனைமலர்களும்பரந்து மாலையொழுகினாற்போல ஒழுகும் பெருநீர் நன்றாகிவருதலையுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூத் திரள் தண்டலை சுற்றி அழுந்து பட்டு இருந்த பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலமடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்,

நிலனும் வளனுங் கண்டு அமைகல்லா விளங்கு பெருந்திருவின் வானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற்பயிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினையுடைய வானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளையிழந்தவர்களும்,

கொடும் பல் பதிய குடி இழந்தனரும்—செல்வத்தினையுடைய பலவூர்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும்,

தொன்று கறுத்து உறையும் துப்புதர வந்த—பழையதாய செற்றங்கொண்டு தங்கும் வலி தம்மைக்கொண்டுவருகையினாலே எதிராய்வந்த,

அண்ணல் யானை அடு போர் வேந்தர்—தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக்கொல்லும் போர்த்தொழிலையுமுடைய வேந்தரை,

பன் மாறு ஓட்டி (௬௫0)—பலவாய் நெஞ்சிற்கிடந்த மாறுபாடுகளை முதற்போக்கிப் பின்னர்,

[இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப், பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று:]

இன்னிசை முரசம் இடைப்புலத்து ஒழியப் பெயர் புறம் பெற்று—இனிய ஓசையினையுடைய முரசம் உழிஞைப்போர்க்கிடையே கிடக்கும்படி மீளுகையினாலுண்டான முதுகைப்பெற்று,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், கூ:— "உகப்பே யுயர்தலுவப்பே யுவகை."

என்றது: உழிஞைப்போர்செய்யவந்த அரசர் குடுமிகொண்ட மண்ணுமங்கல மெய்தாது இடையேமீளும்படி காத்தகிடங்கு (௩௫௧) என்றவாறு.

மண்ணுற ஆழ்ந்த மணி நீர்க் கிடங்கின்—மண்ணுள்ளவளவுமாழ்ந்த நீலமணி போலும் நீரையுடைய கிடங்கினையும்,

விண் உற ஓங்கிய பல் படைப் புரிசை—தேவருலகிலே செல்லும்படியுயர்ந்த பல கற்படைகளையுடைய மதிலினையும்,

தொல் வலி நிலைஇய வாயில் (௩௫௬)—பழைதாகிய வலி நிலைபெற்ற வாயில்,

அணங்கு உடை நெடு நிலை—தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும்,

நெய் படக் கரிந்த திண் போர்க் கதவின்—நெய் பலகாலுமிடுதலாற் கரிந்த திண்ணிய செறிவினையுடைய கதவினையும்,

வாயிலில் தெய்வமுறைதலுமாகலின், அதற்கு நெய்யுமணியாம்; * "ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை" என்பதனானுணர்க.

மழை ஆடும் மலையின் நிவந்த மாடமொடு—மேகமுலாவுமலைபோலே ஓங்கின மாடத்தோடே,

கோபுரமன்றி வாசலை மாடமாகவுஞ் சமைத்தலின், மாடமென்றார்.

வையை அன்ன வழக்கு உடை வாயில்—வையையாறு இடைவிடாது ஓடுமாறு போன்ற மாந்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலையுடைய வாயில்,

மாடத்தோடே (௩௫௫) நிலையினையும் (௩௫௩) கதவினையும் (௩௫௪) வழக்கினையுமுடைய வாயில் (௩௫௬).

பெரும்பாணிருக்கையினையும் (௩௪௨), கிடங்கினையும் (௩௫௧) புரிசையினையும் (௩௫௨) வாயிலினையு (௩௫௬) முடைய மதுரை (௬௯௯) யென்க.

வகை பெற எழுந்து வானம் மூழ்கிச் சில்காற்று இசைக்கும் பல் புழை நல் இல்—கூறுபாடாகியபெயர்களைத் தாம்பெறும்படியுயர்ந்து தேவருலகிலேசென்று தென்றற்காற்று ஒலிக்கும் பலசாளரங்களையுடைய நன்றாகிய அகங்களையும்,

மண்டபம் கூடம் தாய்க்கட்டு அடுக்களையென்றாற்போலும் பெயர்களைப்பெறுதலின், வகைபெறவெழுந்தென்றார்.

யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்—யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே,

இருகரையும் யாறும்போன்றன, இரண்டுபக்கத்தின்மனைகளும் தெருவுகளும்.

பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப—நாளங்காடியிற் பண்டங்களைக் கொள்ளும் பலசாதியாகிய பலவேறுபாட்டையுடைய மக்கள்திரளிடத்து ஓசைமிக்கொலிக்கும்படி இருந்த (௪௦௬) வென்க.

மா கால் எடுத்த முந்நீர் போல முழங்கு இசை நன் பணை அறைவனர் நுவல—பெருமையையுடைய காற்றெடுத்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய நன்றாகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டிலுள்ளார்க்குச் சொல்லுகையினாலே நாட்டார்த்தன்றே (௪௨௮) யென்க.

அறைவனர் நுவலவென்றுபாடமாயின் அறையப்படுவனவாய் விழவினைச் சொல்லவென்க.

---

* நெடுநல்வாடை.

கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை—கயத்தைக் கையாற்குடைந்துவிளையாடுந் தன்மையவாக வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கினவோசையைக்கேட்டு மகிழ்ந்தவர்களாடுஞ் செருக்கினைக்கொண்ட ஆரவாரத்தினையுமுடைய தெரு (ஙடுக) வென்க.

ஓவுக் கண்டன்ன இருபெரு நியமத்து—சித்திரத்தைக் கண்டாற்போன்ற காட்சியினையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித்தெருவில்,

நாளங்காடி, அல்லங்காடியாகிய இரண்டுகூற்றையுடைத்தென்றார்.

சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல் கொடி—கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகினையுடைய பலகொடிகளும்,

இதனால் அறங்கூறினார்.

வேறு பல் பெயர ஆர் எயில் கொளக் கொள நாடோறெடுத்த நலம் பெறு புனைகொடி—வேறுபட்ட பலபெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரண்களைத் தண்டத்தலைவர் அரசனேவலாற்சென்று கைக்கொள்ளக் கைக்கொள்ள அவர்கள் அவ்வெற்றிக்கு நாடோறுமெடுத்த நன்மையைப்பெற்ற சயக்கொடியும்,

இதனாற் புறத்துழிஞைப்போர்கூறினார்.

நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு புலவுப் படக் கொன்று மிடை தோல் ஓட்டிப் புகழ் செய்து எடுத்த விறல் சால் நன்கொடி—கடலொலித்தாற்போன்ற நிலைபெறுதலையுடைய வேற்படையோடே சென்று பகைவரைப் புலானாற்றமுண்டாகக்கொன்று பின்னர் அணியாய்நின்ற யானைத்திரளையுங்கெடுத்துத் தமக்குப் புகழையுண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்றாகியகொடியும்,

இது தும்பைப்போர்கூறிற்று.

கள்ளின் களி நவில் கொடியொடு—கள்ளினது களிப்புமிகுதியைச் சாற்றுகின்ற கொடியும்,

நன் பல பல் வேறு குழூஉக் கொடி—நன்றாகிய பலவற்றினாலே பலவாய்வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும்,

நன்பலவென்றார், கல்வி கொடை தவம் முதலியவற்றை.

பதாகை நீடிப் பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க—பெருங்கொடிகளும் நிலைபெற்றுப் பெரிய மலையிடத்து அருவியசையுமாறுபோலவசைய,

இக்கொடிகள் அருவியினுடங்கும்படி வகைபெறவெழுந்து (ஙுள) எனமுன்னேகூட்டுக.

பனை மீன் வழங்கும் வளை மேய் பரப்பின்—பனைமீனென்னுஞ் சாதியுலாவுஞ் சங்குமேய்கின்ற கடலிடத்தே,

வீங்குபிணி நோன் கயிறு அரீஇ இதை புடையூக் கூம்பு முதல் முருங்க எற்றி—இறுகும் பிணிப்பினையுடைய வலியினையுடைய பாய்கட்டினகயிற்றையறுத்துப் பாயையும்கீறிப் பாய்மரம் அடியிலேமுறியும்படி அடித்து,

[காய்ந்துடன், கடுங்காற் றெடுப்ப:] கடுங்காற்று உடன் காய்ந்து எடுப்ப—கடியகாற்று நாற்றிசையினுஞ் சேரக் கோபித்தெடுக்கையினாலே,

கல் பொருது உரைஇ—நங்கூரக்கல் கயிற்றுடனேநின்று பொருதஉலாவி,

நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல—நெடியசுழியிலேயகப்பட்டுச் சுழலாநின்ற மரக்கலத்தையொக்க,

இருதலைப் பணிலம் ஆர்ப்ப—முன்னும்பின்னுஞ் சங்கொலிப்ப,

யானைமீண்டாற் பின்னின்றலைப்ப ஊதுதற்குப் பின்னுஞ் சங்குசெல்லும்.

சினம் சிறந்து கோலோர்க் கொன்று மேலோர் வீசி—சினமிக்குப் பரிக்கோற் காரரைக்கொன்று பாகரைவீசிப் போகட்டு,

மென் பிணி வன்றொடர் பேணாது காழ் சாய்த்து—மெல்லியபிணிப்பினையுடைய வலிய நீர்வாரியென்று காலிற்கட்டுஞ் சங்கிலியை நமக்குக்காவலென்று பேணாதே அதுகட்டின தறியைமுறித்து,

கந்து நீத்து உழிதருங் கடாஅ யானையும்—கம்பத்தைக் கைவிட்டுச்சுழலுங் கடாத்தையுடைய யானையும்,

சிறந்து (௩௮0) கொன்று வீசிச் (௩௮௧) சாய்த்து (௩௮௨) நீத்து (௩௮௩) ஆர்ப்ப (௩௮0) உழிதருங்கடாமெனக் கடாத்தின்றொழிலாகவுரைக்க.

காற்றிற்குக் கடாம் உவமிக்கப்படும்பொருள்.

அம் கண் மால் விசும்பு புதைய வளி போழ்ந்து—அழகியவிடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயமறையக் காற்றைப்பிளந்து,

தேவருலகமுதலியவற்றைத் தன்னிடத்தேயுடைமையின், அங்கண்மால்விசும் பென்றார்.

ஒண்கதிர் ஞாயிற்று ஊறு அளவாத் திரிதருஞ் செங்கால் அன்னத்துச் சேவல் அன்ன—ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தான்சேர்தலைக் கெடுதலைக் கருதிக்கொண்டுபறக்குஞ் சிவந்தகாலையுடைய அன்னத்தின் சேவலையொத்த,

குரூஉ மயிர்ப் புரவி உராலிற் பரி நிமிர்ந்து காலெனக் கடுக்கும் கவின் பெறு தேரும்—நிறத்தையுடைய பலமயிர்களையுடைய குதிரைகளோட்டுகின்ற செலவுமிகுதலாற் காற்றெனக் கடுகவோடும் அழகினைப்பெறுகின்றதேரும்,

கொண்ட கோலவர் கொள்கை நவிற்றலின்—மேலேயிருந்த சித்திகையை யுடைய பரிவாரிகள் ஐந்துகதியையும் பதினெட்டுச்சாரியையும் பயிற்றுகையினாலே,

அடி படி மண்டிலத்து ஆதி போகிய—குளம்புகளழுந்தின வட்டமானவிடத்திலும் ஆதியென்னுங் கதியிலும் ஓடின,

கொடி படு சுவல விடு மயிர்ப் புரவியும்—ஒழுங்குபடு கேசரத்தையுடையவாகிய விட்டவாசங்களையுடைய குதிரைகளும்,

[வேழத் தன்ன வெருவரு செலவிற், கள்ளார் களமர் இருஞ்செரு மயக்கமும்:] வெருவரு வேழத்து அன்ன செலவிற் கள் ஆர் களமர் இருஞ்செரு மயக்கமும்—அச்சந்தோன்றுகின்ற யானையையொத்த போக்கினையுடைய கள்ளையுண்ணும் வீரர் தம்மிற் பெரியபோரைச்செய்யும் கலக்கமும்.

களத்தேசேறலிற் களமரென்றார்.

அரியவும் பெரியவும்—கண்டுப் பெறுதற்கரியனவுமாய் அளவறிந்து மிகவுள்ளனவுமாய்ப் பலவாய் வேறுபட்ட பண்ணியம் (௪0௫) என மேலே கூட்டுக.

வருவன பெயர்தலின்—யானையுந் (௩௮௩) தேரும் (௩௮௮) புரவியும் (௩௯௧) களமர் செருமயக்கமும் (௩௯௩) பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே.

[நீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூந்தலை முழவி னேன்றலை கடுப்ப:] நீம்புழல் வல்சிப் பூந்தலைக் கழற்கால் மழவர் முழவின் னோன் றலை கடுப்ப—இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய மழவர்முன் கொட்டும் வீரமத்தளத்தினது வலியகண்ணை யொக்க உருண்ட,

நீம்புழல் - இருப்பைப்பூவுமாம். பூந்தலை - விகாரம். மழவர் - சிலவீரர். * "உருவக் குதிரை மழவ ரோட்டி" என்றார் பிறரும். கடுப்பவென்னுஞ் செயவெனெச்சவுவமவுருபிற்கு உருண்டவென ஒருசொல்வருவிக்க.

பிடகைப் பெய்த கமழ் நறும் பூவினர்—பூந்தட்டிலேயிட்டுவைத்த மிகவும்நாறுகின்ற நறிய பூவினையுடையாரும்,

பல வகை விரித்த எதிர் பூங்கோதையர்—பலவகையாக விரித்துவைத்த ஒன்றற்கொன்றுமாறுபட்ட பூமாலைகளையுடையாரும்,

பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர்—இடிக்கவல்லார் பலருந்திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்குஞ் சுண்ணத்தையுடையாரும்,

தாது - நீறுமாம். நவமணிகளும், பொன்னும், சந்தனமும், கருப்பூரமுதலியனவும் பன்னீரிலும் பனிநீரிலும் நனையவைத்திடித்தலின், இடிக்கவல்லவர் பலரும்வேண்டிற்று.

தகைசெய் தீஞ்சேற்று இன்னீர்ப் பசுங்காய் நீடு கொடி இலையினர்— உடம்பிற்கு அழகைக்கொடுக்கும் இனிய கருங்காலிசீவிக்காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினையுடைய பசியபாக்குடனே வளர்ந்தகொடியீன்ற வெற்றிலையினையுடையாரும்,

† "அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப் பட்ட, செங்களி விராய காயும்" என்றார். இளங்களியன்னம் நீராயிருத்தலின் இன்னீரென்றார்.

கோடு சுடு நூற்றினர்—சங்குசுடுதலாலுண்டான சுண்ணாம்பையுடையாரும்,

[இருதலை வந்த பகைமுனை கடுப்ப, வின்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த், தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றை:]

* அகநானூறு, களிற்றியானைநிரை, க:— "வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ, லுருவக் குதிரை மழவ ரோட்டிய, முருக னற்போர் நெடுவே ளாவி, யறுகோட் டியானைப் பொதினி யாங்கண், சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய, கற்போற் பிரியல மென்ற சொற்றாம், மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த, வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப், பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக, வழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலி, னிழறேய்ந் துலறிய மரத்த வறைகாய், பறுநீர்ப் பைஞ்சுனை யாம்றப் புலர்தலி, னுகுநெற் பொரியும் வெம்மை யாவரும், வழங்குந ரின்மையின் வெளவுநர் மடியச், சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை, நாரின் முருங்கை நவிரல் வான்பூச், சூரலங் கடுவளி யெடுப்ப வாருற், றுடைதிரைப் பிதிர்வின் பொங்கிமுன் கடல்போற் றோன்றல் காடிறந் தோரே." எ-து: பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச்சொல்லியது; மாமூலனார்.

† சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம், கஅசு:—"அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப் பட்ட - செங்களி விராய காயுஞ் செம்பழுக் காயுந் தீந்தேனெங்களுங் குளிர்த்த வின்னீ ரிளம்பசுங் காயு மூன்றுந் - தங்களி செய்யச் சூட்டித் தையலார் கைசெய் தாரே."

இருதலை வந்த பகைமுனை கடுப்ப இன்னுயிர் அஞ்சி ஏங்குவனர் இருந்து—இரண்டுபக்கத்தாலும் படைவந்த பகைப்புலத்தையொக்கத் தம்முடைய இனியவுயிருக்கஞ்சி ஏங்குவாராயிருந்து,

உலைவு நீங்கிய பின்றை இன்னா வெய்துயிர்த்து—அக்காற்படையும் போனபின்னர் அவற்றானெய்திய பொல்லாவெப்பத்தைப்போக்கி,

எனவே அச்சத்தால் நெஞ்சிற்பிறந்த வருத்தத்தைப்போக்கியென்றார்.

பல்வேறு பண்ணியம் தழீஇத் திரிவோர்—பலவாய்வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தேசேர்த்துக்கொண்டு திரிகின்ற விற்பாரும்,

கொள்ளக்கொள்ளக் குறையாமல் தரத்தரமிகாமல் (௪௨௪) அரியவும் பெரியவுமாய்ப் (௫௯௪) பலவாய் வேறுபட்ட பண்ணியமெனக்கூட்டுக.

மலை புரை மாடத்துக் கொழு நிழல் இருந்தர—மலையையொக்கும் மாடங்களிடத்துக் குளிர்ந்தநிழலிலே இருத்தலைச்செய்ய,

பூவினரும் [illegible] [illegible]ரும் [illegible] சுண்ணத்தினரும் [illegible] இலையினரும் நூற்றினரும் [illegible] பண்ணியத்தர் [illegible]ரும் [illegible] யானையும் [illegible] தேரும் [illegible] புரவியும் (௫௯௧) களமயக்கமும் [illegible] வருவனபெயர்தலிற் (௫௯௪) பகைமுனைகடுப்ப (௪௦௨) அஞ்சி (௪௦௩) ஏங்குவனரிருந்து அவைநீங்கியபின்னை (௪௦௪) இன்னாவெய்துயிர்த்து [illegible] மாடநிழலின்கே [illegible] இசைபெழுகழிதொலிப்ப (௫௯௦) இருந்தா (௪௦௯) வெனக்கூட்டுக.

இருங் கடல் வான் கோடு புரைய—கரியகடலின் வெள்ளிய சங்கையொக்க,

[வாருற்றுப், பெரும்பின் னிட்ட வாணரைக் கூந்தலர், நன்னர் நலத்தர் தொன்முதுபெண்டிர்:]

வாருற்றுப் பின்னிட்ட வான் நரைக் கூந்தலர் தொன் முது பெண்டிர்—கோதிப் பின்னேமுடித்துப்போகட்ட வெள்ளிய பெரிய நரையினையுடையராகிய பழமைமூத்த பெண்டிர்,

நன்னர் நலத்தர்—நன்றாகிய வனப்பினையுடையராய்,

செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை செல்சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன செய்யர்—செந்நீர்மையினையுடைய கிளிச்சிறையென்னும் பொன்னாற்செய்த பாவை வீழ்கின்ற ஞாயிற்றின் பசியவெயிலிடத்தே தோன்றினாற்போன்ற நிறத்தினையுடையராய்,

[செயிர்த்த நோக்கினர் மடமாதர்] மடக்கண் செயிர்த்த நோக்கினர்—மடப்பத்தினையுடைய கண் ஆடவர்க்கு வருத்தத்தைச்செய்த பார்வையினையுடையராய்,

ஐது இடை கலுழும் சாயலர்—[illegible] காரணமான [illegible]யுடையராய்,

கலுழ்தல் - ஒழுகுதலுமாம்.

[illegible]

[illegible]

வணங்கு இறைப் பணைத் தோள் வயக்குறு வந்திகை—வளைந்த சந்தினையுடைய மூங்கில்போலும்தோளினையும் விளக்கமுற்றிய கைவந்தியினையும்,

தொய்யில் பொறித்த சோர்ந்து உகுவன்ன சுணங்கு எதிர் இள முலை—தொய்யிலால் வல்லியாக எழுதின நெகிழ்ந்துசிந்துமாறுபோன்ற சுணங்குதோற்றிய இளைய முலையினையும்,

தொய்யில் - எழுதுங்குழம்பு.

மை உக்கன்ன மொய் இருங் கூந்தல்—மையொழுகினாற்போன்ற செறிந்த கரிய மயிரினையுமுடைய,

மயில் இயலோரும் மடமொழியோரும்— மயிலின்றன்மையையுடையோரும் மடப்பத்தையுடைய வார்த்தையினையுடையோரும்,

கைஇ மெல்லிதின் ஒதுங்கிக் கையெறிந்து—தம்மைக்கோலஞ்செய்து மெத்தெனநடந்து கைகளைத்தட்டி,

கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப—காமநுகர்ச்சியினையன்றி வேறொன்றையுங் கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி,

[புடையமை பொலிந்த வகையமை செப்பிற்:]

புடை அமை செப்பில்— புடைபடுதலமைந்த செப்பிடத்தில்,

பொலிந்த வகை அமை செப்பில்—பொலிவுபெற்ற கூறுபாடமைந்த செப்பிடத்திற் பண்ணியம் (சஉஉ) என்க,

காயா உருவின் தாம் வேண்டும் பண்ணியம்—விருப்பமருவிய வடிவினையுடைய நுகர்வார்தாம்விரும்பும் நுகர்பொருள்களை,

சேயிழ் நறும் பூவொடு மனை மனை மறுக—சிவந்துநாறும் நறியபூவுடனேயேந்தி மனைகடோறுமனைகடோறும் உலாவிவிற்க,

நலத்தராய்ச் (சoகூ) செய்யராய் நோக்கினராய் (சகஉ) மாமையராய் (சகங) வாயராய்த் தோளினையும் (சகச) வந்திகையினையும் (சகரு) முலையினையும் (சகசு) கூந்தலினையுமுடைய (சகஎ) மயிலியலோரும் மடமொழியோரும் (சகஅ) கைஇ ஒதுங்கி எறிந்து (சககூ) மாந்தரொடு திளைக்கும்படி (சஉo) தொன்முதுபெண்டிர் (சoகூ) பண்ணியத்தைப் (சஉஉ) பூவோடேந்தி மனைமனைமறுக (சஉங) வெனக்கூட்டுக.

மழை கொளக் குறையாது புனல் புக மிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போல—மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள்பாய்தலின் மிகுதலைச்செய்யாமற் கரையைப் பொருதுஒலிக்குங் கடல்போல,

கொளக் கொளக் குறையாது தரத் தர மிகாது—பலரும்வந்து கொள்ளக்கொள்ளக் குறையாமற் பலரும் மேன்மேலுங் கொண்டுவரக் கொண்டுவர மிகாமல்,

[கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி, யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே:]

கழுநீர் கொண்ட அந்தி—தீவினையைக் கழுவுதற்குக்காரணமான தீர்த்தநீரைத் தன்னிடத்தேகொண்ட அந்திக்காலம்,

ஆடு துவன்று விழவின் எழுநாள் அந்தி—வேறோரிடத்தில்லாத வெற்றிநெருங்குந் திருநாளினைத் தன்னிடத்தேயுடைய ஏழாநாளந்தியில்,

கால்கொள்ளத்தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்தமாடுதல் மரபு.

நாடு— அவ்விழவிற்குத்திரண்ட நாட்டிலுள்ளார்,

ஆர்த்தன்றே—ஆர்த்தஆரவாரம்,

அற்றேயென்பது அன்றேயென மெலிந்ததாக்கி உவமவுருபாக்கலுமொன்று.

[மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்:] பிறங்கிய மாடம் மலி புகழ்க்கூடல்—பெரிய * நான்மாடத்தாலே மலிந்தபுகழைக் கூடுதலையுடைய மதுரை (௪௩௯)யென மேலேகூட்டுக.

[நாளங் காடி நனந்தலை:] நனந்தலை நாள் அங்காடி—அகற்சியையுடைத்தாகிய இடத்தினையுடைய நாட்காலத்துக்கடையில்,

கம்பலை—ஆரவாரம்,

உருவப்பல்கொடியும் (௩௬௫) புனைகொடியும் (௩௬௮) நல்கொடியும் (௩௬௭) களிநவில்கொடியும் (௩௭௨) குழூஉக்கொடியும் பதாகையும் நிலைஇ (௩௭௩) அருவியின் நுடங்கும்படி (௩௭௪) வகைபெறவெழுந்து மூழ்கி (௩௫௭) இசைக்கும் பல்புழையையுடைய நல்ல இல்லினையும் (௩௫௮) சும்மையினையுமுடைய (௩௬௪) தெருவினில் (௩௫௯) பெருகியமத்து (௩௬௯) நாளங்காடியிலே (௪௩௦) பூவினர் (௩௯௭) முதலியோர் இருந்தருகையிறுல் (௪௦௪) மறுகுசுலிறுல் (௪௨௩) எழுந்தகம்பலை (௪௩௦) நன்பணையறைவனர் நுவலுகைகுறுமே (௩௭௨) அதற்குத்திரண்டதாடு (௪௨௮) அந்தியில் (௪௨௭) ஆர்த்ததேயென வினைமுடிக்க.

ஆர்த்தன்றென்னுமுற்றுச்சொற் பசித்தலோசையாற் பெயர்த்தன்மையாய்த்தேற்றேகாரம் பெற்றுநின்றது.

வெயிற் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச் செக்கர் அன்ன—வெயிலையுடைய கிரணங்கள் ஒளிமழுங்கிய செலவுமிக்க ஞாயிற்றையுடைய செக்கர்வானத்தையொத்த,

சிவந்து நுணங்கு உருவிற் கண் பொருபு உகூஉம் ஒண் பூங் கலிங்கம்—சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களை வெறிகொட்டப்பண்ணிச் சிதறிவிழுமாறுபோன்ற ஒள்ளிய பூத்தொழிலையுடைய சேலைகளை,

பொன் புனை வாளொடு பொலியக் கட்டி—பொன்னிட்ட உடைவாளோடே அழகுபெறக் கட்டி,

[திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக், கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி, மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன், மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை, யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக், காலியற் கன்ன கதழ்பரி கடைஇ:]

புரளுந் தானை—தோளிலேகிடந்தசையு மொலியலினையும்,

கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி—கோத்துக்கட்டிய கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக்கழலையும் பிறக்கிடாத அடியினையும்,

மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெருந் தெரியல்—உலகத்துள்ளார்வலியினைக் கடந்து புகழ்ச்சியால் எங்குந்திரியும் ஒன்றாகிய பெரிய வேப்பமாலையினையும்,

அணி கிளர் மார்பின் ஆரமொடு அளைஇ மணி தொடர்ந்தன்ன ஒண் பூங் கோதை—அழகுவிளங்கும் மார்பிற்கிடக்கின்ற ஆரத்தோடேகலந்து மாணிக்கமொழுகினாலொத்த ஒள்ளிய செங்கழுநீர்மாலையினையுமுடையராய்,

பிரம்பின் திண்தேர்க் கால் இயற்கு அன்ன கதழ் பரி கடைஇ—விளிம்பிலேவைத்த பிரம்பினையுடைய திண்ணிய தேரிற்பூண்ட காற்றினுடைய செலவினையொத்த விரைந்த குதிரைகளைச் செலுத்தி,

காலோர் காப்பக் கால் எனக் கழியும்—காலாட்கள் சூழ்ந்துகாப்பக் காற்றென்னும்படி கடிதிற்செல்லும்,

* நான்மாடங்களாவன:—திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூரென்பன.

[வான வண்கை வளங்கெழு செல்வர், நாண்மகி ழிருக்கை:] நாள் மகிழ் இருக்கை வான வண்கை வளங்கெழு செல்வர்—நாட்காலத்து மகிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே கொடையாற்சொரிக்கும் வளவிய கையினையுடையராகிய வளப்பம்பொருந்தின செல்வர்;

நாளை (௪௪௧) ... யுடையராய்க் கட்டூக் (௪௪௪) கடைஇக் (௪௫௦) கழியும (௪௪௧) செல்வரென்க.

கான்மார் புறுகி ... பொற்சிலம்பு ஒலிப்ப—விழாவைக் கண்ட நீருட் பூண்களோடே தெள்ளிய உள்ளின்மணிகளையுடைய பொன்னாற்செய்த சிலம்புகளொலிக்கும்படி மேலே நடந்து திரிதலால்,

சிலம்பொலி ... என்பதனுல் இழிதல்பெற்றும்.

[ஒள்ளழற், றுறவு விளங்கிய வாய்பொ னவிரிழை, யலங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்:] அலங்கு வீழ்வு அன்ன ஒள் அழல் தாஅய் உறவு விளங்கிய ஆய் பொன் அவிர் இழைப் பூந்தொடி மகளிர்—வானுறைதெய்வங்களின் வீழ்ச்சியையொத்த ஒள்ளிய நெருப்பிலே மிகவுறவிளங்கிய அழகிய பொன்னாற்செய்த விளங்கும்பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினையுமுடைய மகளிர்,

இவர் நாயன்மார் கோயில்களிற் சேவிக்குமகளிர்.

மணம் கமழ் நாற்றம் தெருவுடன் கமழ—புழுகுமுதலியன நாறுகின்றநாற்றம் தெருவுகளெல்லாமணக்க,

மணம் - ஆகுபெயர்.

ஒண்குழை திகழும் ஒளி கெழு திருமுகம்—ஒள்ளிய மகரக்குழையை உள்ளடக்கிக்கொண்ட ஒளிபொருந்திய அழகினையுடையமுகம்,

[திண்கா ழேற்ற வியலிரு விலோதந், தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப:] திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் அசை வளி தெண்கடல் திரையின் புடைப்ப—திண்ணிய கொம்புகளிலேற்ற அகலத்தினையுடைய பெருங்கொடிகளை அசைகின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரைபோல எழுந்துவிழும்படி அடிக்கையினாலே,

நிரை நிலை மாடத்து அரமியந்தோறும்—ஒழுங்குபட்ட நிலைமையினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்கடோறும்,

மழை மாய் மதியின் தோன்றுபு மறைய—மஞ்சிலே மறைகின்ற திங்களைப்போல ஒருகாற்றோன்றி ஒருகான்மறைய,

அரமியந்தோறுமிருந்து (௪௫௧) விழாக்காணுமகளிர் முகம் (௪௪௮) விலோதத்தை (௪௫௩) வளிபுடைக்கையினாலே (௪௫௪) தோன்றுபுமறையுமென்க.

நாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு.

[நீரு நிலனுந் தீயும் வளியு, மாக விசும்போ டைந்துட னியற்றிய, மழுவா ணெடியோன் றலைவ னாக:] மாக விசும்போடு வளியும் தீயும் நீரும் நிலனும் ஐந்துடன் இயற்றிய மழுவாள் நெடியோன் தலைவனாக—திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய பெரியோன் எனையோரின் முதல்வனாகக்கொண்டு,

மாசு அற விளங்கிய யாக்கையர்—தீர்த்தமாடிய வடிவினையுடையராய்,

சூழ் சுடர் வாடாப் பூவின் இமையா நாட்டத்து நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு—தெய்வத்தன்மையாற் சூழ்ந்த ஒளியினையுடைய வாடாத பூவினையும் இமைக்காத கண்ணினையும் அவியாகிய உணவினையுமுடைய அச்சம்பொருந்திய மாயோன் முருகன்முதலாகிய தெய்வங்கட்கு,

மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார்—விலக்குதற்கரிய முறைமையினையுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு,

அந்தி விழவில்—அந்திக்காலத்துக்கு முன்னாக எடுத்தவிழாவிலே,

தூரியம் கறங்க—வாச்சியங்களொலிப்ப,

செல்வர் (௪௫௨) மாறுதலின்றிய வாழ்க்கையராய்க் (௪௫௩) கமழு (௪௫௪) மனையிற் (௪௫௨) நெடியோன்றலைவரைப் (௪௫௫) பெரியோர்க்குப் (௪௫௫) பலிகொடுத்தற்கு (௪௫௬) அந்தியிற்கொண்ட விழவிலே தூரியங்கறங்கவென்க.

[திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை, ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு விளங்கக்; காமர் கவினிய பேரிளம் பெண்டிர்:]

திண் கதிர் மதாணிக் காமர் கவினிய பேரிளம்பெண்டிர்—திண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களையுடையராய் விருப்பம் அழகுபெற்ற பெரிய இளமையினையுடைய பெண்டிர்,

தாம் முயங்கிப் புணர்ந்து ஓம்பினர்த் தழீஇ—தாம் முயங்குதலைச்செய்து கூடிப் பாதுகாக்குங் கணவரையுங் கூட்டிக்கொண்டு,

தாது அணி தாமரைப் போது பிடித்தாங்கு ஒண் குறுமாக்களைத் தழீஇ—தாதுசேர்ந்த செவ்வித் தாமரைப்பூவைப் பிடித்தாற்போல ஒள்ளிய சிறுபிள்ளைகளையும் எடுத்துக்கொண்டு,

தாமும் அவரும் ஓராங்கு விளங்க—தாமுங் கணவரும் பிள்ளைகளுஞ் சேர நின்றதாலேவிளங்கும்படியாக,

[பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச், சிறந்து] பூவினர் புகையினர் தொழுவனர் சிறந்து பழிச்சி—பூசைக்குவேண்டும் பூவினையுடையராய்ப் புகையினையுடையராய் வணங்கினராய் மிகுத்துத்துதித்து,

புறங்காக்கும் கடவுட் பள்ளியும்—பாதுகாத்தலைத் தொழிலாகவுடைய பௌத்தப்பள்ளியும்

சிறந்த வேதம் விளங்கப் பாடி—அதர்வவேதமொழிந்த முதன்மைபெற்ற வேதங்களைத் தமக்குப் பொருடெரியும்படியோதி,

அதர்வம் தலையாயவோத்தன்மை பொருளியலிற்கூறினும்.

விழுச் சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து—விழுமிய தலைமையைப் பெறுதற்குப் பொருந்தின யாகங்கண்முதலிய தொழில்களோடே சிலகாலம்பொருந்தி,

நிலம் அமர் வையத்து—நாலுவகை நிலங்களமர்ந்த உலகத்தே,

ஒரு தாம் ஆகி—ஒன்றாகியபிரமந் தாங்களேயாய்,

உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்—உயர்ந்த நிலைமையினையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலேநின்றுசேரும்,

அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்—தருமத்தின்வழி ஒருகாலுந் தப்பாத பல்லுயிர்கட்குமன்புடைத்தாகிய நெஞ்சாலே,

பெரியோர் மேஎய் — சீவன்முத்தராயிருப்பாரிடத்தே சிலகாலம் பொருந்தி நின்று,

இனிதின் உறையும் — ஆனந்தப்பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத்தங்கும் பள்ளி (சஎச),

[குன்று குயின்றன்ன வந்தணர் பள்ளியும்:]

குன்று குயின்றன்ன பள்ளியும் — மலையை உள் வெளியாகவாங்கி இருப்பிடமாக்கினாற்போன்ற பிராவித்துக்களிருப்பிடமும்,

அந்தணர் — வேதாந்தத்தை எக்காலமும்பார்ப்பார்,

அந்தணர் (சஎச) பாடி (சகூஅ) அன்புடைநெறி சாலே (சஎஉ) தேவருலகத்தை யெய்தும் (சஎஎ) ஒழுக்கத்தோடே சிலகாலநின்று (சகூக) பின்னர் வேதாந்தத்தையுணர்ந்து பெரியோரை மேஎய் (சஎ௩) வையத்தே ஒருதாமாகி (சஎ0) யுறையும் (சஎ௩) பள்ளியும் (சஎச) எனமுடிக்க.

வண்டுபடப் பழுநிய தேன் ஆர் தோற்றத்துப் பூவும் புகையுஞ் சாவகர் பழிச்ச — வண்டுகள்படியும்படி பருவமுதிர்ந்த தேனிருந்த தோற்றத்தையுடைய பூக்களையும் புகைகளையுமேந்தி விரதங்கொண்டோர் துதிக்க,

[சென்ற காலமும் வரூஉ மமயமு, மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து, வானமு நிலனுந் தாமுழு துணருஞ், சான்ற கொள்கைச் சாயா யாக்கை, யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார், கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண் டைப், பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவர:]

சென்ற காலமும் வரூஉம் அமயமும் இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து நல்குவர — சென்றகாலத்தையும் வருகின்றகாலத்தையும் இன்று இவ்வுலகிற் றோன்றிநடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல்வரும்படி,

வானமும் நிலனும் தாம் முழுதுணரும் அறிஞர் — தேவருலகையும் அதன்செய்கைகளையும் எல்லாவிலங்களின்செய்திகளையும் தாம் நெஞ்சாலறிதற்குக்காரணமான அறிஞர்,

இஃது எதிர்காலங்கூறிற்று.

சான்ற கொள்கை — தமக்கமைந்த விரதங்களையும்,

சாயா யாக்கை — அவ்விரதங்களுக்கு இளையாத மெய்யினையுமுடைய அறிஞர் (சஅக),

ஆன்று அடங்கு அறிஞர் — கல்விகளெல்லாநிறைந்து களிப்பின்றியடங்கின அறிவினையுடையார்,

செறிந்தனர் — நெருங்கினவருடைய சேக்கை (சஅஎ) யென்க.

நோன்மார் — நோற்கைக்கு,

கல் பொளிந்து அன்ன இட்டு வாய்க் கரண்டைப் பல் புரிச் சிமிலி நாற்றி — கல்லைப்பொளிந்தாற்போன்ற இட்டியவாயையுடைய குண்டிகையைப் பலவடங்களையுடைய நூலுறியிலே தூக்கிச் செறிந்தன (சஅக) வென்க.

கயம் கண்டன்ன — குளிர்ச்சியாற் கயத்தைக் கண்டாற்போன்ற,

வயங்குடை நகரத்து — விளங்குதலையுடைய கோயிலிடத்துச் சேக்கை (சஅஎ) யென்க.

செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து—செம்பாற்செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரமெழுதி,

நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து — கண் பார்க்கும்விசையைத் தவிர்க்கும்படி மேனிலமுயர்ந்து,

[ஓங்கி, யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங், குன்றுபல குழீஇப் பொலி வன தோன்ற:]

குன்று பல குழீஇப் பொலிவன தோன்ற ஓங்கி—மலைகள்பலவுந் திரண்டு பொலி வனபோலத் தோன்ற உயர்ந்து வயங்குடைநகரம் (௪௮௪) என்க.

இறும்பூது சான்ற நறும் பூஞ் சேக்கையும்—அதிசயமமைந்த நறியபூக்களைச் சூழ வுடைய அமணப்பள்ளியும்,

சேக்கப்படுமிடத்தைச் சேக்கையென்றார். இவர்கள் வருந்தாமற் பறித்துவழி படுதற்குப் பலபூக்களைச் சூழவாக்குதலின், நறும்பூஞ்சேக்கையென்றார்.

புனைந்து (௪௮௫) உயர்ந்து (௪௮௬) தோன்ற (௪௮௮) ஓங்கிச் (௪௮௬) சாவகர் பழிச்ச (௪௭௬) வயங்குதலையுடையநகரத்திடத்துக் (௪௮௪) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய (௪௮௦) அறிநர் (௪௮௧) உணர்ந்து (௪௭௮) நல்குவர (௪௭௯) நோன்மார் (௪௮௧) சிமிலியிலேநாற்றிச் (௪௮௩) செறிந்தனருடைய (௪௮௪) சேக்கையு மெனக்கூட்டுக.

அச்சமும்—நடுவாகக்கூறுவேமோ கூறேமோவென்று அஞ்சிவந்த அச்சத்தையும்,

அவலமும்—அவர்க்குத் தோல்வியால் நெஞ்செறந்தேனென்றும் வருத்தத்தையும்,

ஆர்வமும் நீக்கி— அவர் தந்நெஞ்சுகருதின பொருளைக்கண்மேற்றேனென்றின பற் றுள்ளத்தினையும் போக்கி,

என்றது - அவர்கள் நெஞ்சுகொள்ள விளக்கியென்றவாறு.

செற்றமும் உவகையும் செய்யாது காத்து—ஒருகூற்றிற் செற்றஞ்செய்யாமல் ஒருகூற்றில் உவகைசெய்யாமல் நெஞ்சினைப் பாதுகாத்து,

ஞெமன்கோல் அன்ன செம்மைத்தாகி—துலாக்கோலையொத்த நடுவுநிலைமை யையுடைத்தாய்,

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்—இக்குணங்களாற்சிறந்த விரதங் களையுடைய தருமநூலைச் சொல்லுந்திரளும்,

நறுஞ் சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்துப் பெரியோர் (௪௯௫)—நறிய சந்தனத் தைப்பூசிய நிறம்விளங்குமார்பினையுடைய பெரியோர்,

யாகத்திற்குச் சந்தனம்பூசுதல்மரபு.

[ஆவுதி மண்ணி யவிர்துகிர் முடித்து, மாவிசும்பு வழங்கும் பெரியோர்போல, நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி, யன்பு மறனு மொழியாது காத்துப், பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த:]

ஆவுதி மண்ணி மா விசும்பு வழங்கும் பெரியோர் போல—யாகங்களைப்பண்ணிப் பெரிய சுவர்க்கத்தேறப்போம் அந்தணர் அரசரை அடக்குமாறுபோல,

நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி—அரசனிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலேகண்டு அத்தீங்குகளையாராய்ந்து அவற்றிலேபோகாமலடக்கி,

அன்பும் அறனும் ஒழியாது காத்து—சுற்றத்திடத்துச்செல்லுமன்பும் எல்லாவுயிர்க் கண்ணுஞ்செல்லுந் தருமமும் ஒருகாலமும்போகாமல் தம்மிடத்தே பரிகரித்து,

பழி ஒரீஇ உயர்ந்து—பழி தம்மிடத்துவாராமல் நீக்கி அதனாலே ஏனையோரி னும் உயர்ச்சியெய்தி,

பாய் புகழ் நிறைந்த—பரந்த புகழ்நிறைந்த,

அவிர் துகில் முடித்து—விளங்குகின்ற மயிர்க்கட்டுக் கட்டி,

செம்மை சான்ற காவிதிமாக்களும்—தலைமையமைந்த காவிதிப்பட்டங்கட்டின அமைச்சரும்,

அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி—இல்லறத்திற்குக்கூறிய வழியைத்தப் பாமல் இல்லறத்திலேநடந்து,

குறும் பல் ஊழிற் குன்று கண்டன்ன—அண்ணிய பல திரட்சிகளையுடைய மலைகளைக் கண்டாற்போன்ற,

பருந்து இருந்து உகக்கும் பன்மாண் நல்லில்—பருந்து இளைப்பாறியிருந்து பின்பு உயரப்பறக்கும் பலதொழிலின்மாட்சிமைப்பட்ட நல்லஇல்லில்,

பல வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி—பலவாய்வேறுபட்ட பண்டங் களோடே பலவுணவுகளுமிக்கு அழகுபெற்று,

மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்—மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் நீரி டத்தனவும் பிறவிடத்தனவுமாகிய பண்ணியம் (௫௦௬),

பல வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு—பலவாய் வேறுபட்ட அழ கினையுடைய மணிகளையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு,

சிறந்த தேஎத்து—மணிகளும் முத்தும் பொன்னும் பிறத்தற்குச் சிறந்த தேசத்தி னின்றும்வந்த,

பண்ணியம் பகர்நரும்—பண்டங்களைவிற்கும் வணிகரும்,

ஊண்மலிந்து கவினிக் (௫௦௩) குன்றுகண்டன்ன (௫௦௧) நல்லஇல்லிலே யிருந்து (௫௦௨) ஆற்றினொழுகிச் (௫௦௦) சிறந்ததேஎத்துவந்த (௫௦௭) திருமணிமுத்தமொடு பொன்கொண்டு (௫௦௫) பிறவுமாகிய (௫௦௪) பண்டங்களை விற்பாருமென்க.

[மழை யொழுக் கறாஅப் பிழையா விளையுள்:] அறாஅ ஒழுக்கு மழைப் பிழையா விளையுள்—இடைவிடாமற் பெய்கின்ற மழையால் தவறாத விளைதலையுடையதாகிய மோகூர் (௫௦௮),

பழையன் மோகூர்—பழையனென்னுங் குறுநிலமன்னனுடைய மோகூரிடத்து,

[அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன:] அவை அகம் விளங்க நாற்கோசர் மொழித் தோன்றியன்ன — நன்மக்கடிராளிடத்தே விளங்கும் படி அறியக்கூறிய நான்குவகையாகியகோசர் வஞ்சினமொழியாலே விளங்கினாற் போன்ற,

தாம் மேம்பட்டுத்தோன்றிய நாற்பெருங்குழுவும்—தமது மொழியால் தாம் மேலாய்வி ளங்கிய நால்வகைப்பட்ட பெரியதிரளும்,

ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப்பிறித்து முற்கூறினமையின், ஈண்டு ஏனை நாற்பெருங்குழுவைக் கூறினார். ஐம்பெருங்குழுவாவன: "அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் தூதர் [illegible] ரிவரென மொழிப." இளங்கோவடிகளும், * "ஐம்பெ ருங் குழுவு மெண்பே ராயமும்" என்றார்.

* சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை.

[கோடுபோழ் கடைநரும்] கொம்புகளைக் கடைகரும்—அறுத்துச் சங்கை வளையாக [illegible] வியனவாகக் கடைவாரும்,

திருமணி குயினரும்—[illegible] துளையிடுவாரும்,

சூடுறு நன்பொன் சுடர் இழை புனைநரும்—சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும் பணிகளாகப்பண்ணுந் தட்டாரும்,

பொன் உரை காண்மரும்—பொன்னைப் [illegible] அதன் [illegible] பொன் காண்கரும்,

கலிங்கம் பகர்நரும்—புடைவைகளை விற்பாரும்,

செம்பு நிறை கொண்மரும்—செம்பு நிறுக்கப்பட்ட [illegible] வாங்கிக்கொள்வோரும்,

வம்பு நிறை முடிநரும்—கச்சுக்களைத் தம் தொழில் முற்றப்பட முடிவாரும்,

பூவும் புகையும் ஆயும் மாக்களும்—பூக்களையும் சாந்தையும் நன்றாக [illegible] விற்பாரும்,

[எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி, நுண்ணிதின் உணர்ந்த] எவ்வகை நுண்ணிதின் உணர்ந்த செய்தியும் [illegible] காட்டி—[illegible]க்கப்பட்ட கூரிதாக உணர்ந்த தொழில்களையும் ஒப்புக்காட்டி,

சித்திரமெழுதுவார்க்கு [illegible] எழுதுதற்கு [illegible]ச் செய்தியுமென்றார்.

நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைநரும்—கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்,

நோக்கு [illegible] தொழிலென்றது [illegible] கண்ணுள் வினைஞரென்றார்.

பிறரும் கூடி—யான் கூறப்படாதோருந் திரண்டு,

தெண்கடல் குழீஇய [illegible] அகல் [illegible] பல் [illegible] நெடியவும் [illegible] தெளிந்த [illegible] ஒலியெழும் [illegible] அறுத்தெடுத்த [illegible] சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடைவைகளைக் கொண்டுவந்து விரித்து.

மடித்தது அறலுக்குவமை.

சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ—சிறியோரும் பெரியோருமாகிய [illegible] தற்றொழிலைச்செய்வார் திரண்டு,

கால் [illegible] தெருவத்தும் [illegible]—நான்காய்க் கூறுபட்ட தெருக்களிடந்தோறும் ஒருவர்காலோடு ஒருவர்கால் நெருங்க நிற்றலைச்செய்ய,

[illegible] விரித்து [illegible] நிற்றலைச்செய்ய.

இவ்வாறு [illegible] புடைவைவிற்பாரைக் கூறிற்று.

கோயிலைச்சூழ்ந்த [illegible] நால்வகைத் தெருவின், நால்வேறு தெருவென்றார் [illegible] பொன்னும் மணியும் புடைவைகளும் கருஞ்சரக்கும் விற்கும் நால்வகைப்பட்ட வாணிகர்தெருவென்றுமாம்.

கொடும்பறைக் கோடியர் கடிப்பு உடன் [illegible] [illegible] காட்டன் [illegible] [illegible] பெருநாள் இருக்கை—[illegible] பறையினையுடைய கூத்தர் [illegible] [illegible] சூழ்ந்த கடல்போன்ற [illegible] [illegible] பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்கவிருப்பிலே,

விழுமியோர் குழீஇ விழைவு கொள் கம்பலை கடுப்பக் கல்லென (கஉஅ)—எல் லாகமங்களையுமுணர்ந்த சீரியோர் திரண்டு தாங்கேட்பத் தருக்கங்களைக்கூறி விரும் புதல்கொண்ட ஆரவாரத்தையொப்பக் கல்லென்றவோசை நடக்க,

பலசமயத்தோரும் தம்மிற்றும் மாறுபட்டுக்கூறுந் தருக்கத்தைச் சொற்கூறக் கேட்டிருக்கின்ற கம்பலைபோலவென்றார்.

பலவுடன்—கூறுதன பலவற்றுடனே,

சேறும் நாற்றமும் பலவின் சுளையும்—தேனும் நாற்றமும் உடையவாகிய பலாப்பழத்தின் சுளையும்,

சேறென்றார், சுளையிலிருக்கின்ற தேனை.

வேறுபடக் கவினிய தேமாங் கனியும்—வடிவு வேறுபட அழகுபெற்ற இனிய மாவிற்பழங்களையும்,

“சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய பலவின் சுளைத் தேமாங் கனியும்” என்றும் பாடம்.

பல்வேறு உருவின காயும்—பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலியனகாய்களையும்,

பழனும்—வாழைப்பழம் முந்திரிகைப்பழமுதலிய பழங்களையும்,

கொண்டல் வளர்ப்பக் கொடி விடுபு கவினி மென் பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்—மழை பருவத்தே பெய்து வளர்க்கையினாலே கொடிகளைவிட்டு அழகுபெற்று மெல்லிய சுருள்விரிந்த சிறிய இலைகளையுடைய இலைக்கறிகளையும்,

கொடியென்றார், ஒழுங்குபட விடுகின்ற கிளைகளை.

[அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்] தீஞ்சேறு அமிர்து இயன் றன்ன கடிகையும்—இனிய பாகினாற்கட்டின அமிர்தம் தேறுகண்டாற்போன்ற கண்டசருக்கரைத்தேற்றையும்,

புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்—புகழ்ச்சிகள் உண்டாகச் சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும்,

கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு—பாதாளமாகவீழ்ந்த கிழங்குடனே,

[பிறவு, மின்சோறு தருநர் பல்வயி னுகர:] பல்வயின் நுகர இன்சோறு பிறவும் தருநர்—பலவிடங்களினும் அநுபவிக்க இனிய பாற்சோறு பான்முதலியவற்றையுங் கொண்டுவந்திடுவாரிடத்து எழுந்தவோசையும்,

என்றது சோறிடுஞ்சாலைகளை.

[வாலிதை யெடுத்த வளிதரு வங்கம், பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத், தொல்லெ னிமிழிசை மானக் கல்லென, நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப், பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத, மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந், திருமெழு பாறுள வுருவ பெயர்தலிற், பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே, யல்லங் காடி யழிதரு கம்பலை:]

நனந்தலை வினைஞர் கலங் கொண்டு மறுக—அகன்ற இடத்தையுடைய தேசங்களின்வாணிகர் ஈட்டிச்செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல்காரணமாக,

வால் இதை எடுத்த வளிதரு வங்கம்—நன்றாகிய பாய்விரித்த காற்றுக்கொண்டு வருகின்ற மரக்கலம்,

பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை ஓதம் இருங்கழி மருவிப் பாய்ப் பெரிது எழுந்து உருகெழு பானாள் வருவன—பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலால்நாறும் திரையையுடைய ஓதம் கரியகழியிற் புகார்முகத்தே யேறிப் பரக்கின்றவளவிலே மிக்கெழுந்து அச்சம்பொருந்திய நடுயாமத்தே வருகின்றவற்றின் பண்டம் (ருஉஎ) மெனக.

பெரிதெழுந்தென்றார், பாயும்வாய்க் சரக்கும்பறியாமல் வருகின்றமைதோன்ற. ஓதமருவிப்பாயவென்றார், அவ்வோதம் ஏற்றத்திலே கழியிலேவருமென்பதுணர் தற்கு.

பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து ஒல்லென் இமிழ் இசை மான—வருகம்வருகின்றவற்றிற் பலவாய் வேறுபட்ட சரக்கு இறக்குதலைச்செய்யும் பட்டினத்து ஒல்லெனமுழங்குகின்ற ஓசையையொக்க,

மறுகுதற்குவந்த வங்கம் குட்டத்தினின்றும் வருவனவற்றிற் பண்டமிழியும் பட்டினத்து ஓசைமானவெனக.

பெயர்தலிற் பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்று—இரையை நிறையமேய்ந்து பார்ப்பிற்கிரைகொண்டு அந்திக்காலத்துமீளுதலிற் பலசாதியாய் வேறுபட்ட பறவைகளினோசை எழுந்த தன்மைத்து;

அல் அங்காடி அழிதரு கம்பலை — அந்திக்காலத்துக் கடையின் மிகுதியைத்தருகின்ற ஓசை,

கடவுட்பள்ளியிடத்தும் (சகூ) அந்தணர்பள்ளியிடத்தும் (சஎசா) சேரியிடத்தும் (சஅஎ) அவையத்திடத்தும் (சகூஉ) காவிதிமாக்களிடத்தும் (சகூக) எழுகின்றவோசை கோதை (சஉச) யிருக்கையில் (ருஉரு) விளைவுகொள்கம்பலையைப்போலக் (ருஉகூ) கல்லென (ருகூஅ) வெனமுடிக்க.

பண்ணியம்பகர்நரிடத்தோசையும் (ருகூ) நறும்பெருங்குழுவிடத்தோசையும் (ருகூ) பல்வயினுகர இன்சோறு (ருகூரு) பிறவுந் (ருகூச) தருநரிடத்தெழுந்தவோசையும் (ருகூரு) கோடுபோழ்கடைநர் (ருசக) முதலாகக் கன்னூல்வினைஞரீறாகவுள்ளாருடைய பிறருங்கூடிக் (ருசஅ) கடிமருங்குழீஇ (ருஉக) நிற்றர (ருஉஉ) எழுந்தவோசையும் பட்டினத்து (ருகூஎ) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென (ருகூஅ) வெனமுடிக்க.

இங்ஙனமுடித்தபின் நடுமத்து (கூகூ) அல்லங்காடியில் அழிதருகம்பலை (ருஅஎ) தாரியங்கறங்குகையினாலும் (சகூ) கம்பலைபோலக் (ருஉகூ) கல்லென்கையினாலும் (ருகூஎ) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென்கையினாலும் (ருகூஅ) பல்வேறுபுள்ளின் இசையெழுந்தற்றே (ருசகூ) யெனச்சேரவினைமுடிக்க.

கல்லெனவென்பதனை இரண்டிடத்திற்குங்கூட்டுக.

இவ்வோசைகளின் வேறுபாடுகளைநோக்கிப் பல்வேறுபுள்ளோசைகளை உவமை கூறினார்.

[ஒண்கடருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து, சென்றஞாயிறு] ஒண் சுடர் உருப்பு ஒளி சினம் தணிந்து மழுங்கச் சென்ற ஞாயிறு— ஒள்ளிய விளக்கினையுடைய வெப்பத்தையுடைய ஒளி சினமாறிக் குறையும்படி ஒழுகப்போன ஞாயிறு,

நன்பகற் கொண்டு குடமுதற் குன்றம் சேர — பின்னர் நன்றாகிய பகற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அத்தகிரியைச் சேருகையினாலே

துணைமுதல் நாளொடு முதிர்ந்த மதியம் தோன்றி நிலா விரிபு பகல் உரு உற்ற இரவு வர—கீழ்த்திசையிடத்தே பதினாலுநாட்சென்றுமுதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப் பரக்கையினாலே பகலின்வடிவையொத்த இராக்காலம்வரும்படி,

நயந்தோர்—கணவர்பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு,

காதல் இன்றுணை புணர்மார்—தம்மேற் காதலையுடைய தமக்கினிய கணவரைக்கூடுதற்கு,

ஆய் இதழ்த் தண் நறுங் கழுநீர் துணைப்ப—ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களை மாலைகட்டும்படியாக,

இழை புனையூஉ—அணிகளை யணிந்து,

நல் நெடுங் கூந்தல் நறு விரை குடைய—நன்றாகிய நெடிய மயிர்சிற்புகின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாக,

நரந்தம் அரைப்ப—கத்தூரியை அரைக்கும்படியாக,

நறுஞ் சாந்து மறுக—நறியசந்தனம் அரைக்கும்படியாக,

மென் நூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப—மெல்லிய நூலாற்செய்த கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை ஊட்டும்படியாக,

பெண் மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர் நெடுஞ்சுடர் விளக்கம் கொளீஇ—நுணக்கறப்பால் உலகத்துப்பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணைபோலும் நோக்கினையுடையமகளிர் நெடியவொளியினையுடைய விளக்கினையேற்றி,

[நெடுநகர், எல்லை யெல்லா நோயொடு புகுந்து, கல்லென் மாலை நீங்க:]

நெடு நகர் எல்லை எல்லாம்—பெரிய ஊரினெல்லையாகிய இடமெல்லாம்,

கல்லென் மாலை நோயொடு புகுந்து நீங்க—கல்லென்னுமோசையையுடைய மாலை நயந்தோர்க்கு (ருசகூ) நோயைச்செய்தலொடு புகுந்துபோகையினாலே முந்தையாமஞ்சென்றபின்றை (கூஉ௦) யென்க.

நெடுநகர் (ருருசு) எல்லையெல்லாம் (ருருஎ) மகளிர் (ருருரு) விளக்கங்கொளீஇக் (ருருச) காதலின்றுணைபுணர்தற்குப் (ருருங) புனையூஉத் துணைப்பக் (ருருக) குடைய (ருருஉ) அரைப்ப மறுக (ருருக) மடுப்ப (ருருசு) இரவுவரும்படி (ருசங) ஞாயிறு (ருசகூ) சென்றஞ்சருகையினாலே (ருசஎ) மாலை (ருருஅ) நயந்தோர்க்கு (ருசகூ) நோயொடு புகுந்து (ருருஎ) பின்னர் நீங்க (ருருஅ) முந்தையாமஞ்சென்றபின்றை (கூஉ௦) யெனக்கூட்டுக.

காணுங் கொள்ள—புணர்ச்சியின்றியுந் தமக்கு உயிரினுஞ்சிறந்தாரைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

[ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ், தாழ்பெயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து, வீழ்துணை தழீஇ:]

ஏழ் புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ் பண்ணுப்பெயர்த்து—இசையேழும் தன்னிடத்தே கூடின தலைமையினையுடைய இனிய நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்களைமாறிவாசித்து,

வீழ் துணை தழீஇ—தம்மைவிரும்பின கணவரைப் புணர்ந்து நாணுக்கொள (ருருஅ),

பாட்டுக் காமத்தைவிளைவித்தலின், யாழைவாசித்து வீழ்துணைதழீஇயென்றார்.

[வியல்விசும்பு கமழ, நீர் திரண் டன்ன கோதை பிறக்கிட்டு:] நீர் திரண்டன்ன கோதை வியல் விசும்பு கமழப் பிறக்கிட்டு—நீர்திரண்டாற்போன்ற வெள்ளியபூக்க

சாந்துசெய்த மாலைகளை அகற்சியையுடைய விசும்பிலே சென்றுநாறும்படி கொண்டையிலே முடித்து,

ஆய் கோல் அவிர் தொடி விளங்க வீசி—அழகிய திரட்சியையுடைய விளங்குகின்ற தொடி விளங்கும்படி கைகளைவீசி மனைதோறுஞ்சென்று பொய்தலையார (விலைக) வென்க.

போது அவிழ் புதுமலர் தெரு உடன் கமழ—அலரும்பருவமாக முகிழ்த்த புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் நாற,

மேதகு தகைய மிகுநலம் எய்தி—மேம்பாட்டையுடைய புணர்ச்சியாற் குறைந்த அழகினை மீண்டும் பெறுமைதருகின்ற அழகினையுடைய மிகுகின்ற நன்மையுண்டாகவொப்பித்து,

[பெரும்பல் குவளைக் கருந்தொடை பல்மலர், திறந்த மோட்டு அன்ன நிரைத்த நாற்றத்து:]

திறந்து மோட்டு அன்ன நிரைத்த நாற்றத்து—அவர்கள்நடக்கும் கை மாலைகள் மோட்டையொத்த நாறுகின்ற நாற்றத்தினையுடைய,

பெரும்பல் குவளைக் கருந்தொடை பல்மலர்—பெரிய பலவாகிய செங்குவளைகளிற் கரும்புகளுக்கலர்கின்ற பலபூக்களையும்,

[கொண்டல் மலர்ப்புதல் மானப்பூ வேய்ந்து:]

கொண்டல் மலர்ப் புதல் மான வேய்ந்து—மழைக்குமலர்ந்த மலரையுடைய சிறுதூற்றையொக்கச் சூடி,

பூ—வனைப்பூக்களையும்,

பலநிறத்துப்பூக்களை நெருங்கப்புனைதல் பற்றிச் சிறுதூறு உவமையாயிற்று.

[நுண்பூண் ஆகம் வடுக்கொள முயங்கி, மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து, சேயரு நணியரும் நலனயந்து வந்த, இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி.]

சேயரும் நணியரும் நலன் நயந்து வந்த இளம்பல் செல்வர்—புறநாட்டிலுள்ளாரும் உள்நாட்டிலுள்ளாருமாய்த் தம்முடைய அழகினை விரும்பிவந்த இளையராகிய பல செல்வத்தையுடையாரை,

பல மாயப் பொய் கூட்டி நுண் பூண் ஆகம் வடுக்கொள முயங்கி—பலவாய்ப் பொய்களையுடைய பொய்வார்த்தைகளாலே முதற்கூட்டிக்கொண்டு அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம்மார்பிலே வடுக்கொள்ளும்படியாக முயங்கிப் பின்பு,

கவவுக் கரந்து வளம் தப வாங்கி—அம்மனம் அன்புடையார்போலே முயங்கின முயக்கத்தை அவர் பொருள்தருமளவும் மறைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாக வாங்கிக்கொண்டு

நுண் தாது உண்ணும் வறும்பூத் துறக்கும் மென் சிறை வண்டு இனம் மான—பூ அலருங்காலமறிந்து அதன் நுண்ணிய தாதையுண்டு தாதற்ற வறிய பூவைப் பின்னைத் தீண்டாமல் துறந்துபோம் மெல்லிய சிறகையுடைய வண்டின் திரளையொப்ப,

இது தொழிலுவமம்.

புணர்ந்தோர் நெஞ்சு ஏமாப்ப இன் துயில் துறந்து—தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனியகூட்டத்தைக் கைவிட்டு,

பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல—பழுமரமுள்ள இடந்தேடிச்சென்று அப்பழத்தையே ஆராய்ந்து வாங்கிநுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய புள்ளினம்போல,

தம்முயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத்தொழிலை வாழ்க்கையென்றார்.

[கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய, மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்:]

கொழுங் குடிச் செல்வரும் பிறரும் மேஎய அணங்கு உடை நல்லில்—வளவியகுடியிற்பிறந்த செல்வரும் அவர்களாற்றோன்றிய பிறசெல்வருமேவப்பட்ட இல்லுறைதெய்வங்களையுடைய நன்றாகிய அகங்களில்,

குடிச்செல்வரென்றார், நான்குவருணத்தை. பிறரென்றார், அவர்களாற்றோன்றிய வினைச்சாதிகளை.

மணம் புணர்ந்து ஓங்கிய ஆய் பொன் அவிர் தொடிப் பாசிழை மகளிர்—வரைந்துகொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஓட்டைத்தபொன்னாற்செய்த விளங்குகின்ற தொடியினையும் பசியபூணினையுமுடைய மகளிர்,

ஒண்சுடர் விளக்கத்து—ஒள்ளிய விளக்கினுடைய ஒளியிலே,

பலர் உடன் துவன்றி—பலருஞ் சேரநெருங்கி,

நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும் வானவமகளிர் மான—நீலநிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்து விளையாடும் தெய்வமகளிர் வருந்துமாறுபோல,

கண்டோர் * நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்—தம்மைக்கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள்வாங்குதலையுடைய பரத்தையர்,

[யாமநல்யாழ் நாப்ப ணின்ற, முழவின் மகிழ்ந்தன ராடி:] யாம நல்யாழ் நாப்பண் நின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடி—முதற்சாமத்தில் வாசித்தற்குரிய நன்றாகிய யாழ்களுக்குநடுவே அவற்றிற்கேற்பத்தாழ்ந்து தம்வழிற்செறிந்த ஓசையையொக்கநின்ற முழவாலே மனமகிழ்ந்தாடி,

தாழ்பெயற் கனைகுரல் கடுப்ப (ருகூ) வென்று முன்னர்வந்ததனை இவ்விடத்துக்கூட்டுக.

குண்டு நீர்ப் பனித் துறைக் குவவு மணல்—ஆழ்ந்த நீரினையுடைய குளிர்ந்த துறையிடத்துக் குவிந்த மணலிலே,

முனைஇ—வெறுத்து,

[மென்றளிர்க், கொழுங்கொம்பு கொழுதி:] கொழுங்கொம்பு மென்றளிர் கொழுதி—கொழுவிய கொம்புகளினின்றும் மெல்லியதளிர்களைப் பறித்து,

[நீர்நனை மேவர, நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி:] குவளை நீர் நனை மேவர நெடுந்தொடர் வடிம்புற அடைச்சி—குவளையை நீர்க்கீழரும்புகளோடே பொருந்துதலைக் கட்டின நெடியதொடர்ச்சியை வடிம்பிலேவிழும்படி யுடுத்து,

மணம் கமழ் மனைதொறும் பொய்தல் அயர—மணநாறுகின்ற மனைதோறும் சென்று பொருடருதற்குரிய இளையரோடு விளையாடுதலைச்செய்ய,

அங்ஙனம் விளையாடிவசிகரித்து உறவுகொண்டு பொருள்வாங்குதல் அவர்க்கியல்பு.

வானவமகளிர் மான (ருஅஉ) நெஞ்சுநடுக்குறூஉக் கொண்டிமகளிர் (ருஅங) பலருடன்றுவன்றிக் (ருஅ0) குவவுமணலிலே (ருஅசு) முழவின் மகிழ்ந்தனராடி (ருஅரு)

* நெஞ்சு நடுக்குறூஉங் கொண்டி மகளிரென்றும் பாடம்.

அந்தணைமுளை இக் (௫அ௬) குவளையையுடைச்சிக் (௫அஅ) கோதையை (௫கூ௨) விசும்பு காழப் (௫கூக) பிறக்கிட்டு (௫கூ௨) இளையபல்செல்வரைக் (௫எ௨) கூட்ட (௫எ௦) முயங்கிப் (௫௬௬) பின்னர்க்கலைக்காந்து (௫௭௦) வளைந்த வாங்கித் (௫௭௦) தாதுண்டுறக்கும் (௫௬௬) வண்டு மயன்ன (௫௭௦) இன்றுயில்துறந்து (௫எ௫) பின்னரும் பிருதலை மயிர்ச் (௫௬௫) சுரும்புபடும் மலைமயம் (௫௬௬) இணைப்பூக்களையும் புதுமலர் வேய்ந்து (௫௬அ) புதுமலர் தெருவுடன் கமழும் (௫௬௯) தொடியையணிவி (௫௬௯) மனைக்கமழ் மனைதொறும் (௫௭௦) பானை போலச் (௫௭௦) சென்றுபொய்தலயர (௫௭௦) வெனக் கூட்டுக.

செல்வரும் நிறரும் மேவப்பட்ட (௫௭௨) அணைக்குடை நல்ல இல்லில் மைம்மருங்கு நோங்கிய (௫௭௩) பாசிலைமுகைகள் (௫௭௪) ஒண்சுடர் விளக்கத்தே (௫௭௫) சீறியாழைப் (௫௫௪) பண்ணுறுத்தொத்து (௫௭௬) வீழ்நுனைதழீஇ (௫௭௭) ஏற்றுவென் ள(௫௫அ) வெனக்கூட்டுக.

கணைக்கொள் அவனைக் கடந்த வாள்வன்னாள் மாய்வாரைப் பெய மருங்கேத்— திரட்சியைக்கொண்ட அவனைவென்று வென்றுசெய்த வாலிலைபுனையும் மாமையையுடையோன் சிறந்த நன்னாளையன்றுளில் வெறிநுள்ளாரெழித்த விழவிடத்தே,

[கோணந் தின்ற வடுவாழ் முகத்த, சாமந் தின்ற சமந்தாங்கு தடக்கை, மறங்கொள் சேரி மாறுபொரு செருவின், மாறா தூற்ற வடுப்படு நெற்றி:]

மறம் கொள் சேரி மாறு பொரு செருவில் மாறாது உற்ற வடுப்படு நெற்றி—இந்நகர்நாட் போர்செய்து மேன்மேலுற்ற மறத்தைக்கொண்ட உருக்கின்ற தெருவுகளில் தம்மிற்றும் மாறுபட்டுபொருகின்ற போரில் கன்னிவென்று அடியாறுமையாற்பட்ட வடுவழுந்தின நெற்றியினையும்,

சுரும்பு ஆர் கண்ணிப் பெரும்புலம் மறவர்— சுரும்புகள் மொய்க்கும் போர்ப்பூவினையும் பெரியவிருப்பத்தினையுமுடைய மறவர்,

அத்திருநாளில் பெரும் செரிப்போர்கூற்றுளை, அவ்வூர்க்கு நீயங்கொண்டு

[கடுங்களிற் றோட்டலின்] கோணம் தின்ற வடு ஆழ் முகத்த (௫௯௨) சாமம் தின்ற சமம் தாங்கு தடக்கைக் (௫௯௩) கடுங்களிறு ஓட்டலின்—தோட்டி வெட்டுதலான் வடு வழுந்தின முகத்தையுடையவாய்க் கொலைபழக்கும் போர்யானை உலகாளியைக்குத் தழும்பிருந்த போரைத்தாங்கும் பெரியகையினையுடைய கடியகளிற்றை ஓட்டுகையினாலே,

காணுநரீட்ட, கையுகலைக் காணும் நிலம்பா இடுபட காணுநர் கொடிலக்கைக் காழகம் இட்ட பால் நிலம் உறப்ப—அவ்யானைக்குமுன்னேபோய் பாதுகாப்பதைக் கொல்லும் பரிக்காரர் அவ்வியானை பிடித்துக்கொள்ளுங்காலத்து பெய்யநாயக் அந்தி மீளாதந்துச் சமைப்பித்து வெண்டயம் காழ்கையயுடைய சீலைநிரல்லையுடையபுலைவைகளிலே வைத்து சிந்தின பனம்புல்லுமேற்கிடந்து கால்கள்ப் பொருந்துபடி,

நெருஞ்சிறுமன்றுப்போல முனைபட்ட இரும்பால் திரளச்செய்யப்பட்ட கொட்டு படையஞ்சுமென்று அவர் மடியில் வைத்த கப்பணத்தைப் பாலெய்யாததிய பாலென்றார். *''சேறும் காய்ந்தனன் சிலைக்கைக் கப்பணஞ் சிதறினானே'' என்றார்பிறரும்.

* சீவகசிந்தாமணி, நாமகள்லம்பகம். உ௬௬:—''எஃகுலமேல் திருத்த பயிரிந்தன வெரிபொற் கண்ணி - நாந்தக முழுவர் கண்ணுதர் கூறும் றனை கடுங்கி மன்னர் - சாய்ந்தபின் றறுக ளுண்மைக் கடியங் காரன் வேழங் - காய்ந்தனன் சிலைக்கைக் கப்பணஞ் சிதறி னானே.''

களிங்கள் தேறல் மகிழ்சிறந்து திரிதர—கடியகட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக் குத் திரிதலைச்செய்ய,

ஒணநாளிற் (ருகக) பொருந்து வடுப்படு நெற்றி (ருகரு) முதலியவற்றையுடைய மறவர் (ருகசு) மகிழ்சிறந்து (ருசுக) பாலுறுப்பத் (ருகஅ) திரிதர (ருககூ) வெனக் கூட்டுக.

கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து—தங்கணவர் இம்மைமறுமையிற்பெறும் பயன்பெற்றேமென்று மகிழும்படி பிள்ளைகளைப்பெற்று,

பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற—பாலால்இடங்கொண்டேந்திய இளைய முலை பால்சுரக்கும்படி,

[புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீ ரயர:]

புலவுப் புனிறு தீர்ந்து குளநீர் அயர—புலாலாற்றத்தையுடைய ஈன்றணிமைநீங் கித் தெய்வத்தினைக்கால் ஒரிடுக்கணுமற்றுக் குளத்துநீரிலே குளிக்கையினாலே,

கடுஞ்சூல் மகளிர் பேணி (சு0க)—முதற்சூல்கொண்ட மகளிர் இவ்வாறே இடுக்க ணின்றிப் புதல்வரைப்பெறுதல்வேண்டுமென்று தெய்வத்தைப்பரவிக் குறைதீர்ந்தபின்,

பொலிந்த சுற்றமொடு—மிக்க சுற்றத்தாருடனே,

வளமனை மகளிர்—செல்வத்தையுடைய மனைமகளிர்,

இல்லிருக்குங் குடிப்பிறந்த மகளிர்.

நரம்பு தொடுத்துச் செவ்வழி பண்ணி—நரம்புகட்டினை யாழிற்றண்டிலே கட்டிச் செவ்வழியென்னும் பண்ணைவாசித்து,

இவவுக் கூறவே அதினரம்புங் கூறினர்.

நால் வகை நல்யாழ் முழவோடு ஒன்றி—நரம்பென்னும் நரம்பு கூடின வண்ணம் நன்றாகிய யாழுடனே முழவும்பொருந்தி,

நுண்ணீர் ஆகுளி இரட்ட—மெல்லியநீர்மையினையுடைய சிறுபறையொலிப்ப,

பலவுடன்—பூசைக்குவேண்டும் பொருள்கள் பலவற்றுடனே,

ஒள்ளிய சுடர் விளக்கம் முந்துற—ஒள்ளிய சுடர்விளக்கம் முற்பட,

மடையொடு—பாற்போனகமுதலிய சோறுகளை,

நல் மா மயிலின் மென்மெல இயலி—நன்றாகிய பெருமையையுடைய மயில் போலே மெத்தென மெத்தென நடந்து,

[கடுஞ்சூன் மகளிர் பேணிக்கை தொழுது:]

கைதொழுது—கையாற்றொழுது,

[பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்:]

பெருந் தோள் சாலினி மடுப்ப—பெரிய தோளினையுடைய தேவராட்டியோடே மடுப்ப,

வளமனைமகளிர் குளநீர் அயர (சு0கூ) புதல்வர்ப்பயந்து (சு00) புனிறுதீர்ந்து (சு0உ) குளநீராடுதலாமல (சு0ரு) அதுகண்டு கடுஞ்சூன்மகளிர் பேணிக் (சு0க) குறைதீர்ந்தபின் பொலிந்தசுற்றத்தோடே (சு0உ) பலவுடன் (சு0சு) சாலினியோடே (சுக0) பண்ணி (சு0அ) ஒன்றி (சு0ரு) இரட்ட (சு0சு) இயலிச்சென்று (சு0அ) கைதொழுது (சு0கூ) மடையை (சு0எ) மடுப்ப (சுக0) வெனக்கூட்டுக.

ஒருசார்—ஒருபக்கம்,

அருங் கடி வேலன் முருகொடு வளைஇ—அரிய அச்சத்தைச்செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனால்வந்ததெனத் தான்கூறிய சொல்லின்கண்ணே கேட்டோரை வளைத்துக்கொண்டு,

பிள்ளையார்வேலை யெடுத்தலின், வேலனென்றார். என்றது - கழங்குவைத்துப் பிள்ளையாரால்வந்ததென முற்கூறிப் பின் வெறியாடுவனென்று ஆடுமுறைமை கூறிற்று.

அரிக் கூடு இன்னியம் கறங்க—அரித்தெழும்ஓசையையுடைய சல்லி காடி முதலியவற்றோடேகூடின இனிய வாச்சியங்கள் ஒலியாநிற்க,

[நேர்நிறுத்துக், கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின், சீர்மிகு நெடுவேட் பேணி:]

கார் மலர்க் குறிஞ்சி சூடி—கார்காலத்தான் மலரையுடையவாகிய குறிஞ்சியைச்சூடி,

கடம்பின் சீர் மிகு நெடுவேள் நேர் நிறுத்துப் பேணி—கடம்புசூடுதலால் அழகுமிகுகின்ற முருகனைச் செவ்விதாகத் தன்மெய்க்கண்ணேநிறுத்தி வழிபடுகையினாலே,

தழூஉப் பிணையூஉ—மகளிர் தம்முட்டழுவிக் கைகோத்து,

மன்றுதொறும் நின்ற குரவை—மன்றுகடோறும்நின்ற குரவைக்கூத்தும்,

சேரிதொறும்—சேரிகடோறுநின்ற,

உரையும்—புனைந்துரைகளும்,

பாட்டும்—பாட்டுக்களும்,

ஆட்டும்—பலவகைப்பட்டகூத்துக்களும்,

விரைஇ—தம்மிற் கலக்கையினாலே,

வேறு வேறு கம்பலை—வேறுவேறாகிய ஆரவாரம்,

வெறி கொள்பு மயங்கி—ஒழுங்குகொண்டு மயங்கப்பட்டு,

பேர் இசை * நன்னன் பெரும்பெயர் நன்னாள்—பெரியபுகழையுடைய நன்னன்கொண்டாடுகின்ற பிறந்தநாளிடத்து,

அவன்பெயர் அந்நாள் பெறுதலின், பெரும்பெயரைப்பெற்ற நன்றாளென்றார்.

சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு—சேரிகளிலுள்ளார் கொண்டாடுகின்ற விழாவாலே ஆரவாரமெழுந்தாற்போல,

முந்தை யாமம் சென்ற பின்றை—முற்பட்டசாமம் நடந்தபின்பு,

கொண்டிமகளிர் (ருஅ௩) பொய்தலையரப் (ருஅகூ) பாசிணைழமகளிர் (ருஎக) வீழ்துணைதழீஇ (ருசுக) நாணுக்கொள (ருகூஅ) மறவர் (ருகூகூ) மகிழ்சிறந்துதிரிதரக் (ருகூக) கடுஞ்சூள்மகளிர்கைதொழுது (சுசு) மடுப்ப ஒருசார் (சுக௦) நெடுவேட்பேணுகையினாலே (சுகச) மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற (சுகரு) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (சுகசு) வேறுவேறுபட்டகம்பலை (சுகஎ) சேரிவிழவின்ஆர்ப்பெழுந்தாங்கு (சுகஅ) வெறிகொள்புமயங்கப்பட்டு (சுககூ) முந்தையாமஞ்சென்றபின்றை (சுஉ௦) யெனக்கூட்டுக.

ஒருசார் (சுக௦) விரைஇ (சுகக) யென்க.

பணிலம் கலி அவிந்து அடங்க—சங்குகள் ஆரவாரமொழிந்து அடங்கிக்கிடக்க,

* நன்னன் - ஓர்குறுநிலமன்னன்.

காழ் சாய்த்து நொவைட் நவில் நெடுங் கடைட் அடைத்து— சட்டக்காலைவாங்கி பண்டங்களுக்கு விலைகூறும் நெடியகடைகளையடைத்து,

மட மதர் ஒள்ளிழை மகளிர் பள்ளியயர— மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலங்களையுமுடைய மகளிர் துயிலுதலைச்செய்ய,

[நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை, யயிருருப் புற்ற வாடமை விசயங், கவ வொடு பிடித்த வகையமை மோதகம்:]

விசயம் ஆடு அமை நல் வரி இறாஅல் புரையும் மெல்லடை—பாகிலே சமைத்த வமைந்த நல்லவரியையுடைய தேனிறாலையொக்கும் மெல்லிய அடையினையும்,

கவவொடு பிடித்த வகை அமை உருப்பு உற்ற மோதகம்—பருப்புந்தேங் காயுமாகிய உள்ளீடுகளோடே கண்டசருக்கரைகூட்டிப்பிடித்த வருப்பமைந்த வெம் மைபொருந்தின அப்பங்களையும்,

தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க—இனிய பாகோடு சேர்த்துக்கரை த்த மாவினையுடைய அப்பவாணிகரும் அவற்றோடேயிருந்து தூங்குவனராயுறங்க,

விழவின் ஆடும் வயிரியர் மடிய—திருநாளின்கண்ணே கூத்தாடுங்கூத்தர் அத னையொழிந்து துயில்கொள்ள,

பாடு ஆன்று அவிந்த பனிக் கடல் புரைய—ஒலிநிறைந்தடங்கின குளிர்ந்த கடலை யொக்க,

பாயல் வல்லோர் கண் இனிது மடிப்ப— படுக்கையிலே துயில்கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள,

[பானாட் கொண்ட கங்கு லிடையது:]

பானாட் கொண்ட கங்குல் —பதினைந்தாநாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்,

[பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற், கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப:]

பேயும் அணங்கும் உருவுகொண்டு கழுதொடு கொட்ப—பேய்களும் வருத்துந் தெய்வங்களும் வடிவுகொண்டு கழுதுடனே சுழன்றுதிரிய,

கழுது - பேயிலொருசாதி.

ஆய் கோல் கூற்றக் கொஃறேர் அச்சமறியாது ஏமமாகிய (சுருஉ) மதுரை (சுகசுக) யெனக்கூட்டி யாக்கைநிலையாதென்றறிந்து மறுமைக்குவேண்டுவன செய்துகொ ண்டமையின், அழகிய கோலையுடைய கூற்றத்தின் கொலைக்கஞ்சாமற் காவலுண் டாயிருக்கின்றவூரென்க.

* "கரும்பாட்டிக் கட்டி *** பரிவ திலர்." என்றார் பிறரும். கொஃறேர் - கால சக்கரம்.

இரும்பிடி மேஎந் தோல் அன்ன இருள் சேர்பு—கரியபிடியின்கண்ணேமேவின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச்சேரப்பட்டு,

இருள் - கருஞ்சட்டையுமாம்.

---

* நாலடியார், அறன்வலியுறுத்தல்; ௫:—"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார் - துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்-வருந்தி யுடம்பின் பயன் கொண்டார் கூற்றம் - வருங்காற் பரிவ திலர்."

கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை நிலன் அகழ் உளியர் (௬௪௧)—கல்லையுமர த்தையுமறுக்குங் கூர்மையையுடைய நிலத்தையகழும் உளியையுடையராய்,

நிலத்தை அகழுங்கருவியைத் தொடுத்து இடைப்பட்ட கற்களுக்கும் மரங்களுக்கும் வாய்மடி யாதென்றார்.

தொடலை வாளர்—தூக்கிட்ட வாளினையுடையராய்,

தொடுதோல் அடியர்—செருப்புச்சேர்த்த அடியினையுடையராய்,

[குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச், சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல், நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற் றினர், நிலனக முளியர்:]

சிறந்த கருமை நுண்வினை நுணங்கு அறல் — மிக்ககருமையினையுடைய நுண் ணியதொழில்களையுடைய நுண்மை தன்னிடத்தே பற்றுதலையுடையது,

என்றது இறைமுடிந்தசேலையென்றவாறு; ஆகுபெயர்.

குறங்கிடைப் பதித்த கூர் நுனைக் குறும்பிடி—அச்சேலைகட்டினமருங்கிற் குறங் கிடைத் தெரியாமற்கிடக்கும்படியழுத்தின கூரிய நுனையினையுடைய சிலசொட்டை,

நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்—பலநிறங்களைத் தன்னிடத்தேகைக்கொ ண்டு கைசெய்யப்பட்ட நீலநிறத்தையுடைய கச்சினையுடையராய்,

என்றது:- கட்டினசேலையிடத்தே செருகித் தொடையுடனேசேர்ந்துகிடக்குஞ் சொட்டையின்மேலேகட்டின நீலக்கச்சினரென்றவாறு. அதுதெரியாமல் தொடை யுடனேசேர்ந்துகிடத்தலிற் குறங்கிடைப்பதித்தவென்றார்.

மென்னூல் ஏணிப் பன்மாண் சுற்றினர்—மெல்லிய நூலாற்செய்த ஏணியை அ ரையிலே பலவாய் மாட்சிமைப்படச்சுற்றிய சுற்றினையுடையராய்,

மதிற்றலையிலே உள்ளேவிழவெறிந்தாற் கைபோல மதிலைப்பிடித்துக்கொள்ளும் படி இரும்பாற்சமைத்ததனைத் தலையிலேயுடைய நூற்கயிற்றை உள்ளேவிழவெறிந்து அதனைப் புறம்பேநின்றுபிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவராகலின், ஏணியென்றார்.

கலன் நசைஇக் கொட்கும்—பேரணிகலங்களை நச்சுதலாலே அவற்றையெடுத் தற்கு இடம்பார்த்துச்சுழன்றுதிரியும்,

கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி—விழித்தகண்இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தைவேய்த்து,

செருப்பைத்தொட்டுக் கச்சைக்கட்டி நூலேணியைச்சுற்றி உளியையெடுத்து வாளைப்பிடித்துக்கொட்குங் காவலரென வினையெச்சவினைக்குறிப்புமுற்று வினையெச் சமாய்நிற்குமாறு, * "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ்சூத்திரத்தா னுணர்க.

வயக் களிறு பார்க்கும் வயப் புலி போல ஒற்றி (௬௪௨)—வலியகளிற்றை இரை யாகப்பார்க்கும் வலியபுலியைப்போலே வேய்க்கையினாலே,

துஞ்சாக் கண்ணர்—துயில்கொள்ளாத கண்ணையுடையராய்,

அஞ்சாக் கொள்கையர் —பேய்முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையு டையராய்,

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬௬.

அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்—களவிற்றொழிலையறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்றொழிலை ஆளுந்தன்மையையுடையராய்,

[செறிந்த, நூல்வழிப்பிழையா நுணங்குநுண் டேர்ச்சி, யூர்காப் பாளர்:] நுணங்கு செறிந்த நூல்வழிப் பிழையா நுண்டேர்ச்சி ஊர்காப்பாளர்— நுண்மைசெறிந்த நூலின்வழியைத்தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக்காத்தற்றொழிலை ஆளுதலையுடையராய்,

களவுகாண்டற்குரிய சாத்தற்குங்கூறிய நூல்கள்போலவாமென்றார்.

நூல்வழிப்பிழையா வென்னைக்கூட்டி நூலிற்சொன்னபடி சமைந்தவூரென்றுமாம்.

ஊக்கருங் கணையினர்—தப்பக்கருதிமுயல்வார்க்குத் தப்புதற்கரிய அம்பினையுடையராய்,

தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக மழை அமைந்துற்ற அரைநாள் அமயமும்—தேரோடுந்தெருவின்கண்ணே நீர்திரண்டொழுகும்படி மழை மிகப்பெய்த நடுநாளாகிய பொழுதிலும்,

அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்—காவலிற் றப்பிலராய்ப்போந்து விருப்பந்தோன்றி உலாவுகையினாலே,

[கடவுள் வழங்குங் கையறு கங்குலும்:] இடையது (௬௩௧) கடவுள் வழங்கும் கை அறு கங்குல்—இரண்டாஞ்சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலாவுஞ்செயலற்றகங்குல்,

உம்மையை யாமமுமெனப் பின்னேகூட்டுக.

[அச்சமறியா தேம மாகிய, மற்றை யாமம் பகலுறக் கழிப்பி:]

மற்றையென்பதனை முந்தையாமஞ் சென்றபின்றை யென்பதன்பின்னும் மூன்றாஞ்சாமத்திறுதிக் கூட்டுக.

அச்சமறியா தேமமாகிய என்றும், மற்றையென்றும் யாமமென்றும் பிரித்து முன்னே கூட்டுக.

பகல உறக் கழிப்பி—இங்ஙனம் பகுத்தலுறும்படி போக்கி,

முந்தை யாமஞ் சென்ற பின்றை (௬௨௰) மற்றைப் (௬௫௩) பாணாட்கொண்டகங்குல் (௬௩௧) யாமத்தையும் மற்றை (௬௫௨) இடையதாகிய (௬௩௧) கடவுள்வழங்குங் கங்குல் (௬௫௧) யாமத்தையும் (௬௫௩) கலியவிந்தடங்கப் (௬௨௪) பள்ளியயர (௬௨௫) உறங்க (௬௨௭) மயிரியர்மடியப் (௬௨௮) பேயும் அணங்குமுருவுகொண்டு (௬௩௨) கழுதொடுகொட்ப (௬௩௩) ஊர்காப்பாளர் (௬௪௭) புலிபோலக் (௬௪௩) கண்மாறுடவர் ஒடுக்கமொற்றுகையினாலே (௬௪௨) கண்ணராய்க் கொள்கையராய் (௬௪௪) ஆண்மையராய்க் (௬௪௫) கணையராய் (௬௪௭) அரைநாளமயமும் (௬௪௯) எழுந்துநயம்வந்து வழங்கலிற் (௬௫௰) பனிக்கடல்புரையப் (௬௨௬) பாயலின்வளர்வோர் கண்ணினிதுமடுப்பப் (௬௩௰) பகலுறக்கழிப்பி (௬௫௩) யெனமுடிக்க.

இங்ஙனங் கழிக்கின்றது இராப்பொழுதென்றுணர்க.

[போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கை:] பிணி விட்ட போது கமழ் நறும் பொய்கை— தளையவிழ்ந்த பூக்கள்நாறும் நறிய பொய்கைகளிலே,

[தாதுண் டும்பி போதுமுரன் றாங்கு:] போது தாது உண் தும்பி முரன்றாங்கு— அப்பூக்களில் தாதையுண்ணுந்தும்பிகள் பாடினாற்போல,

[ஓத லந்தணர் வேதம் பாட:] வேதம் ஓதல் அந்தணர் பாட—வேதத்தை முற்ற ஓதுதலையுடைய அந்தணர் வேதத்திற் றெய்வங்களைத் துதித்தவற்றைச் சொல்ல,

[சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி, யாழோர் மருதம் பண்ண:] யாழோர் சீர் இனிதுகொண்டு நரம்பு இனிது இயக்கி மருதம் பண்ண—யாழோர் தாளவறுதியை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத்தெறித்து மருதத்தைவாசிக்க,

காழோர் கடுங் களிறு கவளம் கைப்ப—பரிக்காரர் கடியகளிற்றைக் கவளத்தைத்தீற்ற,

நெடுந்தேர்ப் பணை நிலைப் புரவி புல்லுணாத் தெவிட்ட—நெடியதேரிலேபூணும் பந்தியினிற்றலையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்ட,

பல் வேறு பண்ணியக் கடை மெழுக்கு உறுப்ப—பண்டம்விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகுதலைச்செய்ய,

கள்ளோர் களி நொடை நுவல—கள்ளைவிற்போர் களிப்பினையுடைய கள்ளிற்கு விலைசொல்ல,

களி - ஆகுபெயர்.

இல்லோர் நயந்த காதலர் கவவுப் பிணித் துஞ்சி—கற்புடைமகளிர் தாங்கள் விரும்பின கணவருடைய முயக்கத்திற் பிணிப்பாலே துயில்கொண்டு,

புலர்ந்து விரி விடியல் எய்த விருப்புற்று—இருண்மாய்ந்து கதிர்விரிகின்ற விடியற் காலத்தைப் பெறுகையினாலே அக்காலத்து இல்லத்திற்செய்யத்தகுவனவற்றைச் செய்தற்குவிரும்பி,

கண் பொரா எறிக்கும் மின்னுக்கொடி புரைய—கண்ணை வெறியோடப்பண்ணிவிளங்கும் மின்னொழுங்கை யொப்ப,

ஒண் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி—ஒள்ளிய பொன்னாற்செய்துவிளங்குஞ் சிலம்புமுதலியணவொலிப்பப் புறம்போதுகையினாலே,

திண்சுவர் நல்லில் கதவம் கரைய—திண்ணியசுவர்களையுடைய நல்லவகங்களிற் கதவுகளொலிப்ப,

உண்டு மகிழ்ந்து அட்ட மழலை நாவிற் பழஞ்செருக்காளர் தழங்கு குரல் தோன்ற—கள்ளையுண்டு களிப்பினைத் தம்மிடத்தேதடுத்துக்கொண்ட மழலைவார்த்தையையுடைய நாவினையுடைய பழையகளிப்பினையுடையாருடைய முழங்குகின்ற குரல்கடோன்ற,

சூதர் வாழ்த்த மாகதர் நுவல—நின்றேத்துவார்வாழ்த்த இருந்தேத்துவார் புகழைச்சொல்ல,

வேதாளிகரொடு நாழிகை இசைப்ப—வைதாளிகர் தத்தந் தொழிற்குரியனவற்றையிசைப்ப நாழிகைசொல்லுவார் நாழிகைசொல்ல,

நாழிகை - ஆகுபெயர்.

இமிழ் முரசு இரங்க—ஒலிக்கின்ற பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப,

ஏறு மாறு சிலைப்ப—ஏறுகள் தம்முண்மாறுபட்டு முழங்க,

பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப—பொறியினையுடைய மயிரினையுடைய கோழிச்சேவல் விடியற்காலத்தை அறிந்துகூவ,

யானையங்குருகின் சேவலொடு காமர் அன்னம் கரைய— வண்டாழ்ங்குருகி னுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னச்சேவல்களும் தமக்குரிய பேடைகளை யழைக்க,

அணி மயில் அகவ—அழகிய மயில்கள் பேடைகளையழைக்க,

பிடிபுணர் பெருங்களிறு முழங்க—பிடியோடே கூடின பெரியயானைகள் முழங்க,

[முழுவலிக், கூட்டுறை வயமாப் புலியொடு குழும:] வயமாக் கூட்டுறை முழுவலிப் புலியொடு குழும— கரடிமுதலிய வலியவிலங்குகள் கூட்டிலேயுறைகின்ற மிக்கவலியையுடைய புலியுடனே முழங்க,

வானம் நீங்கிய நீனிற விசும்பின்—ஆகாயம் தனக்குவடிவின்றென்னுந் தன்மைநீங்குதற்கு மேகபடலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத்தின்கண்ணே,

இனிச் செக்கர்வானம்போன விசும்பென்பாருமுளர்.

மின்னு நிமிர்ந்தனையராகி—மின்னுநுடங்கின தன்மையினையுடையராய்,

நறவு மகிழ்ந்து— மதுவையுண்டு,

மாண் இழை மகளிர் புலந்தனர் பரிந்த பகுவாய்த் தாழ் ஆரம் சொரிந்த முத்தமொடு— மாட்சிமைப்பட்ட பேரணிகலங்களையுடைய மகளிர் கணவரோடேபுலந்தனராய் அறுத்த பகுத்தலையுடைய வடமாகிய ஆரஞ்சொரிந்த முத்தத்தோடே,

மகளிர் மகிழ்ந்து புலந்தனராய்ப் பரிந்த முத்தமென்க.

[பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன:] பொன் சுடு நெருப்பு உக்க நிலம் என்ன—பொன்னையுருக்குகின்ற நெருப்புச்சிந்தின நிலம்போல,

என்றது - கரியுந் தழலும் பொன்னுஞ் சிதறிக்கிடந்தாற்போலவென்றதாம்.

[அம்மென் குரும்பைக் காய்படுபு பிறவும்:]

பிறவும்—முற்றுதொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும்,

அம் மென் குரும்பைக் காய் — அழகிய மெத்தென்ற இளதாகிய பச்சைப் பாக்கும்,

படுபு—விழுந்து,

தரு மணல் முற்றத்து—கொண்டுவந்திட்ட மணலையுடைய முற்றத்தே,

அரி ஞிமிறு ஆர்ப்ப—வண்டுகளும் ஞிமிறுகளும் ஆரவாரிப்ப,

மென்பூஞ் செம்மலொடு நன்கலம் சீப்ப— மெல்லிய பூவாடல்களுடனே நல்ல பூண்களையும் பெருக்கிப்போகடும்படி,

முத்தத்தோடே பிறவும் காயும் முற்றத்தேவிழுகையினாலே அவற்றையும் செம்மலோடே கலங்களையும் அரிமிஞிறார்ப்பச் சீப்பவென்க.

இரவுத் தலைப் பெயரும் ஏம வைகறை—இராக்காலம் தன்னிடத்தினின்றும் போகின்ற எல்லாவுயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்திலே,

பாடப் (௬௫௬) பண்ணக் (௬௫௮) கைப்பத் (௬௫௯) தெவிட்ட (௬௬௦) உறப்ப (௬௬௧) நுவலக் (௬௬௨) கனையத் (௬௬௭) தோன்ற (௬௬௯) வாழ்த்த நுவல (௬௭௦) இசைப்ப (௬௭௧) ஒலிக்கச் சிலைப்ப (௬௭௨) இயம்பக் (௬௭௩) கரைய அகவ (௬௭௫) முழங்கக் (௬௭௬) குழுமச் (௬௭௭) சீப்பத் (௬௮௫) தலைப்பெயருமெனமுடிக்க.

மை படு பெருந்தோள் மழவர் ஓட்டி இடைப்புலத்து ஒழிந்த ஏந்து கோட்டு யானை—பிறர்தோள் குற்றப்படுதற்குக்காரணமான பெரியதோளையுடைய மழவரைக்

செய்து அவர்விட்டுப்போகையினாலே போர்க்களத்தைக்கொன்ற வெற்றியைக்கொம்பினை யுடைய யானைகளும்,

மழவர் - சிலவீரர்.

பகைப்புலங் கலக்கிய பாய்பரிப் புரவி—பகைவர்நாட்டிலே கைக்கொண்டுவந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய குதிரைகளும்,

[வேல்கோ லாக வாள்செல நூறிக் காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர், ஊர் சுடு விளக்கிற் றந்த வாயமும்:] காய்சினம் முன்பிற் கடுங்கண் கூளியர் ஊர் சுடு விளக்கின் ஆள் செல நூறி வேல் கோலாகத் தந்த ஆயமும்—எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையுமுடைய வாயக்கரையிலிருந்த வேட்டுவர் பகைவரூரைச்சுடுகின்ற விளக்கிலே நிரைகாத்திருந்தவீரரை மாளவெட்டி வேலே கோலாக அடித்துக்கொண்டுவந்த பசுத்திரளும்,

நாடு உடை நல்லெயில் அணங்குடைத் தோட்டி—அகநாட்டையுடைத்தாகிய முழுவரண்களிலிட்ட வருத்தத்தையுடைய கதவுகளும்,

நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி நாள் தர வந்த விழுக்கலம்—நாடோறும் தமக்குச்செல்வமுண்டாகும்படியாகக் கைகளாற்றொழுதுவாழ்த்தி நாட்காலத்தே திறையாகக்கொண்டுவர வந்த சீரியகலங்களும்,

அனைத்தும்—அத்தன்மையனபிறவும்,

கங்கை அம் பேரியாறு கடல் படர்ந்தாங்கு அளந்து கடை அறியா மதுரை (௬௯௧)—கங்கையாகிய அழகிய பெரியயாறு ஆழ்முகமாகக் கடலிலேசென்றாற் போல அளந்து முடிவறியாத[மதுரை,

வளம் கெழு தாரமொடு—வளப்பம்பொருந்தின அரும்பண்டங்களோடே.

[புத்தே ளுலகங் கவினிக் காண்வர:] புத்தேள் உலகம் காணவரக் கவினி—தேவருலகம்வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப்பெற்று.

கூற்றக் கொல்தேர் (௬௯௪) அச்சமறியாதேமமாகிய (௬௫௨) மிக்குப்புகழெய்திய மதுரையென்க.

பாடல்சான்ற நல்லூட்டு நடுவணதாய் (௬௫௬) இருபெருநியமத்து (௬௫௫) சாறயர் காடிக்கம்பலை (௬௬௦) நாடார்த்தன்றேயாய் (௬௨௮) அல்லங்காடியழிதருகம்பலை (௬௪௪) புள்ளிளிசையெழுந்தற்றேயாய (௬௪௫) ஞாயிறு (௬௪௬) குன்றஞ்சேருகையினாலே (௬௪௭) மாலை (௬௪௮) புகுந்து (௬௪௯) பின்னணிக்க (௬௪௮) முந்தையாமஞ்சென்ற பின்றை (௬௨௦) மற்றைப் (௬௫௯) பானாட்கொண்ட கங்குல் (௬௫௧) யாமத்தையும் மற்றைப் (௬௫௫) யிடையதாகிய (௬௫௧) கள்வன் வழங்குங்கங்குல் (௬௫௧) யாமத்தையும் பகலாக்கழிப்பிச் (௬௫௫) சிப்ப (௬௮௧) இராக்காலந் தன்னிடத்தினின்றும் போகின்றவைகறையிலே (௬௮௬) வளங்கெழுதாரத்தோடே (௬௯௭) யானையும் (௬௮௮) புரவியும் (௬௮௯) ஆயமும் (௬௯௦) தோட்டியும் (௬௯௧) கலமும் அனைத்தும் (௬௯௫) கங்கையாறுகடல்படர்ந்தாற்போல (௬௯௬) அளந்துமுடிவறியாத (௬௯௭) மதுரை (௬௯௯) யென்க.

கவினிப் (௬௯௮) புகழெய்திய (௬௯௯) பெரும்பாணிருக்கை (௩௪௨) முதலியவற்றையுடைய மதுரை (௬௯௯) யென்க.

மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை— மிகுந்தும் புகழைப்பெற்ற பெரும்பொருளையுடைய மதுரை,

பெரும்பொருளென்றது வீட்டினை; * "பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" என்றார் பிறரும்.

[சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ, யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவில்:] சினை தலை மணந்த பிண்டிச் சுரும்பு படு செந்தீ ஒண்பூ அவிழ்ந்த காவில்—கொம்புகள் தம்மிற்றலைகூடின அசோகினுடைய சுரும்புகளுண்டாஞ் செந்தீப்போலும் ஒள்ளியபூவிரிந்த பொழிலிடத்தே,

சுடர் பொழிந்து ஏறிய விளங்கு கதிர் ஞாயிற்று இலங்கு கதிர் இளவெயில் தோன்றியன்ன—ஒளியைச்சொரிந்து அத்தகிரியிலே போகவிளங்குகின்ற கிரணங்களையுடைய ஞாயிற்றினுடைய விளங்குங்கிரணங்களின் இளவெயில் தோன்றினாலொத்த மகளிர் (எகஉ),

என்றது-பூத்த அசோகம்பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் புணர்ச்சியாற்பெற்ற நிறத்தையுடைய மகளிரென்க

[தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை:] தாவில் தமனியம் வளைஇய விளங்கிழை— கேட்டற்ற பொன் நடுவழுத்தினமணிகளைச்சூழ்ந்த விளங்குகின்ற பேரணிகலங்களையும்,

நிலம் விளக்குறுப்ப மேதகப் பொலிந்து— நிலத்தையெல்லாம் விளக்கமுறுக்கும்படி கற்புமேம்படப் பொலிவுபெற்று,

மயிலோடு அன்ன சாயல்—மயிலோடு ஒருதன்மைத்தாகிய மென்மையினையும்,

மாவின் தளிர் ஏர் அன்ன மேனி —மாவின்தளிரினதழகையொத்த நிறத்தினையும்,

தளிர்ப் புறத்து ஈர்க்கின் அரும்பிய திதலையர்— தளிரினது புறத்தில் ஈர்க்குப்போலத் தோன்றிய திதலையையுடையராய்,

கூர் எயிற்று—கூரிய எயிற்றினையும்,

ஒண்குழை புணரிய வண் தாழ் காதின் — ஒள்ளிய மகரக்குழைபொருந்திய வளவிய தாழ்ந்த காதினையும்,

[கடவுட் கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாதுபடும் பெரும்போது புரையும் வாண் முகத்து:]கயத்து அமன்ற கடவுட் சுடர் இதழ்த் தாமரைத் தாது படும் பெரும் போது புரையும் வாள் முகத்து— குளத்திலே நெருங்கின தெய்வங்கட்குரிய நெருப்புப்போலும் இதழ்களையுடைய தாமரையினது தாதுண்டாம்பெரியபூவை ஒக்கும் ஒளியினையுடைய முகத்தினையும்,

ஆய் தொடி மகளிர்—நன்றாகவாராய்ந்த தொடியினையுமுடைய மகளிருடைய,

பொலிந்து (எ0ரு) திதலையராய் (எ0அ) இழையினையும் (எ0ச) சாயலினையும் (எ0சு) மேனியினையும் (எ0எ) எயிற்றினையும் (எ0அ) காதினையும் (எ0கூ) முகத்தினையும் (எகக) தொடியினையுமுடைய மகளிர் (எகஉ) என்க.

நறுந்தோள் புணர்ந்து— நறிய தோளைமுயங்கி,

கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சி— தூக்குமாலைகளாற் பொலிவுபெற்ற படுக்கையிலே துயில்கொண்டு,

புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியேதுயிலுதல் இயல்பென்பதுதோன்றப் புணர்ந்துதுஞ்சியென்றார்.

* பதிற்றுப்பத்து, ஒன்பதாம்பத்து, கo.

* "ஐந்நூறுடன் றடுத்த செல்வத் தமனியி னியற்றிய" என்றார் பிறரும்.

இருந்து துயில் எடுப்ப இனிதின் எழுந்து — செல்வத்தையுடைத்தின்பமுறுகின்ற பரமாளெல்லாம் உறக்கத்தையுணர்த்துகையினாலே அதனையொத்து இனிதாகப் பின் எழுந்து,

என்றது - தன் செல்வம் இடையறாது நிகழுதற்கு வேண்டுவன வைகறைப் பொழுதிலே மனத்தால் ஆராய வேண்டுதலின், துயிலெடுப்பதற்கு இது காரணமாயிற்று. † "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு, நல்லறமு மொண்பொருளு நாடி சிந்தித்து". என்றார் ஆசாரக்கோவையில்.

இனி நன்றாகிய துயிலென்றுமாம்.

திண்காழாரநீவிக் கதிர்விடு, மொண்காழாரங் கவைஇய மார்பில், வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப, வெருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற், பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம், வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச், சோறமைவுற்ற நீருடைக் கலிங்க, முடையணி பொலியக் குறைவின்று கவைஇ, வல்லோன் றைஇய வரிப்புனை பாவை, முருகியன் றன்ன வுருவினை யாகி

வல்லோன் தைஇய வரிப் புனை பாவை முருகு இயன்றன்ன உருவினை ஆகி— சித்திரகாரி பண்ணப்பட்ட எழுதின்கைசெய்த பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய்,

என்றதனால், நாடகாசாலையில் அரசர்க்குரிய கடனெல்லாந் தீர்ந்து தெய்வவுருவாய் நின்றோடிருந்தமை கூறினார்.

திண் காழ் ஆரம் நீவி கதிர் விடும் ஒண் காழ் ஆரம் கவைஇய மார்பில்— திண்ணிய வயிரத்தையுடைய சந்தனத்தைப் பூசி ஒளிவிடும் ஒளியையுடைய முத்துவடங் கவைஇ ழ்ந்த மார்பிலே,

நீவியென்னுஞ் செய்தெனெச்சம் பிறவினைகொண்டது.

வரிக்கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப— வரியையுடைத்தாகிய பின்னையுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவனவாகிய வண்டுகளும் மொய்ப்ப,

எருத்தம் தாழ்ந்த விரவுப் பூந் தெரியல்— கழுத்திடத்தினின்று தாழ்ந்த விரவு தலையுடைய பூமாலையையுடைத்தாகிய மாலையை (சூடி) முன்னே கட்டின

பொலம் செயப் பொலிந்த நலம் பெறு விளக்கம் வலி கெழு தடக்கைத் தொடியோடு சுடர்வர— பொன்னாற்செய்கையினாலே பொலிவுபெற்ற மணிகளழுத்தின மோதிரம் வலிபொருந்தின பெரியகையில் வீரவளையோடு விளக்கம்வர,

சோறு அமைவுற்ற நீருடைக் கலிங்கம்— சோறு தன்னிடத்தே பொருந்துதலுற்ற நீர்மையுடைய துகில், ...

* சீவகசிந்தாமணி, [illegible], "ஐந்நூறுடன் றடுத்த செல்வத் தமனியி னியற்றிப் பூம்பட்டொடுக்கி வெள்ளினி வாங்கி [illegible] வாசச் செப்புஞ் - சந்தனச் சாந்தச் செப்புந் [illegible] - [illegible] செப்பு மிளையவ ரேந்தி னாரே."

+ ஆசாரக்கோவை ௫:— "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு - நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதின் - தந்தையுந் தாயுந் தொழுதெழுக - வென்பதே - முந்தையோர் கண்ட முறை."

என்றது கஞ்சியிட்ட துகிலை.

உடை அணி பொலியக் குறைவின்று கவைஇ — உடைக்குமேலணியும் அணிகலன்களாலே அதுபொலிவுபெறும்படி தாழ்வின்றாகவுடுத்து,

புணர்ந்து ஞான்று எழுந்து உருவினையாகி மார்பிலே பிரசமும் மூசுவனவும் பொலியப்ப விளக்கம் தொடியொடுசுடர்வரக் கலிங்கந்தைக் கவைஇ யெனமுடிக்க.

வருபுனற் கற்சிறை கடுப்ப இடையறுத்து ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர் — மிக்குவருகின்ற யாற்றுநீரிடத்துக் கல்லணைநின்று தாங்கினாற்போலத் தம்படையைக்கெடுத்து மிக்குவருகின்ற பகைவர்படையை நடுவேதவிர்த்து அவரைக் கெடுத்த போரைவிரும்பும் படைத்தலைவர்,

* “வருபகைப் புணலைக் கற்சிறை போல, வொருவன் றாங்கிய பெருமை யானும்” என்றும் வஞ்சித்துறை கூறினர். இதுகூறவே முன்னர் மாராயம்பெற்றவர்களே இப்போது செய்வரென்பது ஆண்டுப் பெற்றாமாகலின், இவர்கள் ஏனாதிப்பட்டமுதலிய சிறப்புப்பெற்ற படைத்தலைவரென்பது பெற்றாம்.

வாள் வலம் புணர்ந்த நின் தாள் வலம் வாழ்த்த — வாள்வெற்றியைப் பொருந்தின நினது முயற்சியின்வெற்றியை வாழ்த்த,

வில்விசை கவைஇக் கணை தாங்கு மார்பின் மா தாங்கு எறுழ்த் தோள் மறவர்த் தம்மின் — வில்லை நரம்பவலிக்கையினாலே தன்னுள்ளேயடக்கிக்கொண்ட அம்பின் வேகத்தைத் தாங்கும் மார்பினையுங் குதிரையைச்செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலியையுடைய தோளினையுமுடைய வீரரைக்கொணர்மின்;

தம்மின் — முன்னிலை முற்றுவினைத்திரிசொல். இது தும்பையிற் † குதிரைநிலை கூறிற்று. கணைதாங்குமார்பு கூறவே கணை துணைபுறமொய்த்தலுங் கூறிற்று.

கல்லிடித்து இயற்றிய இட்டு வாய்க் கிடங்கின் நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின் — கற்பாறையைப் பொளிந்துபண்ணின இட்டிதாகிய நீர்வரும்வாயையுடைய கிடங்கினையுடைய முழுமுதலரணத்தேநின்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்;

இதனால் ‡ “ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்” என்னும் புறத்துழிஞைத்துறை கூறிற்று.

கொல் ஏற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக் கண் முரசம் ஓவில கறங்க — மாறுபாட்டைப் பெற்றுக் கோறற்றொழிலையுடைய ஏற்றினது செவ்வித்தோலை மயிர் சீவாமற்போர்த்த பெரிய கண்ணையுடையமுரசம் மாறுதனின்று ஒலியாநிற்க,

எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண் பெருநல் யானை போர்க்களத்து ஒழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின் — நெருப்புநடந்தாற்போன்ற பகைவர்படைக்குநடுவே சென்று பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே படவெட்டிச் சீரிய புண்ணினால்வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்;

இதனால் § “களிறெறிந் தெதிர்ந்தோர் பாடு” என்னும் தும்பைத்துறை கூறிற்று. பாடு, பெருமையாகலின் அதுதோன்ற ஈண்டுக் குரிசிலென்றார்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௨.

† ,, ,, ,, கஎ.

‡ ,, ,, ,, கரு.

§ ,, ,, ,, கஎ.

முறை கருதுபு (எ௩அ)—முன்னுள்ளோர் காத்த முறைமையைக் கருதிக் கொண்டு,

புணையோர்க்கு—நட்பிற் குற்றந்தீர்ந்தோர் பொருட்டு,

[தொடுத்த பொலம்பூந் தும்பை, நீர்யா றன்ன முறைகருதுபு சூடி:]

தொடுத்த பொலம் பூந்தும்பை சூடி—கட்டப்பட்ட பொன்னாற்செய்த பூவினை யுடைய தும்பையைச்சூடி எவுகையினாலே,

நான்காமுருபு ஈண்டு அதற்பொருட்டு.

காழ் மண்டு எஃகமொடு கணை அலைக கலங்கி—காம்பு குழைச்சினுள்ளே செருகின வேல்களுடனே அம்புகளுஞ்சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி,

[பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து, வானத் தன்ன வளநகர் பொற்ப, நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பி, னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்;]

பிரிபு இணை அரிந்த நிறஞ் சிதை கவயத்து ஊன் சாய்—பலவாய்ப் பிரிந்து இணைந்த சந்துவாய்களற்ற பழையநிறங்கெட்ட கவயத்தோடே ஊன்கெட்ட,

நோன் குறட்டன்ன மார்பின்—வலிய சகடையிற்குறட்டையொத்த மார்பினையுடையராகிய ஊக்கலரென்க (எ௪௩).

வேலும் அம்புப்பட்டு எங்கும் உருவற்றலிற குறடுப் அதிற்றைத்த உருளிகளும் போன்றன மார்புகள். குறடு பட்டடைமரமுமாம்.

வானத்தன்ன வளநகர் பொற்ப உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்—தேவருலகையொத்த செல்வத்தையுடைய ஊர்கள் முன்புபோலே நட்புக்கொண்ட அரசத்துறை யோராளும்படி உயர்ந்த உதவியைச்செய்த முயற்சியையுடையாரைக் கொணர்மின்;

என்றது-தமக்குநட்பாய் முற்றப்பட்டோரை முற்றுவிடுவித்தற்குத் தாமேயுதவின், மைத்துப்பொருளாகச்சென்று அம்முற்றுவிடுவித்து அவ்வூரை அவர்க்கு மீட்டுக் கொடுத்தமை கூறிற்று. இதனானே உழைநைப்புறத்துத் தும்பை கூறினார்; என்னை?

* "ஏணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற், சென்ற வுயிரினின்ற யாக்கை" கூறுதலானும் வளநகர் பெறும்படி உயர்ந்தவுதவிசெய்தமை கூறுதலானும்.

நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த புலர்ந்த சாந்தின் விரவுப் பூந்தெரியல் பெருஞ்செய் ஆடவர்த் தம்மின்—உயர்ந்த யானைத்திரளின் நெருங்குதலைக் கைக்கொண்ட பூசிப்புலர்ந்த சாந்தினையும், விரவுதலையுடைய வியன்பூமாலையினையும், பெரிய செய்கைகளையுமுடைய மண்டலங்களையாள்கின்றவரைக் கொணர்மின்;

[பிறரும், யாவரும் வருக வேனோருந் தம்மென, வரையா வாயிற் செறாஅது]

ஏனோரும் தம்மென வரையா—மண்டபத்தாரையும், அரங்கூத்தரையுங் கொணர்மினென வரைந்துகூறி,

வாயில் செறாஅ பிறரும் யாவரும் வருக என—வாயிலிடத்து நிற்றலாலே இவர்களைப்போல்வாரும் படையாளர்முதலியோரும் வருவாராகவென்று கூறி,

இருந்து—இங்ஙனம் எளியையாயிருந்து,

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், கக.

[பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென:] யாணர்ப் புலவரொடு பாணர் வருக பாட்டியர் வருக வயிரியர் வருக என—கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூத்தர் வருவாராகவென அழைத்து,

[இருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங், கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி:]

இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம் நீர் யாரென்னாது (எகூஉ) கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி—அவர்கள் சுற்றத்தாராய் அவர்கள் பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம் நீர் யாவரென்று அவர்களைக் கேளாதே அவர்கள் காட்டின அளவைக்கொண்டு கொடிஞ்சியையுடைய நெடிய தேர்களை யானைகளோடுங் கொடுத்து,

கொடிஞ்சி - தாமரைப்பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது.

களந்தோறுங் கள்ளரிப்ப—இடந்தோறுங் கள்ளையரிப்ப,

மரந்தோறு மை வீழ்ப்ப—மரத்தடிகடோறும் செம்மறிக்கிடாய் படுப்ப,

நிணம் ஊன் சுட்டு உருக்கு அமைய—நிணத்தையுடைய தசைகள் சுடுதலாலே அந்நிணம் உருகுதல்பொருந்த,

நெய் கனிந்து வறை ஆர்ப்ப—நெய் நிறையப்பெற்றுப் பொரிக்கறிகள் ஆரவாரிப்ப,

குருஉக் குய்ப் புகை மழை மங்குலிற் பரந்து தோன்ற—நிறத்தையுடைய தாளிப்பிலெழுந்த புகை மழையையுடைய திசைகள்போலே பரந்து தோன்றப்பட்டு,

வியன் நகரால்—அகற்சியையுடைய வீடுகளாலே மிக்குப்புகழெய்திய மதுரை (சுகூகூ) யென முன்னேகூட்டுக.

நகர் - வீடுகள்.

அரிப்ப வீழ்ப்ப அமைய ஆர்ப்பத் தோன்றப்பட்டு அகற்சியையுடைய வெள உடைமையொடு முடிக்க.

[பல்சாலை முதுகுடுமியி, னல்வேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்:]

நல் வேள்வித் துறை போகிய—நல்ல யாகங்கட்குக்கூறிய துறைகளெல்லாம் முன்னர் முற்றமுடித்துவிட்ட,

தொல்லாணை நல்லாசிரியர் புணர் கூட்டு உண்ட—பழைய ஆணைகளையுடைய நல்லாசிரியர் தாங்கள் பின்புகூட்டின கர்த்தரியாகிய தொன்மையை அவரிடத்தே பெற்று அனுபவித்த,

புகழ் சால் சிறப்பிற் பல்சாலை முதுகுடுமியின்—புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்போலே நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டிசின் (உ0அ) என முன்னேகூட்டுக.

என்றது - அந்தணர்க்குக்கூறியமுறையே முன்னுள்ள கருமங்களைமுடித்துப் பின்னர்த் தத்துவங்களையாராய்ந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்பமெய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையேசென்று வீட்டின்பத்தைப்பெற்ற குடுமியென்றவாறு.

நிலம் தரு திருவின் நெடியோன் போல—எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையையுடைய நல்லாசிரியர் (எசுக) என முன்னேகூட்டுக

என்றது - கண்ணன் எப்பொருளும் நானாயிருக்கின்றபடியைக் காட்டி ஸ்ரீ கீதையருளிச்செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும்போதிக்கவல்லராகிய ஆசிரியரென்றவாறு.

ஆணை - ஆக்கினை.

[வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர், பலர்வாய்ப் புகரறத் தேற்றினர் ஒன்றி:]

வியப்பும்—நீ அவ்வாசிரியரிடத்துப் பெற்ற கற்பின் அதிசயமும்

சால்பும்—பின்பு பெற்றமைந்த அமைதியும்,

....ர் அறு சிறப்பிற் செம்மை சான்றோர் பலர் வாய்த்தோன்றி—குற்றமற்ற சிறப்பினையுடைய தலைமைகளெல்லாம் அமைந்தோர்பலரும் தம்மில்ருந்து சொல்லப்பட்டு,

பலர்வாயென்பதனை முன்னேகூட்டுக. ... புகரறு சிறப்பிற் செம்மையாவன * "காலந் தெழுந்த ... பக்கமும்" என்பதிற் கூறப்பட்டவை.

அரிய தந்து—இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப்புலத்திலுள்ள பொருள்களைக் கொணர்ந்து எல்லார்க்குங்கொடுத்து,

குடி அகற்றி—நின்னாட்டில்வாழுங் குடிமக்களைப் பெருக்கி,

என்றது செல்வமுண்டாக்கியென்றதாம்.

பெரிய கற்று—நற்பொருள்களை விளங்கக்கூறிய நூல்களைக் கற்று,

இசை விளக்கி—நின்புகழை எவ்வுலகத்தும் நிறுத்தி,

முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்—கடலிடத்தேதோன்றுகின்ற ஞாயிற்றையொக்கவும்,

பல் மீன் நடுவண் திங்கள் போலவும்—பலமீன்களுக்கு நடுவே தோன்றுகின்ற நிறைமதியைப்போலவும்,

பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி—நீ பொலிவுபெற்ற சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிதாகவிளங்கி,

யனைடி லமாக்கள் ... முதலிய சுற்றத்தோடு ஞாயிறுபோல விளங்கிப் பலகலைகளைக் கற்றோரிடத்தே மதிபோலவிளங்கியென்க.

பொய்யா நல்லிசை நிறுத்த புனை தார் பெரும் பெயர் மாறன் தலைவனாக—உண்மையான நல்லபுகழை உலகிலே நிறுத்தின கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன்முதலாக,

மாறன் - இவன்குடியிற் ... அன்றி ... ஒன்று.

கடந்து அடு வாய் வாள் இளம் பல் கோசர்—பகைவரை வென்றுகொல்லும் ... பாதவாளினையுடைய இளைய பலராகியகோசரும்,

[இயல்நெறி மரபினின் வாய்மொழி கேட்பப், பொலம்பூணைவ ருட்பட ... ந்த, மறமிகு சிறப்பிற் குறுநில மன்ன, ரவரும் பிறரும்:]

புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட—எல்லாரும் புகழப்பட்ட பொன்னாற்செய்த பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிருமுட்பட,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௨௦.

மாம்பெருஞ்சிறப்பிற் குறுநிலமன்னர் அவரும்—மறமிக்க தலைமையினையுடைய குறுநிலமன்னராகிய அவரும்,

பிறரும்—கூற்றொழிந்தோரும்,

இயல்நெறி மரபின் நின் வாய்மொழி கேட்ப—நடக்கின்ற நெறிமுறைமையினின்று நின்னுடைய உண்மையான மொழியைக் கேட்டு அதன்வழியே நடக்க,

[துவன்றிப் பொற்பு, விளங்கும் புகழவை நிற்புகழ்ந்தேத்த] பொற்பு விளங்கும் புகழவை துவன்றி நிற் புகழ்ந்து ஏத்த—பொலிவுவிளங்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின்றன்மையைப் புகழ்ந்து வாழ்த்த,

[விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு, மகிழ்ந்து:]

விளங்கிழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப மகிழ்ந்து—விளங்குகின்ற பூணினையுடையமகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலேயெடுத்த மணநாறுகின்ற காமபானத்தை நுகர அதனையுண்டு மகிழ்ச்சியெய்தி மகளிர்தோள் புணர்ந்து (எகஉ) என முன்னேகூட்டுக.

[illegible] பின்னேகூட்டுக. மணங்கமழ்தேறலென்றதனாற் காமபானமாயிற்று.

[இனி துறைமதி பெரும, வரைந்துநீ பெற்ற நல்லூழியையே] பெரும நல்லூழியை வரைந்து நீ பெற்ற நாளும் இனிது உறைமதி—பெருமானே, நன்றாகிய ஊழிக்காலத்தை இத்துணைக்காலம் நுகர்தியெனப் பாலைவரைந்த தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப்பெற்ற நாண்முழுதும் இனிதாக இருப்பாயென்க.

நல்லூழியென்றார், கலியூழியல்லாத ஊழியை. உம்மை - முற்றும்மை.

உயர்ந்தோர்மருகனே (உ௩), நெடியோனும்பலே (௬க), பொருநனே (சஉ), கொற்றவனே (அஅ), வெல்போரவே (கஎ௫), புகழ்வேந்தே (கஎ0), நசைப்பொருந (௬௪அ), போரேறே (கசச), குரிசிலே (க௫க), நீகொற்றவர்தங்கோனாகுவை (எச), வாய்நட்பினை (கஙஅ), பணிந்தொழுகலை (உ0க), பழிநமக்கொழுகவென்னாய் (உ0௩), இசைவேட்குவை (உ0௫), அன்னாய் (உ0௬), நின்கொற்றம் (கஙச) பிறையிற் (கஙங) சிறக்க (கசஎ), நின்றெவ்வராக்கம் (கசஅ) மதியிற் (சக..) கெடுக (கசஎ), நின்னல்லிசை கெடாதுநிலைஇயர் (உ0க), இனி நீ பாடல்சான்ற நன்னாட்டுநடுவணதாய் (ங௯க) இருபெருநியமத்து (ஙங௫) சாளங்காடிக்கம்பலை (௫௯0) நாடார்த்தன்றேயாய் (௫௪௪) அல்லங்காடி அழிதருகம்பலை (௫௪௪) புள்ளினிசையெழுந்தற்றேயாய் (௫௪௯) ஞாயிறு (௫௪௫)குன்றஞ்சேருகையினாலே (௫௪எ) மாலை (௫௪அ) புகுந்து (௫௫எ) பின்னர் நீங்க (௫௫அ) மங்கையாயன்று சென்றபின்னை (௯௨0) மற்றைப் (௯௫௩) பானாட்கொண்ட கங்குல் (௯௯க) யாமத்தையும் மற்றை (௯௫௯) இடையதாகிய (௯௯௯) கடவுள்வழங்கு ங்கங்குல் (௯௫௪) யாமத்தையும் பகலுறக்கழிப்பிப் (௯௫௩) பாடப் (௯௫௯) பண்ணைக் (௯௫அ) கைப்பத் (௯௫௯) தெவிட்ட (௯௯0) உறப்ப (௯௯௯) நுவலக் (௯௯உ) கரையத் (௯௯எ) தோன்ற (௯௯௯) வாழ்த்த நுவல (௯எ0) இசைப்ப (௯எக) இரங்கச் சிலைப்ப (௯எஉ) இயம்பச் (௯எ௩) கரைய அகவ் (௯எ௫) முழங்கக் (௯எ௯) குழுமச் (௯எஎ) சிலப்ப (௯அ௫) இராக்காலந் தன்னிடத்தினின்றும்போகின்ற வைகறையிலே (௯அ௯) ஒண்டொழு தாரத்தோடே (௯௯எ) பாளையும் (௯அஅ) யாவையும் (௯அக) ஆயமும் (௯௯உ)

தோட்டியும் (கசுகூ) கலநிறமீனைத்தும் ([illegible]) கங்கையாறு கடற்படர்ந்தாங்கு (கஅக) அளந்து கடையறியாத (கஅஎ), கவின்பெற்ற (கஅஅ) புகழெய்திய (கஅக), பெரும்பாணிருக்கையினையும் (கசஉ), [illegible]யினையும் ([illegible]), புரிசையினையும் ([illegible]), வாயிலினையு (கஙகூ) முடைய நான்மாடக்கூடலாகிய [illegible] மதுரையிடத்தே (ககூக) மகளிர் தெண்மட்டம் (எஅ) [illegible] (எஅக) மகளிர்[illegible] ப்புணர்ந்து (எகஉ) செக்கைத்துஞ்சி (எகங) யெழுந்து (எகச) உருவினையாம் (எஉச) மார்பிலே (எகரு) பிறரும் [illegible] பொய்ப்ப (ககஎ) விளக்கத் (எசக) தொடியொடு சுடர்வரக் (எஉ0) கலிங்கத்தைக் (எஉக) கவைஇ (எஉஉ) மறவர் (எஉக) தானவகம் வாய்ந்த (எஉஎ) மாறன்மேழலாகம் (எஎஉ) போசரும் ([illegible]) [illegible]ப்படக ([illegible]) குறுநிலமன்னராகிய (எஎகூ) அவரும்பிறரும் (எஎஎ) நின்வாய்மொழிகேட்ப ([illegible]) நிற்புகழ்ந்தேத்த (எஎஅ) மறவர்த்தம்மின் (எஉக), [illegible]த்தம்மின் (எஅ[illegible]) [illegible]ர்த்தம்மின் (எகூக), [illegible]லர்த்தம்மின் ([illegible]), பெருஞ்செய்யாடவர்த்தம்மின் (எசக), ஏறேருந்தம்மெனச் ([illegible]) [illegible] வாயிலிடத்துத் தகையமைந்(எசஅ) பிறரும் (எசக) [illegible] (எசஎ) நாளோலக்கமிருக்குமண்டபத்தேயிருந்து (எசஅ) [illegible] (எகூ0) பாணரும், பாட்டியர்வரும் (எசக), வயிரியர் [illegible] (எகூ[illegible]) அவர்[illegible] இரவலர்க்கெல்லாம் (எநக) நீர்யானை[illegible] (எகூக) [illegible] (எகூஉ) அரியதாது குடியகற்றிப் (எசச) பெரியகற்ற[illegible] (எகூஎ) ஞாயிறுபோலவுந் (எகூஅ) திங்கள்போலவுந் (எகூக) [illegible] பொலிந்து [illegible] (எ00) வாழி (உ0அ); அங்ஙனம் வாழ்ந்து பிறப்பற [illegible] பயன்[illegible]த்தோர் (உகூ0) நினைவிமெனலினும் பலரேகாண் (உகக) அப்பயனின்மையாலே (உகஅ) அவ்வணமே (உ0எ) நீயும் அவ்வாறுகழியலாகா தென்று இவ்வேத்தியின்[illegible] தாயிருப்பதொரு பொருளை யானகூறுவேனெ (உசஎ); [illegible] தொல்லாணையினையுடைய நல்லாசிரியர் (எசக) புணர்க்கூட்டுண்ட [illegible] ளை (எகூஉ) புடையபல்யாகசாலைமுதுகுடுமியைப்போல (எநக) நல்லஊழியரிடத்தே கேட்டிசின் (உ[illegible]அ), கேட்டு அதனைக் [illegible] பும் சான்றும் ([illegible]) புகழ்சிறப்பி[illegible]செம்மைசான்றோர் ([illegible]) பலர் நப்பில்[illegible]து சொல்லப்பட்ட ([illegible]) பெருநானே ([illegible]), [illegible] இந்நிலைக்காலமிருந்[illegible] பலவனொடுகெய[illegible] வரையப்பட்ட [illegible] பெற்ற (எஅஉ) [illegible] (உ0) இனிதாகப் பேரின்[illegible] ([illegible]); அதனை [illegible] பொறிவண்டு [illegible] இன்ப பொருள்கட்கு நின்றொமி [illegible] ([illegible]); இனி [illegible] வதாக (உ0[illegible]) [illegible] றுப்பானும் எச்சவுறுப்பானும் வினைமுடிக்க.

* "அ[illegible] பொருள் [illegible] மருங்கிய நிலையினு, மியன்றபொருள் [illegible] தன்றலை நுனர்த்தல், பாட்டிடை [illegible] பாட்டியல் வழக்கின்." † "சொல்[illegible] ன் குறிப்பொடு [illegible] வியறலைக், புல்லிய [illegible] யெச்ச மாகும்" என்றுந் திருக்காற் கூறிய இலக்கணம் ‡ "[illegible] புலவர் செய்யு ளுறுப்பு" என்றுந் தொல்காப்பியனார் கூறினமையின், இவரும் [illegible] புலவராதலின், இவ்வணம் செய்யுள்செய்தாரென்றுணர்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உககக.

† ,, ,, ,, [illegible]

‡ ,, ,, ,, க.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார்பாடிய மதுரைக்காஞ்சிக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

௧ பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோற்
றிங்க ணெடுங்குடையின் கீழானை—யங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்.

௨ சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னு
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்.